கலைக்கதிர்

மகளிராண்டுச் சிறப்பிதழ்

நவம்பர்
1975



castings?

Aluminium. Gunmetal. Bronze.
Any non - ferrous castings.
No size is too big or too small for us.
Die casting also undertaken.

machining?

Turning. Milling. Grinding.
Whatever Machining job
you want to be done.

stamping ?

Pressing. Blanking. Notching.
Stamping for all types of motors.
Precision made to ISI Specification.
Or any of your special requirements.

dpv industries

PRIVATE INDUSTRIAL ESTATE
POLLACHI ROAD
PODANUR POST, COIMBATORE
SOUTH INDIA

VSK - dpv - 255

கலைக்கதிர்

மலர் 27 □ நவம்பர் - 1975 □ இதழ் 11

உலக மகளிர் ஆண்டு 2
மக்கள் நலம் புரக்கும் மாபெரும் தலைவர் 5
பேராசிரியர் திரு. ஜி. ஆர். தாமோதரன்
பிரதமரின் பொருளாதாரத் திட்டம் 12
மாண்புமிகு சி. சுப்பிரமணியம்
பூவையை மதிப்பது புதுச் செயலில்லை 15
திருமதி சௌந்தரா கைலாசம்
மகளிர்க்குப் பொருந்திய..செல்வி இரா, இராச பத்மாவதி 17
இக்காலச் சமுதாயத்தில்...செல்வி ப. வெங்கிடலக்குமி 24
மகளிரும் அரசியலும் திருமதி மரகதம் சந்திரசேகர் 33
மகளிரும் இசையும் திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி 38
மகளிரும் நாடகத் துறையும் கலைச்செல்வி சந்திரகாந்தா 43
மகளிரும் சமூகப் பணியும் செல்வி ந. அரங்கநாயகி 49
மகளிரும மருத்துவமும் டாக்டர் லலிதா காமேஸ்வரன் 55
மகளிரும் சட்டவியலும் செல்வி. கு. கண்ணம்மாள் 63
மகளிர் ஆண்டு திருமதி பார்வதி கிருட்டினன் 69
உலகப் பெண்கள் திருமதி சரோஜினி வரதப்பன் 74
துடியிடையாள் திருமதி சரசுவதி கிருட்டினன் 77
மகளிரும் குடும்பமும் 81
டாக்டர் லலிதகுமாரி ஜனார்த்தனம்
மகளிர் உரிமைகளும் சமுதாய முன்னேற்றமும் 85
திரு. குர்த் வால்ட்டேம்
மகளிரும் அறிவியலும் திருமதி தாமரை நங்கை 87
பெண்களும் சமுதாயமும் திருமதி சுந்தரி வெள்ளையன் 91
மகளிரும் உளவியலும் திருமதி ஆர். சந்தானலட்சுமி 95
இலக்கியம்...திருமதி பு. பா. இராச இராஜேஸ்வரி 97
பித்தத் துகள்... டாக்டர் அம்பிகா சண்முகம் 109
பாவையர் போற்றும் பரதம் திருமதி கு. ரோகிணி 117
போட்டி விபரம் 121

வெளிநாடு விலை ரூ. **1-25**

கலைக்கதிர் இதழில் வெளிவரும் கட்டுரை, கதை முதலியவற்றின் கருத்துகட்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.

ஆசிரியர்

ஜி. ஆர். தாமோதரன்

விலை ரூ: 1-00

உலக மகளிர் ஆண்டு-1975

உலக மக்கள் தொகையில் பாதிக்குமேல் பெண்கள். ஆனால், பல துறைகளிலும் இவர்கள் ஆண்களுக்கு நிகராக உயரவில்லை! மக்கள் தொகையில் பாதிக்கு மேற்பட்டோர் இவ்வாறு முடங்கிக்கிடக்கும்பொழுது வேகமான சமுதாய வளர்ச்சியை எங்ஙனம் காண இயலும்? இதுபற்றியே பாவேந்தர் பாரதிதாசன்

"பெண்ணடிமை தீரும் மட்டும் பேசும்திருநாட்டின்
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே"

என்றார்.

ஜப்பானைச் சேர்ந்த ஒரு பெண் எவரெஸ்ட் உச்சியை வெற்றி கண்டாள். பிரிட்டனில் பழமைக் கட்சியின் (conservative party) தலைவராக ஒரு பெண்மணி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்தியாவும், இலங்கையும், இஸ்ரேலும் பெண்மணிகளைப் பிரதமராகத் தேர்ந்தெடுத்துத் தாய்க்குலத்துக்கு அரசியலிலே சிறப்புச் செய்துள்ளன. விமானங்களிலும், விண்வெளிக் கலத்திலும் பெண்கள் வானில் பறந்து பெண்குலத்துக்குப் பெருமை சேர்த்துள்ளனர். ஆனால் இவைகளைக்கொண்டு உலகச் சமுதாயத்தில் பெண்கள் சமஉரிமை பெற்று உயர்ந்துவிட்டார்கள் என்று கூறிவிட முடியுமா? முடியாது. ஏனெனில் இவர்கள் பெருங்கடலென உலகில் பரவிக்கிடக்கும் பெண் இனத்தில் ஒருசில சிறுதுளிகளே! பெண்கள் சமுதாயத்தின் பெரும்பான்மையினர் பிற்போக்குக் கொள்கை என்னும் இருட்சுரங்கத்தின் அடித்தளத்திலே, சிக்கி நைந்து வதைபடுகிறார்கள். அவர்களது இந்த முடங்கிய வாழ்க்கை அவர்களது தனிப்பட்ட வாழ்வை இனிமை குன்றச் செய்வதோடு சமுதாய முன்னேற்றத்திற்கும் தடையாக இருந்து வருகின்றது.

இந்த ஆண்டை அனைத்து நாட்டு மகளிர் ஆண்டாகச் சிறப்புறச் செய்த பெருமை ஐக்கிய நாடுகள் சபையைச் சாரும். ஐ.நா. மன்றத்தின் பொதுச்சபை 18—12—1972 அன்று நிறை

வேற்றிய 3010 -ஆவது தீர்மானத்தின்படி 1975-ஆம் ஆண்டை உலக மகளிர் ஆண்டு என அறிவித்துப் பெண்கள் முன்னேற்றத் துக்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கு உரியவற்றைச் செய்யு மாறு தனது பொதுச் செயலாளரைக் கேட்டுக்கொண்டது. இந்த ஆண்டிலே பல்வேறு நாடுகளிலும் தோன்றியுள்ள புத் துணர்வு மகளிர் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்று நம்ப லாம். அனைத்து நாட்டு மகளிர் ஆண்டு நிகழ்ச்சிகளின் முத்தாய்ப் பாக அமைந்தது, மெக்சிகோ நகரில் ஜூன் 19 முதல் ஜூலை 2 வரை நடந்த மகளிர் ஆண்டு மாநாடு ஆகும். திருமதி ஹெல்வி சிபைலா என்பவர் இம்மாநாட்டின் பொதுச் செயலாளராக இருந்து நிகழ்ச்சிகளைத் திறம்பட நடத்தினர். இவர் ஐக்கிய நாடுகள் சபையின் ''சமுதாய வளர்ச்சி மற்றும் மனிதாபிமான செயல்முறைகள்'' என்ற துறையின் துணைப்பொதுச் செயலாளர் ஆவார். ஐக்கிய நாடுகள் சபையில் இத்தகைய ஒரு உயர்ந்த பதவியை ஒரு பெண்மணி வகிப்பது இதுவே முதல் முறையாகும். இவர் பின்லாந்தைச் சேர்ந்த ஒரு புகழ்வாய்ந்த வழக்குரைஞர். அனைத்து நாட்டு மட்டத்தில் சட்டம், நீதி, ஆகிய துறைகளில் இவர் சிறப்புப் பெற்றவர்.

144 நாடுகளிலிருந்து அரசு மூலமாக அனுப்பப்பட்ட உயர்நிலைப் பேராளர்கள் மெக்சிகோ மாநாட்டில் கலந்துகொண்டனர். இவர்களில் ஆண்களும், பெண்களும் ஏறத்தாழச் சம அளவுகளில் இருந்தனர். ஒவ்வொரு நாட்டிலும் பெரும்பாலும் ஆண்களே கொள்கைப் படைப்போராக இருப்பதால், அவர்கள் இம் மாநாட்டில் கலந்துகொண்டு பெண்கள் சமுதாயத்தின் பிரச் சினைகளைப் புரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் ஆண் களும் இம்மாநாட்டிற்கு அழைக்கப்பட்டனர்.

இம்மாநாட்டில் ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டு, அக்குழு 1975-லிருந்து 1985-வரையான 10 ஆண்டுகளுக்குரிய ஒரு செயல் திட்டத்தை உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தை ஒவ் வொரு நாடும் செயல்படுத்துவது அந்நாடு மகளிர் முன்னேற் றத்தில் கொண்டுள்ள நம்பிக்கையையும் அக்கறையையும் பொறுத்துள்ளது. அரசு அக்கறை காட்டாதபோது, மகளிர் முன்னேற்றத்தைக் கொள்கையாகக் கொண்டு இயங்கிவரும் தனிப்பட்ட கழகங்கள் தம் பணியைச் செவ்வனே செய்ய இத் திட்டங்கள் துணைபுரியும்.

மகளிர் முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாக இருப்பது அவர் களுக்குக் கல்வியறிவு கிட்டாமையே என்ற கருத்து இம் மாநாட்டில் பெரிதும் வலியுறுத்தப்பட்டது. உலகின் பல பகுதி களில் பெண்களுக்குக் கல்வி வசதி கிடைப்பதில்லை. இன்று உலகில் 800 மில்லியன் பேர்களுக்கு மேல் கல்வியறிவு இல்லாமல் உள்ளனர் என்றும், சிலபகுதிகளில் இவர்களில் 80 முதல் 85 சதவீதம் வரை பெண்கள் என்றும் புள்ளி விவரம் காட்டுகிறது. கல்வியறிவு இல்லாத காரணத்தால், மகளிர்க்கு வேலை வாய்ப்பு

இல்லாமல் போய்விடுகிறது; எந்தத் துறையிலும் ஈடுபட இயலாமல் போய்விடுகிறது; உலகம் என்றால் என்ன என்றே தெரியாத நிலையில் அவர்களால் தம் நிலையை உணர்ந்து உரிமைக் காகத் திட்டம் தீட்டி எங்ஙனம் செயல்பட முடியும்? ஒரு குடும்பத்தில் குழந்தையை உருவாக்குவது தாய்தான்; தந்தை யல்லன். அதனால், தாயின் அறிவுக்கேற்பவும் அவள் தன் குழந் தையை உருவாக்கும் தன்மைக்கேற்பவும்தான் ஒரு நாட்டின் குடிமக்கள்அமைகிறார்கள். ஆகையால், குடிமக்களின் தரம் தாய்க்குலத்தின் தரத்தைப் பொறுத்தே அமைகிறது. இந்த வகையில் மகளிர்க்குக் கல்வி கிட்டாத நிலை சமுதாயத்தைப் பெரிதும் பாதிக்கிறது.

ஆகவே, மகளிர்க்கேற்ற கல்வி பெருக வேண்டும். ஏற்புடைய துறைகளிலெல்லாம் அவர்களுக்குச் சம வாய்ப்புக் கொடுத்து ஊக்குவிக்க வேண்டும். நாட்டுப்பணி, வீட்டுப்பணி இரண்டுமே ஆண் பெண் ஆகிய இருபாலர்க்கும் பொதுவானதாகவேண்டும் வீடே உலகம் என்ற நிலை மாறி மகளிரெல்லாம் வெளிப்போந்து பரந்த உலகை நிமிர்ந்து நோக்கும்போதுதான் தோய்ந்து கிடக் கும் சமுதாயம் புதுத் தெம்போடு நல்லவகையான புரட்சிகளைக் காண முடியும்.

இவ்வாண்டு மகளிர் ஆண்டாகக் கொண்டாடப்படுவதை முன்னிட்டுப் பாரதத்தின் மாபெரும் தலைவராக விளங்கும் திருமதி இந்திராகாந்தி அவர்கள் பிறந்த திங்களாகிய நவம்பர்த் திங்கள் இதழை மகளிர் சிறப்பு மலராக மிக்க மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம். நம் நாட்டின் அடித்தளத்திலுள்ள ஏழை மக்கள் உள்ளிட்டு எல்லோரும் விரைவில் நல்வாழ்வு பெறுதற் கென நம் பிரதமர் அவர்கள் 20 குறிப்புத் திட்டம் ஒன்றை உருவாக்கித் தற்போது செயல்படுத்தி வருகிறார்கள். திட்டத் தின் பயனை நம் நாடு முழுவதும் உணரத் தொடங்கியுள்ள உண் மையை எல்லோரும் அறிவர். திட்டம் முழுமையும் விரைவில் நிறைவேறிப் பாரதநாடு பல்லாற்றானும் வளர்ச்சியுறுதற்கு நாம் அனைவரும் உறுதிகொள்வோமாக! நம் பிரதமர் முயற்சி வெல்க! அவர் நீடு வாழ்க!

நம் வேண்டுகோளுக்கிணங்கிப் பல துறைகளிலும் தலைசிறந்து விளங்கும் அறிஞர் பெருமாட்டியர் இம்மகளிராண்டுச் சிறப் பிதழுக்கு உளம் உவந்து கட்டுரை உதவியுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் எம் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இச்சிறப்பிதழ் வெளியிடுவதனையொட்டித் தமிழகக் கல்லூரி களில் கற்கும் பட்ட—மேற்பட்ட வகுப்பு மாணவியர்க்கென ஏற்பாடு செய்யப்பெற்ற கட்டுரைப்போட்டியில் கலந்துகொண்ட மாணவியர்க்கு எங்கள் நல்வாழ்த்துக்கள். அவர்களை ஊக்கு வித்து ஈடுபடச் செய்த ஆசிரியப் பெருமக்கட்கும் கல்லூரி முதல் வர்கட்கும் எங்கள் நன்றி.

மக்கள் நலம்புரக்கும் மாபெரும் தலைவர்

பேராசிரியர் ஜி. ஆர். தாமோதரன்

''தியாகத்தின் உருவாகப் பெண்கள் அமைந்திருக்கின்றனர். பெண்கள் சரியான உணர்ச்சியுடன் ஒரு காரியத்தில் இறங்கினல் மலைகளைக்கூட அவர்கள் நகர்த்தி விடுகின்ருர்கள்...... ஆண்கள் விட்டுப்போன செயல்களைக்கூட இந்தியப் பெண்கள் செய்து முடித்துவிடுவார்கள் என்பதிலோ, ஆண்களைவிட இன்னும் அழகாகச் செய்வார்கள் என்பதிலோ எனக்குச் சந்தேகமே இல்லை'' என்று காந்தியடிகள் 22—12—1921 ல் யங் இந்தியா இதழில் வெளியிட்ட கருத்தும் ''இந்திய மக்களின் நலனுக்கு உழைப்பதற்கு வேண்டப்படுபவன் ஆண்மகன் அல்லன்; சிங்கம்போன்று செயல்படும் பெண்மகளே ஆவாள்''. (What is wanted is not a man but a woman) a real lioness to work for Indians,

(1975 ஆம் ஆண்டு அனைத்துலக மகளிர் ஆண்டாகக் கொண்டாடப்படுவதனை முன்னிட்டுப் பாரதத்தின் மாபெருந் தலைவராக விளங்கும் திருமதி இந்திராகாந்தி அவர்கள் பிறந்த திங்களான நவம்பர்த் திங்கள் இதழை மகளிர் சிறப்பு மலராக வெளியிட முடிவு செய்தோம். அந்த மலரில் உலக மக்கள் அனைவர்தம் உள்ளத்திலும் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ள நம் பிரதமர் அவர்களைப் பற்றிய கட்டுரை முதலிடம் பெறவேண்டும் எனவும் விரும்பினேம். அந்த விருப்பத்திற்கிணங்க இக் கட்டுரை மலரின் முதற் கட்டுரையாக அமைகிறது.)

என சுவாமி விவேகாநந்தர் 1897 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 29-ஆம் நாள் சகோதரி நிவேதிதா அவர்கட்கு எழுதிய கருத்தும் நம் பாரதப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களின் வரலாற்றோடு ஒன்றி உண்மை என்று காட்டுகின்றன; பாரதப் பிரதமர் அனைத்திந்திய காங்கிரஸ் தலைவரான காலத்திலிருந்து அவர்தம் செயல்கள், எண்ணங்கள் எப்படியெல்லாம் நாட்டின் நலன் கருதி வளர்ந்து வருகின்றன என்பதனை வைத்துப் பார்த்தால் உண்மை நன்கு தெளிவாகின்றது.

முள்நிறைந்த கிரீடம்:

திருமதி இந்திராகாந்தி அவர்கள் இந்திய நாட்டுப் பிரதமர் பதவியை ஏற்றகாலம் தொடங்கி அவர்க்கு நாட்டில் பிரச்சினைமேல் பிரச்சினைகளாகக் கிளம்பிக் கொண்டுள்ளன. அனைத்தையும் அமைதியாகவும் ஆற்றலோடும் சமாளித்து மக்கட்கு நலன்கள் உண்டாக என்னென்ன செய்யலாம் என்ற குறிக்கோளையே முன் நிறுத்தி பிறர் ஏச்சையும் பேச்சையும் பற்றிக் கவலைப்படாமல் செயல்பட்டு வருகின்றார். 1967-ல் அவர் பிரதமர் பொறுப்பை ஏற்றபோது அவர் அமைச்சரவையில் அமைச்சராக இருந்த திருவாளர் மொரார்ஜி தேசாய் அவர்கள் ''இவருக்கு நாங்கள் முள்நிறைந்த கிரீடத்தை அணிவிக்கின்றோம்'' என்றார்கள். அந்த முட்களின் கொடுமைகளை அம்மையார் அவர்கள் உணராமல் இல்லை. இளங்கோவடிகள்,

'மன்பதை காக்கும்' நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதகவு இல்.''

என்றார். அதாவது 'மக்கள்நலனை உண்மையாகக் காக்கும் எண்ணம் உடைய அரசர் குலத்தில் பிறப்பது துன்பமே தவிர பலரால் வணங்குதற்குரியது என எண்ண முடியாது' என்றார். இதன் உண்மைப்பொருளை நன்கு உணர்ந்தவர் நமது பாரதப் பிரதமர். மக்களின் நலம்காக்கும் பணி மிகவும் துன்பம் நிறைந்த பணி என்பதனை உணர்ந்தே இப்பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். இந்தியப் பேரரசின் மக்கள் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் காலத்து அவர்தம் அமைதி மிக்க ஆற்றல் வாய்ந்த செயல்திறன் இந்திய நாட்டிற்கு நல்லதாயிற்று. பரந்த நோக்கம், முற்போக்கான செயல் ஆகியவைகளின் குரல்வளையைப் பிடித்து நசுக்கி எங்கும் கலவர நிலைகளை உருவாக்கியும், கடத்தல், கள்ள வணிகம், கறுப்புப்பணம் மற்றும் பல பொருளாதாரக்குற்றங்கள், ஆகியவைகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகட்குத் தடங்கல்கள் ஏற்படுத்தியும் வந்த பல்வேறு சக்திகளை அடக்கிப் பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்தவும் கடத்தல்காரர்கள் செயலற்றுப்போகவும் கள்ள வணிகம் இல்லாமல் தொலையவும் சமூக நீதிகள் நிலைபெற்று ஓங்கவும், வழிகாணும் வகையில் பாரதப் பிரதமர் அவர்கள் விரைவாகவும், அஞ்சாமலும் நடவடிக்கைகள் எடுத்துவருவது அவர்தம் ஆளுமைப் பண்பையும் நாட்டின் நலனில் அவர்க்குள்ள நாட்டத்தையும் புலப்படுத்தும். இத்தகைய அஞ்சாமைக்குக் காரணத்தை அவரே, ''உண்மைக்கும் அஞ்சாமைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மக்கள் நல்வாழ்வில் ஈடுபாடு இருக்குமானால் அஞ்சாமை

தானே வந்துசேரும்'' எனக்கூறி தெளிவுபடுத்துகின்றார்.

செவிகைக்கும் சொற்பொறுப்பார்

ஒரு நாட்டின் தலைவனுக்குச் சிறப்பாக வேண்டப்படும் பண்புகள் பலவற்றை வள்ளுவர் திருக்குறளில் விளக்குகின்றார். அவைகளில் ஒன்று பிறர் கூறும் குறைகளை அமைதியாக ஏற்று அவைகளின் அடிப்படைகளை ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்பதாகும். இந்தப் பண்பினைத் திருமதி இந்திராகாந்தி அவர்களிடம் காணலாம். ஒரு செய்தி இதழ் நிருபர் இந்திராகாந்தி அவர்களைப் பார்த்து "அம்மா! உங்களைக்குறை கூறுவதனை நீங்கள் பொறுத்துக் கொள்ள இயலாமையால் சற்று மிகைப்பட நடந்துகொண்டுள்ளீர்கள் என்று கூறுகின்றார்களே அதற்கு உங்கள் பதிலென்ன?'' என்று கேட்டபோது அவர் அளித்த விடை உண்மையிலேயே அவர்தம் சிறந்த பண்பினை வெளிக்காட்டுகின்றது. "நாடாளுமன்றத்திலும் வெளியிலும் என்னைப்போல இத்துணை அவதூறுகள் கூறப்பட்ட வேறொரு நபரையோ என்னைப்போல இத்துணை அமைதியாக இருந்த நபரையோ குறிப்பிட்டுச் சொல்ல உங்களால் முடியுமா? நான் ஆத்திரமே அடையவில்லை. என்னைப்பற்றிக் குறை கூறுவதைப் பொறுத்துக்கொள்ள மாட்டேன் என்பது உண்மையானால் இதற்குமுன்பே நடவடிக்கை எடுத்திருக்க மாட்டேனா? ஆனால், என்னைத் தாக்கிக் கூறுபவர்களின் நோக்கங்களை அறிவேன்'' எனப் பொறுமையாகப் பதில் கூறியுள்ளார். தங்கள் நிலையை மறந்து, தரத்தை மறந்து, தகுதியை மறந்து, மக்களை மறந்து, நாட்டிற்கு ஏற்படும் சாதக பாதகங்களை மறந்து, நாக்கில் நரம்பின்றி அம்மையாரைப் பற்றிக் குறை கூறியவர்கள் பலர். அவற்றை ஏன் கூறுகின்றனர்? என்பவைகளைச் சலனப்படாமல் சிந்தித்து அவைகட்குத்தக்க நேரங்களில் சரியான முடிவு எடுப்பதனைத்தான் தன் கடமையாகக்கொண்டு செயல்பட்டு வருகின்றனர் என்பது அவர் பிரதமரான பின்பு நாட்டில் ஏற்பட்டுவரும் நிகழ்ச்சிகளால் தெளிவாக விளங்குகின்றது.

சிந்தனைத் தெளிவு

திருமதி காந்தி அவர்கள் எதனையும் தெளிவாகச் சிந்திப்பார்கள். சிந்திப்பனவற்றைத் தெளிவுபடச் சொல்லுவார்கள். யுகோஸ்லாவியா நாட்டுச் செய்தி இதழ் நிருபர்கள், நார்மன் கசின்ஸ், மற்றும் உள்நாட்டு அயல்நாட்டுச் செய்தி இதழ் நிருபர் கேட்கும் வினாக்கட்கு கூறிவரும் பதில்கள் தெளிவான சிந்தனையில் பிறந்த கருத்துக்களாக உள்ளன. அவைகளில் பதட்டத்தையோ கோபத்தையோ தெளிவின்மையையோ நம்மால் காண இயலவில்லை. இதற்கு ஒரு காரணம் உண்டு. ஒருவருடைய வாழ்வில் ஒரு குறிக்கோள் இருந்து அந்தக் குறிக்கோளை நோக்கிச் செல்லும் நடைமுறை அமைந்தால் தெளிவு ஏற்படுதல் இயற்கை. இந்திரா அவர்கட்கு மக்கள் நலனும் நாட்டின் உயர்வுமே குறிக்கோள். இதனை அடைவதே அவர்தம் நாட்டம். எனவே, சிந்தனையில் தெளிவு இருப்பதில் வியப்பு இல்லை. சுவாமி

இராமகிருஷ்ணர் ஒருவரையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தவர் அன்னை சாரதாமணி தேவியார். அவர் பள்ளியில் கற்றறியாதவர் என்ருலும் குறிக்கோளில் பிரிக்கவியலாப் பற்றுக்கொண்டவராதலால் தெளிவாக வாழ்ந்தார். இந்தத்தெளிவைப் பற்றி சகோதரி நிவேதிதா அவர்கள் குறிப்பிடும்போது ''அவரை அணுகும் பிரச்சினைகள் எவ்வளவு சிக்கலானதாக இருப்பினும் எவ்வளவு நவீனமானதாக இருப்பினும் அதற்குத் தெளிவான, நேரிய முடிவை அளிக்கத்தயங்கிய ஒரு நிகழ்ச்சியையும், நான் கண்டதில்லை. (I have never known her hesitate, in giving utterance to large and generous judgement, however new or complex might be the question put before her) என்று கூறியுள்ளார். இந்தத் தெளிவைப் பிரதமரிடம் காண இயலுகின்றது. ''உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்.'' என்பதனைத் திருமதி காந்தி அவர்களிடம் கண்டு வருகின்றேம்.

சமுதாய நீதி (*Social Justice*)

சமுதாய நீதி (Social Justice) என்பது முடிவில் மக்கள் அனைவர்க்கும் நலன் பயப்பதாக அமைவது என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. இன்றைய நீதிமுறைகள் சொல்லை வைத்துச் சிலம்பம் செய்யும் சிலம்பப் பயிற்சியாக உள்ளன. உண்மையை உண்மையென உணர்ந்தும் சொற்சிலம்ப வித்தையால்பொய்யாக்கும் நிலைமைக்கு நீதிமுறைகள் உள்ளன. எனவே, ஒரு சிலரால் நலம் அடைய முடிகின்றதே தவிர தற்போது நிலவும் நீதி முறைகளால் பெரும்பாலான மக்கள் பயனடையுமாறு அமைப்பும், முறையும் இல்லை என்பதனை எல்லாரும் உணர்ந்து வருகின்றனர். திருமதி காந்தி அவர்கள் இதுபற்றிக் கூறும்போது ''கடந்த இரண்டு நூற்றுண்டுகளாக ஆங்கிலோ சாக்சன் நீதிமுறைகளைப் பின்பற்றி வந்திருக்கிறேம். சொத்துரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள மட்டுமே இந்தமுறை உதவுகிறது. ஏழை எளியவர்களின் தேவையை நிறைவு செய்வதற்கு இதில் வகை செய்யப்படவில்லை. நமது நீதிமுறை சமூக மாற்றத்தை (Social Change) எதிர்பார்த்து அதற்கு உதவுவது இல்லை.'' என 24—8—75ல் ஆற்றிய தமது உரையில் குறிப்பிட்டுள்ளார். ''சமூகப்பொருளாதார மாற்றங்களைத் தடை செய்வதற்குச் சட்டத்தைப் பயன்படுத்தக்கூடாது. நமக்கு நியாயம் கிடைக்கிறது என்று ஏழை மக்கள் நினைக்க வேண்டும்'' என 1—8—1975 அன்று குறிப்பிட்டுள்ளார். இவைகளிலிருந்து நீதிமுறைகள் மக்கள் அனைவரும் நல்வாழ்வு வாழ வகை செய்யக் கூடியனவாய் அமையவேண்டும் என்ற அவர்தம் வேட்கை நன்கு தெளிவாகின்றது.

கடமை உணர்வு:

நம் நாட்டில் இன்று எல்லார் மனத்திலும் ''வேலையே செய்யாமல் பொருளீட்ட முடியுமா? அல்லது குறைந்த வேலை செய்துவிட்டு மிகுந்த ஊதியம் பெற வழியுண்டா?'' என்று எண்ணுகின்ற மனப்பாங்கு உள்ளதனை

எல்லாரும் அறிவோம். ''நின்று தின்றால் குன்றும் மாளும்'' என்பதனையே மேடைகளிலே பேசுவோரும் விளக்கஉரை கூறுவோரும் நம் நாட்டில் எண்ணற்றவர்களாக உள்ளனர். ஆனால் செயல்படுவோர் தாம் இல்லை. இந்த நிலை நீடித்தால் நாட்டின் நிலை என்னவாகும். மேலும் ஏதாவது குறைகளைக் கூறி பொழுதினைப் போக்கும் மக்கள் மிகுந்து வருவதனையும் காணுகின்றோம். இவற்றையெல்லாம் நன்கு உணர்ந்தே புரட்சிகரமான திட்டங்களைத் திருமதி இந்திராகாந்தி கொண்டுவந்துள்ளார். எல்லார்க்கும் கடமையுணர்வு வேண்டும் என்பதனையும் கடமையுணர்வோடு கட்டாயம் செயல்பட வேண்டும் என்பதனையும் விளக்கிப்பேசியபோது வேலைகளைச் செய்ய வேண்டிய நேரத்தில் செய்துமுடிக்காமல் வேலைப்பளு மிகுதி யென்றும் மிகைநேரம் வேண்டுமென்றும் கூறி நாட்டின் பொருளாதாரத்தினைச் சீர்கெடச் செய்வோர் நாளாவட்டத்தில் அதிகமாகி வந்ததனைக் கண்டு மனம் புழுங்கிய பிரதமர் ''கொடுக்கப்பட்ட நேரத்தில் வேலையைச் செய்து முடிக்காமல் இருப்பதற்குக் காரணமே கிடையாது. அப்படிச் செய்து முடிக்காவிட்டால் அவர்களிடம் ஏதோ குறை இருக்கிறது என்று பொருள். எட்டு மணி நேரத்தில் ஏராளமான வேலைகளைச் செய்துமுடிக்கலாம். ஒருசிலர் விஷயத்திலும் ஒருசில நேரங்களிலும் தவிர, ஒருநாளில் செய்துமுடிக்க இயலாத அளவுக்கு வேலைப்பளு இருக்கும் என்று நான் நினைக்க வில்லை'' என 29—8—75 என்று கூறியுள்ளார்.

தரமான உற்பத்தி:

கடமையை உணர்ந்து செயல்படுவதோடு கல்வித்துறையிலும் தொழில்துறையிலும் தரத்திற்குச் சிறப்பிடம் தரப்படுதல் வேண்டும் என்பதில் இரண்டு இடங்களிலும் அரசியல் புகக்கூடாது என்பதிலும் இந்திராகாந்தி அவர்கட்கு அசைக்கமுடியாத நம்பிக்கை உண்டு. ''ஒப்புக்கொள்ளப்பட்ட தரங்களை மதித்து நடக்க சிலர் தவறிவிடுவதால், நமது ஏற்றுமதித் தொழிலுக்கே களங்கம் ஏற்படுகிறது. இதனால் நாட்டின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. இனி, திறமை, உயிர்த்துடிப்பு ஆகிய புதிய பண்புகளுடன் திறந்த உலகில் அடி எடுத்து வைக்க வேண்டும்''. (5—8—75) என்று குறிப்பிட்டுள்ளார்.

கல்லூரிகளில் போட்டாப் போட்டி அரசியல் புகுந்து ஒழுங்கு, கட்டுப்பாடு, சிந்தனைத் திறன், செயலூக்கம், ஆகிய அத்தனையையும் நிலைகுலையச் செய்துவிட்டன. கற்கும் மாணவர்களிடம் இவை இல்லையென்றால் அவர்களால் உருவாகும் எதிர்காலம் எப்படி இருக்குமென எண்ணிப் பார்க்காமலேயே கூறிவிட முடியும். இவற்றையெல்லாம் கவலையோடு எண்ணியும் சிந்தித்தும், பார்த்த பிரதமர் அவர்கள் ''அரசியல் என்பது, மாணவர்கள் படிக்கக்கூடாது, ஆசிரியர்கள் கற்பிக்கக்கூடாது, தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடாது, தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யக் கூடாது என்பது அல்ல'' என்றும் ''நீண்ட நாட்களாகப் பிறரைக் காப்பியடித்துக் கொண்டிருந்து

விட்டோம். இப்போது அறிவுச் சுதந்திரம் பெறப் பாடுபட வேண்டும்'' என்றும் (4—10—75) கூறி தன் நோக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

பழமையும் புதுமையும்

புரட்சி என்பது பழமையை அடியோடு அழித்துப் புதுமை காண்பது இல்லை என்பதனை இந்திரா காந்தி அவர்கள் உறுதியாக நம்புகின்றார். நல்லன எனப்படுவனவற்றைப் பழமை புதுமை பாராமல் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் அவர்தம் கோட்பாடு. பழமையை நையாண்டி செய்வதும் புதுமையைக் கண்மூடி ஏற்பதும் அவர்க்கு ஒத்துக்கொள்ளாத ஒன்று. ''நமது பழைய சம்பிரதாயங்களில் நாம் போற்றிப் பாதுகாக்கவேண்டிய நல்ல அம்சங்கள் பல உள்ளன. மரத்துக்கு வேர் உள்ளதுபோல சமூகமும் சம்பிரதாயங்களில் வேரூன்றி இருக்கிறது. ஆனால், நமது குடும்பங்களுக்கும் சமூகத்துக்கும் சுமையாகிவிட்ட விரும்பத்தகாத சில மரபுகளும் உள்ளன. திருமணங்களில் வீண் செலவு செய்வதும் வரதட்சிணை கேட்பதும், கொடுப்பதும் இதில் அடங்கும். எந்தெந்த மரபுகளை வைத்துக் கொள்ள வேண்டும், எவற்றை உதறித்தள்ள வேண்டும் என்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டும். நவநாகரிகமானவையெல்லாம் நல்லவையாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. ஒவ்வொரு விஷயத்திலும் நல்லவையும் உண்டு; தீமையும் உண்டு. விளைபொருள் உற்பத்தியை அதிகரிக்க விரும்பும் விவசாயிகள் ரசாயன உரங்களையும் பூச்சி மருந்துகளையும், தேர்ந்த ரக விதைகளையும் உபயோகிக்கிறார்கள். இவையெல்லாம் பயனுள்ளவைதான். ஆனால், மாட்டுச்சாணம், பசுந்தாள் உரம்போன்ற பழையமுறை உரங்களை உபயோகிப்பதை விட்டுவிடக்கூடாது'' என்று அவர் கூறுவதிலிருந்து அவர் பழமையைப் போற்றிப் புதுமையை வரவேற்கின்றார் என்பதனை நன்கு உணரலாம்.

மகளிர் பொறுப்பு

அனைத்துநாட்டுமகளிர் ஆண்டாகிய இந்த ஆண்டில் செப்டம்பர் திங்கள் 5 ஆம் நாள் மாநில சமூக நல ஆலோசனை வாரியங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோரது மாநாட்டில் பிரதமர் உரையாற்றும்போது ''பழைய மரபுகள் நம் இரத்தத்திலேயே ஊறிவிட்டிருக்கின்றன. எதிர்காலத்தை நோக்கி நாம் முன்னேறும்போது, பழைய மரபுகளில் எவற்றை அடித்தளமாக நம்மோடு இருத்திக்கொள்ள வேண்டும் என்பதைப் பகுத்துணர வேண்டும். தாய், சகோதரி, மகள்) மனைவி ஆகிய எல்லோரும் தனித்தனியாகப் புரியவேண்டிய தொண்டு இருக்கிறது. இந்தத் தொண்டு தவிர இவர்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்டவர்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இவர்கள் ஒவ்வொருவரும் இந்தியாவின் குடிமக்கள் மட்டுமல்லாமல் உலகத்தின் குடிமக்களும் ஆவார்கள். தத்தம் நாட்டிலும் மனிதகுலம் முழுவதிலும், சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் பொறுப்பை எந்த பெண்ணும் தட்டிக் கழித்துவிட

முடியாது'' என்று உரை நிகழ்த்தி நல்ல சமுதாய மாற்றங்கள் ஏற்படுத்துவதில், மகளிர் பெரும் பங்கு வகிக்க வேண்டும் என்பதனைத் தெளிவுபடுத்துகின்றார்.

வாழ்க நம் பிரதமர்

'முள்நிறைந்த கிரீடத்தைத் தாங்கி'ச் செவிகைக்கும் சொற்களைப் பொறுத்து சிந்தனைத் தெளிவோடு உண்மையை ஆய்ந்து, தக்க நடவடிக்கை எடுத்து, சமுதாய நீதிகள் நிலைபெற வேண்டுமென்று பல்வேறு துறைகளிலும் பாடுபட்டு, கடமை உணர்வோடு செயல்பட்டுவரும் நம் பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் பெரும்பான்மையான மக்களின் எதிர்கால நம்பிக்கைச் சின்னமாக விளங்குகின்றார். மக்களின் உரிமைகளை நேரிய வகையில் காக்கும் காவலராகவும், இளைஞர்களின் முற்போக்கான நல்ல சிந்தனைக்கு ஆதரவாகவும் விளங்குகின்றார். பாரதத்தின் வளமான எதிர்காலத்துக்குத் தன்னை முழுவதாக அர்ப்பணித்துக்கொண்டார். அப்பெருமை மிக்க மகளிர் திலகத்தினை, மக்கள் நலம் புரக்கும் மாபெரும் தலைவரை இம்மகளிர் ஆண்டில் அவர்தம் 59-ம் பிறந்த நாளாகிய 19—11—75 அன்று, **"தாய்க்குலத்தின் ஆற்றலுக்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் ஏந்திழையே! இந்திரா அவர்களே! இந்தியத் தாயின் தண்ணருளால் நீவிர் நெடிது வாழ்க! உம் திறத்தால் நம் இந்தியப் பெருநாடு பெருமையோடு வளர்க''** என்று வாழ்த்துகின்றோம்.

அவி விரோத ஞானச் சுடர்வாள்

ஞானம், அஞ்ஞானமாகின்ற காட்டை அழிக்கின்றது; ஆதலால் ஞானத்தை வாள் என்றனர். ஆணவ இருளை அழிப்பதால் அதனைச் சுடர்வாள் என்றும், கூர்மையாக இருப்பதால் வடிவாள் என்றும் அழகாக உரைப்பாராயினர். ஞானம் கூர்மையாக இருக்கவேண்டும். ''கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின் நோக்கரிய நோக்கே'' என்பது மணிவாசகம். அவிவிரோதம் என்பது விரோதமில்லாமை. எல்லாந்தானாகவும், எனதும் யானும் வேறாகவும் ஆகிநிற்கும் நிலையில் விரோதபாவம் இல்லாமல் அழிகின்றது, தான் என்பது தொலைந்தது; எல்லாம் தானாகி விட்டது. அந்த நிலையில் விரோதம் எங்கிருந்து வரும்? யாரை விரோதிப்பது? யாவரும் யாவும் தானாக நிற்கும் நிலையில் எவ்வளவு சாந்தம்; எவ்வளவு அமைதி, அன்பர்கள் சற்று ஆழ நினையுங்கள்; அது எத்துணை உயர்ந்த நிலை. அது மனத்தில் நினைப்பதற்குக் கூட முடியாத அத்துணைச் சிறந்த நிலை.

கிருபானந்த வாரியார் சுவாமிகள்

பிரதமரின் பொருளாதாரத் திட்டம்

ஜூலை மாதம் 1-ந் தேதி பிரதம மந்திரி ஒரு பொருளாதாரத் திட்டத்தை அறிவித்ததை நாம் எல்லோரும் அறிவோம். இந்திய சமுதாயத்தைச் சீரமைக்கும் பணிக்காக எடுக்கப்பட்ட ஒரு முக்கிய நடவடிக்கை என்றே இதைச் சொல்லவேண்டும். நமது தேசிய கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் புத்துயிர் கொடுக்கக் கூடியது இத்திட்டம். வறுமையை விரட்டும் பணியில் நம்மையெல்லாம் மீண்டும் அர்ப்பணித்துக் கொள்ளத் தூண்டுவதும் இத்திட்டமே. 'இத்திட்டம் அவசரநிலை பிரகடனத்திற்குப் பிறகு ஏன் அறிவிக்கப்பட்டது? முன்னரே ஏன் செய்யவில்லை? என்ற கேள்விகள் எழுகின்றன. பரந்த நோக்கம், முற்போக்கான செயல் ஆகியவைகளின் குரல்வளைகள் பிடித்து நசுக்கப்பட்டன. எங்கும் ஒரு கலவர நிலை உருவாக்கப்பட்டது. கடத்தல், கறுப்புப்பணம் மற்றும் பொருளாதாரக் குற்றங்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட சட்டபூர்வ நடவடிக்கைகள்கூட பல்வேறு தடங்கல்களுக்குள்ளாயின. அவசரநிலை பிரகடனத்திற்குப் பிறகே ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் கொண்டுவரப்பட்ட இப்பொருளாதாரத் திட்டத்தால் பல நன்மைகள் ஏற்பட்டு வருகின்றன.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்தப் புதிய பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன. கடந்த இரண்டாண்டுகளாக நச்சுப்போல் ஏறி வந்தவிலைவாசியால் மக்கள் அவதியுற்றனர். அவர்களின் துன்பத்தைத் துடைக்கும் வகையில் எடுக்கப்பட்ட இந்த முன்னோடித் திட்டங்களை நாம் வரவேற்க வேண்டும். அதோடு கடத்தல்காரர்களும் கள்ளமார்க்கட்காரர்களும் நீதிமன்றங்களின் சில தீர்ப்புக்களால் விடுதலை பெற்றனர். இந்நிலை பணவீக்கத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் ஊட்டுவதாய் இருந்தது. பாங்க் நிதிகள் தவறான வழிகளில் பயன்படுத்துவதைத் தடுத்துள்

மாண்புமிகு நிதி அமைச்சர்
திரு. சி. சுப்பிரமணியம்

இவர்தம் நிர்வாகத்திறன், ஆராய்ச்சி மனப்பாங்கு, எளிமை, தமிழார்வம், எழுத்தாற்றல், தெளிவான சிந்தனை ஒருமைப்பாட்டு வேட்கை ஆகியனவற்றை அனைவரும் அறிவர். அவர் இந்தியப் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின் பகுதியே இக் கட்டுரை.

ளோம். தேசிய முன்னுரிமைத் துறைகளுக்கே அவை உபயோகப் படுகின்றன என்பதை உறுதிபடுத் திக் கூற விரும்புகிறேன்.

ஜூலை முதல்நாள் ஒலிபரப்பில் பிரதம மந்திரி அவர்கள் அறிவித் ததுபோல் கடத்தல்காரர்கள், வரி ஏய்ப்போர், கள்ள மார்க் கெட்காரர்களுக்கெதிரான நட வடிக்கைகள் மேலும் தீவிரமாக் கப்பட்டுள்ளன. சட்டத்திலுள்ள சந்துபொந்துகள் யாவும் அடை பட்ட நிலையில், நாடறிந்த 'கடத்தல் மன்னர்கள்' சிலர் முழு வதுமாக முடக்கப்பட்டுள்ளனர்.

நெருக்கடி நிலையைத் தொடர்ந்து பணவீக்கத்திற்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக் கைகளின் பயனுய்ப் பொதுமக்கள் பயன்படுத்தும் பண்டங்களின் மொத்த மற்றும் சில்லரை விலை கள் இறங்குமுகமாகியுள்ளன. 1975 ஜூன் 28-ந் தேதி யிலிருந்து மொத்த விலை குறியீட்டெண் சரிந்தவண்ணம் உள்ளது.

பிரதம மந்திரி அறிவித்தது போல, பணவீக்கத்தை முழுதும் கட்டுக்குள் கொண்டுவர வேண்டு மென்றுல் விவசாயத் துறையிலும் தொழில் துறையிலும் உற்பத்தி யின் அளவை ஒரு மட்டத்திற்கு மேல் வைத்திருப்பது அவசியம். புதுப்பொருளாதாரத் திட்டத் தின்கீழ் இன்னும் ஒரு சில ஆண்டு களில் 50 லட்சம் ஹெக்டேர்நிலம் புதிதாகச் சாகுபடிக்குக் கொண்டு வரப்படும். இந்த லட்சியத்தை அடையும் வகையில் பெரிய நடுத் தர பாசனத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு குறிப்பிடத்தக்க வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

1975-76 ஆம் வருடம் முதல் மூன்று மாதங்களில் தொழில் துறையின் உற்பத்தி 5 அல்லது 6 சதவீகிதம் அதிகரித்துள்ளது' பொதுத்தொழில் நிறுவனங்களின் உற்பத்தியும் கடந்த ஆண்டு இதே காலத்தில் இருந்ததைவிட 14 சதவிகிதம் உயர்ந்துள்ளது. நடப்பு ஆண்டில் இரும்பு, எஃகு, நிலக்கரி, ஆகியவற்றின் உற்பத்தி கணிசமாக உயரும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

பிரதமரின் சொல்லுக்கிணங்க தொழிலாளர்களும் முதலாளர் களும் ஒருமித்த உணர்வோடு செயல்படத் துவங்கியுள்ளனர். நாடெங்கிலும் இணக்கமான தொழிலுறவு ஏற்பட்டு உள்ளது. பொதுத்துறை, தனியார்துறை நிர்வாகங்களும், பிரதமரின் ஆக் கத் திட்டங்களுக்குச் செயலில் முழுவடிவம் கொடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

சமூக நீதியை நிலைநாட்டும் வகையில் பொருளாதார வளர்ச்சி இருக்கவேண்டும் என்பதை இந் தப்புதுப்பொருளாதாரத் திட்டம் தெளிவுபடுத்துகிறது. சமுதாயத் தின் அடிமட்டத்திலிருக்கும் பாமர மக்களின் குறைந்தபட்சத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற் காக நிரந்தரமான ஏற்பாடு செய்யப்படுகிறது. இதற்காக, பொது விநியோக அமைப்புகள் விரிவாக்கப்பட்டு வருகின்றன. கல்லூரி மற்றும் பல்கலைக்கழக விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ மாணவியரின் அடிப் படையான தேவைப்பண்டங் களின் தேவைகளை நிறைவு செய்ய சிறப்புக் கவனம் செலுத்தப்படு கிறது. நாடெங்கிலும் ஒரு லட்

சம் மக்கள் தொகை அளவிற்கு மேலுள்ள நகரங்களிலுள்ள கல்லூரி விடுதிகளில் இப்பண்டங்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

பிரதமர் அறிவித்ததுபோல், நகர்ப்புறச் சொத்துக்கள் வாங்குவதில் உச்சவரம்பு விதிக்க சீக்கிரமே சட்டம் இயற்றப்படும். காலி மனையாக வைத்திருப்பதைக் கட்டுப்படுத்தியும் தேவைக்குமீறி புதிதாக வாங்கும் நிலம் நகரங்களிலும், புற நகர்ப்பகுதிகளிலும, கட்டப்படும் வீடுகளின் அளவுகள் நிர்ணயிக்கப்பட்டும் சொத்துக்களைச் சமுதாய உடைமையாக்க சட்டங்கள் இயற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இந்த நடவடிக்கைகள் தீவிர சமுதாய மாற்றங்களை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் சீராக அமுலாக்கப்பட்டால் சமுதாயத்திலுள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் குறையும். நகர்ப்புற வளர்ச்சியால், ஏற்படும் விலையேற்றம் நியாயமான அளவில் இருக்கவும் ஒருசிலர் மட்டுமே பணக்காரர்களாவதைத் தடுக்கவும் இது உதவும். நகரச் சேரிகளை ஒழித்து ஏழை எளியோரின் குடியிருப்புத் தேவைகளையும் நிறைவு செய்யும். □

with best compliments of:

H. O. MADRAS Regtd. 1962
Phone : 25430

Phone: 33808

The Industrial & Laboratory Equipment Co.,

SPECIALISTS IN LABORATORY EQUIPMENTS

45-A, Raja Street ● Five Corner ● Coimbatore-641 001

Authorised Distributors:-

□ CORNING - BOROSIL GLASSWARE □ HIGH PURITY ORGANIC REAGENTS □ TECHNICO OVENS AND FURNACES ELECTROFONES PHYSICS EQUIPMENTS □ SARABHAI - M. CHEMICALS REAGENTS □ KEERTHI ACIDS AND □ HIMOPITC MICROSCOPES □ DE-MINEROLITE □ DE - TONEX □ REECHEM REAGENTS & CHEMICALS

BRANCHES :

Madurai, Vijayawada, Hyderabad, Bangalore, Trivandrum.

பூவையை மதிப்பது புதுச்செய லில்லை!

மகளிருக் குரிய மாண்பினை யெல்லாம்
புகலுதற் குரிய பொன்னாண் டொன்றினை
வகுத்தனர் ஐக்கிய மாநாட் டாளர்!
மதித்தனர் பெண்மையை! மகிழ்வுறு கின்றேன்!
பூவையை மதிப்பது புதுச்செய லில்லை!
ஆயிர மாயிரம் ஆண்டுகள் முன்னே
கண்ணெனப் பெண்களைக் கருதிப் போற்றிய
வண்டமிழ் நாடிது! வள்ளுவம் காட்டும்
பெண்களை இழித்துப் பேசிய தெல்லாம்
பின்புவந் துற்ற பேதமை யாகும்!
பிறந்தபொன் னாட்டைப் பேசிடும் மொழியைச்
சிறந்தநற் றாயெனப் புகழ்ந்தவன் எப்படிப்
பாவையர் குலத்தினைப் பழித்திடத் துணிந்தான்?
பேயென எப்படிப் பேசிடப் புகுந்தான்?
மாணுயர் கல்வியை மதித்தவ னின்மனம்,
வீணையும் கையுமாய் விளங்கிடு வாள்கலை
வாணியென் றுருகி வணங்கிய அம்மனம்
கோணிக் கோணிக் குறுகிய தெவ்விதம்?
போற்றுதல் ஒழிந்து பூவையர் குலத்தினைத்
தூற்றுதற் கென்ன சொல்லலாம் காரணம்?
பெருமை சிறுமை பேசிப் பேசி
அடிமைப் படுத்தி ஆளுங் கொள்கையோ?
ஏக்கங் கொடுக்கிறாள்; இரவிலே தூங்கும்
தூக்கம் சிதைக்கிறாள் துடியிடை யாளவள்
மயக்கி மயக்கி மனிதனை எங்கோ
இழுக்கிறாள்; ஞானம் கெடுக்கிறாள் என்று
சும்மா பழிகளைச் சுமத்திட லாமா?
பெண்மான் இதுபோல் பேசவா மாட்டாள்?
மாதரை ஆண்கள் மயக்குவ தில்லையோ?
காதலில் நெஞ்சைக் கவருவ தில்லையோ?
நோக்கிய நோக்கினால் நுண்ணிடைப் பாவையர்
தூக்கம் வராது துடிப்பது மில்லையோ?
தூதெனப் பார்வையைத் துரத்துவ தில்லையோ?
ஈதெலாம் மேடையில் எப்படிச் சொல்வது?
புகழ்கலை வாணியின் பொறுப்பெனில்; மயக்கி
மகிழ்கலைக் கதிபதி மன்மதன் அல்லவா?
அவனோ ஆணினம்! அப்படி யிருக்கத்
தவறெனில் அதனை யார்தலை சுமப்பது?
தனித்தனி இருந்து தவிக்கவா ஆண்எதிர்
இனித்திடும் பெண்மையை இறைவன் படைத்தான்?

திருமதி சௌந்தரா கைலாசம்

இவர் தமிழார்வம் மிக்க நல்ல கவிஞர்; சமூகப்பணி நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுப் பணிபுரியும் நல்லார்; பேச்சாற்றலும் நினைத்தவுடன் கவி பாடும் கவிதைத் திறனும் மிக்கவர்; சென்னை உயர்நீதி மன்ற மாண்புமிகு நடுவர் திரு. கைலாசம் அவர்தம் வாழ்க்கைத்துணைவியார்.

காதற் கவர்ச்சியில் கடுகள வேனும்
தீதிலே; தெய்வத் திருவுளக் குறிப்பது!
ஒளியும் விழியும் ஒன்று கலக்கும்
களிப்பில் எழுவதே காட்சிச் சிறப்பு!
எதற்கும் வரம்பு இருப்பதுண் டல்லவா?
கடந்திடில வாழ்வு கசந்திடு மல்லவா?
கசந்தஅக் கசப்பிலே பிறந்த கவிதைகள்
இகழ்ந்தன பெண்களை! இதுதான் உண்மை!
இகழ்ந்து பெண்களை எள்ளள வேனும்
வரைந்த துண்டா வள்ளுவப் பெருந்தகை?
உண்ணும் நீரினும் உயிரினும் மேல்எனும்
பெண்ணினும் யாது பெரிதென் பார்அவர்!
குறள்தரும் பெண்ணின் கோலமே கோலம்!
சிறையுறு வாழ்வைச் சீறிடும் கோலம்!
வரவுக் கேற்ற வகையிலே வாழ்வில்
செலவிடத் தெரிந்த சேயிழை யாளவள்!
வாளிலே வீரக் கவிதை வரைபவள்;
தோளிலே உரிமையாய்த் தொத்தும் கிளியவள்!
சொர்க்க சுகமெலாம் சுடர்விழிப் பார்வையில்
நிற்க வைக்குமோர் நெறியறிந் தவளவள்!
அத்தகு பெண்மனை யாக வந்திடில்
இத்தரை மீதுறும் இன்ப வானகம்!
கோடி கோடி குவிந்திருந் தாலும்
கூடி யிருந்து குடும்பம் நடத்தும்
மனைவி யிடத்தொடு மாண்பிலே யானால்
தினமும் மனத்தைத் தின்னும் கவலை!
வாய்த்த மனைவி மாண்பது காத்தலால்
காய்த்துக் குலுங்கிக் கனிதரும் வாழ்க்கை!
ஒன்றுறத் தழுவி ஓங்குதற் கென்றே
வலிவையும் பொலிவையும் வகுத்தனன் இறைவன்;
கூடிக் கலந்து குலவுதற் கென்றே
ஆணையும் பெண்ணையும் அருளினன் இறைவன்!
பெருமை சிறுமை பேசிப் பேசி
அடிமைப் படுத்தி ஆளுதற் கல்ல!
ஒருவர் இருவரில் உயர்வெனக் கருதிப்
பேசப்படுதல் பெரும்பிழை யாகும்!
ஆண்களுக் குள்ள ஆற்றலே வேறு!
பெண்களுக் குள்ள பெருமையும் வேறு!
இருதனிக் கூறுகள் இவையென் றாலும்
ஒருதனி இறைவனின் உன்னதப் படைப்பு!
குவளைக் கண்ணி கூறன் எனத்திரு
வாசகம் 'அவனை' வருணிக் கின்றது!
பேசரும் இந்தப் பெரிய தத்துவம்
ஆணொடு பெண்ணவள் அன்பினில் ஒன்றி
நீணிலத் திருக்குறள் நெறியினைக் காட்டும்!
எடுத்து மடித்து இடுப்பிலே செருகத்
துடித்துக் கிடந்தால் துளிர்விடா தில்லறம்!
கொடுத்துப் பெறுமொரு கொள்கையே நல்லறம்!
வெறுத்துச் சினந்து வெறுப்பது பொய்யறம்!
பொறுத்துத் தணிந்து போவதே மெய்யறம்!
மெல்லிய வாளும் வீரக் காளையும்
சொல்லிய இல்லறச் சுவையது கருதி
ஒருவரை ஒருவர் உணர்ந்து கலந்து
பெருந்தனி இன்பம் பேச முடியுமா?
மகளிர் மாண்பு மிகத்தெளி வாகிட
மார்கழி மாத மகத்துவம் — ஆமாம்
நாயக நாயகி பாவம் போதுமே!
தாயது மெழுகென உருகித் தொழுவது;
கடவுள் அருளிலே கலப்பது; கலந்து
கிட்ப்பது; வினையிருள் கெடுப்பது! பெண்மைக்
கூறது தானெனக் கூறுவ தற்கு
நாயக நாயகி பாவம் போதுமே!
பெண்ணினைப் போலொரு பெரிய தியாகியை
மண்ணுல கிதுவரை கண்டதே இல்லை!
துறந்தவர் கூடத் தொழுதனர் தாயை!
சிறந்தது தாயினம் சிறந்தது தாயினம்!
நினைக்க நினைக்க நீளும பெருமையைச்
சுமக்கவா முடியும் சொற்களின் கூட்டம்?

மகளிர்க்குப் பொருந்திய மேல்நிலைக் கல்வி

கல்வி இன்றைய சமுதாயத்தில் இன்றைய நாளில் உணவெனக் கருதக்கூடியதாக, இன்றியமை யாத் தேவைகளில் ஒன்ருக விளங்குகின்றது. பெண்ணினத் திற்கும் கல்வி இன்றியமையாத தென நாடெங்கணும் காணப்படு கின்ற சமுதாயப் பிரச்சினைகள் வலியுறுத்துகின்றன. ஆனல் நம் நாட்டின் சமுதாய வரம்பிற் கேற்ற பண்பினைப் பேணும் தகைமை வாய்ந்த கல்வித்திட் டம் ஒன்றினை இற்றைய சூழ்நிலை யில் எண்ணிப் பார்க்கவேண்டிய நிலையில் இருக்கிருேம். ஏனெனில் இன்று பெண்கள் பெறுகின்ற கல்வி அறிவு அவர்களை எங்கெல் லாமோ அழைத்துச் செல்கின் றது. பெண்ணினம் சீமுதாய மதிப்பைப் பெற்றிருக்கிறதா? பெண்மையின் இலக்கணங்கள் பேணப்பட்டு வருகின்றனவா? என்பனபோன்ற வினுக்களுக்கு விடையளிக்கவேண்டிய நிலையில் இருக்கிருேம். கல்வி மேலே கண்டவற்றவைகளில் நல்ல மாற் றங்களை விளைவித்திருக்கின்றதா அல்லது பெண்ணினத்தின் வளர்ச் சியினுல் சமுதாயம் பொருமைக் கண்கொண்டு எதிர்ப்பான கணை களைத் தொடுத்திருக்கின்றதா என்று நம்மால் புரிந்துகொள்ள இயலவில்லை.

பாரதி கண்ட புதுமைப்பெண் இலக்கியத்தில் அறிமுகமானவள். ஆனுல் இன்றைய சமுதாயத்தில் ‘ஞானச் செருக்கு’ப் படைத்த பெண்ணை நம் மண்ணில் அதிக மாகக் காண இயலவில்லை. பெண் ணினம் அடிமைப்படுத்தப்பட்டு நசுக்கப்பட்டு, உரிமைகளை

செல்வி:
இரா. இராச பத்மாவதி

இவர் சென்னை எத்திராசு மகளிர் கல்லூரி யில் பட்ட வகுப்பு இரண்டாம் ஆண்டு (ஆங்கிலம்) பயிலும் மாணவி. கதை, கட்டுரை எழுதுவதில் ஆர்வம் மிக்கவர்.

இழந்து உதிர்ந்த, உலர்ந்த சருகாகி நிற்கிறது. சமுதாயப்பிழைகளைக் களைகின்ற தகுதி பொதுவாக தாயினத்திற்கு இயல்பாகவே இருக்க வேண்டும். ஆனால் வளர்ந்து வரும் சமுதாயத்தில் அறிவின் பகுப்புக்களாலோ அல்லது முதிர்ச்சியினாலோ அத்தகைய உணர்வை இன்று நாம் காண முடிவதில்லை. தானுண்டு, தன் வீடுண்டு, தனதருமைக் குடும்பம் உண்டு என்ற ஒரு குறுகிய நோக்குக்கொண்டு நம்நாட்டுப்பெண்ணினம் வளர்ந்து வருகிறது. இதைக் கல்வியினால் மாற்ற இயலுமா? அதற்குத் தேவையான கல்விமுறைதான் என்ன? என்பதை இனிக்காண்போம்.

நடைமுறையில் இருக்கின்ற கல்வி பெண்ணுக்கு ஆணுடன் பணிகளுக்குப் போட்டியிடுகின்ற தகுதி ஒன்றினைத்தான் வழங்கியிருக்கிறது. ஆனாலும் சில கல்வி முறைகள் பெண்டிர்க்கு ஏற்றவைதாமா என ஒரு சாராரால் கேட்கப்படுகின்றது. ஆணுக்குப் பெண் சளைத்தவள் அல்லள்என்ற கருத்துப்பட எல்லாப்பணிகளிலும் பெண்ணினம் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள போட்டியிடுகிறது. இதன் விளைவாகப் பெண்கள் பொறியியல் வல்லுநராக, மருத்துவராக, மின்னியல் பொறியராக விஞ்ஞானியாக முடிகிறது. இவையெல்லாம் பெண்ணைப் பெருமைப்படுத்திவிட முடியாது. பெண், சமுதாயத்தில் நல்ல மதிப்பைப்பெற்று வாழவேண்டிய இக்கட்டான நிலைக்கு உள்ளாகிறாள். ஆனால் ஆண் அவ்வாறு அல்ல. பெண் சில வரையறைக்கு உட்பட்டவள். இந்த வரையறை, என்று? யாரால்? எப்போது? உருவாக்கப்பட்டது என்பது இன்னும் தெளிவாக இல்லை. ஏனெனில் பெண்ணின் பெருமை பேசுகிற வள்ளுவர், 'கற்பென்னும் திண்மை' பெண்ணுக்கு இன்றியமையாதது என்று குறிப்பிடுகின்றார். ஆனால் அத்தகைய இன்றியமையாத குணநலம் ஒன்றினை ஆணுக்குப் பரிந்துரைக்காது, பேராண்மை- அதுவும் ''பிறன்மனை நோக்காத பேராண்மை'' அறன் என மட்டுமே குறிப்பிடுகிறார். இதிலிருந்து பெண்ணை அடக்கி ஆள்கின்ற, வாழ்க்கைத் துணையாக் கோருகின்ற ஓர் எண்ணம் வெளிப்படையாகவே இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் இருந்திருக்கின்றது என்பது புலனாகின்றது. வள்ளுவர்,

''தற்காத்து தற்கொண்டாற் பேணித்
தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்''

என்று கூறி முழுப்பொறுப்பினைப் பெண்ணுக்கு இலகுவாக அளித்துவிடுகிறார். ஆயினும் அவர் காலத்தில் பெண்பாற்புலவர்கள் மிகுந்து இருந்தனர் என்பது யாவரும் அறிந்ததே. எனவேதான் பெண்ணின் விடுதலைபற்றிப் பெரிதும் பாடிய கவிதைக்குயில் பாரதி என்னென்னவோ சொல்லிச் சென்றான். ஆகவே எங்கும் எதிலும் பெண்மையின் நலிவைக் கண்ட திரு. வி. க. பெண்ணின் விடுதலை இயக்கத்தைப் பெரிதும் விரும்பினார். அத்தகைய விடுதலை வேட்கை இன்று வேறு கோணத்தில் திசைதிருப்பப்பெற்று அமெரிக்காவில் வளர்ச்சியடைந்து வருகின்றது. இத்தகைய வளர்ச்சியை நம் நாட்டிலும் நாம் விரும்புகிறோமா என்பதில் நாம் அதிக

கவனம் செலுத்த வேண்டும். இந்தச் சூழலில் பெண்ணுக்குரிய கல்வி எவ்விதம் அமைய வேண்டும் - அஃதும் நம் நாட்டிற்கு ஏற்றவாறு என்பதை ஈண்டுக் காண்போம்.

இயற்கையாகவே பெண்ணின் உடற்கூறு கடின வேலைகளை ஏற்றுக்கொள்ளும் தகுதியைப் பெற்றிருக்கவில்லை என்பது பலஉடற்கூற்று வல்லுநர்களின் கருத்தாகும். ஆனாலும் வான்வெளிப் பயணம் செய்து மீண்டு வந்த வலண்டினா இந்தக் கருத்தினை மாற்றிவிட்டாள். பெண் சிறந்த நினைவாற்றலையும் கூர்மையான 'நுண்மாண் நுழைபுலத்தையும்' இயற்கையாகவே பெற்றிருக்கிறாள் என்பதை அநேகமாக எல்லா உளநூல் வல்லுநரும் ஏற்றுக்கொள்கிறார்கள். இத்தகைய சீரிய திறம் படைத்த பெண்ணுக்கு ஏற்ற கல்வி மேலைநாடுகளில் இருப்பது போல மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை நாம் ஏற்றுக்கொள்வதில் தவறொன்றுமில்லை. கல்விக் கூடங்கள் நம் நாட்டில் எழுத்தர்களை மட்டுமே மிக அதிகமாகத் தோற்றுவிக்கின்ற நிறுவனங்களாகப்பெரும்பாலும் காணப்படுகின்றன. மேலும் படித்தபின் பெண்கள் மேற்கொள்ளும் பணி எவ்வகையாக இருக்கவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டுதான் மேல்நிலைக் கல்விமுறையைச் சீர்படுத்த வேண்டும். அத்துடன் படிக்கின்ற அத்துணைப் பெண்களும் படித்து முடித்த பின்னர் பணியேற்க விருப்பம் கொண்டுள்ளனரா என்பதை அறிந்துகொள்ள வேண்டியதும் ஏற்றதாகிறது. இஃதன்றி வேலை வாய்ப்புக்கள் பெண்களுக்கு மிகுதியாக இல்லை என்பது பெரும்பாலருடைய குற்றச்சாட்டு என்பதனையும் கருத்தில் கொள்ள வேண்டும். நடைமுறையிலுள்ள கல்வித் திட்டம் மிகுதியான பணி செய்யும் வாய்ப்பினைப் பெண்களுக்குத் தந்திருக்கிறது எனக் கூறிவிடுவதற்கு இல்லை. ஏனெனில் அறிவியல் பட்டப்படிப்புடன் ஆசிரியப் பட்டமும் பெற்றுப் பணி கிடைக்காது வாடித்தவிக்கும் வனிதையர் கூட்டம் நம் நாட்டில் மிகுதியாக இருக்கிறது. பெண்களே சொந்தமாக வேலை ஒன்றினைத் துவக்குகின்ற அளவுக்கு ஒருசில துறைகள் அஃதாவது ஒப்பனை நிறுவனங்கள், அழகு, கலை, உடல் வனப்பு அல்லது தோற்றக்கலை நிறுவனங்கள் போன்றவைதாம் வளர்ந்துள்ளன. அண்மையில் வங்கிகள், சீரிய நிர்வாகத்துறை ஆகியவற்றில் பணியாற்றும் வாய்ப்பினை நம் நாட்டில் பெண்ணினம் பெற்றிருக்கிறது. மக்கள் தொகையில் பெரும்பகுதியாகத் தோற்றமளிக்கும் பெண்ணினத்திற்குச் சமுதாயம் வழங்கிவருகின்ற நீதி இது என்பதைக் கற்றறிந்தோர் அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர். இந்த நிலைமையைச் சீர் படுத்த மேல்நிலைக்கல்வியில் சில மாற்றங்களைப் புகுத்தத் திட்டமிடுவதில் வியப்பென்ன! பொறியியல் துறையைச் சார்ந்த கட்டிடக்கலை, நுண்கலைப்பொருள் பற்றிய கலை, செய்தியிதழ் நிருபர், வங்கியில் கணக்காயர், பெரிய நிறுவனத்தில் செயலர், நேர்முக அலுவலர், சுற்றுலா வழிகாட்டி, தொல்பொருள் விளக்கர், நூலகர், வரவேற்பாளர், மின்னியல் உறுப்புக்கள் இணைப்பாளர் போன்ற இன்னபல துறைகளில் பாடத் திட்டங்களை மேல்நிலைக்

"தமது பெண்களுக்கு மதிப்புக் கொடுக்காத எந்தத் தேசமும் நாட்டு மக்களும், மேன்மை அடைந்ததே இல்லை; எதிர் காலத்திலும் அவை மேன்மை அடையப் போவதில்லை. சக்தியின் உயிர்ச் சின்னங்களான இவர்களுக்கு நீங்கள் மரியாதை கொடுக்காததுதான் உங்களுடைய வர்க்கம் இவ்வளவு கீழ்த்தரமான நிலைமைக்கு வந்ததற்கு முக்கியமான காரணம் ஆகும். தெய்வீக அன்னையின் உயிர்ச் சின்னங்களான பெண்களின் நிலையை உயர்த்தா விட்டால், உயர்வடைவதற்கு வேறு எந்த வழியும் இருக்கிறதென்று நினைக்காதீர்கள்".

— சுவாமி விவேகாநந்தர்

கல்விக்கு ஏற்றவாறு தொகுத்து அமைத்தல் இன்றியமையாததாகிறது.

மேலே கூறப்பட்ட அலுவல்கள் அனைத்தும் மகளிரின் உடற்கூற்றுக்கு ஏற்றவை என்பதைக் கருத்தில் கொண்டு பாடத்திட்டங்களையும், அத்தகைய பட்டைய பட்டப்படிப்புகளையும், மகளிர்க்கு என ஒதுக்கீடு செய்தல் சாலவும் நன்மை பயக்கும். இவையாவும் ஓரிடத்தே அமர்ந்து அலைச்சலின்றிப் பணியாற்றக்கூடிய தொழில்கள் ஆகும்.

மேலும் திரைப்பட நடிப்புக் கலையில் பட்டவகுப்பு, கணக்காயர் துறையில் பட்டவகுப்பு, கட்டிடக்கலைப் பட்டவகுப்பு செய்தியிதழ் நிருபர், ஆசிரியர், ஆகியவற்றிற்கான பட்டவகுப்பு, நூலகர், செவிலித்தாயார் ஆகியவற்றிற்கான பட்டவகுப்புகள் நம்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் துவக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால், இவற்றுள் மகளிர்க்கு மட்டுமேயான ஒருசில பட்டவகுப்புக்களைத் துவக்கியிருந்தால் பெண்கள் ஆணுடன் போட்டியிடுவதைத் தவிர்த்து இருக்கலாம். வேலை வாய்ப்புக்களைப் பொறுத்த வரையில்! ஆனால் செயலருக்கான பட்டவகுப்பு சுற்றுலா வழிகாட்டிக்கான பட்டவகுப்பு போன்றவை ஆண்களுக்காகத் துவக்கப்பட்டு இருக்கின்றன. எனவே, பட்டவகுப்புக்களுள் ஒருசில பிரிவுகளை மகளிர்க்கென ஒதுக்கிவிடுதல் மிக்க நன்மை பயக்கும் என்ற கருத்தினைக் கொண்டுதான் மகளிர்க்குத் தட்டெழுத்துப் பயிற்சி, கணக்கெழுதும் முறை, நெய்யாவிவண்டி ஓட்டுநர் பயிற்சி, சுருக்கெழுத்து ஆகியவற்றில் மகளிர்க்குப் பெரும்பாலும் சில பள்ளிகளிலேயே தரப்படுவதால், பள்ளிப் படிப்பு முடிந்தவுடன் தனியார் நிறுவனங்களிலுங்கூடப் பணியாற்றும் வாய்ப்பினைப்பெற உறுதுணையாய் இருக்கிறது. அதனால்தான் அமெரிக்கக் கல்விக் கூடங்கள் பள்ளிப் பாடத்திட்டத்தில் அவற்றை இணைத்துவிடுகின்றன. எனவே நம் நாட்டில் பள்ளிப்பாடத்திற்குப்பின் தொடர்கின்ற ஐந்தாண்டு அல்லது ஏழாண்டுக்கால வரையோடு பட்ட வகுப்புகள் ஆசிரிய, பேராசிரிய மருத்துவத் துறைகளுக்குத் தேவையான அடிப்படைப் பட்டத்தைப் பெறுவதற்காக வைத்துக்கொண்டு பள்ளிப்படிப்பு முடிந்தபின் மூன்று அல்லது நான்கு ஆண்டுக் காலவரைக்கு உட்பட்ட வேலை வாய்ப்புக்கு ஏற்ற பாடத்திட்டங்களை மேலே கூறப்பட்ட பிரிவுகட்காகத் துவக்குதல் வேண்டற்பாலது. இதனால் மகளிர்க்கு ஓராண்டுக் கல்விச் செலவு குறைவதோடு அரசுக்கும் செலவு மீதமாகும். இதைக் கருத்தில் கொண்டுதான் மேலை நாடுகளில் மகளிர்க்கெனப் பல கல்வித் திட

டங்களை வகுத்து வேலை வாய்ப்பினை மிகுதியாக வழங்கியிருக்கின்றனர். சமுதாயப் பணிக்கான பட்டய வகுப்புப் பாடத்திட்டம், நூலகர் பணிக்கான பட்டய வகுப்புப் பாடத் திட்டம், தொல்பொருள் இயல் பட்டய வகுப்புப் பாடத்திட்டம் ஆகிய இவற்றைப் பத்தாண்டுப் பள்ளிக் கல்விக்குப் பின்பு மூன்று அல்லது இரண்டாண்டு கற்றுத்தர வரையறையுடன் செயல்படுத்தலாம்.

பெண்ணினத்திற்கென ஒரு சீரிய கல்வித்திட்டத்தை வகுக்கு முன்னர் தாய்மை, வீட்டைப் பேணும் இயல்பு, இயல்பான பொறுமை, நளினம், புலமை, திறனாய்வு இவற்றைக் கருத்தில் கொள்வது இன்றியமையாததாகிறது. ''வீரம், புலமை, ஆராய்ச்சியறிவு, துணிவு, இலட்சியவெறி ஆகியவை ஆணினத்திற்கு உரிமை ஆனவை அல்ல. இயற்கையான உடற்கூறுகளின் அமைப்பினால் பெண் இனம் பலவீனமானது'' எனக் கருதுகின்ற தொன்மையான கொள்கையைப் பேராசிரியர் அலெக்சிஸ் காரெல் ,(Alexis Carrel)' புரிந்துகொள்ளமுடியாத மனிதன்' (Man the Unknown) என்ற நூலில் சாடியிருக்கிறார். அரசியல், சமுதாயம் பண்பாடு இவற்றோடு ஒன்றியிணைந்து செயலாற்றும் திறம்படைத்த பெண்ணினம் இவற்றைச் செப்பனிடவும், சாடவும் முடியும் என்பதும் தெளிவாகியிருக்கிறது. எனவே பெண் இனத்தின் விடுதலைக்காகக் கல்விப் பாடத்திட்டம் தேவைப்படுகின்றது என்று நாம் எண்ணவேண்டுவதில்லை. ஆனால் பெண்மையின் தகுதியையும் திறமையையும் எவ்வாறு நம் நாட்டிற்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்ற ஆழ்ந்த நோக்கோடு திட்டத்தை உருவாக்க வேண்டும். இதைக் கருத்தில் கொள்ளாது பெண்மையின் பலவீனத்தைச் சுட்டிக்காட்டிப் பல பாடத்திட்டங்களில் இடம் பெற முடியாமல் செய்துவிடுகின்ற இயல்பு உலகெங்கணும் இருந்து வருகின்றது. இந்த எண்ணத்தைப் பெண்ணினம் அண்மையில் நன்றாக உணர்ந்து தான் வீறுகொண்டு எழுந்திருக்கின்றது.

ஆய்வுக் கூடத்திலமர்ந்திருந்து மீக்கூறும் சாதனைகளை நிகழ்த்தும் திறமையும், பொறுமையும் பெண்ணினத்திற்கு இயல்பாக உண்டு. எனவே அத்தகைய வாய்ப்பினை நல்கும் பட்டப்படிப்புகளைக் குறைந்தது ஐம்பது விழுக்காடாவது பெண்களுக்கென ஒதுக்கி வளம் பெருக்கலாம். குமாரி மில்லட் நடத்திய நுண்ணறிவுச் சோதனைகள் பெண்ணினத்திற்கு மொழி, மொழியியல், நினைவாற்றல், சரளமாகப் பேசும் ஆற்றல், இவை மிகுந்து காணப்படுவதாகப் புலப்படுத்தின. இதைக் கருத்தினில் கொண்டு பாடத்திட்டங்களை வகுக்கலாம். மேலை நாடுகளில் எல்லாத் தொழில்களிலுமே பெண்கள் பணியாற்றுகின்றனர். அதற்குரிய கல்வித் திட்டங்களும் தனித்தனியே தொழில்களுக்கு ஏற்றவாறு சான்றிதழ், பட்டயப்படிப்புகள் உள்ளன. இங்கு அத்தகைய சிறப்பான திட்டங்கள் இல்லை. மேலும் பெண்கல்வி வளர்ந்து விட்டால் வேலைவாய்ப்பினைத் தரக்கூடிய திட்டங்களும் மிகுதியாக இல்லை. பொதுவாகச்

சமுதாய நலம், சமுதாய வளர்ச்சி, பெண்கள் நலம் சமுதாய இயல், மனையியல், போன்றவை பட்டயப்படிப்புகளாக வைப்பதற்கு ஏற்ற பாடத்திட்டங்களாகும். ஆனாலும், திருமதி நயன்தாரா சாகால் (Nayan Thara Sagal) கூறுவதுபோல், ''தற்போது பெண்ணினத்திற்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் அல்ல. ஆனால், விடுதலை உணர்வுக்கும் புராதன வழக்கத்திற்கும் இடையே ஏற்பட்ட மோதலாகும்.''

இதுகாறும் நம் நாட்டில் ஒரு சில தொழில்களில் குறிப்பாக மின் அணுப்பற்றவைத்தல் (Soldering) இணைத்தல் (Assembling) சிற்றுண்டி தயாரித்து வழங்குதல் (Catering) எழுத்துக்கோத்தல் போன்ற 'சான்றிதழ்ப்பாடத்திட்டங்களில் சிலவற்றையே செயலாக்க முடிந்திருக்கிறது. மேலும் செய்தித்துறை, மருத்துவத்துறையில் சில பிரிவுகள், இயைபியல், விலங்கியல், தாவரஇயல், மண் இயல், புவிஇயல், மீன் இயல், அயல்நாட்டு வணிக இயல், உள்நாட்டு வணிக இயல், பண்டங்களைப் பதப்படுத்தும் இயல், முதலியவற்றுள் சான்றிதழ் படிப்பு, பட்டயப் படிப்புகளையும் ஆராய்ச்சிப்படிப்புகளையும் துவக்கியிருக்கிறோம். ஆனால் வேளாண்மையியலில் விஞ்ஞானப்பகுப்புகள் ஒவ்வொன்றுக்கும் பட்டயப்படிப்புக்களைத் துவக்கப் பெண்களுக்குப் பயிற்சியளித்து ஒவ்வொரு கிராமத்திலும் வேளாண்மை வளர்ச்சியைப் பெருக்க முயற்சி செய்யலாம். குறிப்பாக நூலகம், செய்திஇதழ், மகப்பேறு, பாலுறவு நோய்கள், குழந்தை நோய்கள், செவிலித்தாயார், செயலர், கணக்காயர் ஆகியவற்றிற்கான பல பாடத்திட்டங்களை இரண்டு அல்லது மூன்று ஆண்டுக்கால வரையோடு கூடிய பட்டப்படிப்பாக அமைத்தல் வேண்டும். இவற்றிற்குத் தேவையான அடிப்படைக்கல்வி குறைந்தது பத்தாண்டுகளாக இருந்தால் போதும் பத்து ஆண்டுகளுக்குமேல் மூன்றாண்டுகளில் இந்தப் பாடத் திட்டங்களைச் செயற்படுத்திப் பயனடையுமாறு செய்யலாம். பாடத்திட்டத்தில் சுருக்கெழுத்து, தட்டெழுத்து குறிப்பு எடுக்கும்முறை, ஓட்டுநர் பயிற்சி, கணக்கெழுதும் முறை ஆகியவை பொதுவாகப் பன்னிரண்டு ஆண்டுகளில் அவர்கள் பெறும் கல்வித்திட்டத்தில் இணைத்தல் வேண்டும். பத்தாண்டுகளுக்குப் பின் அவர்கள் பெறுகின்ற மேல்நிலைக்கல்வியில் இரண்டாண்டுகளில் அவர்கள் இந்தத்தகுதியினைப் பெறுகின்ற வாய்ப்பினை நல்க வேண்டும். தற்போதிருக்கும் கல்விமுறையில் புகுமுக வகுப்பின் காலவரையறையை இரண்டாண்டுகளாக்கி மேலே கண்டவற்றைப் பாடத்திட்டத்தில் இணைக்க வேண்டும். எனவே இந்த இரண்டாண்டுகளுக்குப் பின் ஐம்பது விழுக்காடு பெண்கள் வேலை வாய்ப்பைப் பெறச் சாத்தியக்கூறு உண்டு. எஞ்சியோர் தனித்தனியே விருப்பப்பாடத்தை எடுத்துப் படித்துத் தொழில்துறைகளுக்கு ஏற்ற பட்டயங்களையோ (Diploma) பட்டங்களையோ (Degree) பெற்று வேலை தேடிக்கொள்ள முடியும்.

எனவே பெண்களுக்கான மேல்நிலைக்கல்வி, நாட்டுக்கு நன்மை தருவதாகவும், நாட்டின் நன்

மைக்கு அவர்களைப் பயன்படுத்தும் வாய்ப்பினைத் தருவதாகவும் அவர்களுக்குப் பொருளீட்டும் வாய்ப்பினைத் தருவதாகவும், இருப்பதோடு மட்டுமல்லாமல் சமுதாய மதிப்பினை உயர்த்துவதாகவும் இருக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு செயலாற்றுவது நன்மை பயக்கும்.

உலகம் சுருங்கி நிற்கிறது; அறிவியல் வளர்ந்து நிற்கிறது. ஆனால் சமுதாயத்தின் ஒரு பெரும் பகுதி மகளிர் பாலுணர்வில் தன்னிறைவு தருகின்ற பொருளாகவே கருதப்படுகின்ற எண்ணத்தில், மாற்றத்தை, புதுமையை மறுமலர்ச்சியை மேல்நிலைக்கல்வி ஒன்றினால் மட்டுமே ஏற்படுத்த முடியும். எனவே பணியும் பொருளும், வாழ்வும் வளமும், பீடும் தகைமையும் பெருகும் புதுக் கல்விகாண திரளட்டும் பெண்ணினம்! மலரட்டும் புதுவித பாடத்திட்டங்கள்!

வளரட்டும் தாயினம்!

சமூக சேவை: இரண்டு வகை

நம்முடைய நாட்டைப் பொறுத்தமட்டில் சமூக சேவை இரண்டு விதமாக இருக்கிறது. சமுதாய அமைப்பின் காரணமாகத் தாழ்ந்த நிலைமையில் வாழக்கூடியவர்கள், பொருளாதார அமைப்பின் காரணமாகத் தாழ்ந்த நிலைமையில் இருக்கின்றவர்கள் ஆகிய இவர்களுடைய வாழ்க்கையை உயர்த்துவதுதான் சமூக சேவையாகும். ஒருபுறம் சமுதாய நிலைமையில் தாழ்த்தப்பட்டவர்களும், பொருளாதார நிலைமையில் தாழ்த்தப்பட்டவர்களும் உயரவேண்டும். இன்னொரு புறம் வாழ்க்கை வசதிகள் அத்தனையும் பெற்றும், சமுதாயத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் நல்ல உயர்ந்த வாய்ப்புக்கள் இருந்தும்—பல்வேறு துன்பங்களினாலும், நோய்களாலும் அவதிப்படுகின்ற சிலருடைய துன்பங்களையும் குறைக்கவேண்டும். இவைகளை நம் லட்சியமாக வைத்துக்கொண் டிருக்கிறோம். இதற்கு நல்லமுறையில் நாம் உழைக்கவேண்டும். முக்கியமாக நம்முடைய தேசத்தைப் பொறுத்தமட்டிலே, நான் ஏற்கனவே சொன்னதைப் போலச் சிலர் சமுதாயத்திலே சமுதாய அமைப்பின் காரணமாக நீண்ட நாட்களாகத் தாழ்ந்த நிலைமையில் இருக்கிறார்கள். நீண்ட நாட்களாகச் சமுதாயத்தில் சிலரைத் தாழ்மைப்படுத்தி வைத்துக்கொண்டு வந்திருக்கின்றார்கள். மக்கள், நிலை மாறி உயர்ந்துகொண்டும் வந்திருக்கின்றார்கள்: உயர்ந்துகொண்டு வரும்போதே சமுதாயத்தின் மேல் தளத்தில் இருக்கக்கூடியவர்கள் தடுத்துக்கொண்டும் வருகின்றார்கள். சமுதாயத்திலே இது ஒரு பெரிய போராட்டமாக இருக்கிறது. அதைப்போலவே பொருளாதார நிலையில் தாழ்ந்து இருக்கக்கூடியவர்கள் தம் நிலையைப் பெருக்கிக்கொண்டு உயர்ந்து வரக்கூடிய காலத்தில் மேல்தளத்தில் இருக்கக்கூடியவர்கள் தாழ்த்தி அமுக்கிக்கொண்டு வருகிறார்கள். ஆனால், இந்தச் சமுதாயத்தில் மக்கள் எல்லோரும் சரியான கௌரவத்தோடு இருக்கவேண்டும்; நீதியென்பது எல்லோருக்கும் ஒன்றாக, சமமாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் சமுதாயத்தில் வாழக்கூடிய மக்கள் எல்லோரும் சமமென்று சொல்ல முடியும். — **பெருந்தலைவர் அமரர் திரு. காமராஜ்-டிசம்பர், 1966**

இக்காலச் சமுதாயத்தில் மகளிர் பெறும் இடம்

முதற்பரிசுக் கட்டுரை

''இருந்தமிழே உன்னால் இருந்தேன் வானோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்''

விண்ணுலக விந்தைகளில் தன்னை மறந்த இறைவன் தன் கடமையில் தவற எண்ணாமல் மண்ணுலகம் காண விழைந்தான். தான் அன்று கண்டதற்கும் இன்று காண்பதற்கும் இடையில் ஏற்பட்ட மாபெரும் மாற்றம் கண்டு வியந்தான். அனைத்திலும் அவன் கண்டனவெல்லாம் மாற்றம்-மாற்றம். தான் படைத்த பெண்மை இன்று தழைத்தோங்கிச் சிறந்துள்ளதில் அவனுக்கு மகிழ்ச்சி. உருவில் பெண்களாய் உறுதியில் ஆண்களாய்த் திகழ்கின்ற மகளிர்தம் நிலைகண்டு அவன் பூரித்தான். இருந்தும் அவன் தன் கண்களில் தட்டுப்பட்டது ஆங்காங்கே மகளிர்தம் அவலம். எனவே, அவன் மகளிரது நிலைபற்றி ஆராயத் துவங்கினான். ஆம். உலகெங்கணும் மகளிர் ஆண்டெனக் கொண்டாடும் இவ்வேளையில் அவர்தம் நிலை பற்றி, ஆராய்ந்து அறிவது மிக மிக வேண்டற்பாலது.

''மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா'' என்று பாடியவன் அவர்தம் நிலை உயர ஆவல்கொண்டான். அவன் கொண்ட வேட்கை தீர்ந்து வருகின்றது. பெண்மையை இகழ்ந்த உலகம் இன்று 'பெண்மை வாழ்க'வென்று துதி பாடுகின்றது. அடுப்பூதிய பெண்மை இன்று அலுவலகம் செல்கின்றது. அடைக்கப்பட்ட பெண்மை இன்று அடக்கி ஆள்கின்றது. அமைதிகொண்டிருந்த பெண்மை இன்று பேரவைகளை அலங்கரிக்கின்றது. அறியாமை

செல்வி:
ப. வெங்கடலக்குமி

கோவை, நிர்மலா மகளிர் கல்லூரியில் பட்ட வகுப்பு இரண்டாம் ஆண்டு(கணிதம்) கற்கும் மாணவி. தமிழ்க் கட்டுரைகள் எழுதுவதில் ஆர்வம் நிறைந்தவர்.

யால் அழிந்த பெண்மை இன்று அறிவில் சிறக்கின்றது. கற்காத பெண்மை இன்று கற்றுத் தெளிகின்றது. கண்ணீர் வடித்த பெண்மை இன்று பிறர் கண்ணீர் துடைக்கின்றது. குறுகியிருந்த பெண்மை இன்று குன்றாக உயர்ந்துள்ளது. இகழப்பட்ட பெண்மை இன்று இசைபட வாழ்கின்றது. அடிமைப்பட்ட பெண்மை இன்று அரசாளுகின்றது. தொட்டிலாட்டிய பெண்மை இன்று தொல்லுலகை ஆள்வதில் முனைகின்றது. கவிபாடப்பட்ட பெண்மை இன்று கவிபாடுகின்றது. வணங்கி நின்ற பெண்மை இன்று வழக்காடுகின்றது துன்பப்பட்ட பெண்மை இன்று துணிந்து நிற்கின்றது. பணிந்துநின்ற பெண்மை இன்று பாய்ந்தெழுகின்றது. சீரிழந்த பெண்மை இன்று சீறிப்பாய்கின்றது. தொழுது நின்ற பெண்மை இன்று தொழப்படுகின்றது. கட்டுப்பட்ட பெண்மை இன்று கடமையில் சிறக்கின்றது. ஒடுங்கி வாழ்ந்த பெண்மை இன்று ஓங்கி உயர்ந்துள்ளது. தாங்கப்பட்ட பெண்மை இன்று தழைத்தோங்கியுள்ளது. போருக்கும் காரணமான பெண்மை இன்று போர்முனைக்கும் செல்கின்றது.

இவ்வாறு நிறைகண்ட நேரத்திலும், சிற்சில குறைகள் காணப்படுகின்றன. இறந்துபோன மும்தாஜிற்காகத் தாஜ்மஹால் எழுப்பப்பட்ட உலகில்தான் உயிருள்ள அனார்கலிக்குக் கல்லறை எழுப்பப்பட்டது. எனவே, அன்பும் அநீதியும் ஒருங்கமைந்த அவனியிலே இன்பதுன்பம் மாறிவரும் பாரினிலே சிறப்பும் இழிவும் சேர்ந்தமைந்த தரணியிலே இக்காலச் சமுதாயத்தில் மகளிர்தம் நிலைபற்றி ஆராய்ந்தால் அவர்களது நகையும் அவலமும் பின்னிப் பிணைந்த நிலை விளங்குகின்றது.

'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்று ஏசப்பட்ட காலம் சென்று' 'ஆணுக்குப் பெண் சரிநிகர்' என்ற தன்மையிலே சுவாமி விவேகானந்தரின் கருத்துப்படி படித்த மகளிர் அனைவரும் சிறந்த பல்கலைக்கழகங்களாகத் திகழ்கின்றனர். மேல்நிலைக்கல்வியிலும், மேல்நாட்டுக் கல்வியிலும், மிக்க ஆர்வம் கொண்டு தாய்மொழியில் மட்டுமின்றிப் பிறமொழிகளிலும் தேர்ச்சி பெற்று விளங்குகின்றனர்.

''படியாத பெண்ணிஞல் தீமை-என்ன
பயன் விளைப்பாளந்த ஊமை''

என்ற பாரதிதாசனின் கருத்தினை நன்குணர்ந்து கல்வியினைக் கசடறக் கற்றுத் தெளிகின்றனர். ''இற்றைநாள் பெண் கல்வியாலே -முன்னேறக்கூடும் வையம் மேலே'' என்று பாவேந்தர் பகர்ந்து சென்றதைப் பயனுள்ளதாக்க தாழாத ஏழ்மையிலும் கடினங்கள் அனைத்தினையும் கடந்து வந்து கற்பதில் கவனம் செலுத்துகின்றனர்; பாரதி வரவேற்ற ஒளிபடைத்த கண்களையும் உறுதிகொண்ட நெஞ்சினையும் கொண்டவர்களாகத் திகழ்கின்றனர். பெண்களுக்கெனத் தனியான கல்லூரிகளும் கலைக்கூடங்களும் எழும்பிய வண்ணம் இருக்கின்றன.

இக்காலத்தில் மகளிர் எல்லாத் துறைகளிலும், சிறந்து விளங்கு

● பார்வைக்கும்
கண்ணாடி

மிகமிகக் குறைந்த பார்வையை உடையவர்களும், சாதாரணமாகத் தேவைப்படும் அளவில் 90 சதவிகிதம் குறைந்த பார்வை ஆற்றல் பெற்றவரும் படிக்கவும், தொலைக்காட்சியைக் கண்டு இன்புறவும் ஏன்? கார் ஓட்டவும்கூட பார்வையாற்றலைத் தரவல்ல மூக்குக் கண்ணாடியைக் கண்டுபிடித்துள்ளனர். முன்னால் நீட்டிக் கொண்டுள்ள இந்தக் கண்ணாடியில் ஒவ்வொரு கண்பக்கத்துக்கும் இரண்டு லென்சுகள் பொருத்தப்பட்டு உள்ளன. இரண்டிற்கும் இடையே உள்ள தூரம் 1''.

கின்றனர். மருத்துவம் போன்ற கடினமான தொழிலிலும் ஈடுபட்டு முன்னேற்றம் காண்கின்றனர். மருத்துவத்துறைதனில் அவர்கள் தங்கள் கடமையைச் செவ்வனே செய்கின்றனர். அத்துறையில் புகுந்த அனைவரும் கடமையில் நைட்டிங்கேல்களாகத் திகழ்கின்றனர். கடமை என்பதென்னவென்றறியாத பெண்மை இன்று கடமைக்கு இலக்கணம் வகுக்கின்றது. இவ்வாறு சிறக்கின்ற பெண்மை இக்காலத்தில் சட்டமன்றங்களிலும், பாராளுமன்றத்திலும்கூட இடம் வகிக்கின்றது; நாட்டையும் தன்னால் ஆள முடியுமென்று நடத்திக்காட்டுகின்றது; வெளிநாடுகளிடையே தூதுவர்களாகவும் பணிபுரிகின்றது. மகளிர்தம் ஓய்வு நேரங்களைப் பயனுள்ளதாகச் செய்ய மகளிர் மன்றம் மகளிர் சங்கம் போன்றன அமைக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் மகளிர்தம் அறியாமையை நீக்கப்பாடுபடுகின்றன. இதனால் பெண்கள் பயனுள்ள வழிகளில் தங்கள் நேரத்தைச் செலவிட வழிபிறக்கின்றது. அவர்தம் வாழ்வு சிறக்க வழிசெய்கின்றது.

கல்வித்துறையில் மட்டுமின்றித் தொழில்துறையிலும் பெண்கள் சிறந்து விளங்குகின்றனர். அதனால் வீட்டிலேயே காலம் கழித்த நாள் சென்று தங்களது தேவைகளைத் தாமே கவனித்துக் கொள்ளும் நோக்குடன் பிறர் துணைநாடாமல் தம் உழைப்பில் நம்பிக்கை கொண்டு நல்வாழ்விற்கான திருப்புமுனையை நோக்கி நடை பயில்கின்றனர். பெண்களுடைய வாழ்க்கையில் பெரியதொரு மாற்றம் என்னவென்றால், அதுதான் அவர்களுடைய உழைத்து வாழும் வாழ்க்கை. அவர்கள் தம் வாழ்க்கைச் சிக்கலைத் துணிவுடன் எதிர்த்துநின்று அதில் வெற்றியும் காண்கின்றனர். அதனால் அவர்தம் வாழ்க்கை சீரும் சிறப்பும் பெற்று விளங்குகின்றது.

மேலும் கலைகளிலும் கவனம் செலுத்துகின்றனர். மகளிர். அவரவர்க்கு இயன்ற விருப்பமான கலைகளில் அனைவரும் ஈடுபடுகின்றனர். தமது ஆடைகளைத் தாமே தைத்துக்கொண்டும் வேண்டாத தேவைகளைத் குறைத்துக்கொண்டும் வாழ்கின்றனர். கற்ற மகளிர் இவ்வாறு ''உலகத்தோடு ஒட்ட ஒழுகி'' வாழ்கின்ற பெண்மையின் சிறப்பு சில வேளைகளில் சிறப்பிழக்கின்றது. ஒருபுறம் பாரதி கண்ட புதுமைப் பெண்க

ளாகத் திகழ்ந்து சிறந்த போதிலும் மறுபுறம் மகளிர் தம் அவலநிலை விளங்குகின்றது.

எத்துணையோ குடும்பங்கள் பெண்களை நம்பி வாழ்கின்றன. கடமைதனை உணராமல் கண் போன போக்கில் காலத்தைக் கழித்துவரும் ஆடவரைப் பெற்ற குடும்பங்களில் பெண்களின் அவலநிலை இன்னதென்று சொல்ல இயலுவதில்லை. குடும்பத்திற்காக அவர்கள் தங்களையே அற்பணிக்க வேண்டியுள்ளது. தன் குடும்பத்தைக் காப்பதே கடனென்று எண்ணுகிறார்கள் அப் பேதைகள். அதனால் அவர்கள் அடைவதெல்லாம் துன்பம்.

இன்றும் கல்வி அறிவற்ற பெண்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளைத் தாங்கிக் கொண்டு துன்பத்திலும் துயரிலும் காலம் கழிக்கின்றனர். இளமையில் கணவனை இழந்தவரின் நிலையோ கேட்கவே வேண்டாம். இந்த இருபதாம் நூற்றாண்டிலும் பெண்கள் பலர் துயர வாழ்க்கை நடத்துகின்றனர். பொறுப்பற்ற ஆடவனைக்கொண்ட குடும்பச் சுமை அனைத்தையும் பெண்தான் தாங்கவேண்டியுள்ளது. அவர்கள் வாழ்க்கைப் போராட்டத்திலும், பூசலிலும் வெந்து மடிகின்றனர். இவ்வாறு முன்னேறிக் கொண்டிருக்கும் பெண்மை சீர் கெட்ட சமுதாயத்தால் புறக்கணிக்கப்படுகின்றது. அதனால் பெண்கள் துணிந்து சுதந்திரமாகச் செல்லவும் முடிவதில்லை. இவ்வாறு ஒருபுறம் அவலமும் தாண்டவமாடுகின்றது.

● குருமார்களாக மகளிர்

மகளிரைக் குருமார் ஆக்கக்கூடாது என்ற விதிக்கு மாறாக, கடந்த செப்டம்பர் மாதம் நியூயார்க் பிஷப் நான்கு மகளிரைக் குருமார் ஆக்கியுள்ளார். அவர்களைக் குருமார் ஆக்க வாசிங்டன் திருச்சபை மறுத்துவிட்டபோதிலும், இந்த பிஷப் 'புனித சடங்கில்' அவர்களைக் குருமார் ஆக்கியுள்ளார். மகளிரைக் குருமார் ஆக்கும் பிரச்சினைபற்றி குரு பரிபாலன சபை அடுத்த ஆண்டின் மாநாட்டில் விவாதித்து முடிவு செய்யவிருக்கிறது.

மேலும், இந்த இருபதாம் நூற்றாண்டிலும் பெண்களின் திருமணங்கள் வரதட்சணை என்பதை மையமாகக் கொண்டு நடைபெறுகின்றன. பலரும் இதனால் துன்பமடைய வேண்டியுள்ளது. தத்தம் ஏழ்மையின் காரணத்தால், பெண்களை மணம் செய்து வைக்க இயலாத பெற்றோரின் நிலை இருதலைக்கொள்ளி எறும்பினை ஒக்கின்றது. இந்த நெறி கெட்ட சமுதாயத்தில் மணம் ஆகாமல் துன்பங்களைச் சுமந்த வண்ணம் பெண்கள் கன்னிகளாய் வாழ்கின்ற அவலநிலையையுங் காண்கின்றோம்.

நிற்க. இக் காலப் பெண்களிடத்தில் பெண்கட்குத் தேவைப்படுகின்ற குணங்கள் நான்கும் விடைபெற்ற வண்ணம் இருக்கின்றன. பெண்ணிற்கு அழகான அடக்கமும், அச்சமும் விலகி நிற்கின்றன. அதனால் 'நுண்மாண் நுழைபுலம்' வாய்ந்த வள்ளுவப் பெருந்தகையின் 'திருநுதல் நல்லவர் நாண்' என்பதுவும் மெய்யிழக்கின்றது. கற்ற பெண்கள் தாம் கற்ற கல்வியினால் நன்மை புரிய விழையாமல் 'நான்' என்ற

அகந்தையின் காரணமாகத் தம் மனம் போனபடி ஆடம்பர வாழ்க்கையை மேற்கொண்டு பெண்மைக்கே இழுக்காகத் திகழ்கின்றனர். என்னவிருந்தாலும் பெண் பெண்தான் என்பதை அறிந்து நடக்க மறுக்கின்றனர். 'பெண்ணிற்கழகு நாணுடைமை' என்பதனை ஏற்கவும் மறுக்கின்றனர். அடக்கம் இன்றி அறியாமையின் காரணமாகத் தன் வாழ்க்கையைத் தாமே தேட முயல்கின்ற பெண்களால் அவர்தம் பெற்றோரும் மற்றோரும் அல்லல்பட வேண்டியுள்ளது. அவர்களால், 'சிறைகாக்கும் காப்பு'ம் சிறப்பிழக்கின்றது. 'பெண்தான் உயர்ந்தவள்' என்ற எண்ணம் மேலிட, வீட்டிற்கும் நாட்டிற்கும் இன்னல் விளைவிக்கும் வண்ணம் பெண்கள் குழப்பம் விளைவிக்கின்றனர். ஒருவகையில் முன்னேற்றம் கண்ட பெண்கள் தம் வேண்டாத எண்ணங்களால், கணவர்க்கும் பணிந்து நடக்காத காரணத்தால் என்றும் அல்லல் படுகின்றனர்! அதனால் 'ஆவதும் அழிவதும்'' பெண்ணாலே என்ற பழமொழி மெய்ப்பிக்கப்படுகின்றது. ஆமை போல் ஐந்தடக்கவேண்டிய பெண்மை அச்சம் தவிர்த்து ஒழுக்கமற்றுத் திரிகின்ற காரணத்தால், அனைவராலும் இகழப் படுகின்றது. இத்தகைய குறைகள் நீங்கிவிட்டால் அவர்கள் ஓர் நிறைகுடம். அதுவன்றி இந்நிலை தொடர்ந்து நீடித்தால், அவர்கள் வாழ்வில் துன்பங்களின் கூடல் எதிலோ?

யாமறியோம் பராபரமே!

Most of Foundries Think of 'NODULISERS' When they Think to Produce S. G. IRON Castings.

Now No Need of Importing Nickle-Magnesium and Silicon-Magnesium Alloys

We Term them 'NODULISERS' and Manufacture in Largest Range for Your Widest Choice.

CONTACT:

KASTWEL FOUNDRIES

55/1/C GIDC ESTATE
Opp: BANK OF INDIA
VATVA DISTRICT
AHMEDABAD 382445
Phone: 87665

தமிழில் விஞ்ஞான
நூல்கள் தோன்றி
விஞ்ஞானக் கருத்துக்களை
எல்லோரும் அறிந்து
தெளிவடைந்தால்தான்
தமிழ் நாட்டில் அறிஞர்கள்
தோன்றி உலகம்
பயன்பெறும் நல்ல
பொருள்களை உருவாக்க
முடியும் என்ற அடிப்படை
நோக்கோடு பணிபுரிந்துவரும்
கலைக்கதிர்
இதழ் மேலும்
வளர்ச்சியடைய
வேலும் மயிலும்
துணைபுரியுமாக

எல்லாவிதமான ஸ்டேஷனரி
சாமான்கட்கும்

பழனிசாமி & கோ

ஒப்பணக்காரத் தெரு - கோயமுத்தூர் - போன் 32080

முடி வடையா
மாத வருவாய்!

உறுதி செய்யப்பட்ட
மாத வருவாய்!

வேண்டுமா?

கானரா பாங்க்கின்
நிரந்தர டெபாசிட்
திட்டத்தில்
இன்றே சேருங்கள்

கானரா பாங்க்

தலைமை அலுவலகம்: பெங்களூர் 2

எங்கள் பணி உங்கள் வளர்ச்சியே!

எங்கள் வளர்ச்சி உங்கள் பணிக்கே!!

அன்பர்களுக்கும், வாடிக்கைக்காரர்களுக்கும்
எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்

"கார்த்திகேயா"

(மோட்டார்கள், பம்புகள், மோனோபிளாக்குகள்)

உறுதிக்கும், உழைப்புக்கும் பெயர்பெற்றவை
உழுபவரின் சேவையில் நிகரற்றவை

"KF" பம்புகள் *1"* முதல் *6"* வரை
மோட்டார்கள் 1 HP முதல் 20 HP வரை

தயாரிப்பாளர்கள்:

கார்த்திகேயா பவுண்டரி

த. பெ. எண். 6303, பா. நா பாளையம்
கோயமுத்தூர் 641037

மத்திய அலுவலகம்:
பெங்களூர் 2



டெக்ஸ்மோ

மானேபிளாக்குகள்
மோட்டார்கள்
பம்புகள்

TEXMO

VSK-TI-492

டெக்ஸ்மோ இண்டஸ்டிரீஸ்

ஞானம்பிகை மில்ஸ் போஸ்ட, கோயமுத்தூர்-29.

கிளைகள் சென்னை, மதுரை, திருச்சி. சேலம. செகந்திராபாத். விஜயவாடா.

மகளிரும் அரசியலும்

இரண்டு நூற்றுண்டுகளுக்கு முன்பு இந்தியப் பெண்கள் பல துறைகளில் சுதந்திரமின்றியும், கோஷாக்களாகவும் வாழ்ந்து வந்தனர். அவர்களை மகாத்மா காந்தி இந்திய சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொள்ளச் செய்து அரசியல் வாழ்வில் ஈடுபடச் செய்தார். ஆயிரக் கணக்கான பெண்கள் வீட்டைவிட்டு வெளிவந்து நாட்டு விடுதலைப் போராட்டங்களில் பெரும்பங்கு கொண்டார்கள். இதுவே இந்தியப் பெண்களின் அடிமை நிலையைத் தகர்க்கும் ஆரம்பமாகவும், ஆண்களோடு பெண்களையும் சரிநிகர் சமானமாக ஆக்கிய நிகழ்ச்சியாகவும் இன்று இந்தியப் பெருநாட்டையே ஒரு பெண்மணி திறமையாக ஆட்சிபுரிவதற்கு வித்திட்ட மூலமாகவும் அமைந்தது.

இந்திய நாடு அந்நியர் ஆட்சியின் அடிமைத் தளையில் அகப்பட்டுக்கிடந்த அதே நூற்றுண்டுகளில் இந்தியப் பெண்களின் நிலையும் சமுதாயத்தில் பல வகைகளில் தாழ்ந்திருந்தது.

அந்நாளில் பெண்களுக்குச் சொத்துரிமையோ செயல் சுதந்திரமோ சமூகத்தில் ஆண்களோடு சரிநிகர் சமானமாக உலவும் அனுமதியோ வேறு எந்தவித உரிமைகளுமோ கிடையாது.

'ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை'யென்று அந்தக் காலத்தில் பெண்களின் அறிவு வளர்ச்சிக்குத் தடை போட்டு வைத்திருந்தார்கள். பல இடங்களில் பெண்கள் கோஷாக்களாக வீட்டுக்குள்ளேயே அடைபட்டு, வீட்டுப் பிராணிகள் போல வாழ்ந்து வந்தார்கள்.

அப்படிப் பெண்கள் தாழ்ந்திருந்த நிலையானது இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் பெரிதும் மாறியது.



திருமதி மரகதம் சந்திரசேகர்

இவர் தற்போது அனைத்திந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் செயலாளர்; நேரு, லால்பகதூர், திருமதி இந்திராகாந்தி ஆகிய பிரதமர்களின்கீழ் மத்திய அரசில் துணை அமைச்சராகப் பணிபுரிந்துள்ளார்; விஞ்ஞானம், சமூகசேவை, மனையியல் ஆகிய பலதுறைகளில் பட்டங்களைப் பெற்றவர். பத்திரிகைத் தொழிலிலும் டிப்ளமோ பெற்றவர்; சமூகசேவை, பொதுத்தொண்டு இவையே இவர் தம் வாழ்வு. உலகத்தின் பல நாடுகளையும் சுற்றி வந்து அங்குள்ள கல்வி நிலையங்கள், சமூகசேவை நிலையங்கள் முதலியவைகளையெல்லாம் கண்டுவந்துள்ளார்; பல சமூக, கலாச்சார நிறுவனங்களில் பங்குபெற்றும், அரசியலில் இடையருது ஈடுபட்டும் நாட்டிற்குத் தொண்டாற்றி வருகின்ருர்.

1929–30 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி உப்புச் சத்தியா கிரகத்தைத் தொடங்கினர். பெண்கள் அன்பிற்கும், தியாகத் திற்கும் சின்னமாக விளங்கு பவர்கள் என்று அழுத்தமாக நம்பிவந்த அவர் பெண்களும் நாட்டின் சுதந்திரப் போராட் டத்தில் சேரவேண்டும் என்று அழைப்பு விடுத்தார். பொது வாழ்வில் பெண்களுடைய ஒத் துழைப்பும், சேவையும் இருந் தால் தேசியப் போராட்டம் புனிதமான பாதையில் வெற்றி கரமாகச் செல்லும் என்று அவர் நம்பியதே அதற்கு முதன்மை யான காரணமாகும்.

காந்தியடிகளின் அழைப்பை ஏற்று அன்று ஆயிரக்கணக்கான பெண்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொள்ள முன்வந்தார்கள். அவர் நடத்திய ஒத்துழையாமை இயக்கத்திற்கு முழு ஆதரவு அளித்து ஊர்வலங் களில் கலந்துகொண்டு முன்னணி யில் கொடி பிடித்து நடந்தார்கள்; பொது மேடைகளில் ஏறிச் சுதந் திரப் போராட்டம் பற்றிப் பேசி ஞர்கள். வெளிநாட்டுச் சாமான் கள், துணிமணிகள் முதலியவை களின் பகிஷ்கரிப்பு இயக்கத்திலும் பெரிய அளவில் பங்கு கொண் டார்கள். இதனுல் அன்று பல நூறு பெண்கள் சிறை செல்ல நேர்ந்தது.

இந்தக் காலத்தில் நாம் காணும் சிறை வாசத்திற்கும் அந்நியர் ஆட்சிக் காலத்தில் பெண்கள் அனுபவித்த சிறை வாசத்துக்கும் மிக அதிகமான வேறுபாடு உண்டு. அக் காலத் தில் விடுதலை வீரர்கள் அடைக்கப் பட்ட சிறைகள், காற்ருேட்டமில் லாத இருட்டறைகளாக இருந் தன. கூறைகளில் வௌவாலும், பல்லி முதலான உயிர்களும் குடி யிருக்கும். பூரானும் தேளும் உரிமையோடு வாழும். அப்படிப் பட்ட அருவருப்புடைய இருட் டறைகளில் அன்று குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேலாகப் பெண் களைக் கொண்டுபோய் அடைத்து வைத்தார்கள். அங்கு முறை யாகத் தங்குவதற்கும் தூங்கு வதற்கும் மனிதர்க்கு வேண்டிய எந்த வசதியும் இருக்காது. அப் படிப்பட்ட சிறைகளில் பெண் களைக் கொண்டுபோய் அடைத்த தோடல்லாமல் அவர்களைக் காலை யிலும் மாலையிலும் தெருக்களில் காட்சிப்பொருளாக நடத்திச் சென்று ஆண் போலீஸ்காரர்கள் கேலியும், கிண்டலும் பேசி அவ மதித்தார்கள். இப்படி அந்நிய அரசாங்கத்தார் படுத்திய கொடு மைகளுக்கெல்லாம் இந்தியப் பெண்கள் கொஞ்சமும் அஞ்சா மல் மேலும் மேலும் ஆயிரக் கணக்கில் தேசியப் போராட்டங் களில் தீவிரமாக ஈடுபட்டார்கள்.

1930 ஆம் ஆண்டு மே-மாதம் 5-ஆம் தேதி பிரிட்டிஷ் அரசாங் கத்தார் மகாத்மா காந்தியைக் கைது செய்தார்கள். தனக்குப் பிறகு தான் தொடங்கிய அறப் போரைத் தொடர்ந்து நடத்து வதற்குக் காந்தியடிகள் அமர்த் திய இரண்டு முன்னணித் தலைவர் களில் ஒருவர் பெண் என்பது இங் குச் சிறப்பாகக் குறிப்பிட வேண் டிய ஒன்ருகும். காந்தியடிகள் கட் டளைப்படி திருமதி சரோஜினி நாயுடு, 1930-ம் ஆண்டு மே-மாதம் 2-ஆம் தேதி உப்புச் சத்தி யாகிரகத்துக்குத் தலைமை தாங்கி நடத்திச் சிறை சென்ருர்கள்.

● பெண்களுக்கு வாக்குரிமை

முதன் முதலில் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கிய நாடு நியூசிலாந்து. இது நடந்தது 1893-ல்.

இந்தியாவில், 1947-ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே பெண்களுக்கு வாக்கு அளிக்கும் உரிமை இருந்து வருகிறது.

கடைசியாக பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை அளித்த நாடு சுவிட்சர்லாந்து. அங்கு 1971-முதல் பெண்கள் ஓட்டுப் போட ஆரம்பித்தார்கள்.

அந் நாளில் முன்னணித் தலைவர்களில் ஒருவராக விளங்கிய கமலா தேவி சட்டோபாத்தியாயா உப்புச் சத்தியாகிரகத்தைப் பற்றிப் பின்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

''நாட்டை வெற்றிகொள்ளச் செய்யும் வீரர் அணியைப்போல அன்று ஆயிரக் கணக்கான பெண்கள் கடற்கரையை நோக்கி அணியணியாகப் அறப்போர் முழக்கங்களை எழுப்பிச் சென்றனர். அவர்கள் கையில் ஆயுதங்களுக்குப் பதிலாக மண்குடங்களையும், செம்பு, பித்தளைக் குடங்களையும் ஏந்திச் சென்றார்கள். சீருடையணிவதற்குப் பதிலாக எளிய பருத்திச் சேலைகளைக் கட்டியிருந்தார்கள். இளம்பெண்கள், நடுத்தர வயதினர், வயது முதிர்ந்தோர் முதலிய எல்லாத் தரத்தினரும் அடங்கிய அந்தப் பெண்கள் அணியைக் கண்டு நாடே எழுச்சியடைந்தது. அந்நிய ஆட்சியினர் நடுநடுங்கினர். வீட்டில் அடைபட்டுக்கிடந்த பெண்கள் இப்படி வீர உணர்ச்சிகொண்டு வெளியில் வந்து நடத்திய போராட்டம் பெண்களுடைய வரலாற்றிலேயே ஒரு புது யுகத்தைத் தோற்றுவித்தது.''

மகாத்மா காந்தியடிகள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கைக் குறிப்பிடும் போது ''அது பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்'' என்று கூறியுள்ளார்.

1931-ஆம் ஆண்டு ஜனவரி 26-ஆம் நாள் இந்திய தேசிய காங்கிரஸ் செய்த தீர்மானம் ஒன்று மகாத்மா காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்குகொண்ட பெண்கள் ஆற்றிய பணிகளையும், தியாகங்களையும் பின்கண்டவாறு பாராட்டியது.

''தேசத்திற்குக் கேடு என்றதும் ஈடு இணையில்லாத வீரத்துடனும் தியாக உணர்ச்சியுடனும் வீட்டைவிட்டு வெளி வந்து தேசிய விடுதலைத் தொண்டர்களுடன் கைகோத்து முன்னணியில் நின்று போராடிய மாபெரும் இந்திய மாதர் சமுதாயத்திற்கு இந்திய தேசிய மகாசபை தனது மரியாதையையும் ஆழ்ந்த நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.''

இப்படி அக்காலத்தில் பெண்கள் அரசியல் விழிப்புக் கொண்டு தேசிய விடுதலைப் போராட்டங்களில் பங்கேற்று நாட்டுக்கு விடுதலை தேடித் தந்தனர். அதற்குப் பின்னரும் பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காக்கும் பணியில் பெண்கள் இன்றுவரை ஏற்றுவரும் பங்கு கணக்கிலடங்காதனவாகும்.

சுதந்திரப் போராட்டத்திற்காக வீட்டின் கட்டுக்களை உதறி எறிந்து, பெண்கள் வெளியில் வந்த செயல்தான் இந்தியப் பெண்கள் விடுதலை இயக்க ஆரம்பமாகவும்,

அமைந்தது என்று கூறலாம். ''ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டில்'' என்ற பெண்ணுரிமைக் குரல் இப் போராட்டகாலத்தில் தான் முதன் முதல் எழுந்தது.

நாடு சுதந்திரம் அடைந்தபின் பெண்கள் முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்த பல கொடுமைகளையும் ஒழிக்கப் புதிய சட்டங்கள் உண்டாக்கப்பட்டன. பெண்களுக்குச் சொத்துரிமையும் வாக்குரிமையும் கொடுக்கப்பட்டன. ஆண்களின் பலதார மணத்திற்குத் தடை விதிக்கப்பட்டு பெண்களுக்கு மணவிலக்கு உரிமை கொடுக்கப்பட்டது. இப்படிப் பல சட்டங்களாலும் பெண்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டபின் அவர்கள் உயர்கல்வி பெறுவது பெரிய பதவிகளில் சேர்வது முதலியன எளிதாயிற்று. இதனல் பெண்கள் அரசியலில் ஈடுபடுவதும் அதிகரித்தது.

''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள்
செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்குப்
பெண்ணிங்கு
இளைப்பில்லை காண்''

என்று பாரதியார் கூறிய வாக்கைப் பெண்கள் நடைமுறைவாழ்வில் கண்கூடாகக் காட்டி வரலானார்கள்.

சுதந்திர இந்தியாவில் திருமதி சரோஜினி நாயுடு கவர்னராகப் பதவியேற்றார். திருமதி ராஜகுமாரி அமிர்தகௌர் மத்திய அமைச்சரவையில் காபினெட் மந்திரியாகப் பணியாற்றினர். திருமதி. விஜயலட்சுமி பண்டிட் பாராளுமன்ற உறுப்பினராகவும், ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியப் பிரதிநிதியாகவும், அதன் பொதுச்சபைத் தலைவராகவும், பதவி ஏற்றார்.

இன்றும் இந்தியப்பாராளுமன்றத்தில் பல பெண்கள் உறுப்பினர்களாக இருந்துவருகிறார்கள். மத்திய அரசிலும் மாநில அரசுகளிலும் பல பெண்கள் அமைச்சர்களாகப் பணியாற்றி வருகிறார்கள். திருமதி நந்தினிசத்பதி இன்று ஒரிசாவின் முதலமைச்சராகப் பணியாற்றி வருகிறார்.

திருமதி நாகரத்தினம்மா கருநாடக சட்டமன்றத்தின் அவைத் தலைவராக மிகவும் சிறப்புறப் பணிபுரிந்து வருகிறார்.

''நமது பெண்களுக்கு ஆங்கிலக் கல்வி அவசியமா, இல்லையா என்பதைப்பற்றியும் ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகின்றேன். நம்முடைய சாதாரண வாழ்க்கையில், ஆண்களுக்கோ பெண்களுக்கோ ஆங்கில அறிவு இருக்கத்தான் வேண்டுமென்பதில்லை என்ற முடிவுக்கு நான் வந்திருக்கிறேன். ஜீவனோபாயத்திற்கும், நம்முடைய ராஜீய இயக்கங்களில் தீவிரமாகப் பங்குகொள்ளுதற்கும் ஆங்கிலம் அவசியம் என்பது உண்மையே. பெண்கள் ஜீவனோபாயத்திற்காக வேலை செய்வதிலோ அல்லது வர்த்தகத் துறைகளில் ஈடுபடுவதிலோ எனக்கு நம்பிக்கை கிடையாது. ஒருசில பெண்களுக்கு ஆங்கிலம் அவசியமாயிருக்கலாம் அல்லது ஆங்கிலம் தெரிந்துகொள்ளவேண்டுமென்று ஆசைப்படலாம். அத்தகையவர்கள், ஆண்கள் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து சுலபமாகத் தமது ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ளலாம். பெண்களுக்கென்று உள்ள பள்ளிகளில் ஆங்கிலத்தைப் புகுத்துவது, நம்முடைய கதியற்ற நிலைமையை மேலும் நீடிக்கத்தான் செய்யும்.''

— காந்தியடிகள்
20-2-1918

● அரசியலில் பெண்கள்

உலகின் முதலாவது பெண் பிரதம மந்திரி திருமதி பண்டாரநாயகா. அவர் 1959-ல் ஸ்ரீலங்காவின் பிரதமராகப் பதவியேற்றார்.

இந்திய நாடாளுமன்றத்தைப் பொறுத்த வரையில், மாநிலங்கள் சபையில் 18 பெண்களும், மக்கள் சபையில் 25 பெண்களும் உறுப்பினர்களாக உள்ளனர்.

பெண்களுக்கு ஆண்களைப் போல் உயர்கல்வியும் வாக்குரிமையும் இன்னபிற உரிமைகளும் வழங்கப்பட்டிருக்கும் இக் காலத்தில் பாராளுமன்றத்திலும் சட்ட மன்றங்களிலும் கணிசமான எண்ணிக்கையில் பெண்கள் உறுப்பினராக இல்லையே என்று ஒரு சிலர் கருதுகிறார்கள். ஆனாலும் அதற்கெல்லாம் ஈடுசெய்வது போல் இன்று, இந்திய நாட்டின் அரசுத் தலைமையை ஒரு பெண்மணியே ஏற்று, நாட்டின் நெருக்கடியான சமயங்களில் நம்மை நேர் வழியிலும் முன்னேற்றப் பாதையிலும் அழைத்துச் செல்வது இந்த அனைத்து நாடுகளின் மகளிர் ஆண்டில் பெண்ணினத்திற்கே பெருமையளிப்பதாக இருக்கிறது.

மகாத்மா காந்தியடிகள் அன்று பெண்களைத் தேசிய இயக்கப் போராட்டத்தில் கலந்துகொள்ள அழைத்து அரசியல் வாழ்வில் ஈடுபடச் செய்த செயலானது இன்று இந்தியப் பெருநாட்டின் அரசுத் தலைமையையே பெண்களின் திலகம் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஏற்றுத் திறமையாக ஆட்சி புரியும் அளவிற்கு உதவும் மூல வித்தாக அமைந்துவிட்டது என்று கூறினால் அது மிகையாகாது. □

with best compliments from:

Money kept idle will not grow

- Everything that is being done to balance your budget is very much a part of the plan for the well-being of the Nation. Planning means saving too. To make your savings secure and multiply, THE CATHOLIC SYRIAN BANK has different deposit schemes.
- Tiny, Recurring and Re-investment schemes are some of those which are introduced by THE CATHOLIC SYRIAN BANK to suit your capacity and convenience. Join any of our deposit schemes. We help your money grow.

THE CATHOLIC SYRIAN BANK LTD.

Regd. Office: **TRICHUR (Kerala)**

(Authorised Dealer in Foreign Exchange)

மகளிரும் இசையும்

அனுபவக் கலையாகிய சங்கீதத்தைச் சாத்திரத்தால் மட்டும் விளக்க முடியாது. ஆயினும், எந்தெந்தக் காலத்துக்கும் இந்த மகத்தான அனுபவம் விளங்க பருப்பொருளான மூர்த்திகள் வேண்டும். அப்படிப்பட்ட மூர்த்திகள் நமது சாகித்தியங்களே. சாகித்தியங்களின் மூலம் நமது சங்கீதத்திற்குத் தெளிவான உருவம் தந்து, வரன்முறை செய்த நாவலர்களில் சிரோன்மணியாக ஒளிர்பவர்கள் மும்மூர்த்தியரான சத்குரு தியாகராஜ சுவாமிகளும், முத்துசாமி தீட்சிதர் அவர்களும், ச்யாமா சாஸ்திரிகள் அவர்களுமே ஆவர். ஒரே இடத்தில் தோன்றி, ஒரே காலத்தில் வாழ்ந்து உலகமறியா அற்புதம் விளைவித்த இந்த சங்கீத மும்மூர்த்தியரை நினைவுக் கோயிலில் இறுத்துவோமாக. அவர்களோடு சேர்ந்து அவர்களது காலத்திலேயே வாழ்ந்த ஸ்வாதித்திருநாள் மகாராஜா அவர்களையும் கோபாலகிருஷ்ண பாரதியாரையும் மற்றும் கர்நாடக சங்கீதத்தின் மூதாதையர் திரு. புரந்தரதாசர் திரு. க்ஷேத்ரக்ஞர், திரு. அருணாசல கவிராயர் திரு. முத்துத்தாண்டவர், திரு. சதாசிவ ப்ரம்மேந்திராள், திரு. வைத்தியநாதையர், திரு. சீநிவாசய்யங்கார், திரு. பட்டினம் சுப்பிரமணிய அய்யர், திரு. முத்தைய பாகவதர், திரு. மைசூர் வாசுதேவாச்சாரியார் ஆகியோருக்கும் திரு. பாபநாசம் சிவன் அவர்களுக்கும், மேன்மை தங்கிய மைசூர் மகாராஜா உயர் திரு. சாமராஜேந்திர உடையார் அவர்களுக்கும் வந்தனங்களைச் செலுத்துவோமாக. ராமகிருட்டின பரமஹம்சரின் மாண்பு சுவாமி விவேகானந்தரால் உலகத்தில் ஒளிவிட்டதுபோல் மும்மூர்த்தியரின் இசைப் பெருமையைப் பிரகடனப்படுத்தும் 'சங்கீத

திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி

இசைக்குயில் திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள் இசைப் பேரறிஞர்கள் குடும்பத்தில் தோன்றியவர்; பாட்டின் பொருளோடு ஒன்றிப் பாடி கேட்போர் உள்ளங்களை ஒருங்கிசையச் செய்யவல்ல இசைப் பேரறிஞர்; ''இசையின் இராணி'' என நேருவால் புகழப்பெற்றவர்; உலகம் முழுமையிலும் தம் இசைப் புலமையால் தமிழகத்தின் தனிப்பெருஞ் சிறப்பினை நிலைநாட்டி வரும் சிறப்புடையவர்.

சம்பிரதாய ப்ரதர்சினி'யைத்தந்த திரு. சுப்பராம தீட்சிதரை முக்கியமாக நினைவுகொண்டு பணிகிறேன்.

மேற்கூறிய மகாத்மாக்களின் பாடல்களையும், இவற்றோடு நம் இசையில் வழங்கி வரும் தேவார திருவாசக திவ்வியப் பிரபந்தங்களையும் திருப்புகழையும் பட்டினத்தார், தாயுமானவ சுவாமிகள் இராமலிங்க சுவாமிகள் ஆகியோரது பாடல்களையும், ஜயதேவ அஷ்டபதிகளையும் பார்த்தால் ஓர் உண்மை தெளிவாகப் புலனாகும். பாடல்கள் ராக சொரூபத்தை விளக்குவது மட்டுமின்றி ஈசுவர சொரூபத்தையும் விளக்கவே ஏற்பட்டவை என்பதுதான் அந்த உண்மை. அவற்றைப் பக்திப் பெருக்குடனேயே இசைக்க வேண்டும். இயல்பான ஈசுவர பக்தியுடன் இசையிலும் பக்தி வைத்து ராக ஆலாபனைக்கு முக்கியத்துவம் தந்து ராகசொரூபங்களைத் தேடித் தேடி அலைய வேண்டும் எனவும், சாகித்தியங்களின் பயனாக பக்தி புலப்படுமாறு அவற்றை இசைத்து நிரவலுக்கு முக்கியத்துவம் தர வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றேன்.

பக்தி என்பது நம்முள்ளேயே இருக்கிற உண்மைப் பொருளிடம் வைக்கிற அன்பு. இந்த உட்பொருளிடம் அன்பு வைத்துவிட்டால், தானே வெளியிலுள்ள சகலத்திடமும் அன்பு உண்டாகிவிடும். ஏனெனில் அந்தச் சகலத்திற்கும் உட்பொருளாக இருப்பது ஒன்றுதான். இந்நிலையில் பக்தன் உலகனைத்துக்கும் சேவை செய்யும் அடிமையாகிறான். இதைத்தான் 'ஸகல லோகுலகு ப்ருத்யுடை' என்றார் ஸத்குரு, தமது ''ஸௌகியெவரோ'' கிருதியில் நிரந்தர ஆனந்தம் எய்துவதற்கு அவர் கூறும் வழிதான் எவ்வளவு அழகாக இருக்கிறது.

ஸத்யமு தப்பக ஸகலலோகுலகு
ப்ருத்யுடை தைவ பேதமு லேக
நித்யமைந ஸௌஸ்வரப கானமுதோ

'சத்தியத்திலிருந்து பிறழாமல் உலகம் அனைத்துக்கும் தாசனாகி தெய்வங்களிடையே உயர்வு தாழ்வு பாராட்டாமல் அழிவில்லாத சுசுவரத்துடன் இசைப்பவனே பகவத்நாமச் சுவையறிந்த நித்யானந்தன்' என்கிறார். நல்ல சுரத்தோடு சத்தியம், சேவை, சமபாவம் எல்லாம் கலக்க வேண்டும் என்று இதிலிருந்து தெரிகிறது. ''உள்ளத்தில் ஒளி உண்டாகில் வாக்கினிலே ஒளி உண்டாகும்'' என்றார் மகாகவி பாரதியார். உள்ளம் தெள்ளத்தெளிய இருந்தால் தான் நல்ல சுரம் உண்டாகும். 'சுத்த மனஸுசே ஸுவர முதோ' என்பதாக அய்யர் அவர்கள் ''சுத்தனுவாரிகி'. என்ற கிரிதியில் கூறுகிறார். சுத்தமான மனசும் சுத்தமான சுரமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கவொண்ணாதவை.

நல்ல சுரத்திற்கு, இசையைப் பயில்வோர் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும் என்பது என் ஆசை. இதற்குச் சாரீரத்தை நன்கு பயிற்சி செய்து பண்படுத்திக்கொள்ள வேண்டும். சாரீரத்தில் இனிமை மட்டும் இருந்தால் போதாது. நிலத்தை உழுது பண்படுத்துவதுபோல் குரலையும் பயிற்சியால் பண்படுத்த வேண்டும். பொய்க்குரலுக்குப் பாயாமல் வாய் விட்டு மூன்று ஸ்தாயியிலும் பாடிப் பழக வேண்டும்.

● பெண்களுக்குப் பயிற்சி

பெண்களுக்குத் தகுந்த மதிப்பினைக் கொடுத்துத்தான எல்லா நாடுகளும் புகழடைந்திருக்கின்றன. மனு கூறுவதுபோல் 'எங்குப் பெண்கள் போற்றப்படுகிறார்களோ அங்கே இறை இன்பம் உண்டு; எங்குப் போற்றவில்லையோ அங்கே எல்லா முயற்சியும், உழைப்பும வீண். துன்பத்தில் உழலும் எந்த நாடும், குடும்பமும் முன்னேற முடியாது. ஆண் பிள்ளைகளைப் போன்றே பெண் பிள்ளைகளும் போற்றப்படவேண்டும்; கல்வி பயிற்றுவிக்கப்படவேண்டும்.

பண்பை வளர்க்கும் வரலாறு, புராணம், குடுமபம் நடத்தல, இல்லக் கலை, மனையறம், தத்துவம், முதலியவற்றோடு தையற் கலை, சமையற் கலை, வீட்டு வேலையில் ஒழுங்குமுறை, குழந்தை வளர்ப்பு முதலியனவும் பெண்களுக்குக் கற்பித்தல் வேண்டும். அவர்கள் பயிற்சியில் தவம், இறை வழிபாடு, சிந்தனை முதலியவை இன்றியமையாதனவாய் இருத்தல் வேண்டும். இவற்றோடு வீர உணர்ச்சியும் அவர்கள் பெறுதல் வேண்டும்.

— சுவாமி விவேகானந்தர்

சுர ஞானம் வெகுவெகு அவசியம். சுரம் தோன்றும் இடங்களைக் குறியீடுகளிலோ, எழுத்துக்களிலோ வடித்துப் பயில முடியாது. அப்படிப் பயின்றால் அது சாத்திரமாக இருக்குமே தவிர கலையாக இராது. நம்முடைய ராகங்களில் எந்த சுரம் எப்படி வரவேண்டும் என்பதைத் துல்லியமாக வீணை மீட்டி நிர்ணயம் செய்ய வேண்டும். கர்ப்பகிரஹத்தில் அடங்கி அமைதியின் ஒலிக்குள் வீணையும், பரபரப்பான பிரகாரங்களில் கம்பீரமாக ஓங்கி முழங்கும் நாதஸ்வரமும் கர்நாடக சங்கீதத்தின் இருபெரும் செல்வங்கள். கமக நுணுக்கங்களுக்கும், சுரம் தோன்றும் இடத்தெளிவிற்கும் வீணை வழியை அறிஞர்கள் பின்பற்ற வேண்டும் எனக்கேட்டுக் கொள்கிறேன். நித்திரையைப் புறக்கணித்து நல்ல தம்புராவைச் சுருதிகூட்டி, அயராமல் சாதகம் செய்ய வேண்டும் என்பது மறைத்திரு. தியாகப்பிரம்மத்தின் ஆணை. இப்படி எல்லாம் செய்தால் இன்று இந்துஸ்தானி வித்துவான்கள், குரல் பண்பாட்டுக்காகப் பெற்றுள்ள கியாதியை நாமும் நிச்சயம் பெறலாம்.

இந்தச் சாதகத்துக்கெல்லாம் மூலம், பக்தியுடன் கூடிய நல்ல மனம். நாத வித்தையைத் தொடநினைப்பவர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டும். நல்லவர்களாவது கடினமாக இருக்கலாம். ஆயினும் இதில் ஒரு மகத்தான அனுகூலம் இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப்பின், படித்துப் பட்டம் பெற்று டாக்டராகவோ எஞ்சினீயராகவோ வக்கீலாகவோ, ஆவது முடியாது. ஆனால் எத்தனை வயதுக்குப்பின்னும் ஒருவர் நல்லவராக முடியும். நல்லவர் மனத்தில் பக்தி தானாகவே ஊறும். அங்குதான் ஆண்டவனும் வந்து கோயில் கொள்கிறான்.

கோயிலில் பூசை செய்கிற அர்ச்சகர் உண்மையான பக்தியோடு பூசை செய்தால்தான் சிறப்பு. அவர் பக்தியில்லாமல் பூசை செய்தாலும், ஆலயத்திற்கு வருகிறவர்கள் ஆண்டவனைப் பக்தியுடன் வணங்கிப் போவார்கள். ஆயினும் ஸ்ரீ ராமகிருட்டிண பரமஹம்சர் தட்சிணேசுவரத்தில் அம்பாளின் அர்ச்சகராக இருந்து அம்பாளாகவே ஆனதால் எத்தனை எத்தனை பக்தர்களை அந்த ஆலயம் கவர்ந்து இழுத்து அவர்களை உத்தம கதி

யில் செலுத்தியது? அர்ச்சகருக்குப் பக்தியிருந்தால், வழிபடுவார்களிடமும் அது பாய்ந்து பரவும்: அதுபோன்றே இசைச் சுவைஞர்கள் தாமாகவே பக்தியுடன் வந்தாலும் பாடகர் பக்தியில் ஊறிஞல் சுவைஞர் உலகம் எல்லாம் பக்தியில் மேலும் ஈடுபடும். பாடுபவர் மனம் பரமனிடம் ஒன்றிஞல் கேட்போர் மனமும்தானே ஒன்றும். இது சங்கீதக் கலைஞர்களின் மகத்தான பாக்கியம். உலக நடப்புக்களில் அடிபட்ட எத்தனையோ உள்ளங்களை ஈசுவரனிடத்தில் சேர்க்கும்பேறு சங்கீதக் கலைஞருக்கே உரியது. இதை நமது பூஜ்யகாமகோடி பெரியவர்கள் பின்வருமாறு கூறி அருளியிருக்கிருர்கள்.

''சங்கீதக்கலை என்பது கொஞ்சம்கூடக் கஷ்டம் இல்லாமல் மோட்சத்தையே வாங்கிக் கொடுக்கக்கூடியது. வீணைவாத்தியம் ஒன்றை வைத்துக்கொண்டு சுரசுத்தியோடு கலந்து வாசித்து ஆனந்தமயமாக இருக்கக் கற்றுக்கொண்டால் யோகம் பண்ண வேண்டாம்; தவம் பண்ணவேண்டாம்; சுலபமாக மோட்சத்தையே அடைந்துவிடலாம்.... அதோடு யோகி யோகம் செய்தால், தவம் செய்வோன் தவம் செய்தால் அவர்களுக்கு மட்டுமே ஆத்மானந்தம் உண்டாகிறது. சங்கீதம் ஒன்றில்தான் அதைப் பயில்வோருக்கு மட்டும் இன்றிக் கேட்கின்ற எல்லாருக்குமே, அதே அளவு ஆத்மானந்தம் உண்டாகிறது.'' இது நமது பெரியவர் வாக்கு.

இன்று நாட்டில் தர்மமும் பக்தியும் இந்த அளவுக்காவதுநிலைத்திருப்பதற்கு மகளிர்தான் காரணம் என்பதை எல்லோரும் அடிக்கடி சொல்கிருர்கள்; ஆண்களும் சொல்கிருர்கள்; உண்மை என்று நானும் எண்ணுகிறேன். தர்மமும் பக்தியும் மட்டுமல்ல; இன்று தமிழ்நாட்டில் நமது இசை இவ்வளவு பிரகாசமான நிலையிலிருப்பதற்கும் காரணம் பெண்கள் தான். பக்தியும் சங்கீதமும் ஒன்றையொன்று சார்ந்தவை. ஒன்ருல் மற்ருென்று தழைக்கிறது. காரைக்கால் அம்மையாரும், ஆண்டாளும், மீராபாயும் பக்திக்காகவும் இசைக்காகவும் செய்துள்ள அற்புதச்சாதனையை யாரால் அளவிட முடியும். அவர்களால் பாரத தர்மத்திற்கே

● பெண்களும் சட்டமும்

இந்திய அரசியல் சட்டம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அரசியல் சமத்துவம் கிடைப்பதை உறுதி செய்கிறது. வயது வந்த ஆண், பெண் இருபாலருக்கும் ஓட்டுப்போடும் உரிமை உள்ளது. அரசியல் சட்டத்தின் 15-ஆவது விதி பால் அடிப்படையில் வேற்றுமை காட்டுவதைத் தடை செய்கிறது.

1954-ஆம் வருடத்திய திருமணச் சட்டம், கலப்புத் திருமணம் செய்துகொள்ள வகை செய்கிறது. இந்தியக் குடிமக்கள் எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், இந்தச் சட்டத்தின்மூலம் நன்மை பெறலாம்.

இந்தச் சட்டப்படி, திருமணம் செய்து கொள்ள விரும்பும் ஆண்கள் 21 வயது நிரம்பியவர்களாகவும், பெண்கள் 18 வயது நிரம்பியவர்களாகவும் இருக்க வேண்டும்.

இந்திய மக்கட் தொகையில் 88 சதவிகிதம் பேர் இருதார திருமணத் தடைச் சட்டத்துக்கு உட்பட்டவர்கள்.

வரதட்சிணைக் கொடுமையை ஒழிப்பதற்காக 1961-ல் வரதட்சிணைத் தடைச் சட்டம் இயற்றப்பட்டது.

பெருமை. அந்தப் பெருமை இன்றும் குன்றவில்லை.

கோயில்களிலும் உத்சவ நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளும் மக்கள் கூட்டத்தில் பாதிக்கும் அதிகம் பெண்கள்தான். திருவையாற்றில் வருடாவருடம் நடக்கும் தியாகராஜ ஆராதனைக்கு வரும் பக்தர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பெண்கள்தாம். இன்று இசைக்கல்லூரிகளில் சங்கீதம் பயில்பவர்களில் ஆண்களைவிடப் பெண்களே அதிகம். வருங்காலத்தில் சங்கீத வித்வான்களைவிட பெண் பாடகர்களே அதிகமாகி வந்தாலும் வியப்படைவதற்கில்லை.

பெண்குலத்துக்கு நம் இசையில் உள்ள சிறந்த கவனம்பற்றி நான் பெருமைப்பட்டாலும், இன்றைய ஆடவ இளைஞர்களுக்குச் சாத்திரீய சங்கீதத்தில் ஈடுபாடு மிகவும் குறைந்து கொண்டே வருவதுகண்டு வருந்துகிறேன். ஒரு தலைமுறைக்கு முன், சங்கீதக் கச்சேரிக்குக் கல்லூரி மாணவர்கள் எவ்வளவு பெருமளவில் வந்தனர் என்பதையும், இன்று அவர்களுக்குச் சாத்திரீய சங்கீதத்தில் எவ்வளவு அக்கறை குறைந்துள்ளது என்பதையும் கண்டு மனக்கலக்கம் கொள்கிறேன். அடுத்த தலைமுறையில் உலகில் ஏற்படக்கூடிய சூன்யத்தைக்குறித்து கவலைப்படுவது போலவே, ரசிக உலகில் ஏற்படக்கூடிய சூனியம் குறித்தும் கவலை கொண்டு தடுப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சங்கீத தீபத்தை மங்காமல் காப்பாற்றித்தருகிற புனிதமான பொறுப்பைத் தாய்மார்கள் தொடர்ந்து ஏற்று, தமது மக்கட் செல்வத்துக்குப் பாலப்பருவத்திலிருந்தே சங்கீதத்தில் ஈடுபாட்டை ஏற்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன். தாய்மார்கள் அடுத்த தலைமுறையினருக்கு நல்ல உணர்வை ஊட்டினால் நாட்டில் சங்கீதம் பெருகும். அதாவது மக்களின் வாழ்வு பெருகும்.

● என்கடன் பணிசெய்து கிடப்பதே

'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற நாவுக்கரசர் வாக்குக்கு இணங்க நம் நாட்டுக்குத் தொண்டாற்றிய பெருமை அன்னிபெசன்ட் அம்மையாருக்கு உண்டு. இந்திய நாடு அடிமைப்பட்டிருந்த நாட்களில் இந்திய மக்களின் சுதந்திர வேட்கையை வளர்த்த அன்னிபெசன்ட் அவர்கள் 1847-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 1-ஆம் நாள் இலண்டனில் பிறந்தவர்; ஐரிஸ் நாட்டைச் சேர்ந்தவர். இவர் இயற்பெயர் அன்னி என்பதாகும் 1867-ல் பெசன்ட் என்பவரை மணந்தபிறகு அன்னி பெசன்ட் அம்மையாரானார்.

இயல்பாகவே தொண்டுள்ளம் கொண்ட அம்மையார் 1893-ஆம் ஆண்டு இந்தியாவிற்கு வந்து இந்தியாவையே தன் தாயகமாகக் கொண்டார். பிரம்மஞானசபையில் ஈடுபட்டு உழைத்தார். 1895-ல் காசியைத் தம் இல்லமாக ஏற்று பிரும்மஞானத் தொண்டோடு, மகளிர் உயர்வு, இந்தியக் கல்வியின் ஏற்றம், இந்து சமய உயர்வு, நாட்டு விடுதலை போன்ற பல துறைகளில் பணியாற்றினார். இந்திய தேசிய காங்கிரசின் தலைவராகப் பணி புரிந்தார்; இந்திய பிரும்மஞான சபையின் தலைவராகப் பொறுப்பேற்றுத் திறம்படச் செயல்பட்டார். பிறப்பால் வேற்று நாட்டவராயினும் உளத்தால் பாரதப் பெண்மணியாக வாழ்ந்த பெருமைமிக்க அவர் நடத்திய பத்திரிகை இந்திய விடுதலைப் போராட்டகாலத்தின்போது 20,000 ரூபாய்க்குமேல் ஈட்டுத்தொகையாகக் கட்டவேண்டியதாயிற்று.

மகளிரும் நாடகத் துறையும்

கலைச்செல்வி செல்வி சந்திரகாந்தா

மனிதஇனம் தோன்றியபோதே கலையும் பிறந்து விட்டது. கலையின்றி மனிதஇனம் இல்லை என்னும் நிலையில் கலையுடன் மனித இனம் பின்னிப் பிணைந்துகொண்டு தான் தோன்றியது.

புராண இதிகாசங்களின்படி மனிதனையும், பிறவற்றையும் படைக்கும் கடவுள் பிர்ம்மன். இந்தப் பிரம்மனின் சக்திதான் கலைக்கதிபதியான சரசுவதி. தொழில்களுக்கதிபதியான இந்தச் சக்தியின் அருளால்தான் பிரம்மனின் தொழிலே துலங்குகிறது. உலகின் படைப்புக்கே பெண் வடிவமான சக்தி காரணமாகிறாள்.

ஆதி மனிதன் ஆதி பெண்ணின் உடன்பாட்டால்தான் மனித இனம் பெருகியது. மொழியென்றொன்று பிறவாத அந்தக்காலத்தில் தம் கருத்தைப் பிறருக்கு உணர்த்த சைகைகளைத்தான் பயன்படுத்த முடிந்தது. இன்று 'பாவம்' என்று கூறும் இந்த நடிப்புக்கலைதான் அக்கால மனித இனத்தின் கருத்துப் பறிமாறல்களுக்குப் பயன்பட்டது. பின்னர் அவன் ஒலிக்கக் கற்றுக் கொண்டான். பொதுவாக, ஒலி என்பதற்கு 'இராகம்' என்று பொருள்! அன்று ஒலியாகிய இராகமும் சைகையாகிய 'பாவமும்' இணைந்து மனித குலத்திற்கு உதவின! பின்னர் நாளடைவில் இவையிரண்டுக்கும் ஒரு வரம்பு அமைக்க மனித இனம் முன்வந்தது. இசைக்கு வரம்பு தாளம்! மொழிக்கு வரம்பு இலக்கணம்! ஆக மனித குலத்தின் மொழி வரலாற்றை பாவ, இராக தாளம் - என்று வரிசைப்படுத்தி மேலும் அதைச் சுருக்கிப் பரதம் என்று பெயர் சூட்டி வைத்தனர் நம் முன்னோர்கள். பரதகலை பாரத நாட்டின் தனிக்கலையாயிற்று.

இப்பாரத கலைக்குத் தலைவன் நடராசப் பெருமான். ஆண்டவனையே கலை வடிவாக்கிப் பார்த்த இனம் தமிழ் இனம். சிவபெருமான் தன் உடலில் சமபங்கைச் சக்திக்கு அளித்து கலைக்கும் அதன் பெருமைக்கும் ஆணும் பெண்ணும் சம உரிமை உடையவர்கள் என்ற தத்துவத்தை உலகுக்குச் சொல்லாமல் சொல்லியவர். நாட்டியக்கலை ஆணின் பெருமிதத்தையும் பெண்மையின் அடக்க, நாணப் பொலிவையுங் கொண்டு இருக்கவேண்டும் என்

---

*செல்வி சந்திரகாந்தா தமிழகத்தின் தலைசிறந்த கலைஞர்களுள் ஒருவர். நடிப்புக் கலையிலும், நடனக் கலையிலும் சிறந்த புலமையும் திறமையும் வாய்ந்தவர். புகழ் வாய்ந்த திரைப்பட நடிகை. பழந்தமிழ் இலக்கிய நிகழ்ச்சிகளைத் தமிழ்ப் பண்பாட்டின் பெருமை தோன்றத் தம் நடன வாயிலாக விளக்கிவரும் அரிய கலைஞர். நாடகங்கள் வாயிலாகத் தமிழ் நாடகக் கலைக்கும் சிறந்த தொண்டாற்றி வருகிறார்.

பதை நடராசர் சிலையும் சிவகாமி அம்மையின் சிலையும் இலக்கணம் வகுத்துக்காட்டுகின்றன.

நாட்டியக் கலையிலிருந்து நாளடைவில் தோன்றிய கலைதான் நாடகக்கலை. இது பலகாலம் மெல்ல மெல்ல வளர்ந்து வந்து இன்றைய சமுதாயத்தின் பிரதிபலிப்பாக மாறி வளர்ச்சி பெற்றிருக்கிறது. இந்த வளர்ச்சிக்கு இடைக்காலத்தில் பெண்கள் சமூகக்கட்டுப்பாட்டின் காரணமாக ஒதுக்கி வைக்கப்பட்டனர். நாடகம் என்றால் மிகத் தாழ்வாகவும் கருதப்பட்டது. நாடகக் கலைஞர்கள் கூத்தாடிகள் என்று தாழ்த்தப்பட்டனர். நாட்டியக்கலை, ஒரு குறிப்பிட்ட இனத்துக்கு மட்டும்தான் உரியதுஎன்று ஒரு புதுச்சாதியையே உண்டாக்கினர். இதற்கு மதக்கோட்பாடுகளை உருவாக்கிப் பயன்படுத்திக் கொண்டனர். ஆரம்பம் என்னவோ புனித நோக்கோடுதான் தோன்றியது. கலை புனிதமானது,



● கணவன் மனைவியர்க்கொரு மகிழ்வுந்து

இருவர் செல்லக்கூடிய மேல்மூடி இடப்பெறாத, புகை கக்காத மூன்று சக்கரம் உடைய, உட்கார்ந்திருப்பவர்கள் வேண்டும்போது தனியாகவும் இணைந்தும் பெடல் செய்யக்கூடிய, கார் ஒன்று மிகவும் அதிகமாக விற்பனையாகி வருகிறது கனடா நாட்டில். இருவரில் ஒருவர் விரும்பினால் நிறுத்தலாம்; ஓட்டலாம்-இருவரும் இணைந்தும் நிறுத்தவும் ஓட்டவும் செய்யலாம்.

அது தெய்வத் தொடர்பு உடையது! அதை ஆண்டவன் திருச்சபையில்தான் நடத்திட வேண்டும்! இந்தக் கலைச் சேவையைத் தெய்வத்திற்குச் செய்பவர்கள் அவனுடைய அடியார்கள் - அவனுக்கே உரியவர்கள் என்றுதான் வரன்முறைகள் வகுக்கப்பட்டன. ஆனால் நாளடைவில் நடந்தவையோ...கொடுமைகள்!

எந்த ஒரு நல்ல காரியத்தையும் தம் சுயநலத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளும் சமூகப் பகைவர்கள் இதையும் விட்டு வைக்கவில்லை. மாதவி போன்ற காவியத் தலைவியர் வழிவந்தவர்களை இழிவான விலைமாதர்களாக மாற்றி வைத்தனர். தேவதாசிகளை மனிதஇன தாசிகளாக மாற்றித் தெய்வ வஞ்சகம் புரிந்தனர். இதனால் அக் கலைஞர்களின் கலையும் இழிவாக மதிக்கப்பட வழி செய்தனர். அதன் எதிரொலி-கலையைக் கற்கவோ ஏற்கவோ சமூகம் அஞ்சியது. ஆதலால் சிறப்பாக, நாடகக் கலைக்குப் பெண்கள் பணி கிட்டாமல் போயிற்று. ஆண்களே பெண்கள் வேடத்தையேற்று நாடகக் கலையினை வளர்த்தனர்.

என்றுமே புதுமையை முதலில் வலிமையுடன் எதிர்த்துவிட்டுப் பின்னர், அதிலேயே மூழ்கிவிடும் மனித இனம் நாளடைவில் நாடகக்கலையை வரவேற்க முன்வந்தது. காலஞ்சென்ற இசைமேதை எஸ். ஜி. கிட்டப்பா அவர்கள் காலத்தில் நாடகக் கலையில் பெண்களும் சேரலாம் என்ற எண்ணத்தைத் தம் புகழினால் வேரூன்றச் செய்தவர் இசைமேதை திருமதி கே. பி. சுந்தராம்பாள் அவர்கள்

என்றால் மிகையாகாது. ஆனாலும் இவரைப் பின்பற்றி நாடகத் துறையில் துணிந்து ஈடுபட்டவர்கள் மிகமிகச் சிலரே யாவர். ஆதலால் நாடகங்களில் ஆண்கள், பெண்வேடமேற்பது தொடர்ந்து கொண்டிருந்தது. இன்றைய புகழ்வாய்ந்த கலைஞர்கள் பலர் அவ்வாறு பெண்வேடங்களில் நடித்துக் கொண்டிருந்தார்கள் என்பது நாடறிந்த உண்மை. காலம் காற்றென விரைந்தது. நாடக உலகில் மறுமலர்ச்சி தோன்றலாயிற்று.

ஒரே நேரத்தில் பல பெண் கலைஞர்கள் நாடகத்துறைக்கு வந்தனர். இதுவரை, அவர்களை ஒதுக்கிவைத்த கூத்தாடிகள் என்ற கேவலம் மறையத்தொடங்கியது. சகோதரிகள் பண்டரிபாய், மைனாவதி, மனோரமா, ஜி. சகுந்தலா போன்றவர்கள் புகழ்வாய்ந்த நாடக நிறுவனங்களில் நடிக்கத் தொடங்கினர். இதில் என் பங்கும் உண்டு!

ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த கலைகளைச் சமூகம் மதிக்கத் தொடங்கியது. அதற்குக் கர்நாடக இசைதான் வழிகாட்டியது. குடும்பப் பெண்கள் என்று ஒதுங்கி இருந்தவர்கள்கூட இன்று அதை ஏற்றிப் போற்றி வருகின்றனர். நாட்டியம் கற்பது தற்போதைய நாகரிகமாகவே மாறிவிட்டது.

நாட்டியக் கலையிலிருந்து நாடகக்கலை வளர்ந்த இடைப்பட்ட நிலைதான் நாட்டிய நாடகம் என்பது. வசனமில்லாமல் நாட்டிய முறையில் கதையைச் சொல்லும் இம்முறை ரசிகப் பெருமக்கள் பெரும்பான்மையயர் புரிந்து சுவைக்க முடியாத நுணுக்கங்களுடன் இருந்தது. இதைப் பாமரரும் புரிந்துகொள்ளும் விதத்தில் மாற்றம்செய்ய வேண்டும் என்ற எண்ணம் என்னுள் எழுந்தது. நாடகக்கலை தெரிந்த காரணத்தால், பெயருக்கேற்ப இதை நாட்டிய நாடகமாகவே நடத்த முடிவு செய்தேன். நாடக இலக்கண வழிப்படி கதை அமைத்து, நாடக அமைப்புப்படி நடித்து, அதே நேரம் தேவையான அளவுக்கு நாட்டிய இலக்கணத்தை அதில் கலந்து நான் செய்த முயற்சி மாபெரும் வெற்றியை எனக்கு ஈந்தது! சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வி, ஆடலரசி, அனார்கலி ஆகிய நாட்டிய நாடகங்களைப் பெரும் பொருள் செலவோடு பெரும் உழைப்பு நல்கி அரங்கேற்றினேன். மாபெரும் வெற்றி - வேறு எவரும் பெற்றிடாத வெற்றியைப் பெற்றேன். இதில் பெண்களே ஆண்கள் வேடமேற்று நடித்துப்பாராட்டப்பெற்றார்கள். ஆண்கள் பெண்வேடம் ஏற்கும் போது பெண்களும் ஆண் வேடமிட்டுத் திறம்பட நடிக்க முடியும் என்று மெய்ப்பித்தோம்.

இந்த இடைப்பட்ட நிலையில் புதிய நாட்டிய நாடகங்கள் பலரால் அரங்கேற்றப்பட்டன. நாடகக் கலைக்குத் திடீரென ஒரு பெரும் நல்லநேரம் தொடங்கியது. நானும் எனக்கென நாடக மன்றத்தைத் தொடங்கினேன். வெற்றிமேல் வெற்றி. இதே நேரம் பல கலைஞர்களின் நாடகங்கள் வெற்றிக்கொடி நாட்டின! நாடகக்கலைக்கு மரியாதை மலையென வளர்ந்தது.

அன்னை வழிபாடு

பெண் வடிவங்கள் மொகஞ்சொ-தாரோ, அரப்பா ஆகிய இடங்களில் மிகப் பலவாகக் கிடைத்துள்ளன. அவை அனைத்தும் சிறப்புமிக்க 'சக்தி' அல்லது இயற்கை அன்னையின் (நிலமகளின்) உருவங்களாக இருக்கவேண்டும் என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அச் சிலைகளைக் கூர்ந்து கவனித்த அறிஞர்கள் அவற்றை மூன்று வகையாகப் பிரித்துள்ளனர். குழந்தையை அணைத்தவண்ணம் உள்ள சிலைகள் தாய்மை நிலையையும் முகத்தில் அன்பு நிலையையும், அமைதியும் அருளும் பொங்கி வழியும் அருள் நோக்குடைய சிலைகள் அன்னையின் அருள் நிலையையும், காண்போர் அஞ்சத்தக்க சினங்கொண்ட முகத் தோற்றமுடைய சிலைகள் அன்னையின் சீற்றத்தையும் புலப்படுத்துகின்றன. அவை முறையே அன்னையின் ஆக்கல், அளித்தல், அழித்தல் தொழில்களைக் குறிப்பிடுகின்றன. தொல் பழங் காலத்திலேயே இந்தியாவில், அன்னை வழிபாடு இருந்ததைச் சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட அன்னையின் சிலைகள் அறிவுறுத்துகின்றன.

சிந்துவெளிதரும் ஒளி
க. த. திருநாவுக்கரசு

நாடகத்தைப் பார்த்துச் சுவைத்துக்கொண்டிருந்தவர்கள், அதை இகழ்வாக நினைத்தவர்கள், அதைப் பொழுதுபோக்குக் கலையாகச் சொல்லிக்கொண்டு அதில் ஈடுபட்டனர். படித்தவர்கள் பெரிய இடத்துப் பெண்கள் கூட இன்று நாடகத்தில் நடிக்கத் தொடங்கிவிட்டனர்! இதனால் நாடகக்கலையைத் தொழிலாக வைத்துக் கொண்டிருப்பவர்கள் பாதிக்கப்படும் நிலைக்கு அவர்கள் நாடகக்கலையில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு விட்டனர். வானொலி, நாடகத்தை ஒலிவடிவமாக்கித் தன் தொண்டினைச் செய்துவருகிறது. இதிலும் பெண்கள் இன்று ஏராளமாகப் பங்கேற்கின்றனர்! நாடகக்கலை தன் பொற்காலத்தை நடத்திக் கொண்டிருக்கிறது. சிவகாமி இல்லாத நடராசராக இருந்த நாடகக்கலை இன்று சிவசக்தி வடிவமாக முழுமையாகக் காட்சியளிக்கிறது. பெண்கள் நாடகக்கலையில் ஈடுபட்டபின்னர் நாடகம் முழுமையடைந்து விட்டிருக்கிறது. இன்று கணக்கற்ற நாடக மன்றங்கள் கலைப்பணியைச் செய்து வருகின்றன. இதனால் மிகுதியான பெண்கள் நாடகத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்; சிறந்த திறமையாளர்கள் தோன்றுகின்றனர்; நடிப்புக்கலை சிறந்து வளர்கிறது. ஆயினும் இப்போது நாடகக்கலை செல்லும் வழி சற்று அச்சத்தைத் தரத்தான் செய்கிறது.

அரசியலும், கதை அமைப்பில்லாத பொழுதுபோக்குமே கொண்ட நகைச்சுவை நாடகங்களே இன்று முதன்மையான இடத்தை அடைத்துக்கொண்டு விட்டன! இதனால் தரமான கதை, நாடக அமைப்பு, நடிப்புத் திறமை ஆகியவை பின்னுக்குத் தள்ளப்பட்டு வருகின்றன. இயற்கையை எதிரொலிப்பதாகச் சொல்லிக்கொண்டு விரசங்களும் தோன்ற ஆரம்பித்துவிட்டன.

நாடகக்கலை ஒரு நல்ல பிரச்சார அமைப்பு. இதன் உதவியால் சமூகத்திற்கு நல்ல ஒழுக்கங்களை, நல்ல கருத்துக்களை, தெய்வ பக்தியை, மற்றைய நல்லவற்றைக் கற்பிக்க முடியும். பக்திக் கதைகளால்தான் இந்தக் கலைக்கு மதிப்பு ஏற்படத் தொடங்கியது. ஆனால் இன்றைய போக்கினால் ''மீண்டும் வேதாளம் முருங்கை ஏறி'' விடுமோ என்ற அச்சம் தோன்றத்தான் செய்கிறது. நான்கு சுவருக்கு

நடப்பதை, நமக்குள் வைப்பது தான் நல்லது. உண்மையைச் சொல்லுவதில் தவறேது? என்று கேள்வி எழுப்பிக்கொண்டு பணி புரிபவர்கள் ஒரு கருத்தை எண்ணிப்பார்ப்பதில்லை; வருங்காலத்தைப்பற்றி, வருங்கால மக்களைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை. பிறக்கும்போதும் ஆடையின்றித்தான் பிறந்தோம். உடை அணிந்தது நாமாக மேற்கொண்டதே. இது சமூக நலனுக்காகச் செய்யப்படுகின்ற ஒன்றாகும். உடையணிந்தாலும் உடைக்குள்ளே ஒவ்வொருவரும் அம்மணமாகத்தான் இருக்கிறோம்-என்பது வெளிப்படையான உண்மைதான். இது உண்மை என்பதற்காக ஆடையற்று வாழ முடியுமா? இதைப் போல் சமூகத்தில் எவ்வளவோ இழி செயல்கள் இருளில், மறைவில் நடக்கத்தான் செய்கின்றன. இவை இன்று நேற்றுத் தோன்றியவையல்ல. ஆதலால் இவைகளைச் சந்திக்குக் கொணரக் கலையை, அதுவும் நாடகக்கலையைப் பயன்படுத்துவது மன்னிக்க முடியாத குற்றமாகும். புண்ணைப்பார்த்து மற்றவர்கள் அருவருக்கக்கூடாது என்பதற்காக மூடி மறைப்பதுதான் நாகரிகம். அதைப்போல சமூகத்தில் புரையோடிவிட்ட புண்களைச் சமூகத்தின் கண்கள் காண வைப்பேன் என்பது புதுமையல்ல. அநாகரிகம் குடும்பப் பத்திரிகை என்ற பெயரிலே இன்று வரும் பெரும்பாலான பத்திரிகைகளைச் சிறுவர், சிறுமியர் பார்க்கவிடாமல் வைத்திருக்கவேண்டிய நிலையில் பெற்றோர் இருப்பதுபோல்-நாடகங்களும் வெறுத்து ஒதுக்கும் நிலைக்குப் பொருளாகக் கூடாது. இது, நாடகக்கலையை விஞ்ஞான அடிப்படையில் எதிரொலிக்கும் திரைப்படக்கலைக்கும் பொருந்தும்!

நல்ல கருத்துக்களை, நல்லவைகளைப் பார்ப்பவர்கள் பலனடையும் விதமாகச் சொன்னால், இந்தக்கலை வளர்ச்சியில் என்றும் மகளிர் பணிக்கு இடமிருக்கும்; இல்லையெனில் மீண்டும் பழைய நிலைதான் ஏற்படும். இக்கலைக்குப் பெண்கள் ஆதரவும் போய்விடும் என்பதைப் பணிவன்போடு எச்சரிக்கிறேன். நாகரிகம் என்ற பெயரால் கற்காலத்தை நோக்கிப் பயணத்தைத் திரும்பியுள்ள சமூகத்தின் பயணத்தைத் தடுத்து முன்னேற்றப்பாதையில் செலுத்த நாடகம் பயன்பட வேண்டும். அதல்லாமல் கற்காலப் பயணத்தை முடுக்கி விரைவுபடுத்த இது கருவியாக அமைந்துவிடக் கூடாது; இதற்கு மகளிர் துணையாகக்கூடாது என்றும் வேண்டிக் கொள்கிறேன். □

"இல்லத்தைவிட்டு வெளியே வந்து, அதே இல்லத்தைக் காப்பதற்காகத் துப்பாக்கிகளை ஏந்துங்கள் என்று பெண்களை அழைப்பதோ அல்லது அவர்களை அப்படிச் செய்யத் தூண்டுவதோ ஆண், பெண் இருவருக்குமே இழிவானது என்று நான் கருதுகின்றேன். இது காட்டுமிராண்டித் தனத்திற்குத் திரும்புவதாகும்; முடிவுக்கு ஆரம்பமுமாகும். ஆண்கள் சவாரி செய்யும் குதிரையைத் தாமும் சவாரி செய்ய முயற்சி செய்வதன் மூலம் பெண்கள் தாமும் கீழே விழுந்து, ஆண்களையும் கீழே தள்ளி விடுகிறார்கள். தன்னுடைய துணைவி அவளுடைய விசேஷப் பணிகளைக் கைவிடும்படி ஆசை காட்டுவதன்மூலம் அல்லது தூண்டுவதன்மூலம் நேரும் பாவம் ஆணையே சேரும். தன் வீட்டை வெளித் தாக்குதலிலிருந்து காப்பாற்றுவதில் எவ்வளவு வீரம் இருக்கிறதோ அவ்வளவு வீரம், வீட்டை நல்ல சீரான நிலைமையில் வைத்துக்கொள்வதிலும் உள்ளது."

— காந்தியடிகள் அரிசன் 24-2-40

கூடுதலான
ரொக்கம்
மாதா
மாதம்

ஸெண்ட்ரல் பாங்க்
மாதாந்தர வட்டி டெபாசிட் திட்டம்

உங்கள் டெபாசிட் இதுவானால்...	மாதங்கள் 12	36	61	உங்கள் மாதாந்திர பில்களாகிய இவற்றைத் தீர்ப்பதற்காக.	ரூ.
	மாதம்தோறும் நாங்கள் கொடுப்பது ரூ.	ரூ.	ரூ.		
ரூ. 1,000	6.66	7.50	8.33	மின்சாரம்	☐
ரூ. 2,000	13.33	15·00	16.66	பள்ளிக் கட்டணங்கள்	☐
ரூ. 3,000	20.00	22.50	25.00	லாண்டரி	☐
ரூ. 4,000	26.66	30.00	33.33	மருந்து	☐
ரூ. 5,000	33.33	37.50	41.66	சில்லறை இனம்	☐

ஸெண்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா

மக்களின் இடம் நாடிப் பணிபுரியும் பாங்க்.

PNB/CBI/190/74 A-TM

மகளிரும் சமூகப் பணியும்

தமிழகத்துப் பெண்கள் அவர்களுடைய அறப்பண்பு, அன்பு உள்ளம், இரக்க இயல்பு, வீர உணர்ச்சி, அறிவின் முதிர்ச்சி, தியாகத்தன்மை, ஆகியவற்றிற்குப் பெயர்போனவர்கள் என்பதனை இலக்கியங்களின் வாயிலாகவும் இதிகாசங்களின் மூலமாகவும் அறிகின்றோம். இன்றைய தமிழகத்துப் பெண்களும் இப்பண்புகளில் சிறந்து விளங்குகின்றனர். அரசியல் அறிவு, இலக்கிய ஆர்வம், சமூகத் தொண்டின் சிறப்பு, அடக்க உணர்ச்சி, எதனையும் சிந்தித்துப்பார்க்கும் திறன், பழமையையும் புதுமையையும் இணைக்கும் பொலிவு ஆகிய அத்தனையும் இன்றைய தமிழகத்துப் பெண்களிடம் காணலாம். ஏதோ எங்கோ ஒன்றிரண்டு இதற்கு மாறுபட்டிருந்தால் அதனைப் பெருக்காடி வைத்துப் பெருக்கிக் காட்டுவது உலக இயல்பு. அதனைப் பொருட்படுத்தாமல் உண்மை நிலைகளைத் தான் நோக்க வேண்டும். சமூக மேம்பாட்டிற்காகவும், நாட்டின் ஒருமைப்பாட்டிற்காகவும், வீர உணர்ச்சியைத் தூண்டுதற்காகவும், உழைத்த — உழைக்கின்ற மணிமேகலைகள், ஒளவையார்கள் காவற்பெண்டுகள், ராணிமங்கம்மாக்கள் அன்றும் இருந்தனர்; இன்றும் உள்ளனர். பெண்களுக்கே உரிய அடக்க உணர்வால் தான் செய்யும் நல்லன எல்லாவற்றையும் இன்னொருவருக்கு ஆக்கும் இயல்பால் அவர்கள் இலைமறைகாய்களாக வாழ்கின்றனர். அத்தகைய பெண்மக்கள் உலக நலம் கருதி அவ்வப்போது ஒன்றுகூடுவதுண்டு. அவ்வாறு கூடிய கூட்டங்கள் பலவாயினும் 19 ஆம் நூற்றாண்டிலிருந்து பெண்கள் சமூகப் பணியில் பெற்ற பங்கு என்ற கருத்துச் சுருக்கத்தை எழுதினால் வாசகர்க்கு நலம் பயக்கும் என எண்ணி எழுதுகிறேன்.

அடிமைத்தளையில் சிக்கித் தவித்த பாரதத்தில் அடிமைப்பட்ட மக்கட்குப் பணி செய்யவென எழுந்த தியாகச் செம்மல்களாம் தாய்மார்களின் 'சமூகத்

செல்வி ந. அரங்கநாயகி

இவர் சமூகப் பணித் துறையில் பட்டம் பெற்றவர். பூ.சா.கோ. கலைக்கல்லூரியில் சமூகப்பணித் துறையில் பணியாற்றித் தற்போது பூ.சா.கோ. பொறியியல் கல்லூரியில் நிர்வாகத்துறைப் பிரிவில் துணைப் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். சமூகத் தொண்டிலும், நாட்டுப் பணியிலும் நாட்டம் மிக்கவர்.

தொண்டின்' வரலாறு 19-ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கி விட்டதென்றாலும் 1917-ல் நமது சென்னை மாநகரில் 'இந்திய மகளிர் கழகம்' என்ற கழகம் தொடங்கிய பின்னர்தான் பணிகள் ஒருமுகப்படுத்தப்பட்டு மகளிரின் ஒருங்கிணைந்த பணி ஆர்வம் வளரத்தொடங்கியது. திருவாட்டி அன்னி பெசண்ட் அம்மையார் திருவாட்டி மார்கரெட் களின்ஸ் போன்ற மேலைநாட்டுப் பெண்மணிகள் இந்த ஒருங்கிணைந்த செயலார்வத்திற்கு வித்திட்டு வளர்த்த பெருமக்களாவார்கள். இவர்கள் கருத்துக்களைச் சொன்னதோடு தாங்களே சொன்னவற்றிற்குக் காட்சியாய் நடந்தும் காட்டினர். பெண்கட்சமுதாயம் சிறக்கவும் விழிப்படையவும் பாடுபட்டனர்.

அன்னிபெசண்டு அம்மையார் குழந்தைத் திருமணத்தை எதிர்த்துப்போராடினார். ஐந்து வயது பெண்ணிற்கும் பதினைந்து வயதுப் பையனுக்கும் திருமணம் நடப்பது வழக்கமாக இருந்தது என்றால் இன்றைய பெண்களில் பலர் நம்பமாட்டார்கள். 'வாட் எ ஸ்டுபிட் திங் யு ஆர் டாக்கிங்' என ஏளனமாகக்கூடச் சொல்வார்கள். ஆனால் நடந்தது உண்மை. அதைப்பற்றிப் பாட்டிமார்கள் இன்றும் பெருமையாகப் பேசிக்கொள்வார்கள். திருவாட்டி சரோஜினி நாயுடுவும், மார்க்ரெட் களின்சும் பெண்களின் ஓட்டுரிமைக்காகப் போராடினர். ஆண்களிலேயே பலருக்கு ஓட்டுரிமை இல்லாத அந்தக் காலத்தில் பெண்களுக்கு ஓட்டுரிமை ஏது? காந்தியடிகள், திரு. வி. க. போன்றவர்கள் பெண்களின் விழிப்பு உணர்வு வளரச் செயல்பட்டனர். இவர்களின் பேச்சாலும் வழிகாட்டும் பண்பாலும் இந்நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்ற வெற்று வேதாந்தத்தைத் தகர்த்தெறியத் தலைப்பட்டு அரிசன சேவை, கைம்பெண் மறுமணம், குழந்தைத் திருமண எதிர்ப்பு, பிச்சைக்காரர்கள் ஒழிப்பு, வழுக்கி விழுந்தோர்க்கு மறுவாழ்வு அளித்தல், வழுக்கா வகையில் வாழ வழிகாட்டுதல், தாய்சேய் நலவிடுதிகள் போன்ற பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபட்டுக் கடமையும் கண்ணியமும், கட்டுப்பாடும் மேற்கொண்டு உழைக்கத் தலைப்பட்டுவிட்டனர். பெண்களின் விழிப்புணர்ச்சியைக் கண்டு பெருமிதம் அடைந்த அரசு இளம் குற்றவாளிகளைச் சீர்திருத்தும் பணிக்கு அமைக்கப்பட்ட நடுவர் குழுவில் டாரதி ஜினராஜா, லேடி சதாசிவ ஐயர் போன்ற பெண்மணிகளை நடுவர்களாக அமைத்தது. திருவாட்டி டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் வாழ்விழந்த பெண்மணிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்தோடு சென்னையில் அவ்வை விடுதியை ஏற்படுத்தித் தொண்டு செய்தார்.

இப்பணி போன்ற பணிகளைச் செய்ததற்குப் புறம்பேசிய ஆண் உலகம் உண்டு. புறம் பேசுதலைப் பணியாகக் கொண்டவர்கள் எல்லாக் காலத்திலும் இருக்கத்தான் இருப்பர். அது பற்றிக் கவலை வேண்டா. அரசியல் வாழ்வில்கூட இந்த அம்மையார் இன்றைய பெண்மணிகட்கு வழிகாட்டியாக விளங்கினர். மருத்துவப் பணியில் ஈடுபட்டு

● **சோர்விலாள் பெண்**

பொதுவாகப் பெண்ணுக்குச் சோர் விருத்தலாகாது. ஏன்? பெண்ணினின்றும் பிறப்பது வருங்கால உலகம் ஆதலின். அவ்வுலகை நன்முறையில் ஓம்பிப் பண் படுத்தும் பொறுப்பு எவருடையது? பெண்ணினுடைய தன்றே? இப்பெண் ணுலகில் சோர்வு ஏற்படின் உலகம் என் ளுகும்? பாழாகும். ஆதலின், பெண்ணின் பால் சோர்விருத்தலாகாதென்க.

— திரு. வி. க.

பொருள் சேர்ப்பதனை விடுத்துச் சட்டமன்றத்தில் உறுப்பினராகத் திகழ்ந்து 'சாரதா சட்டம்' 'தேவதாசி ஒழிப்புச் சட்டம்' என்பன போன்ற சமூகச் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்ததோடு அடையாற்றில் 'கான்சர் இன்ஸ்டிட்யூட்' என்ற மருத்துவ மனையையும், தொடங்கி சமூக சேவை செய்துள்ளார்.

திருவாட்டி ருக்மிணிலட்சுமி பதி என்ற அம்மையார் அரசியல் வாழ்வில் மகளிர்க்கு ஒரு ஒளி விளக்கு என்ருல் அது மிகையாகாது. இவர் மகாத்மா காந்தியடிகள் காட்டிய நெறிகளில் நின்று பணியாற்றி, 'உப்புச் சத்தியாக்கிரகம்' போன்றவற்றில் ஈடுபட்டுச் சென்னையில் மருத்துவத் துறைக்கு அமைச்சராகப் பணி புரிந்துள்ளார். திருவாட்டி ராதா பாய் சுப்புராயன் அவர்கள் இந்தியாவின் சார்பில் 'லீக்ஆப் நேஷன்சுக்குப் பேராளராய்ச் (representative) சென்று தாய் சேய் நலன் காப்புக்குழுவில் பங்கு பெற்று மதுவிலக்கு, பலரை மணக்கும் மண ஒழிப்பு ஆகிய சட்டங்களை அன்றைய அரசு ஏற்குமாறுசெய்தார். திருவாட்டி அம்புஜம்மாள் அவர்கள் 'சீனிவாச காந்தி நிலையம்' என்ற சமூகப்பண்பாட்டு அமைப்பை நிறுவிப் பணியாற்றியும் அன்றைய சென்னை மாநில சமூக நல வாரியத்தின் தலைவராகப் பணியாற்றியும் பெண்களின் செயல் திறனை நிறுவியுள்ளார்.

நம் நாட்டில் பழங்காலந் தொட்டு மருத்துவத்தில் கை தேர்ந்தவர்கள் பெண்கள் என்பது செயல்முறை உண்மையாயினும் அனைத்துலகிலும் பெண்கள் மருத்துவக்கல்விபெற வாய்ப்பு இல்லாமல் இருந்தது. இது நம் நாட்டிலும் வளர்ந்தது. இந்தக் கொடுமையை நீக்க முயன்றவர் டாக்டர் ஐடாஸ்கட்டர் என்ற அமெரிக்கப் பெண்மணியாவார். இவர் முயற்சியால் முதலில் திருவனந்தபுரத்தில் முதல் பெண் மணி மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்பட்டாள்; வேலூரில் இன்று புகழோடு விளங்கும் மருத்துவ மனையும் மருத்துவக்கல்லூரியும் இவரால்தான் தோற்றுவிக்கப்பட்டன. அன்பாலும் இரக்கப் பண்பாலும் ஆண்டவனிடம் கொண்ட பக்திச் சிறப்பாலும் நாட்டுப்புற மக்கட்குப் பலநல்ல செய்திகளை எடுத்துச் சொல்லி சத்துணவு பற்றியும், புகை கக்கா அடுப்பு பற்றியும் அவர்கள் அறியுமாறு செய்த பெருமை ஐடாஸ் கட்டர் அவர்கட்கு உண்டு. திருவாட்டி பாரிஜாதம் அம்மையார் 'மாதர் நலப்பிரிவு' என்ற ஒன்றினைத் தோற்றுவித்துக் குழந்தை வளர்ப்பு, குழந்தைக்கல்வி ஆகியன பற்றித் தெளிவுபடுத்தினர். திருவாட்டி கிளப்வாலாயாதவ் சமூகப்பணிப் பள்ளியை ஏற்படுத்திச் சமூகப்பணியில் ஆண்கட்

கும் பெண்கட்கும் விஞ்ஞான அடிப்படையிலான பயிற்சியை நல்கினார். இவ்வாறு இந்த நூற்றாண்டின் முதல் ஐம்பதாண்டுக் காலத்தில் பெண்மணிகளால் சமூகப்பணிக்குப் பல நல்ல கால்கோள்கள் இடப்பட்டன.

இத்தகைய பெருமக்களால் தோற்றுவிக்கப்பட்ட மகளிரின் சமூகப்பணி இயக்கம் இன்று மேலும் மேலும் பல்வேறு துறைகளில் வளர்ந்து வருகின்றது. உலகம் மிக விரைவில் வளர்ந்தும் சுருங்கியும், நெருங்கியும் வருகிற இக்காலத்தில் சமூகப்பணிக்கு நல்லுணர்ச்சி, தியாக உள்ளம், ஆர்வம் இவைகளோடு முறையான விஞ்ஞான ரீதியான பயிற்சியும் தேவைப்படுகின்றது. 'நோய்நாடி, நோய் முதல்நாடி, அது தீர்க்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்' என்று வள்ளுவர் கூறியுள்ளார். சமூகப்பணிக்கு இது மிகமிகப் பொருத்தம். சமுதாய நோய்கள் பல. அவை உண்டாவதற்கான காரணங்கள் பல. அவைகளைப் போக்கக்கூடிய வழிகள் பல. ஆனால் இடம், பொருள் காலம், போன்ற சூழ்நிலைகட்கு ஏற்ப எந்த வழியை மேற்கொள்வது என்று அறிந்து செயல்பட வேண்டும். பலநூல் கல்வியும் நுணுகி ஆராயும் திறனும், செயல் முறைப் பயிற்சியும் தேவை. அதற்கேற்ற பள்ளிகளும் கல்லூரிகளும் நாடு முழுமையிலும் தேவை. இந்தத் தேவையை நிறைவு செய்து இயல்பாகவே மனத்திண்மையும், பக்தியும், நல்லொழுக்கமும், இரக்கமும் தன்னலமற்ற தன்மையும் கொண்ட பெண்கட்குப் பயிற்சி கொடுத்தால் நமது நாடு

● தாய்ப்பாலா? பசும்பாலா?

தாய்ப் பால் ஒன்றுதான் குழந்தைகளுக்கு மிகவும் ஏற்ற, அபாயமில்லாத உணவு என்று இதுவரை கருதப்பட்டு வந்தது. ஆனால் இதிலும் டி. டி. டி. போன்ற இரசாயன அம்சம் காணப்படுகிறதென்று மேற்கு ஜெர்மன் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இதுவரை தாய்ப்பாலைவிடச் சிறந்த உணவு குழந்தைகளுக்குக் கிடையாது என்று டாக்டர்கள், உணவுச் சத்து நிபுணர்கள் முதலியோர் ஒப்புக்கொண்டிருந்தனர். ஆனால் இந்தத் தாய்ப்பால உணவிலும ஆபத்துள்ளதென்பதை மேற்கு ஜெர்மன் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

தாய்ப்பாலின் 137 மாதிரிகளைப் பல மருத்துவ மனைகளிலுள்ள தாய்மார்களிடமிருந்து பெற்று மூனிச்சிலுள்ள இரு ஆராய்ச்சியாளர்கள் பரிசோதனை செய்துள்ளனர். அவைகள் எல்லாவற்றிலும் பூச்சிக்கொல்லி மருந்தின் சத்தான டி. டி. டி. யும் டி. டி. இ. யும இருப்பதை இவர்கள் கண்டுபிடித்துள்ளனர். இவர்கள் ஆராய்ச்சி முடிவு வெளியிடப்பட்டதும் ஒரு கவலைக்கிடமான நிலையை ஏற்படுத்தியுள்ளது. டி.டி.டி. மட்டுமே உலகெங்கும் தடை செய்யப்பட்டிருக்கிறதேயொழிய தாய்ப்பாலில் காணப்பட்ட இதர பூச்சிக்கொல்லிச் சத்துக்கள் தடை செய்யப்படாதவையே. இவை ஹெக்ஸாகுளோரோபென் ஸோல், லிண்டன், ஹெட்டா குளோரோ பாக்ஸிட், போலி குளோரினேடெட் பைபினலிஸ் பி. சி. பி. ஆகியவை.

இரசாயன நிபுணர்கள் பி. சி. பி. மிகவும் ஆபத்தானது என்று கருதுகிறார்கள். இது டி. டி. டி. போலில்லாமல் திசுக்களில் நீண்ட காலம் தங்கி ஈரலைப் பாதிக்கிறதாம்.

1971-லேயே இந்த பி. சி. பி.-ஐ உபயோகிப்பதை உற்பத்தியாளர்கள் நிறுத்தி விட்டார்கள். அப்படியிருந்தும் இது பரவலாக உபயோகிக்கப்பட்டு வருகிறது. நான்கு மாதிரிகளில் ஒன்று வீதம், தாய்ப்பாலில் இந்த பி. சி. பி. கலந்திருப்பதை ஆராய்ச்சி நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த ஆராய்ச்சியாளர்கள் அறிவிக்கும் முடிவாவது:

''மேற்கு ஜெர்மனியில் பசும்பால் இருக்கவேண்டிய நிர்ணயிக்கப்பட்ட சுத்த அளவுக்குக்கூட தாய்ப்பால் இல்லை; பார்க்கப்போனால் பசும்பாலைவிட தாய்ப்பால் மோசமாக உள்ளது.

இதற்காக, குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுப்பதை அடியோடு நிறுத்திவிட வேண்டுமா? அப்படிச் செய்து பசும்பாலைக் கொடுப்போமெனறால் அதில் அதிகம் ஆபத்தான இரசாயனப் பொருள்கள் பல கலந்துள்ளனவே!

கற்பனையைக் காட்டிலும் உண்மை அறிய முடியாத ஒன்று. பொன் முட்டையிடும் வாத்தினை எல்லாரும் தேடிக்கொண்டே உள்ளனர். வேறு எங்கும் காணமுடியாத அதனை சிண்டிகேட் பேங்கில் காணலாம்.
நாங்கள்
"சமுதாய பாதுகாப்பு டெப்பாசிட்"
என்ற அந்தப் பொன் முட்டையிடும் வாத்தைத் தருகிறோம். அது
"மாதந்தோறும் அளிக்கப்படும் வட்டி"
என்ற பொன் முட்டையினை அளிக்கும். இந்த மாத வட்டி உங்களின் சில்லறைச் செலவுகளை ஈடுகட்ட உதவும். அதே நேரத்தில் முதலுக்கும் மோசமில்லை. ரொட்டியை உண்ணும்போதே அதனைக் குறையாது பாதுகாப்பதனைப் போன்றதே இது.
இன்றே சேருங்கள்
"சமுதாய பாதுகாப்பு டெபாசிட்"
திட்டத்தில் குடும் நலம் கருதி இன்றே சேருங்கள். பணம் பற்றிய மனச் சஞ்சலத்தைத் தூர விரட்டுங்கள்.

சிண்டிகேட் பேங்க்
50 ஆண்டுகளாக வளர்ச்சிப்பணி புரியும் பேங்க்
தலைமை அலுவலகம்:
மணிப்பால்
(கருநாடகம்)

அமைதியும் இன்பமும் எழிலும் பூத்துக் குலுங்கும் பூங்காவாகத் திகழும். அப்போது செல்வக் குடும்பத்தில் பிறந்தும் சுகானுபவங்களை விலக்கிப் போரில் காயம் அடைந்த வீரப் பெருமக்கட்குத் தொண்டு புரிந்த அஞ்சா நெஞ்சினராம் பிளாரன்ஸ் நைட்டிங்கேல் போன்ற பெண்மணிகளை நம் நாடு காணும்; வீட்டின் துயர் போக்கும் பெண்கள் நாட்டின் துயர் தீர்க்க உழைப்பர்; அகம் சிறக்க வாழும் பெண்களால் புறம் சிறக்கவும் வாழ முடியும் என்பதை நல்லமுறையில் நிரூபித்துக் காட்டுவர்; மருத்துவம், கல்வி, சமூகப்பணிகள் போன்ற துறைகளில் சிறப்பும் திறமையும் ஓங்க உழைப்பர். உலகம் வாழும் அத்தகைய சிறந்த வாழ்வை அளிக்க அனைத்துலக மகளிர் ஆண்டாகிய இந்த 1975 சிறப்பான செயல் திட்டங்களைக் காணும் நல்லாண்டாய்த் திகழுமாக; திருவாட்டி சரோஜினி நாயுடு அவர்கள் கூறிய "பெண் இனங்களின் முன்னேற்றமான பணிகளைத் தடுக்கும் சக்தி பெண்களிடம் உள்ளதே தவிர வேறு எங்கும் இல்லை. பெண்கள் தங்களின் உண்மையான திண்மை, உயர்ந்த பண்பு, உயரிய நிலை ஆகியனவற்றை உணர்ந்து உயரத் துணிவு கொண்டால் அதைத் தடுக்க உலகில் எந்தச் சட்டமும் இருக்க முடியாது" என்ற கருத்துக்களின் உயிர்ப் பொருளை உணர்ந்து மகளிர் சமுதாயம் உயருமாக! □

SAKTHI SUGARS LIMITED

Sakthi Sugars Ltd.

COIMBATORE

manufacturers of

HIGH QUALITY WHITE CRYSTAL SUGAR

and

INDUSTRIAL ALCOHOL

and

producers of

HIGH YIELDING HYBRID SEEDS

(certified by the Government)

Factory :

Sakthinagar, P. O.,

(via) ERODE, R. M. S.

மகளிரும் மருத்துவமும்

முதன்முதலில் மருத்துவமானது நோயுற்று நலிவுற்று இருக்கும் உறவினர்களுக்குத் தாய், செவிலி, மனைவி, மகள் என்றிப்படி மகளிர் பரிவுடன் செய்யும் தொண்டாகத் தான் இல்லத்தில் உருவாகியிருக்க வேண்டும். பல்லாண்டுக் காலத்தில் நாகரிகம் முதிர்ச்சியுற, நோய்களையும் மருத்துவ முறைகளையும் பற்றிய அறிவு வளர வளர, அது ஒரு தனிக்கலையாக வளர்ந்து நின்று அறிவியல் துறைகளில் ஒன்ருக மிளிர்கிறது. பண்டை நாகரிகங்களில் பல மருத்துவ மகளிர் இருந்ததாகவும், தொண்டாற்றியதாகவும் வரலாற்றிலும் இலக்கியங்களிலும் படிக்கிருேம். கிரேக்க நாட்டின் மூதறிஞர் சாக்கிரடீசின் தாய் பினுர்டே என்ற பெயர்கொண்ட பெண் மகப்பேற்று மருத்துவத்தில் தேர்ந்தவர் என்றும் அதையே தொழிலாகக் கொண்டவர் என்றும் அவர் வரலாறு கூறுகிறது. நாகரிகம், பண்பாடு, சமய விதிகளின் கட்டுப்பாடு ஆகியவற்றின் காரணமாக மகளிர் நோயின் துன்பத்தைத் தணிக்க ஆடவரிடம் போகக்கூடாது என்ற நியதிகள் இருந்த நாடுகளில் மருத்துவப் பணிகள் அனைத்துமே மகளிருக்காகச் சிறந்த முறையில் மருத்துவ மகளிரே ஆற்றிவந்திருக்கின்றனர். சில குடும்பங்களில் ஆண் பெண் யாவருமே இத்தொழிலில் ஈடுபட்டு ஒத்திருந்து மருத்துவ நிலையங்கள் நடத்தியதாகவும் வரலாறு கூறுகிறது. பதினெட்டாம் நூற்றுண்டில் போலோரு பல்கலைக்கழகத்தில் ஆன்மொராண்டி மன்சோனி (Annemorandi Manzoni) என்ற பெண் மருத்துவ வல்லுநர் உடற்கூற்று வல்லுநரும் பேராசிரியருமாக இருந்த தன் கணவருக்கு உறுதுணையாக இருந்து பணியாற்றி அவர் இறந்த பிறகு அதே பேராசிரியர் பதவியை ஆற்றியதாகவும் அறிகிருேம்.

எனினும், பொதுவாக நோக்குங்கால் தந்தைவழிச் சமுதாயங்கள் அனைத்துமே மகளிர் பொறுப்பான பதவிகள் ஏற்பதை

டாக்டர் (திருமதி) லலிதா காமேசுவரன்

இவர் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் நாவலர் சோமசுந்தர பாரதியாரின் மகளார். சென்னை மருத்துவக் கல்லூரியில் மருந்தியல் துறைப் பேராசிரியராகப் பணிபுரியும் இவர் தமிழில் சிறந்த புலமையுடையவர். மருத்துவத்துறை பற்றிய உலக நாடுகளின் கருத்தரங்கில் பங்கு பெற்ற பெற்றிமையுடையார். பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் மிக்கவர். வெளிநாட்டு, உள்நாட்டுப் பத்திரிகைகள் பலவற்றில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். மருந்தியல் துறையில் ஆராய்ச்சி செய்யும் மாணவர்களை நெறிப்படுத்தி வருகிருர்.

யும் பொது இடங்களில் பணியாற்றுவதையும வெறுப்புடன் தான் நோக்கி வந்திருக்கின்றன. மதிப்புடைய குவேகர்கள் குடும்பத்தைச் சேர்ந்த ரோசாலி ஸ்டாட்டர் மார்ட்டன் (Rosali Staughter Mortan) அம்மையார் முதன் முதலில் அமெரிக்கநாட்டில் மருத்துவம் பயின்று பொதுப் பணியாற்ற விரும்புவதாகத் தன் விருப்பத்தைத் தெரிவித்தவுடன் தந்தையும் தாயும் பதைபதைத் தனர். கனிந்த குரலில், கவலை மிகுந்த கண்களுடன் தாய் எத்தனையோ வாதங்களை எடுத்துரைத்துத் தடைப்படுத்த முயன்ருர். ''இரவில் தனியாகப் போக வேண்டியிருக்குமே! பண்பாடில்லாத கீழ்த்தரமான மக்கள் கூப்பிட்டாலும்கூட ஓடிப்போக வேண்டியிருக்குமே!'' என்று பரிவுடன் தடுத்துரைத்தார். ரோசாலி ஏற்கெனவே முடிவெடுத்துவிட்ட உறுதியுடன், ''பிரான்ஸ் நாட்டில் ஜோன் ஆஃப் ஆர்க் அனுபவித்த கேடுகளில் இது பாதிகூட இல்லையே'' என்று பதில் சொன்ஞர். ஆனுல் தந்தை கூறிய தடைகள் அதைவிடக் கண்டிப்பாக இருந்தன. ''என்னுடைய மகள் பணத்திற்காக வேலை பார்ப்பதை நான் விரும்பவில்லை. தங்களுடைய குடும்பங்களைக் காப்பாற்றுவதற்காகப் பணிபுரியும் ஆண்களுடன் நீ போட்டியிடுவது முறையல்ல. பெரிய மனிதனுடைய மகள், பணம் சம்பாதிப்பதற்காக வேலை பார்ப்பதில்லை. எங்களுடன் இருக்கும் வரை எங்களை மகிழ்வித்து, அதன்பின்னர் உன் குடும்பத் தகுதிக்கு ஒத்த தகுதியுடைய ஓர் ஆண்மகனை மணந்து அவனுடன் வாழ்வதுதான் உன் கடமையும் நீ சமுதாயத்திற்கு ஆற்றும் தொண்டும் ஆகும். சமுதாயம் ஒத்துக்கொண்ட விதிகளை மீறக்கூடாது. ஒரு நல்ல மனைவியாகவும் நல்ல தாயாகவும் எதிர்காலத்தில் இருப்பதுதான் உன்னுடைய ஒப்பற்ற கடமை'' என்று கூறித் தடுத்தார்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் அன்றைய சமுதாயத்தில் எலிசபெத் பிளாக்வெல் (Elezebeth Blockwell) அம்மையார் மருத்துவம் பயில எண்ணி இங்கிலாந்தில் மகளிருக்குக் கற்கவசதியில்லை என்ற காரணத்திற்காக அமெரிக்காவிற்கு வந்து ஒவ்வொரு பல்கலைக் கழகத்திற்கும் விண்ணப்பங்கள் அனுப்பி முயற்சி செய்தார். தன் குடும்பத்திற்கு அறிமுகமாகியிருந்த பல மருத்துவ வல்லுநர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் எழுதி மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து பயில விரும்பும் ஒரு பெண்ணிற்கு எது சிறந்த வழி என்று கேட்டார். ''எல்லோரும் மருத்துவம் பயில வேண்டும் என்ற விருப்பம் நல்லதுதான், ஆனுல் அது நிறைவேறுவது என்பது இயலாத ஒன்று. உலகில் எந்த மருத்துவக் கல்லூரியும் மகளிரைச் சேர்த்துக்கொள்ளாது'' என்று பதில் எழுதி அனுப்பிவிட்டார்கள். டாக்டர் ஜோசப் வாரிங்டன் (Dr. Joseph Warrington) என்ற மருத்துவப் பெரியார் எலிசபெத்திடம் வேடிக்கையாக ''இதற்கு ஒரே ஒருவழிதான் இருக்கிறது. உன்னை அடையாளம் தெரியாத பாரீஸ் நகரத்திற்குப் போய் ஆண்உடை அணிந்துகொண்டு கல்லூரியில் சேர்வதுதான்,'' என்று சொன்னுர். அந்த வேளையில் இந்தத் திட்டப்

● உடம்பைப் பிடித்துவிட...

குளிக்கும் தொட்டியோடு பல பொத்தல்கள் உள்ள, அமுக்கப்பட்ட காற்றுச் சாதனத்தோடு பொருத்தப்பட்டுள்ள வளையக் குழாய் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. இது தண்ணீரைப் பீச்சி அடித்து உடம்பைப் பிடித்துவிடுவது போன்ற சுகத்தினை உண்டு பண்ணுகின்றது.

ஏற்கெனவே வெற்றியுடன் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி இருவருக்கும் தெரிந்திருக்க வழியில்லை.

முடியைக் குட்டையாக வெட்டிவிட்டுக் கால்சட்டை அணிந்து, வாயை மூடிக்கொண்டு ஜேம்ஸ் பாரி (James Barry) என்று பெயர் வைத்துக்கொண்டு ஏற்கெனவே எடின்பரோ நகர மருத்துவத்துறையில் 1812-ஆம் ஆண்டில் பட்டம் பெற்று ஒரு பெண் ஆண்வேடத்தில் போர்ப் படை மருத்துவத்துறையில் படிப்படியாக உயர்பதவிகள் பெற்றுக் கொண்டிருந்தார். ஆங்கிலப் படைத்துறையில் மருத்துவ விடுதிகளுக்கெல்லாம் தலைமை மருத்துவராக இருந்த ஜேம்ஸ் பாரி அகில உலகிலும் முதன்முதலில் இத்தகைய பதவியை வகித்த மருத்துவர் என்பது ஒரு பெரிய கதை. வெள்ளை வெளேர் என்ற மருத்துவர்கள் அணியும் இரட்டைக்கால் சட்டையும் கோட்டும் அணிந்து ஆங்கிலேயப் படையை அட்லாண்டிக்பெருங்கடலின் இரு மருங்கிலும் பெரிய போர்களில் எல்லாம், நடத்திச் சென்றிருக்கிறார் ஜேம்ஸ் பாரி. எடின்பரோ மருத்துவத் துறையின் பட்டத்துடன் கையில் போர்வாளும், அறுவை மருத்துவக் கத்தியும் ஏந்திய அவருடைய நிலை ஐரோப்பிய மருத்துவ வரலாற்றில் மறுக்கவோ, மறக்கவோ முடியாத ஓர் இடத்தைப் பெற்றுவிட்டது. 1865-ஆம் ஆண்டில் டாக்டர் பாரி இலண்டனில் இறந்தபோது உடல்பரிசோதனை செய்த மருத்துவர்கள் ஜேம்ஸ் பாரி ஒரு பெண் என்று அறிந்து அதிர்ச்சியடைந்தனர்; படைத்துறையினரும் வாயடைத்துப் போயினர். டாக்டர் ஜேம்ஸ் (மிராண்டா) பாரியின் நீண்ட சிறந்த மருத்துவத்தொண்டு உலகிலேயே வியக்கத்தக்க ஒரு நிகழ்ச்சி. ஆண்போல உடை அணிந்து உலகத்தைத் தன் வாழ்நாள் முழுவதும் வெற்றியுடன் ஏமாற்றிய இந்த அம்மையாரின் கதை வரலாற்றில் தெரிந்த எல்லா நிகழ்ச்சிகளிலும் மிக அதிசயமான ஒன்று என்று மருத்துவ வல்லுநர் டாக்டர் ஹாவ்லாக் எல்லிஸ் (Havelock Ellis) தன் நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

யாராவது கிண்டல் செய்தால் உடனே துப்பாக்கிச் சண்டைக்கு அழைக்கும் முன்கோபம் அவரிடம் இருந்த காரணத்தால் 'முகத்தில் மீசை, தாடியில்லை. மென்மையான உடலுடையார்' என்றிப்படி கேலி செய்யும் பண்புடையோரும் அருகில் போகப் பயந்தனர். பெண்மை சாயல் தோன்றிய காரணத்தால் அவரைப்பற்றிச் சிலர் அவருக்குப்

பின்னால் பேசினாலும், அவருடைய கடமையுணர்ச்சி, சிறந்த சேவை இவைகளைப்பற்றி அவர்களால் புகழாமல் இருக்க முடியவில்லை. தனிமையை விரும்பும் பழக்கங்கள், மென்மையான குரல், பிறருடன் கலந்து மது அருந்தாமை, ஆகிய குணங்களைப்பற்றி அவருடைய எதிரிகள் கூட அவரைக் குறைகூறிக் கேலி செய்தனர். எனினும் அவர் ஒரு சிறந்த மருத்துவர் என்பதை எல்லோருமே ஒத்துக்கொண்டனர். எவ்வகையில் பார்த்தாலும், ஐம்பது ஆண்டுகளுக்குமேல் ஆண் உடையில் மருத்துவராகப் பணியாற்றி வரலாற்றிலேயே ஒரு புதிய செயலை உருவாக்கினார்.

டாக்டர் பாரி இறந்து ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் சோபியா ஜெக்ஸ் பிளேக் (Sophia Jex Black) என்ற இளம் மாணவியின் தலைமையில் சில பெண்கள் எடின்பரோ மருத்துவத்துறையில் வெளிப்படையாகப் படித்துப் பட்டம் பெற உரிமைவேண்டிக் கிளர்ச்சி செய்தனர். ஆனால், அவர்களுக்கு அந்த உரிமையை வழங்க மருத்துவமனைகள் மறுத்து விட்டன. அதற்குள் நல்வினை வசமாக எலிசபெத் பிளாக் வெல் அம்மையாருக்கு மருத்துவக்கலை பயில நியூயார்க் நகரிலிருந்த ஜெனிவா மருத்துவக்கல்லூரி சலுகை அளித்தது. வெளிப்படையாக முதன்முதலில் மருத்துவத் துறையில் பட்டம் பெற்ற எலிசபெத் பிளாக் வெல் இந்தப் பட்டத்திற்கு என்னால் இயன்ற அளவு புகழ் தேடித்தர முயல்வேன் என்று உள்ளத்துணிவுடன் பட்டத்தை வாங்கிக்கொண்டார். 1869-ஆம் ஆண்டில் எலிசபெத் தாய் நாடான இங்கிலாந்திற்குத் திரும்பினார். அதே வேளையில் சோபியா ஜெக்ஸ் பிளேக் நடத்திய போராட்டம் வளர்ச்சியடைந்து பாராளுமன்றம் வரை எட்டி அந்த அம்மையாரின் முயற்சியால் மகளிருக்காக இலண்டன் மருத்துவக்கல்லூரி துவக்கப் பெற்றது. அங்கே மகப்பேற்று மருத்துவத்துறைக்கும் மகளிர் நோய் மருத்துவத்துறைக்கும் தலைவராகவும், பேராசிரியராகவும் டாக்டர் எலிசபெத் பிளாக் வெல் பதவி ஏற்றார். டாக்டர் பிளாக் வெல்லின் திறத்தை அறிந்து அவருடன் பழகி அவரைப்போல் தானும் வர வேண்டும் என்று நினைத்த இன்னொரு பெண் எலிசபெத் காரட் (Elizabeth Garett) அவரும் குறுக்கு வழியாகத்தான் மருத்துவக் கல்லூரியில் நுழைந்தார். முதலில் மருந்துக் கடைக்காரராகப் (Apothecary) பயிற்சி பெற்று மருந்து பகிர்பவர் கழகத்தில் நுழைந்து அந்தச் சான்றிதழுடன் பாரிஸ் பல்கலைக்கழகத்தில் மருத்துவத்துறையில் இடம்பெற்றுப் பட்டம் பெற்று, ஷாடுவெல் (Shadwell) குழந்தைகள் மருத்துவமனையில் வேலைக்காக விண்ணப்பம் செய்தார். ஷாட்வெல் மருத்துவமனையில் ஆட்சிக் குழுவின் உறுப்பினராக திரு. ஜே. ஜி. எஸ். ஆண்டர்சன் (J. G. S. Anderson) விண்ணப்பித்தவர்களில் ஒரு பெண்ணும் இருப்பதை அறிந்து அவருக்கு வேலை கொடுக்கக் கூடாது என்று முன்கூட்டியே முடிவெடுத்துக் கொண்டுதான் நேர்முகத் தேர்வு நடத்தச் சென்றார். நேர்முகத் தேர்வின் போது டாக்டர் எலிசபெத் காரட் அம்மையார் இறுத்

விடைகளும் அவருடைய சரளமான பேச்சும் இனிமையான பழக்கங்களும் அவரைக் கவர்ந்ததால் தன் முடிவை மாற்றிக் கொண்டார். பின்னர் அவரையே மணந்து தன் மனைவியாக்கி மூன்று மக்களுக்கும் தந்தையானார். இன்றைய மாணவியின் மனத்திரையில் பெண் மருத்துவர்களில் முன்னோடிகளாக இருந்தவர்களை எண்ணிப்பார்த்தால் அநேகமாக திருமதி எலிசபெத் காரட் ஆண்டர்சன் அம்மையார்தான் எல்லா வகையிலும் வாழ்க்கையில் வெற்றிகண்டவர் என்று தோன்றக்கூடும். தொழில் துறையில் சிறந்த பயிற்சி, சமுதாயத்தில் மதிப்புடைய வாழ்க்கை, செல்வம், செம்மையான இல்லற வாழ்வு இவையனைத்தும் ஒருங்கே இணையப்பெற்று மதிக்கத்தக்க வாழ்க்கை நடத்தினார். புதிதாக மகளிருக்காகத் தொடங்கப் பெற்ற ஒரு மருத்துவமனையின் தலைமை மருத்துவராகவும், இயக்குநராகவும், பதவி ஏற்று அதைச் செம்மையாகச் செய்தார். அவர் காலத்திற்குப் பிறகு 1917-ஆம் ஆண்டில் அந்த மருத்துவ மனைக்கே ''டாக்டர் எலிசபெத் காரட் மருத்துவமனை'' என்று அவர் பெயரே சூட்டப்பட்டது.

இலண்டன் மருத்துவக்கல்லூரி மகளிருக்காகத் தொடங்கப் பெற்றதனால், பல பெண்கள் மருத்துவப் பட்டம் பெற்றுப் பணியாற்றத் தொடங்கினர். அவர்களில் தொண்டு செய்ய வேண்டும் என்று ஆர்வமுடையவர்களுக்கு இந்தியா தேவையான வாய்ப்பளித்தது. ஏற்கெனவே முகத்திரை முறையும், தீண்டாமையும் இருந்த இந்தச் சமுதாயத்தில் மகளிருக்கு மருத்துவ வசதிகள் மிகக் குறைவாகவே இருந்தன. இந்த நிலையில் தொண்டாற்ற வந்த மகளிர் செய்த பணி இந்திய சமுதாயத்தைக் கவர்ந்தது. இந்திய மகளிரும் மருத்துவம் பயில விழைந்தனர். இந்த நாட்டில் மருத்துவத் தொண்டுக்கு மகளிரின் தேவை மிகுதியாக இருந்த காரணத்தால் மருத்துவத்துறையில் முன்னேற விரும்பிய மகளிருக்கு மேல்நாட்டைப்போல் எதிர்ப்பு இருக்கவில்லை. ஆனால் மகளிருக்காக மருத்துவக் கல்லூரிகள் எதுவும் இயங்கவில்லை. இந்தியாவில் முதல் முதலில் பட்டம் பெற்ற பெண் மருத்துவர் டாக்டர் ஆனந்திபாய் ஜோ 1865-ஆம் ஆண்டில் பூனாவில் பிறந்தவர். அவருடைய வாழ்க்கை, பிறப்பு, இறப்பு, எல்லாமே விதிவசத்தால் நடந்தனபோல் முடிந்தன. இளமையிலேயே வெகு புத்திசாலி என்று பெயர்பெற்ற ஆனந்திபாய், அம்மை நோய் வாய்ப்பட்டு முகம் முழுவதும் தழும்

● முதல் 'எம். எட்' பட்டம் பெற்ற பெண்மணி

கல்வித்துறையில் சிறப்புறப் பணிபுரிய வல்லார் மகளிர் என்பது உலகறிந்த உண்மை. அத்துறைக்கான பயிற்சிப் பட்டங்களில் (M. Ed) எம். எட். என்பதும் ஒன்று. அந்தப் பட்டத்தினைத் தென்னிந்தியாவில் முதலில் பெற்ற பெண்மணி ஆர்க்காட்டு நவாப்புக் கால்வழியைச் சேர்ந்த கியாஸ் உன்னிசா பேகம் என்ற அம்மையாராவார். எஃப். ஆர். ஏ. எஸ். (Fellow of Royal Asiatic Society) என்னும் விருதை முதன்முதலாகப் பெற்ற தென்னிந்தியப் பெண்மணியும் இவராவார்.

புகள் உடையவரானார். இந்த நிலையில் இவருக்குத் தகுந்தமண மகனைத் தேடுவதற்கு மிகுதியான வரதட்சிணை வேண்டும். அதை விட அவரைப் படிக்க வைப்பதே எளிது என்று எண்ணி, அவர் பள்ளிக்கு அனுப்பப்பட்டார். 12 ஆண்டுகள் நிறைந்தவுடன் ஏற்கெனவே மணமாகி முதல் மனைவியை இழந்த திரு. ஜோஷிக்கு மனைவியாக வாழ்க்கைப்பட்டார் ஆனந்திபாய்.

ஜோஷி புதுமையான மனிதனாக இருந்தார். பெண்களும் அறிவை வளர்க்கவேண்டும்என்ற எண்ணமும் அதில் நம்பிக்கையும் கொண்டவராக இருந்தார். தன் மனைவி மேலும்படிப்பதற்காகத் தேவையான தியாகங்களைச் செய்யத் தயாராக இருந்தார். ஆனந்திபாய் ஆங்கிலம் பயின்று பிலடெல்பியா மருத்துவக் கல்லூரியிம் பயிற்சி பெறுவதற்காக அமெரிக்கா சென்றார். பிலடெல்பியா மருத்துவக்கல்லூரித் தலைவர் டாக்டர் ரேச்சல் போட்லி தன் நினைவுத் தொகுப்புகளில் ஆனந்திபாயைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். ''1883-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நீல நிறப்பருத்திச் சேலை அணிந்து ஒரு சிறு பெண்மணி என் வீட்டுக் கதவைத் தட்டினார். அன்று முதல் இந்திய நாட்டுப்பெண்மணிகளிடம் ஒரு தனிப்பற்றுக் கொண்டுவிட்டேன்.'' என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனந்திபாயின் கணவரான கோபால் ராவ் ஜோஷி தன் மனைவியின் பட்டமளிப்பு விழாவை நேரில் பார்ப்பதற்காக அமெரிக்க நாட்டிற்குச் சென்றார். ஆனந்திபாயின் நெருங்கிய உறவினரும் புலவருமான பண்டித ராமாபாயும் அந்த நிகழ்ச்சியில் நேரில் கலந்துகொண்டார். டாக்டர் ஆனந்திபாயும், திரு. ஜோஷியும் இந்தியாவுக்குத் திரும்பியவுடன் கோல்ஹாப்பூர் புது மருத்துவ மனையில் மகளிர் பகுதிக்குத் தலைவராக அமர்த்தப்பட்டார். வாழ்நாளில் நிறைவேற்ற வேண்டும் என்று எண்ணிக் கணவனும் மனைவியும் வகுத்த குறிக்கோள்களை நிறைவேற்ற முடியாமல் இருபத்தொரு வயதிலேயே காச நோயால் ஆனந்திபாய் காலமானார். எனினும் அவர் வாழ்க்கையைத் தோல்வி என்று எண்ண முடியாது. அவர் பிற பெண்களுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்கினார். இந்திய நாட்டிலிருந்து பல பெண்கள் அமெரிக்காவில் பென்சில்வேனியா மாநிலத்தில் பிலடெல்பியா மருத்துவக் கல்லூரிக்கு விண்ணப்பித்தனர். நல்ல வேளையாகத் தொடக்கமுதலே ஆர்வமும் அறிவாற்றலும் உள்ள அதிகாரிகள் மகளிர் மருத்துவத் துறையை வரையறுத்தனர். மகளிருக்கு மட்டும் எனச் சில மருத்துவக்கல்லூரிகள் இந்தியாவிலும் தொடங்கப்பெற்றன. அதுவரை ஆண்களுக்கு மட்டும் என்று இருந்த மருத்துவக்கல்லூரிகளில் சில தங்கள் கதவுகளை மாணவிகளுக்கும் திறந்து விட்டன. பெண்களுக்கு என 1890-ஆம் ஆண்டில் லூதியானா மருத்துவக் கல்லூரியும் 1916-ஆம் ஆண்டில் டில்லியில் லேடி ஹார்டின்ஜ் மருத்துவக்கல்லூரியும் தொடங்கப்பெற்றன. தமிழ்நாட்டிலிருந்தும் பல மகளிர் மருத்துவக் கல்வி பயிலத் தொடங்கினர். டாக்டர் ஹில்டா லாசரஸ் சென்னைப் பல்கலைக்கழகத்தில் மருத்துவப் ப

டம் பெற்றபின்னர் எடின்பரோவில் மேற்பட்ட படிப்பை முடித்து லேடி ஹார்டின்ஜ் மருத்துவக் கல்லூரியில் முதன் இந்தியத் தலைமை ஆசிரியையாகவும், கல்லூரிமுதல்வராகவும் பதவி ஏற்றுர். டாக்டர் முத்துலட்சுமிரெட்டி பட்டம் பெற்றுச் சட்டமன்றத்தில் மேலவை உறுப்பினராகவும், துணைத் தலைவராகவும் பதவியேற்று மகளிர் நலனுக்காகப்பல சட்டங்கள் இயற்றுவதில் முதன்மையான பங்கேற்றுப் புகழ் தேடினர்.

இதற்குள் 1918-ஆம் ஆண்டில் டாக்டர் ஐடாஸ்கட்டர் வேலூரில் கிறிஸ்தியன் மருத்துவக் கல்லூரியை மகளிர் மட்டும் பயிலத் தென்னகத்திற்கு ஒரு கல்லூரியைத் தொடங்கினுர். இந்தியாவில் சமயத் தொண்டு செய்ய வந்த டாக்டர் ஸ்கட்டருக்கு இந்த நாட்டிலேயே பிறந்த இவர், இந்தச் சமுதாயத்தில் பெண் மருத்துவர்களின் தொண்டுக்கு இருந்த தேவையை உணர்ந்து, கார்நெல் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றுத் தமிழ் நாட்டிற்குத் திரும்ப வந்து வேலூர் மருத்துவக் கல்லூரியின் தலைமைப் பதவியை ஏற்று நடத்தினுர்.

இந்தியாவில் ஆண்கள் மருத்துவக்கல்லூரிகளுக்குள் முதல்முதலில் பெண்களைச் சேர்த்துக் கொள்ளத்தொடங்கிய பெருமை சென்னை மருத்துவக்கல்லூரியையும் சென்னைப் பல்கலைக்கழகத்தையும் சாரும். வேலூர் மருத்துவக்கல்லூரி 1947-ஆம் ஆண்டில் ஆண்களையும் சேர்த்துக் கொள்ளத் தொடங்கியது. அதனுல் இன்று தமிழ்நாட்டில் எல்லா மருத்துவக் கல்லூரிகளிலுமே ஆண்களும் பெண்களும் மருத்துவக்கல்வி பயில வசதியிருக்கிறது. இன்று அகில இந்திய மருத்துவப் பதிவேட்டில் (Register) 5,000க்கும் மேற்பட்ட பெண் மருத்துவர்கள் பதிந்துள்ளனர். பலர் மருத்துவத்துறையிலும், பிற துறைகளிலும் புகழ் சேர்த்திருக்கின்றனர். ராஜ்குமாரி அமிர்த்கௌரி, டாக்டர் சுசீலா நய்யார் போன்றவர்கள் நாட்டின் தலைநகரிலும், டாக்டர் மரைக்காயர் டாக்டர் மாதவியம்மா, டாக்டர் திருமதி நெடுஞ்செழியன் போன்றவர்கள் தமிழ் நாட்டிலும் பல பொறுப்புக்களைத் திறமையுடன் ஏற்று, வாய்ப்பும் ஏற்ற வசதிகளும் இருந்தால் மகளிரும் சமுதாயத்தில் பெரும் பங்கு ஏற்று நற்பணியாற்ற முடியும் என்று காட்டி வருகின்றனர். □

● வேற்றுமை ஏன்?

சோவியத் நாட்டில் ஆணுக்கொரு சம்பளம், பெண்ணுக்கொரு சம்பளம் என்ற நிலை இல்லை. ஆணே பெண்ணே, அவர்களுடைய தகுதிகள், வேலைத்திறமை, வேலையின் தன்மை இவைதான் முக்கியமே தவிர, அவர்கள் எந்த இனத்தவர் என்பது சோவியத் நாட்டில் பிரச்சினை அல்ல.

அனைத்துநாட்டு தொழிலாளர் அலுவலகத்தின் கணக்கின்படி பார்த்தால், பிரான்சில் ஆண், பெண் கூலிக்கு இடையேயான வேறுபாடு 17.1 சதவிகிதம்; ஸ்வீடனில் 24 சதவிகிதம்; மேற்கு ஜெர்மனியில் 31.3 சதவிகிதம்; ஜப்பானில் 50 சதவிகிதத்திற்கும் மேல். இந்த வேறுபாடானது குறைவதற்குப் பதிலாக மேலைநாடுகளில் உயர்ந்துகொண்டே போகிறது.

உன்னத உழைப்பில்
முன்னணியில் நிற்பவை
B M F
'பாலசுப்ரமணியா'
பம்புகள் - மோட்டார்கள் - மாஞே பிளாக்குகள்
பாலசுப்ரமணியா பவுண்டரி
பட்டேல் ரோடு
கோயமுத்தூர்-9.
டெலிபோன்: 24313
தந்தி: "RUNWELL"

மகளிரும் சட்டவியலும்

சட்டம் மகளிர்க்கு அளித்துள்ள உரிமைகளையும், கடமைகளையும் ஒரு கட்டுரையில் எழுதுவது என்பது, கடல் நீரை ஒரு இடத்தில் நிரப்ப நினைப்பது போல், இயலாத காரியம். ஆகவே பெண்களின் சொத்துரிமையை விரிவாகக்கூறிக் காப்பு நிலை (guardianship) யைப்பற்றியும், மணவிலக்கு என்பதைப் பற்றியும் குறிப்பாக எழுதி இக்கட்டுரையை முடிக்கலாமென்று இந்து வாரிசுச் சட்டப்படி (The Hindu succession Act XXX of 1956) பெண்களின் சொத்துரிமை பாராட்டப்படும் அளவு விரிவாக்கப்பட்டிருந்தாலும், முழுமையாக்கப்படவில்லை. பகுப்பு (Section) 14 பிரிவு 1. ஒரு இந்துப்பெண் இந்தச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்போ பின்போ ஒரு சொத்தைத் தன்னுரிமையாகப் பெற்றிருந்தால், அந்தச் சொத்திற்கு அவள் முழு உரிமையாளர் ஆவாள். அந்த உரிமை வரையறுக்கப்பட்ட (limited) உரிமையில்லை.

இந்துப் பெண்களின் சொத்துரிமைச்சட்டம் 1973, 3-வது பகுப்பு 3-வது பிரிவுப்படி ஒரு இந்து விதவைக்கு இந்தப் பகுப்பின் கருத்துப்படி உரிமை கிடைக்கப்பெற்றால், அது வரையறுக்கப்பட்ட உரிமை (limited interest) ஆகும். ஆனால், அவள் ஆண் உரிமையாளர்போல் பாகப்பிரிவினை கோரும் உரிமையுடையவளாகிறாள். இந்தப் பகுப்பின்படி ஒரு விதவை தன் வாழ்நாள் வரை தன் கணவனின் சொத்தை முழுமையாக அனுபவிக்கலாம். ஆனால் அதை விற்க உரிமை இல்லை. அந்த விதவை இறந்த பின் கடைசி ஆண் உரிமையாளரின் வாரிசுகள், அந்தச் சொத்தைப் பெறுகிறார்கள். இந்துப் பெண்களின் சொத்துரிமைச் சட்டம் 1937-இல் முழுவதும் ரத்தாகிவிட்டது.

செல்வி கு. கண்ணம்மாள்

இவர் வாணிகம் செய்யும் குடும்பத்தில் பிறந்து தன் முயற்சியால் நன்கு கற்றுக் கோவை மாவட்டத்தில் பி. எல். பட்டம் பெற்ற முதல் பெண்மணி; சட்டத்துறையில் ஆர்வம் மிக்க இவர் சட்டங்கள் தமிழில் வர வேண்டும் என்ற தணியா விருப்புடையவர்; கட்டுரைகள் எழுதுவதில் மிக்க ஈடுபாடு உடையவர்.

ஆகவே ஒரு விதவை, 1937-- இன் சட்டப்படி- இந்துவாரிசுச் சட்டம் 1956 -இல் அமுலுக்கு வருவதற்கு முன்னால், தன் கணவனின் சொத்தை உரிமையாகப் பெற்றிருந்தால், அந்தச் சொத்திற்கு முழு உரிமையாளர் (Absolute Owner) ஆகிறாள். ஆகவே, அந்தச் சொத்தை விற்கக் கூடிய உரிமையைப் பெறுகிறாள். உண்மையிலேயே இது ஒரு சிறப்பான உரிமையாகும். இப்பொழுதுள்ள வாரிசுச்சட்டப்படியும் அதற்கு முன்பிருந்த சட்டப்படியும் ஒரு பெண் திருமணத்திற்கு முன்னாலோ பின்னாலோ, பரிசாகப் பெற்ற பொருள்கள், பெண் வழிச்சீராகப் பெற்ற பொருள்கள், தன் சொந்த முயற்சியால் விலைக்கு வாங்கிய பொருள்கள், ஜீவனாம்சத்திற்காகக் கிடைத்தவை முதலியவைகளுக்கு முழு உரிமை பெறுகிறாள். ஆனால் பரிசாகவோ, உயில் மூலமோ, சிவில் கோர்ட்டின் கட்டளைப் (order) படியோ வரையறுக்கப்பட்ட உரிமை ஒரு பெண்ணிற்கு ஒரு சொத்தின்பேரில் கிடைத்தால், அப்பொருளின்மேல் அப் பெண்ணிற்கு முழுஉரிமை கிடையாது. ஒரு விதவை, மறுமணம் செய்து கொள்ளல், மதம் மாறுதல், தூய்மையற்ற வாழ்வு வாழ்தல் ஆகியவைகளால்தன் இழந்த கணவனின் சொத்திற்கு முன்பு வாரிசாக முடியாது. இப்பொழுது மேற்கூறிய காரணங்களால் அந்த உரிமையை இழக்கவில்லை.

ஒருவர் தன் சொந்த உழைப்பால், பெற்ற சொத்துக்களை உயில் எழுதாமல் இறந்துவிட்டாரானால் உயில் 8ஆம் பகுப்பு பிரிவு (ஆ) வின்படி, அவருடைய மகன், மகள், மனைவி, தாயார் உடனிகழ்ச்சியாக (ஒரே சமயத்தில்) சமமாக, அவருடைய சொத்துக்களுக்கு வாரிசாளர்கள் ஆகிறார்கள். இவர்கள் ஒருவரும் இல்லையென்றால் பிரிவு ஆ, இ,ஈ, இன்படி இறந்தவருடைய மற்ற உறவினர்கள் வாரிசாளர்கள் ஆகிறார்கள். இந்து வாரிசுச்சட்டம் 30 (1956) வருதற்கு முன்பு மிதேக் ஷரா சட்டப்படி, Sapindas, Samanodakas and Baudus வாரிசாளர் ஆகிறார்கள். இதன்படி ஒருவர் இறந்துவிட்டால், சபின்தாஸ் என்ற உறவினர்களில் மகன், மகனுடைய மகன், மகனுடைய பேரன், ஆகியோர் வாரிசாளர்கள் ஆகிறார்கள். இவர்களில் ஒருவரும் இல்லையென்றால், மனைவி, அதன்பின் மகள் மகளின்மகன், தாயார் தகப்பனார் ஆகியோர் வாரிசாளர் ஆகிறார்கள். இவர்கள் ஒரே சமயத்தில் வாரிசாளர்கள் ஆவதில்லை. ஒருவாரிசு இல்லையென்றால்தான், மற்றவர்கள் வாரிசாக ஆகிறார். மேலே கூறியவர்கள், ஒருவரும் இல்லையென்றால்தான் மற்ற உறவினர்கள் வாரிசாக ஆகிறார்கள். இங்குத் தாயார், மனைவி, மகள் மூவருக்கும் வரையறைக்குட்பட்ட உரிமைதான் ('limited estate') கிடைக்கிறது. முழு உரிமை கிடையாது. ஆகவே இந்து வாரிசுச்சட்டம் XXX of 1956 -இன் படி தாயார், மகள், மனைவி மூவருக்கும், மகனைப் போல் சம மதிப்புப் கிடைக்கிறது. இது பெண்களுக்குக் கிடைத்திருக்கும் நல்ல உரிமையும் தகுதியும் ஆகும். முதன்மையான வாரிசாளர்கள் (Primary Heirs) இப்பொழுது திருமணமான பெண் மக்களுக்குச் சம உரிமை உண்

நமது நாட்டு ஸ்திரீகளிலே பலர் சக்திக் கண்களின் அவதாரமாக ஜனித்திருக்கிறார்கள். ஒளி, சக்தி, வலிமை, வீர்யம், கவிதை, அழகு, மகிழ்ச்சி நலங்களெல்லாம் உன்னைச் சார்கின்றன. தமிழா பயப்படாதே ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்.

ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே. 'ஜாதியிரண்டொழிய வேறில்லை' என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள். பெண்ணை அடிமை என்று கருதாதே. முற்காலத்துத் தமிழர் மனைவியை 'வாழ்க்கைத் துணை' என்றார். ஆத்மாவும் சக்தியும் ஒன்று. ஆணும் பெண்ணும் சமம்.

வேதங்களை நம்ப அவற்றின் பொருளைத் தெரிந்துகொண்டு பின் நம்பு. புராணங்களைக் கேட்டுப் பயனடைந்துகொள். புராணங்களை வேதங்களாக நினைத்து மடமைகள் பேசி விலங்குகள் போல் நடந்து கொள்ளாதே.

— பாரதியார் கட்டுரைகளிலிருந்து...

ஆனால் கூட்டுக்குடும்பச் சொத்தில் (Joint Family Property) பெண்களுக்குச் சம உரிமை கொடுக்கப்படவில்லை. இது வருத்தத்திற்குரிய செய்தி. பிறப்பால் உரிமை (Right by birth) என்பது ஆண்களுக்கு மட்டுந்தான் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த உரிமை பெண்களுக்கு இல்லை. ஒரு குடியரசு நாட்டில் பிறந்த ஒருவர் பெண் என்ற காரணத்தால் 'பிறப்பால் உரிமை' இல்லையென்றால் இருபாலருக்கும் சமம் என்பது பொருளற்றதாகிறது. மதம், குலம், சாதி, இனம், பிறந்த இடம் இவைகளால் வேறுபாடில்லையென்று நம் அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமை கூறுகிறது. இதற்கெல்லாம் முதற்காரணம் பிறப்பு. அந்தப் பிறப்பிற்கு முதற்தகுதி கொடுக்கப்பட வேண்டும். மற்றப்படி தொழில், சம்பளம் போன்றவைகள் பிறப்பின் தகுதிக்குப் பின்னால்தான். நான் அரசியலாளரைக் குற்றம் கூறவில்லை. எவ்வளவோ எதிர்ப்புகளைச் சமாளித்து மறைந்த நம் பாரதப் பிரதமர் திரு நேரு அவர்கள் முயற்சியால் பரவலாகக்கிடந்த இந்து சட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. ஆகவே சட்டத்தை மாற்றியமைத்துப் பெண்களுக்கும், 'பிறப்பாலுரிமை' கொடுக்க வேண்டுமென்று அரசியலாரைக் கேட்டுக் கொள்வது பெண்களின் உரிமையும் கடமையும் ஆகும்.

ஒரு பாட்டனார் 60 ஏக்கர் நிலத்திற்கு உரிமையாளர். அவருக்கு ஒரு மகனும், இரண்டு பெயரன்களும், ஒரு பெயர்த்தியும், மகனின் மனைவியும் இருப்பதாக வைத்துக்கொள்வோம். பாட்டனார் இறந்து விடுகிறார். பின்னால் மகனும் எந்தஒரு உறுதிப் பத்திரமும் எழுதாமல் இறந்து விடுகிறார். பாட்டனார் இறந்தபின் மகனும் 2 பெயரன்களும் 1:1:1 என்ற விகிதத்தில் 20 ஏக்கர் பெறுகிறார்கள். மகனுடைய 20 ஏக்கரில் மகளும், மனைவியும் 4-ல்ஒரு பங்கு ஆளுக்கு 5 ஏக்கர் பெறுகிறார்கள். மகன்களும் தந்தை பங்கில் ஆளுக்கு 5 ஏக்கர் பெறுகிறார்கள். ஆகவே மகன்களுக்கு 50 ஏக்கரும் மனைவிக்கும் மகளுக்கும் 10 ஏக்கரும் கிடைக்கிறது. சம உரிமை கொடுத்திருந்தால், மனைவி, மகள், மகன்கள், ஒவ்வொருவருக்கும் 15 ஏக்கர் கிடைக்கும். கிறித்துவர் முகம்மதியர், பார்சி, யூதர், ஆகியவர்களுக்குத் தனித்தனிச் சட்டங்கள் இருக்கின்றன. எல்லோருக்கும் ஒரே சீரான சட்டம் இருந்தால் நல்லது.

The Hindu Minority and Guardianship Act XXXII of 1956) - Section 6 - பிரிவு (a) யைப் பற்றி சிறிது எழுத விரும்புகிறேன். 18 வயது முடிவு பெறுதவர்கள் மைனர்கள் ஆவார்கள். அவர்களுக்கும், அவர்களுடைய சொத்திற்கும் (கூட்டுக்குடும்பத்திலுள்ள பிரிக்கப்படாத உரிமைப் பங்கைத் தவிர) (natural guardian) பிறவிக்குரிய காப்பாளர் யார்? மைனர் ஆணுகவோ திருமணமாகாத பெண்ணுகவோ இருந்தால் தகப்பனுர் காப்பாளர் ஆவார். தகப்பனுர் இல்லையென்றுல் தாயார். ஆனுல் 5 வயதுமுடியாத மைனரின் வளர்ப்பு, வழக்கமாகத் தாயாருடையதாகும். தகப்பனுரும் தாயாரும் ஒற்றுமையாக வாழ்ந்தால், வளர்ப்பு யாரைச் சேர்ந்தது என்ற கேள்விக்கு இடம் இல்லை. தாயும் தகப்பனும் சட்டப்படி பிரிந்திருந்தாலும், திருமணம் செல்லாதென்று தீர்ப்பாயிருந்தாலும், மணவிலக்கு ஆகியிருந்தாலும், 5 வயதுக்குப் பின் தகப்பனுர் காப்பாளர் என்பது சரியானதாக எனக்குப் படவில்லை. 5 வயதுக்குப்பின்தான் மிகக்கண்டிப்பான முறையிலும், கண்காணிப்பிலும் குழந்தை வளர்க்கப் படவேண்டும். அதுவும் பெண் குழந்தையென்றுல் 13 வயதுக்குப் பின் (அதாவது பெரிய பெண்ணுனதற்குப்பின்) மிகமிகக் கவனமாக வளர்க்கப்பட வேண்டும். ஆகவே தாயார், தகப்பனுர், பிரிந்துவாழ நேர்ந்தால், மைனர் மேஜர் ஆகும் வரை தாயார் காப்பாளராக இருக்க சட்டத்தில் சிறிது மாற்றம் தேவையெனக் கருதுகிறேன். அந்தத்தாயார் கெட்டவழியில் நடந்தாலோ மறுமணம் செய்து கொண்டாலோ, குழந்தையைப் பேணுதல் பாதிக்கப்படுமாஞல், பகுப்பு 13-ன் படி நீதிமன்றத்தினரே காப்பாளரை நீக்கி வேறு காப்பாளரை அமர்த்த அதிகாரம் இருக்கிறது. இதுபற்றி குஸாபரீடாவுக்கும் பாசி நாப்மாலிக்கு என்பவருக்கும் இடையே நடந்த வழக்கில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. ஆகவே, மைனர், மேஜர் ஆகும்வரை தாயார், காப்பாளர்என்பதால் ஏதொன்றும் தவறில்லை. இந்தச் சட்டத்தின் மற்றக் கருத்துக்களால், பெண்கள் என்பதால் பெரிய பாதிப்பு ஒன்றுமில்லை. இந்து திருமணச்சட்டம் 25(1955) (The Hindu Marriage Act (XXV of 1955) - இன்படி 'ஒருவனுக்கொருத்தி' என்ற கட்டாயம் அமுலுக்கு வந்தது. ஒருவன் பல பெண்களை மணம் செய்யக் கூடாது. அது சட்டப்படி குற்றமாகும். இந்து மணமுறைச் சட்டப்படி ஒரு கணவனும் மனைவியும் சட்டப்படி பிரிந்துவாழ வேண்டுமென்றும், மணவிலக்குக் கேட்க

புதிய குடை

கதிரவ வெப்பம் தலையைத் தாக்கா வண்ணம் நிழலைமட்டுமல்லாது குளிர்ச்சியையும் கொடுக்கவல்ல, மழையின் நீரினின்று அல்லாது குளிர்க்கு வெதுவெதுப்பையும் தரவல்ல குடையொன்றினை இங்கிலாந்து நாட்டினர் கண்டுபிடித்துள்ளனர். குடையோடு பொருத்தப்பட்டுள்ள பேட்டரியால் வெளிவரும் சாதனம் இதனைத் தருகின்றது.

with best compliments of:

NMC NAME WITH A FAME STANDS FOR

- NEATNESS IN APPEARANCE
- MECHANICAL SOUNDNESS
- CARE IN MANUFACTURE

Grams: 'JAIVARDAN' Phone: 23980

NAVAMANI AND COMPANY

4/457, PAPPANAICKENPALAYAM, COIMBATORE-641 037

Manufacturers of:

Motors, Pumps & Monoblocks, Spare Parts of Textile Machinery, etc.,

Insist on 'NMC' Motors & Pumps to increase your yield

வேண்டுமென்றாலும், பகுப்புக்கள் 10, 13-ன்படி விண்ணப்பம் செய்ய வேண்டும். ஆணுக்கும் பெண்ணுக்கும் அந்த உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. குறைந்த அளவு 2 ஆண்டுகள் கணவனோ, மனைவியோ ஒருவரையொருவர் கைவிட்டுவிடுதல், உயிருக்கே கேடு வருமோ என்றெண்ணும் அளவு கொடுமைப்படுத்தல், தொழு நோய், மேகநோய், பைத்தியம், வேறுஒருவருடன் தவறானஉறவு உடலின்பத்திற்கு ஊறுபட்டநிலை போன்றவைகளால், சட்டப்படி பிரிவினை கேட்கலாம். வேறு சில காரணங்களாலும் மண விலக்குக் கேட்கலாம். நமது இந்துச்சட்டம் இந்த வகையில் நீண்டநாட்கள் இழுக்கக்கூடியதாகவும், மெய்ப்பிக்க வேண்டியதாகவும் இருக்கிறது. மேற்கத்திய நாடுகளில் உள்ளதுபோல், கணவனுக்கும், மனைவிக்கும் மனம்ஒத்து வரவில்லையென்றால், நீதிமன்றத்தில் விண்ணப்பம் கொடுத்தோ அல்லது அதற்காக அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட அலுவலகங்கட்கு இருவரும் சென்றோ மணவிலக்கு எளிதாகப்பெறவோ அரசு வழி செய்ய வேண்டும். முகம்மதியரின் சட்டப்படி ஒரு கணவன் 'தவக் தவக் தவக்' என்று மும்முறை வாயால் கூறினால் ஒரு மனைவியை மணவிலக்குச் செய்ய முடியும். ஆனால் முகம்மதியப் பெண்டிற்கு மணவிலக்குக் கேட்கும் உரிமையில்லை. முகம்மதியபெண்களுக்கும் அந்த உரிமை கொடுக்கப்பட வேண்டும் கிறிஸ்தவ, பார்சி சட்டங்களில் பெண்களுக்கு மணவிலக்குக் கேட்கும் உரிமை உண்டு. அந்தச் சட்டங்களும், எளிமையாக்கப்பட வேண்டும். □

பொங்கி மகிழ்ந்திட.....

ஆதரவற்ற கைம்பெண்களுக்கு மறுவாழ்வு!

அனாதைச் சிறுவர்களுக்குக் கருணை இல்லங்கள்!

இறந்துவிட்ட அரசு ஊழியர்கள் குடும்பம்
நலிந்துவிடாதிருக்கக் குடும்ப நன்மைத் திட்டம்!

எல்லா மக்களும் பயன்பெறத் தக்க
சமூகப் பாதுகாப்புத் திட்டம்!

பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வுத் திட்டம்!

குடிசைகளுக்குப் பதில் மாடி வீடுகள்!

மனிதனை மனிதன் இழுக்கும் கொடுமை
நீங்கிட கைரிக்ஷாக்களுக்குப் பதில்
சைக்கிள் ரிக்ஷாக்கள்

இவை தமிழ்நாடு அரசின் சாதனைகளில் சில......!
இதேபோல்

நீங்களும் கடினமாக உழைக்கிறீர்கள்
நிறைவான வருவாய் பெறுகிறீர்கள்

ஆயினும்

நாடும் வீடும் பொருளாதாரத்
தொல்லைக்கு ஆட்படுகின்றன!

காரணம் என்ன?

நாளுக்கு நாள் பெருகிடும்
மக்கள் தொகையே இதற்குக் காரணம்

எனவே

செழித்திடும் நன்மைகளை
நாட்டில் நிலைத்திடச் செய்ய
நாடும் வீடும் பொங்கி மகிழ்ந்திட
அமையுங்கள் அளவான குடும்பம்

குடும்பநலத்துறை
தமிழ்நாடு அரசு

மகளிர் ஆண்டு

தமிழாக்கம்: 'மதி அரசு'

ஐக்கிய நாடுகள் பேரவையில் 27-ஆவது கூட்டத் தொடரில் சிறப்புத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அதன்படி 1975-ஆம் ஆண்டை அனைத்து நாட்டு மகளிர் ஆண்டாக அறிவித்தனர். மனித சமுதாயத்தில் சரிபாதியாக உள்ள பெண்களின் நலன்களைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்றும், அவற்றை உடனடியாக செயல்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. மேற்படி செயல்திட்டங்களை மூவகைப் படுத்தலாம். முதலாவது, சமுதாய அமைப்பில் பெண்களின் சமத்துவ உரிமையை நிலைநாட்டுதல். இரண்டாவதாக, பெண்களின் ஆற்றல்கள் நாட்டின் வளர்ச்சிக்காகவும், பொருதார, சமூக மற்றும் கலாசார துறைகளின் வளர்ச்சிக்காகவும் பயன்படுமாறு போதிய வாய்ப்புக்களைத் தோற்றுவித்தல். மூன்றுவதாக பன்னாட்டு அளவில் உலக அமைதிக்கும் ஒற்றுமைக்கும் வழிவகுக்கும் வகையில் நாடுகளிடையே நட்புறவைத் தோற்றுவிக்கும் பணிகளில் ஈடுபடுதல்.

ஐ.நா. சபையால் நியமிக்கப்பட்ட ஓர் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு இணங்க பொருளாதார, சமூக கவுன்சிலின் ஆதரவில் மெக்சிகோ நகரில் இவ்வாண்டு ஜூன் திங்கள் 18-ஆம் நாள் தொடங்கி, ஜூலை திங்கள் 2-ஆம் நாள் வரை உலக மகளிர் மாநாடு சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற்றது. இதன் விளைவாக அனைத்து நாடுகளிலும் இவ்வியக்கம் மேலும் தீவிரமடைந்து வருதல் குறிப்பிடத்தக்கது.

மெக்சிகோ மாநாட்டிற்கு 143 நாடுகளிலிருந்து பேராளர்கள் வந்தனர். இவர்களில் ஆண்களும் பெண்களும் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருமதி பார்வதி கிருட்டினன்

இவர் பெரியார் டாக்டர் ப. சுப்பராயன், மத்திய சட்ட மன்றத்தின் முதல் பெண் உறுப்பினரான திருமதி ராதாபாய் சுப்பராயன் ஆகியோரின் மகளாவார்; அமரர் மோகன் குமாரமங்கலம் அவர்களின் உடன்பிறந்தவர்; எளிமையை ஏற்று மக்கள் நலனுக்காக உழைத்துவரும் நல்லார்; பாராளுமன்ற உறுப்பினர்; ஆக்ஸ்போர்டு கல்லூரியில் வரலாற்றுத் துறையில் எம். ஏ. பட்டம் பெற்றவர்; எழுத்தாற்றலும், பேச்சாற்றலும் மிக்க திறனாளர்.

பெண்களின் உரிமைகளைப் போற்றும் ஓர் உலக மாநாட்டில் ஆண்களும் பேராளர்களாகப் பங்கு கொண்டது நம்பிக்கை ஊட்டுவதாக அமைந்தது. இதனால் மகளிர் உரிமைகள் சமுதாயத்தின் ஒருபாலரது பிரச்சினையாக மட்டும் இல்லை என்பதும் இது மனித இனத்தின் முழுமையான பிரச்சினை என்பதும் இங்கே பெண் உரிமை ஆண் உரிமை, என்ற போட்டா போட்டிக்கு இடமில்லை என்பதும் இவ்விருபாலாரும் சரிநிகர் சமானமானவர்கள் என்பதும் எனவே ஒருவரது வளர்ச்சியில்மற்றவர் அக்கரை கொண்டுள்ளனர் என்பதை மெய்ப்பிக்கும் வகையிலும் இம்மாநாடு செயல்பட்டது.

மெக்சிகோ மாநாட்டில் உரையாற்றிய பேராளர்கள் தங்கள் தங்கள் நாட்டின் நிலையை எடுத்துரைத்தார்கள். பெண்களின் நிலை அவர்களின் உரிமை, அவர்கள், ஈடுபட்ட ஈடுபடக்கூடிய வாழ்க்கை முதலியன நாட்டுக்கு நாடு பெரிதும் வேறுபட்டுள்ளன. இவ்வேறுபாடுகள் பொருளாதார அடிப்படையில் மட்டும் அமையவில்லை. காட்டாக வளர்ச்சியடைந்த அமெரிக்கா (USA), இங்கிலாந்து (UK) ஜெர்மனி, (FRG) முதலிய நாடுகளில் சட்டரீதியான தடைகள் இடையூறுகள் ஏதுமில்லை என்றாலும், பெண்களுக்கான வாழ்க்கைமுறை ஆண்களுக்கான வாழ்க்கை முறையிலிருந்து பெரிதும் மாறுபட்டுள்ளதைக் காணலாம். பெண்களின் வாழ்க்கை குடும்பத்தை மையமாகக்கொண்ட ஒரு வாழ்க்கையாக மட்டும் கருதப்படுகிறதே அல்லாமல் அதனினும் விரிவடைந்துள்ள ஆக்க பூர்வமான பணிகளில் — குறிப்பாக நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பணிகளில் — பெண்களின் ஈடுபாடு குறிப்பிடத்தக்க அளவுக்கு இல்லையென்றே கூறலாம். பெண்களுக்குப் பல நாடுகளில் சம அளவு கூலி விகிதங்கள் அளிக்கப்படவில்லை என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது. இதனால் பெண்கள் தாங்கள் விரும்பிய வகையில் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள இயலாதவர்களாக இருக்கிறார்கள்.

மகளிர் தங்கள் நலனைப் பாதுகாத்துக்கொள்வதற்கு அரசியல் அமைப்பிலும் சட்ட ரீதியாகவும் உள்ள தடைகளைக் களைதல் மட்டும் போதுமானதாக இல்லையென்று மாநாட்டில் திட்டவட்டமாக எடுத்துரைக்கப்பட்டது. சம உரிமைக்கும், சமத்துவ நிலைக்கும் மனிதனின் மனப்பான்மையில் அடிப்படையான மாற்றங்கள் ஏற்பட வேண்டும். பல நூற்றாண்டுகளாக நிலவிய மரபு காரணமாகவும் பழக்க வழக்கங்கள் காரணமாகவும் ஏற்பட்டுள்ள சமூக நோக்கம், உடனடியாக மாறிவிடும் என்று நம்புவதற்கில்லை. இத்தகைய மனமாற்றம் முழு அளவில் ஏற்படும் வரை பெண்களுக்குச் சமஉரிமை வழங்கப்படும் என்று கூற இயலாது. இவ்வுண்மையைப் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இம்மாநாட்டிற்கு அனுப்பிய செய்தியில் தெளிவுபடுத்தியுள்ளார்கள். 'உரிமைகளைப்பாதுகாத்துக்கொள்வதற்காக மகளிர் மட்டும் அதிக அளவு கவனம் செலுத்துவதாகக் கூற இயலாது. உலகில் எங்கெல்லாம் உரிமைகள் மறுக்கப்படுகின்

● **இராணுவத்தில் பெண்கள்**

இராணுவத்தில் பெண்களையும் சேர்ப்பதென முதல் முறையாக மேற்கு ஜெர்மனி நாடாளுமன்றம் முடிவு செய்துள்ளது. தொடக்கத்தில் இராணுவத்தில் பெண் டாக்டர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர். பெண் டாக்டர்களுக்கு ''கேப்டன்'' தகுதி நிலையிலிருந்து தொடங்கப்படும். அவர்களுக்கு ''மேஜர்'' களுக்கான ஊதியம் வழங்கப்படும்.

றனவோ அதற்காக போராட்டங்கள் எழுகின்றனவோ அங்குள்ள மக்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாப்பதிலும், அதை நிலை நாட்டுவதிலும் அதிக அளவு ஈடுபட்டுஇருப்பதைக் காணலாம். எனவே பெண்கள் தங்கள் உரிமைக்காக போராடுவதில் வியப்பில்லை. அதே சமயம் ஆண்கள் அனைவரும் சுயேச்சையாக விடுதலை பெற்றவர்களாக இருக்கின்றனர் என்று கூறமுடியவில்லை. அவர்கள் தங்களுடைய எண்ணங்களின் அடிப்படையில் மனத்தளவில் தங்களைத் தாங்களே சிறைப்படுத்திக்கொள்கின்றனர். ' இவர்களில் பழைமைவாதிகள், மாற்றங்களையும் புதுமையையும் எதிர்க்கும் பிற்போக்குவாதிகள். இவர்கள் தங்களுக்காகவே ஏற்படுத்திக்கொண்ட எண்ணச் சிறைகளில் சிக்குண்டு இருப்பதைக் காணலாம். இவர்களில் ஒருசாரார் பெண்களைத் தாழ்த்துவதிலும், அடக்குவதிலும் தங்கள் சிந்தனையையும், செயலையும் விரயம் செய்கின்றனர். இதனால் உண்மையான விடுதலை இன்பத்தை நுகர இயலாதவர்களாக அவதிப்படுகின்றனர் என்று கூறியுள்ளார்கள்.

இதுபோன்று நடைமுறையில் காணப்படும் உண்மை நிலையை விவாதித்த பேராளர்கள் மனம் சோர்வடையாமல் வருங்கால உலகைப்பற்றிய தங்கள் ஆக்க பூர்வமான கருத்துக்களை வெளியிட்டார்கள். எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பணி மகத்தானது. இதில் ஆண்களும் பெண்களும் சம அளவிற்குப்பொறுப்பு ஏற்கவேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. சம உரிமைகள் மறுக்கப்படுகின்ற நாடுகளில் எல்லாம் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புக்கள் தேய்ந்து செல்கின்றன என்பது உணர்த்தப்பட்டது.

உலக நாடுகளின் கண்ணோட்டத்தில் பாரதத்தை உற்று நோக்குவோமானால் இங்குப் பெண்களுக்குப் போதிய அளவு வாய்ப்புக்களும் உரிமைகளும் கொடுக்கப்பட்டு இருப்பதை உணரலாம். விடுதலை இயக்கத்தின் ஒருகூறாக பெண் உரிமை கருதப்பட்டுப் போற்றப்பட்டது. காந்தியடிகள், ஜவாஹர்லால் நேரு போன்ற தேசியத் தலைவர்கள் பெண்களுக்குச் சமத்துவ நிலை அளிப்பதில் நாட்டம் கொண்டு இருந்தார்கள். விடுதலைக்குப் பின்னரும் இவர்கள் நாட்டின் நிர்மாணப்பணிகளில் தீவிரமாகப் பங்குகொள்ள முடிந்தது. இவ்வகையில் கவிக்குயில் சரோஜினி நாயுடு அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவ்வாறு நாட்டின் பல்வேறு துறைகளிலும் பெண்கள் ஆக்கப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர். என்றாலும், பெண்களின்முன்னேற்றம் போதுமானதாக இல்லை. பாரதத்தின் மக்கள் தொகையில் மகளிர் தொகை கிட்டத்தட்ட பாதியாக இருந்த போதிலும் மிகச்சிலரே முன்னிலை

யில் இருக்கின்றனர். நமது நாட்டின் ஏழ்மை நிலையும், பிறரைச் சார்ந்துள்ள (பெண்களின்) பொருளாதார நிலையும், அறியாமையும் எழுத்தறிவு இல்லாமையும், இளமையிலேயே குடும்பச் சுமையை ஏற்றுள்ள நிலையும் வீட்டு வேலைகளும் பெண்களின் ஆற்றலை வெளிப்படுத்த இயலாமல் செய்துவிடுகின்றன. இதனால் இவர்கள் அரசியலிலும் இதர பொது வாழ்க்கையிலும், அதிக அளவுக்கு ஈடுபட இயலவில்லை.

ஆரம்பத்திலிருந்து பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்ட போதிலும் பதிவாகிய வாக்குகளில் ஆண்கள் அதிகமாகவே இருக்கின்றனர். பெண் வாக்காளர்களைவிடக் கூடுதலாக ஆண் வாக்காளர்கள் தேர்தல்களில் பங்கு கொள்ளுகின்றனர் என்பதை 1962, 1971 இரு நாடாளுமன்றத் தேர்தல்களும் மெய்ப்பிக்கின்றன. இவ்விரு தேர்தல்களிலும் முறையே 15 விழுக்காடுகள் 11 விழுக்காடுகள் ஆண் வாக்காளர்கள் பெண்களைவிட கூடுதலாக வாக்களித்துள்ளனர். இத் தேர்தல்களில் தேர்ந்து எடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் முறையே 33 பேர், 21பேர் பெண்களாக இருந்தனர். இவை பெண்கள் அரசியல் துறையில் அதிகமாக ஆர்வமாக ஈடுபடவில்லை என்ற உண்மையை எடுத்துரைக்கின்றன. அரசியல் கட்சிகள் பெண்களுக்கு அரசியல் அறிவும், ஈடுபாடும் ஏற்படும் அளவிற்கு முயற்சி செய்யவில்லை எனலாம். பெண்களின் அரசியல் ஈடுபாடு அவர்களின் குடும்ப அமைப்பையும், உலக அறிவையும், எழுத்தறிவையும், அரசியல் எழுச்சியையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன.

பாரதத்தில் காணப்படும் நிலையைப்போன்றுதான் பெரும்பாலான உலக நாடுகளின் நிலைமையும் இருக்கின்றன. இருந்த போதிலும் சோசலிஸ நாடுகளில் பெண்கள் முன்னேற்றம் குறிப்பிடத்தக்க அளவாக உள்ளது. காட்டாக சோவியத் ஒன்றியத்தில் சராசரி மூன்று பொறியாளர்களில் ஒருவர் பெண்பொறியாளராக இருக்கின்றனர். அங்குள்ள மொத்த மருத்துவர்களில் 71 விழுக்காட்டினர் பெண் மருத்துவர்களாக உள்ளனர். இதைப் போன்ற ஒவ்வொரு துறையிலும் பெண்கள் பெருமளவுக்கு முன்னேறியிருப்பதைக் காணலாம்.

● உங்கள் உருவப் அளவு போட்டோ

பெரிய படங்கள் தேவைப்பட்டால் சிறிய படங்களாக எடுத்துப் பெரிதுபடுத்த வேண்டும். இந்தக் குறையை நீக்க ஜெர்மனியில் ஒரு கேமிராவைக் கண்டுபிடித்துள்ளனர். படத்தில் காட்டப்பட்டுள்ள 21' × 21' × 9' அளவுள்ள கேமிராப் பெட்டிக்குள் சென்று கண்ணாடிக்கு முன் நின்று பொத்தானை அழுத்தினால் போதும். 15 நிமிட நேரத்தில் 1.8' × 6' அளவுள்ள படம் வெளியே வந்துசேரும். இது எப்படி என்பதனை இன்னும் இரகசியமாகவே வைத்துள்ளனர்.

WITH BEST COMPLIMENTS FROM

G. V. D. L. & Co.

Proprietors of :

Sri Ranga Vilas Ginning Factory
Sri Ranga Vilas Rice and Oil Mills

MAIN ROAD,
PERUNDURAI 638052
(Via.) ERODE.

Telephone : Ginning Factory: 33
Oil Mills: 31
Telegrams : RANGAVILAS

பாரதக்குழுவின் தலைவராகச் சென்ற மராத்திய மாநிலக்கல்வி அமைச்சர் திருமதி பிரபாராவ் அவர்களின் உரை, மெக்சிகோ மாநாட்டின் ஒருமித்த கருத்தை பிரதிபலிப்பதாகக் கூறலாம். இன்றைய உலகம் முழுக்கமுழுக்க ஆண்களின் உலகமாகவே உள்ளது. ஆண்களின் ஆதிக்கம் தலைதூக்கி ஆடுகிறது. பெண்கள் எத்தகைய வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் ஆண்களே நிர்ணயிக்கிறார்கள். எனவே பெண்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கும், சமத்துவம் ஏற்படவும், ஆண்களின் மனப்பான்மையில் மாற்றம் ஏற்பட வேண்டும். ஆனால் இதைவிட முக்கியமாக, பெண்களிடையே காணப்படும் பத்தாம்பசலித் தன்மையும் பிற்போக்கு மனப்பான்மையும் அதிக அளவு கேடு விளைவிப்பதாகும். எனவே பெண்களின் எழுச்சிக்கு-பெண்கல்விக்கு முதன்மை அளிப்பது அவசியம். அறியாமையை அகற்றவும், அவர்களிடையே விழிப்பைத் தோற்றுவிக்கவும் இது வழிவகுக்கும்.

உலக அளவில் அடக்குமுறையும், ஆதிக்க வெறியும் தலைதூக்கிய இடங்களில் பெண் உரிமை மறுக்கப்படுகின்றது. பெண் உரிமையை நிலைநாட்டுவதற்கு முன்னர் ஒவ்வொரு நாட்டிலும் பரவலாகக் காணப்படும் ஆதிக்கத்தின் சாயல், சுரண்டல் சக்திகள் இன ஆதிக்கம், இன ஒதுக்கல் இன பேதம் முதலியவற்றை அடியோடு வீழ்த்த வேண்டும். போற்றுவோம் மகளிர் உரிமை! காண்போம் புதிய உலகம் □

உலகப் பெண்கள் ஆண்டு

திருமதி சரோஜினி வரதப்பன்

உலகப் பெண்கள் ஆண்டு வெறும் மேடைப்பேச்சுடன் நின்றுவிடாது, இன்று உலகம் முழுவதுமே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மத்திய சமூக நல வாரியத்தின் சார்பில் மாநில அளவில் பெண்கள் கருத்தரங்குகள் நடத்திப் பல தரப்பட்ட பெண்களை - நகர கிராமப் புறப் பெண்கள் பல்வேறு தொழிலில் ஈடுபட்டவர்கள் - குடும்பத் தலைவிகள்-ஒன்று கூட்டியதில் மனம் விட்டு உரையாட நல்லதொரு வாய்ப்புக் கிட்டியது. இன்றைய நிலையில் பெண்களின் சமூகப்பணி முக்கியத்துவம் பெற்றுள்ளது. பாரதப் பிரதமர் சமீபத்தில் நடந்த சமூகநலவாரியத்தின் தலைவிகள் மாநாட்டில் இன்றைய நாட்டு நிலையில் பெண்களின் சமூகப்பொறுப்புப் பற்றி அறிவுறுத்தினர்.

பல்வேறு சமூகப் பணிகளுக்கு மத்திய சமூகநலவாரியத்தின் மானிய உதவி கிடைத்து வருகின்றது. அரசாங்கத்தின் மானிய உதவியின்றியும் பல்வேறு சமூகக் கேடுகளைத் தவிர்க்க பெண்கள் தங்கள் சேவையை உதவ முடியும். குறிப்பாக இன்று குடும்பத் தலைவிகளைத் தினசரி பாதிக்கும்பொருள்களின் விலை உயர்வை, பெண்கள் மனது வைத்தால் நிச்சயமாகத் தடுக்க முடியும். நமது தேவைகளைக்குறைத்து அவசியமேற்பட்டாலன்றி வாங்குவதில்லை என்று திட சங்கல்பம் செய்து கொண்டால் பதுக்கல், கறுப்புச்சந்தை போன்றவைகளை ஒழிக்கலாம். மேலும் உணவு, ரேஷன் பொருட்கள் விநியோகத்தில் பெண்கள் அக்கறை காட்டி மேற்பார்வை பார்த்தால் பல குறைபாடுகள் நீங்கும். விவாகங்கள் மற்ற சடங்குகளில் செலவினத்தைக் குறைத்துச் சேமிக்கும் பழக்கத்தைப் பெண்களிடையே பரவச் செய்யலாம். சேமிப்பு இயக்கம் இதற்கு உதவிசெய்யும்.

கிராமப்புறங்களில் கடன் பாரத்தில் தவிக்கும் பெண்களுக்கும் சிறு குடிசைத் தொழில்கள் மூலம் அவர்களின் குடும்ப வருமானத்தை அதிகரிக்க உதவமுடியும். இதில் தேசியப்பாங்குகளும் மத்திய சமூகநல வாரியங்களும் உதவ முடியும். மேலும் இன்று விவசாயம் பெருமளவு விஞ்ஞான முறைப்படி வளர்ந்து தேச அபிவிருத்திக்கு முக்கியமாக அமைந்

இக் கட்டுரை ஆசிரியர் தமிழக முன்னாள் முதல்வர் திருவாளர் பக்தவச்சலம் அவர்களின் மகளாவார்; சமூக நலப்பணிகளிலும் சிறப்பாகப் பெண்கள் முன்னேற்றத்திலும் சிறப்பாக ஈடுபட்டு உழைத்து வருபவர்; எளிமையாக எழுதும் ஆற்றல் வாய்ந்தவர்; சமூக நல வாரியத்தில் பலப்பல பொறுப்புகளை ஏற்றுப் பணிபுரிந்து வருபவர்.

துள்ளது. இதில் பெண்கள் நல்ல பயிற்சி பெருவிட்டால் மக்கள் தொகையில் பாதி அபிவிருத்தியின்றிப் போய்விடும். எனவே விவசாய இலாக்காவுடன் இணைந்து பெண்களுக்குத் தகுந்த விவசாயப்பயிற்சி கொடுத்து காய்கறித்தோட்டம் போடுவதில் ஈடுபடுத்தலாம். இதன்மூலம் அவர்களின் உணவில் சத்துள்ள உணவுபற்றி அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும். மேலும் இன்று வனவளர்ப்பு விழாவின் முக்கியத்துவத்தை உணர்த்த பெண்கள் பங்குபெறலாம். மரங்கள் வைத்து, பாதுகாத்து நாட்டின் வனவளர்ச்சியில் தீவிரமாக ஒத்துழைப்புத் தரலாம். நமது கைத்தறி அபிவிருத்தியிலும் மத்திய சமூகநலவாரியம் பல மாநிலங்களில் பெண்களின் நிறுவனங்களுக்குத் தறிகளைக் கொடுத்துதவியுள்ளது. அசாம் போன்ற பகுதிகளில் இது பிரசித்தமாக உள்ளது. அங்கு ஒவ்வொரு பெண்ணும் தன் திருமணத்திற்குத் தானே நெய்ய வேண்டுமாம். இது ஓரளவு தேசிய இயக்கத்தை உண்டுபண்ணவும், அயல்நாட்டுப் பொருளின்மேல் கொள்ளும் மோகத்தைப் போக்கவும் உதவுகின்றது.

முக்கியமாக, பெண்கள் பதுக்கல் பொருள்களை வாங்குவதைத் தடுக்கவேண்டும். நாம் பதுக்கல் பொருள்களை வாங்குவதில்லை என்று சங்கல்பம் எடுத்துக்கொண்டால் இந்தப் பதுக்கல் என்ற வார்த்தையே நம்மை விட்டு மறைந்து விடும்.

எல்லாவற்றிற்கும் மூலகாரணமாக உள்ள எழுத்தறிவில்லாத நிலையை மாற்ற இந்த ஆண்டில் ஒவ்வொரு பெண்ணும் உறுதி எடுத்துக்கொண்டால் நல்லபலன் பெறுவோம். இதற்கு அரசாங்க உதவிக்கோ மானியத்திற்கோ காத்திருக்க நேரமில்லை. அவரவர் பகுதிகளில் சிக்கனமாக, முறையாக நாம் உடனடியாக ஆரம்பிக்கலாம். மாணவ சமுதாயத்தினருக்குக் குறைந்த விலையில் புத்தகம் நோட்டு முதலியவைகள் வழங்க மத்திய சமூக நல வாரியத்தின் சமூக பொருளாதாரத் திட்டத்தின் கீழ் மானியம் தரப்படுகிறது. பள்ளி, கல்லூரிகளுக்கு வேண்டிய பொருள்களைத் தயாரிக்கவும், அச்சக வேலை செய்யவும் பல சமூகநல நிறுவனங்கள் - சாரதா கல்லூரி, சேலம், அகில இந்தியப் பெண்கள் மாநாடு, கோவா போன்ற இடங்களில் ஆரம்பிக்கப்பட்டு மாணவிகளுக்கு உதவுவதுடன், ஏழைப் பெண்களுக்கு வேலை வாய்ப்பும் கொடுத்துள்ளன. இவைபோன்ற பல்வேறு துறைகளில் பெண்கள் தங்கள் சேவையைக் கொடுத்து நாட்டின் பொருளாதாரத் துறையை உயர்த்த முடியும். ஆயிரக்கணக்கான படித்த பெண்கள் தங்கள் ஓய்வு நேரங்களை இம்மாதிரியான ஆக்கப்பணிகளில் ஈடுபடுத்துவதன் மூலம் நாட்டின் நிலை உயரும். இன்றைய அவசர நிலையில் பாரதப்பிரதமரின் 20 குறியிலக்குப் பொருளாதாரத் திட்டம் அரசாங்கத் திட்டமாக நின்றுவிடக்கூடாது. மக்கள் தொகையில் பாதிக்கு மேலாக உள்ள பெண்கள் இதில் தீவிரப் பங்குபெற வேண்டும். ஏனைய பல சமூக சீர்கேடுகளான தீண்டாமை, குழந்தைத் திருமணம், வரதட்சிணைக் கொடுமை போன்றவைகள் நம் கவனத்தைக் கவரு

● **கார் ஓட்டிய முதல் பெண்மணி**

தமிழகத்தில் முதன்முதலில் கார் ஓட்டிய பெண்மணி சென்னையைச் சேர்ந்த, வணிக குலத்தில் தோன்றிய, சேத்துப்பட்டில் உள்ள 'சேவாசதனத்'தைத் தோற்றுவித்த லேடி ஆண்டாள் என்ற பெயருடைய பெண்மணியாவார்.

கின்றன. சட்டங்கள் இயற்றுவதன் மூலமாக மட்டும் இந்தச் சமூகக்கேடுகளைத் தவிர்க்க முடியாது. மக்களின் மனோபாவம், மனமாற்றம் ஆகியன மிகவும் முக்கியம். மக்களிடையே ஓர் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். அதிலும் பெண்களிடையே மறுமலர்ச்சி விழிப்புணர்ச்சியை ஏற்படவேண்டும். முதலில் ஒவ்வொரு பெண்ணும் தன் மனதை மாற்றி, திடசித்தத்துடன் மற்றவர்களுக்கு எடுத்துச்சொல்ல முன்வரவேண்டும். உதாரணத்திற்கு வரதட்சிணையைத் தவிர்க்க வேண்டும் என்று சொல்லுவதை விட்டு நான் என் பிள்ளைக்கு வரதட்சணை வாங்கமாட்டேன் என்ற சூளுரையை நாம் வளர்த்தோமானால் இந்தப்பெரும் கேடு நம் நாட்டைவிட்டு நீங்கும்.

இன்று இளம் வாலிபர்களிடையே ஒழுக்கம், நல்நடத்தை, உண்மை இவை வளர வேண்டுமாயின் முதலில் தாயிடம்தான் இந்த முதல் பாடங்களை ஒவ்வொரு குழந்தையும் பெறமுடியும். நன்மக்களைத் தயாரிக்க சிறந்த தாய்மார்களாக நாம் நம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும். ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவைகளைத் தாயின் மூலம் குழந்தைகளுக்குச் சரியான முறையில் அளித்தால் அதுவே ஒரு பெரும் சேவையாகும். இம்மாதிரி பல்வேறு சமூகப்பணிகள் அரசாங்க மானியமின்றி ஒவ்வொரு வட்டாரத்திலும் சிறு,சிறு பெண்கள் குழுக்கள் அமைத்துத் தீவிரமாக இயங்க முற்பட்டால், நல்லதொரு சூழ்நிலை உருவாகும். சுற்றுப்புறச் சுகாதாரம், எளிய வாழ்க்கை இவைகளிலும் பெண்கள் தங்கள் பங்கைப் பெருமளவில் தரமுடியும். தெய்வபக்தியும் தேசபக்தியும் தாய்ப்பாலுடன் சேர்த்து அளித்து விட்டால் வருங்கால மக்களின் வாழ்க்கை நலமாக இருக்க முடியும். வசதி உள்ளவர்கள், அறிவு படைத்தவர்கள். தங்கள் குடும்பத்துடன் நிற்காது அண்டை அயலிலுள்ள சமுதாயத்திற்கும் தங்கள் அறிவு, நேரம் உழைப்பு இவைகளை அளித்துச் சமுதாய நலனில் அக்கறைகாட்ட வேண்டும். சமுதாயம் உயர்ந்தால் தேசத்தின் உயர்வு தானாகவே அமைந்துவிடும்.

அகில உலகப் பெண்கள் ஆண்டில் ஆண்களுடன் சரிநிகர் சமானமான உரிமைகளைக் கோருவதுடன் நமது கடமைகளையும் நாம் சீருகச் செய்தோமேயானால் சமத்துவம், அபிவிருத்தி, அமைதி இந்த மூன்று லட்சியங்களும் தாமாகவே நிறைவேறிவிடும். ஆண், பெண் இடையே உள்ள பல்வேறு குறைபாடுகளை நீக்குவதற்கு ஐக்கிய நாட்டுச்சபை முதல் ஏனைய பல அரசாங்கங்களும் பல்வேறு சட்டங்கள், வசதிகள் அளிக்க முன்வந்திருப்பதை நாம் பாராட்டுவதோடு நம் கடமையையும் நாம் நினைவுபடுத்திக் கொள்வோம். சமூகப்பணிகளில் கூடுமானவரை நம் முழு ஒத்துழைப்பையும் கொடுப்போம்; அவதியுறும் ஏழைச் சகோதரிகளின் வாழ்க்கையில் ஒரு புத்துயிர் உண்டாக்க முயற்சி செய்வோம். □

துடியிடையாள் தடந்தோளான்

கடவுள் ஆதாமின் விலா எலும்பை எடுத்து ஏவாளைப் படைத்தார் என்று விவிலியம் கூறுகின்றது. தந்தையின் தலைமையைப்போற்றிய சமுதாயச் சூழலில் இந் நூல் எழுந்ததே இக்கூற்றுக்கு அடிகோலியிருக்கவேண்டும். உயிரியல் முறையில் பெண் தான் முதன்மையானவள் முழுமையானவள். பெண்ணுக்கு இரண்டு X குரோமோசோம்கள்; ஆனல் ஆணுக்கு ஒன்றுதான், அதற்கு இணையாக வரும் Y குரோமோசோம், X-ஐவிடமிகச் சிறியது ஏனைய 22 இணைக்குரோமோசோம்களும் இருபாலர்க்கும் ஒன்றே. குரோமோசோம் இழக்கப்பட்டால், ஆணுகப் பிறக்கவேண்டியது பெண்ணுகவே தான் பிறக்கும். பிராணிகளின் கீழினங்கள் பலவற்றில் பெண் தான் பெரியது. ஆண். தனது ஆடல் பாடல், அழகு முதலியவற்றைக்காட்டிப் பெண்ணைக்கவர முயலும்; கூடுகட்டித்தரும்; குஞ்சைப் பராமரிக்கும்; இரைதேடிக் கொடுக்கும்; இன்னும் பலப்பல உதவிகளையும் புரியும். மனித இனத்தில் மட்டும் இந் நியதி நேர் மாருக அமைந்துள்ளது. ஆண்களைவிடப் பெண் அளவில் சிறியவளேயன்றி அறிவாற்றலில் அணுவளவும் குறைந்தவளல்ல. "ஆணுக்கு நாற்பது அவுன்சு மூளை இருக்கப் பெண்ணுக்கு முப்பத்தாறுதானே?" என்று சுட்டிக் காட்டினர் ஓர் அறிவாளி. ஐந்தில் ஒரு பங்கு எடை குறைவாயுள்ள பெண்ணுக்கு, மூளை பத்தில் ஒரு பங்கு தானே எடைக்குறைவாயுள்ளது? எனவே, மூளையின் சிறுமை உடற் சிறுமைக்குரிய அளவோடு அமைகிறதேயன்றி அறிவாற்றற் குறைவைச் சுட்டவில்லை. "பெண்களுக்கே உரியது என்று நாம் கருதும் இசைக் கலையிலும், பாக், மொஸார்ட், பீதோவன் முதலிய ஆண்கள் தாமே மேதைகளாகத் திகழ்ந்தனர்?" என்று சீறினர் மற்ருேர் ஆண்புலி. ஆண்கள் நிறு

திருமதி சரசுவதி கிருட்டினன்

இவர் கோவை டாக்டர் க. ரா. கிருட்டினன் அவர்களின் துணைவியார். பல கட்டுரைகளையும், நூல்களையும் படிப்பதோடு கணவரொடு உடலியல் பற்றிக் கலந்துரையாடும் ஆர்வம் மிக்கவர், இவர் இசையில் புலமை பெற்றவர். தமிழ் ஆங்கிலம், தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளை அறிந்தவர்.

விய சுயநலச் சமுதாயத்தின்நச்சு நாவிற்கு அஞ்சித் தனது ஆற்றலை யுங்கூடப்புலப்படுத்த முடியாமல் புழுங்கிக்கிடந்தாள் பெண் என் பதையே யல்லவோ இது சுட்டிக் காட்டுகிறது?

பெண்ணுக்கும் வண்ணத்துக் கும் நெருங்கிய நட்புண்டு. சூரிய ஒளியின் நிறமாலையில் ஏறத்தாழ **150** வண்ணவேறுபாடுகளை உணர லாம் என்று கூறுவர். இப்படி நுணுகி நிறவேற்றுமைகாணும் திறன் பெண்ணுக்கு ஆணைக்காட் டிலும் நிரம்ப உண்டு என்பது பெண்ணோடு புடவைக்கடைக்குச் சென்ற எந்த ஆணுக்கும் புடவை வாணிகருக்கும் வெட்டவெளிச் சம். நிறம்பிரித்துணரும் இத் திறன் X-குரோமோசோமுடன் இணைந்துவரும் பண்பு. இ.்.னை இரட்டைப்பங்காகப் பெறுகிரு ளல்லவா பெண்? இப்படி ஏதாவது தனிப்பட்ட சிறப்பை ஆண் தனது குரோமோசோம் வழியாகப் பெறு கிருஞ என்ருல், உண்டு; உரோ மங்களடர்ந்த செவி அது. இப் பண்பு Y-குரோமோசோமுடன் இணைந்து இப்படிச்செவிபெறும் நிறைவை பெண்ணின் காதுகளில் எவரும் காண முடியாது.

உடலெடையையும் உயரத்தை யும் போலவே பெண்ணின் ஒவ் வோர் உறுப்பும் ஆணினுடையதை விடச் சிறியதுதான். அதற் கேற்ப, இரத்தப்பரிமாணம், மூச் சுக்காற்றுக்கொள்ளளவு, அடிப் படை ஆக்கச் சிதைவு வினைவிரைவு ஆகியவை தாழ்ந்தே காணப் படும். தொடக்கத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேற்றுமை தென் படாது. ஒரு பொது அமைப்பி லிருந்தே ஆர்மோன்களின் விளைவு களால் ஆண்பெண் வேறுபாடு உண்டாகிறது. கருவுற்ற இரண் டாம் மாதத்திலிருந்து பிறந்து, பருவம் எய்தும்வரை இம் மாறு தல்கள் நிகழ்ந்து கொண்டிருக் கின்றன. தாய்மையால் சிலமாற் றங்கள் மேலும் விரிவடைகின்றன.

கருவுற்ற இரண்டாம் மாதத் தில் கருவின் வயிற்றுப்பகுதியின் இரு பக்கத்திலும் ஒன்ருக ஒரு வரப்பும் அதனருகில் இரண்டு குழல்களும் தோன்றுகின்றன. வரப்பு இனப்பெருக்கக் கோள மாக மாறும். வரப்பிற்கு அடுத் தாற்போல் உள்ளது உல்பியன் குழல். அதற்கும் அப்பால் உள் ளது முல்லேரியன் குழல். கருவேற் றிய விந்துச்செல் Y-குரோமோ சோம் உடையதாஞல் கரு ஆணுக வளரும். X-குரோமோசோம் உடையதாஞல் பெண்ணுக வள ரும்.கரு ஆணுக அமைந்தால் வரப் பின் சோற்றுப்பகுதி பெருகி, ஓட் டுப்பகுதி நலிவுற்று விதை யுரு வாகும்; பெண்ணுக அமையின் இதற்கு மாருக ஓட்டுப்பகுதி பெருகிச் சோறு நலிந்து சூல்பை உருப்பெறும். விதை உருவாஞல் உல்ஃபியன் குழல் அமைப்புகள் விரிவடைந்து விந்து உயிர்களைச் (Spermatozoa) செலுத்தும் குழல்களைத் தோற்றுவிக்கும். ஊடே முல்லேரியன் குழலமைப்பு கள் நலிவுறும். சூல்பை உருவாஞல் உல்ஃபியன் குழல்கள் நலிந்து முல் லேரியன் குழலமைப்பு விரி வடைந்து கருப்பைக்குழல்கள், கருப்பையோனிக்குழல் ஆகியவற் றைத் தோற்றுவிக்கும். (படம் பார்க்க) இம்மாறுதல்களைத் தொடர்ந்து ஆண் உள்ளுறுப்பு களுக்கு ஏற்ப ஆண்குறியும் விதைப்பையும் இருபக்கத்திலும்



உருவாகி வளர்ந்து, மையத்தில் இடைவெளியின்றி நெருங்கிக்கூடி விடும். பெண் உள்ளுறுப்புகள் வளர்ச்சிபெற்ருல் விதைப்பைகள் பெண் குறியின் வெளித் தகடுகளாக நின்றுவிடும்; ஆண்குறி வளராது கிளைடோரிசாகச் சிறுத்து விடும். இருபக்கத்துக்கும் இடையேயுள்ள பிளவு, கூடாமல் அப்பிளவில் சிறுநீர்க்குழலும் அதன் கீழ் யோனிக் குழலும் தனித் தனித்துளைகளாகத் திறக்கும். பிறக்கும்போது குழந்தைக்கு ஆண்குறியும் பெண்குறியும் வேற்றுமை புலப்படும் வகையில் நன்கு வளர்ச்சியடைந்திருக்கும். பெண் குழந்தை ஆண்குழந்தையைவிடச் சற்றுப் பெரியதாகவும் கனமாகவும் இருக்கும். இவற்றைத்தவிர இப்போது ஆணுக்கும் பெண்ணுக்

குமிடையே வேறு வேற்றுமை தென்படாது.

பிறந்தபின்னும் பத்துவயது நிரம்பும்வரை இருபாலர்க்கும் உடலமைப்பில் வேற்றுமை வளர்வதில்லை. பத்தாம் ஆண்டைக் கடக்கும்போது மூளைக்கடியில் தொங்கும் பிடுயிடரி கோளமான இனப்பெருக்குக் கோளம் தூண்டும் (Gonadotrophic homones) ஆர்மோன்களைச் சுரக்கத் தொடங்கும். இவை இருபாலர்க்கும் பொது. இவற்றைஃபாலிகிள் தூண்டும் ஆர்மோன், லூடீனைக்கும் ஆர்மோன் என்று கூறி முறையே, FSH என்றும் L. H. என்றும் சுருக்கிக் குறிப்பர். இவற்றைத் தவிர புரோலாக்டின் என்றோர் ஆர்மோனையும் பிடுயிடரி சுரக்கும். இவை மூன்றும் பாலுறுப்புக்களின் வளர்ச்சியையும் தொழிலையும் தூண்டுவதற்குக் காரணமாகின்றன. பிடுயிடரியின் சுரப்பையே மூளையின் ஐபோதாலமஸ் பகுதி ஆர்மோன் விடுத்துக் கட்டுப்படுத்தும். கண், காது, சருமம், முதலிய புலன்களினின்று வரும் நுண்ணுணர்வுகள் காதல், வெறுப்பு முதலிய உளவுணர்ச்சிகளாகப் பதிவதும் அவ்வுணர்ச்சிகள் ஏற்ற நடத்தையின் மூலம் வெளிப்படுவதும் ஐபோதாலமஸ் வழியாகவே நடைபெறுகின்றன. இப்பண்புகளுக்கும் பாலுறுப்புகளுக்கும், ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு உண்டென்பது வெளிப்படை. ஐபோதாலமசுக்கும் பிடுயிடரிக்கும் உள்ள ஆர்மோன் தொடர்பு இதற்கு அடிப்படை. ஐபோதாலமஸ் — பிடுயிடரி- இனப்பெருக்கக் கோளங்களின் ஆர்மோன்தொடர்புகள் முற்றுப் பெறுவதே இருபாலர்க்கும் பருவ உணர்ச்சிகள் தோன்றி வெளிப்படக்காரணமாகிறது.

[அடுத்த இதழில் முடியும்]

With the best compliments from:

SRI VARADARAJA TEXTILES PRIVATE LIMITED

Post Box 1616

PEELAMEDU, COIMBATORE-641004

Manufacturers of:

Top Qualities of Cotton
and
Staple Fibre Yarns.

Phone: Office: 25766
Works: 82 - 366
Grams: "RAJTEX"

மகளிரும் குடும்பமும்

ஒரு பெண் பிறந்து வளர்ந்து பொறுப்பை உணர்ந்து கொள்ளும் பள்ளிதான் தாய் வீடு. அங்கு தான் அவள் பயிற்றுவிக்கப்படுகிறாள். தாயன்பையும், தந்தையின் சீராட்டையும் உடன் பிறந்தோரின் பாசத்தையும் பெற்று, அன்புள்ளவளாகவும் அடக்கமுள்ளவளாகவும், பண்புள்ளவளாகவும் வளர்கிறாள். இந்தப் பள்ளிப் படிப்பைச் செயல்முறையில் செய்திட அவளுக்கு வாய்ப்பளிக்கும் அலுவலகந்தான் குடும்பம். அங்குத்தான் அவளுடைய தனித்தன்மையும் தாய் வீட்டில் கற்றுக் கொண்ட பாடங்களும் பொலிவு பெறுகின்றன. பெற்றோரிடம் தான் பெற்ற அன்பை முதலில் தன் கணவனிடம் பகிர்ந்துகொள்கிறாள். கணவன் வீட்டில் அவருடைய தாய்தந்தை; உடன் பிறந்தோரை அனுசரிக்கக் "கற்றுக் கொள்கிறாள். பின்னர்; தன் குழந்தைகளையும் அன்புப் பிணைப்பில் இணைத்துக்கொள்கிறாள்.

இந்த அங்கத்தினர்களைக் கொண்டுதான் அவள் வேலை செய்யும் குடும்பம் என்ற அலுவலகத்தின் வெற்றிப்பாதையில் நடைபோட வேண்டும்.

சிறுதுளி பெருவெள்ளம் என்பதுபோல் சிறு பூசல்களும் பெரிதாகலாம். குடும்ப வாழ்வில் மனவேறுபாடுகள் அமைவது இயற்கை. குழந்தைகள் அனைவரும் ஒன்றுபோல் அமைவதில்லை. அனைவரையும் அணைத்துச் செல்வதில்தான் ஒரு தலைவியின் திறமை அடங்கியுள்ளது. குடும்பத்தின் பூசல்களைப் பெரிய அளவில் நினைத்துப்பார்த்தால் அதுதான் இன்று நம் நாட்டில் நடந்துகொண்டு இருக்கும் குழப்பங்களின் அடித்தளம் எனலாம்.

நம் நாட்டில் பெண்கள் என்றாலே 'இளைத்த பாலினர்' (Weaker Sex) என்று இரண்டாவதாகத்தான் எடைபோடுகிறார்கள். குடும்பத்தில் ஆணுக்குத்தான் முதலிடம். அவருடைய முடிவுகள் தாம் முடிவானவை. காரணம்! மகளிரை ஒரு பொறுப்புள்ள

டாக்டர் (திருமதி) லலிதகுமாரி ஜனார்த்தனம்

இவர் உழவியல் துறையில் புலமை வாய்ந்தவர்; அத் துறையில் பட்டம் பெற்ற பிறகு பெல்ஜியத்தில் உள்ள லூவோன் கத்தோலிக்க பல்கலைக் கழகத்தில் சேர்ந்து ஆராய்ச்சி புரிந்து டாக்டர் பட்டம் பெற்றவர்.

உறுப்பினராகக் கருதுவதில்லை. ஒரு குடும்பத்தில் தந்தை இறந்தால், தாய் பொறுப்பேற்றுக் குழந்தைகளைக் குறைவின்றி வளர்க்கிருள். ஆனுல் தாயை இழந்தாலோ குழந்தைகள் தவித்துவிடுகிருர்கள். தந்தையின் ஆதரவு குழந்தைக்கு இருப்பினும் தாயன்மை ஈடுகட்டும் மென்மை தந்தையிடம் இருப்பதில்லை. இங்குத்தான் மகளிரின் இன்றியமையாமையை உணரவேண்டும்.

மகளிரின் உரிமை (Women's Lib) என்ருல், உடனே அமெரிக்காவில் மேலாடையின்றி (Brazierless) நடப்பதுதான் என்று நினைக்கிருர்கள். சிந்தித்துப் பார்த்தால் சிரிப்புத்தான் வருகிறது. மகளிரின் உரிமையைத்தான் ''விமன்ஸ்லிப்'' என்கிருர்கள். குடும்பத்தில் அவளுக்குச் சம உரிமையைக் கொடுங்கள். அவளுடைய சிந்தனைகளுக்கு மதிப்புக் கொடுங்கள். 'பெண் புத்தி பின்புத்தி' என்ற பழைய பல்லவியை மறந்து விடுங்கள்; அவளை அவளாக மதியுங்கள்; அவளுக்குள்ள தனித்தன்மையைப் புரிந்துகொள்ளுங்கள். இவைதாம் இன்றைய பெண்ணுலகம் கேட்பது.

திருமணம் என்ற பெயரில் ஒரு பெண்ணை வீட்டு வேலைகள் செய்யவும், குழந்தை பெறவும் விலைக்கு வாங்கும் காலம் மலையேறிவிட்டது. இது பாரதி பாடிய புதுமைப்பெண்கள் வாழும் காலம். இதைச் சொல்வது (பெல்பாட்டம்-மினி)'மணி அடைப்புக் கால்சட்டை-அரையுடைக்காட்சி'' உலகம் வாழ்க என்பதாகாது. ஒருவர் அணியும் ஆடையும் அலங்காரமும் அவரவர்கள் விருப்பம் என்று விட்டுவிடக்கூடியவை என்ருலும் சுற்றுச்சூழல் ஏற்கும் வண்ணம் நம் உடைகளும் அலங்காரங்களும் அமைவதே சிறப்பு. பழைய கால புடவைகட்டி நீண்ட கூந்தலை வழுக்கையாய் வாரி முடித்து அடிமேல் அடிவைத்துக் குனிந்து நடப்பவர்தான் குடும்பப்பெண் என்று முடிவுகட்டக் கூடாது. இது பெண்கள் ஆண்டு என்ருல் பெண்கள் முன்னேற்றத்தைப் பற்றி ஒவ்வொரு பெண்ணும் சிந்திக்கவேண்டிய ஆண்டாகும். அவள் செய்யவேண்டிய ஒவ்வொரு செயல்களிலும் ஒரு சிறப்பு அமைந்திருக்க வேண்டும்.

சத்துள்ள காய்கறிகளைச் சமைப்பதும் அதனை மிகச்சீரான முறையில் படைப்பதும் வீட்டின் பொருளாதார நிலையைச் சிறப்பான முறையில் சமாளிக்கச் சிறுகுடிசைத் தொழில்களான கோழிப்பண்ணை அமைத்தல், காய்கறித் தோட்டங்கள் போடுதல் போன்றவைகளைத் திட்டமிட்டுச் செய்வதும் ஓய்வு நேரங்களில் கைவேலைகள் செய்வதும், சிறிது உற்சாகம் வேண்டியிருப்பின் மகளிர் சங்கங்களுக்குச் சென்று விளையாடுவதும், அங்குள்ள மற்ற மகளிர்களுடன் கலந்து பொது அறிவைப் பகிர்ந்து கொள்வதும் போன்ற வெகுசிறப்பான பணிகளை இன்று நகரங்களில் இருக்கும் அநேக மகளிர் பின்பற்றி வருகிருர்கள். அறியாமையில் கட்டுண்ட பெண்களோ இதை ஏற்கக் கூடாத நாகரிகமாகக் கருதுகிருர்களே தவிர வாழ்க்கையை வளம்படச் செய்யும் ஊன்றுகோல்கள் என்பதை உணருவதில்லை.

WITH BEST COMPLIMENTS:

Selvakumar Industries

POST BOX 5304
COIMBATORE - 641029
Phone: 31544 Grams: "YESKAYPUMP"

MANUFACTURERS OF:

SKB BRAND CENTRIFUGAL PUMPS,
ELECTRIC MOTORS,
MONOBLOCK PUMPSETS,
DUST EXTRACTION UNITS &
OTHER ALLIED SPARES

இதற்குள்தான் இந்தப் பெண்கள் ஆண்டில் அறியாமையில் மூழ்கிக்கிடக்கும் பெண்களை அறைகூவி அழைக்கின்றோம். மகளிரே, அடுப்பெரிக்கும் பெண்களுக்கு ஏன் கல்லூரிப் • படிப்பென்று எண்ணாதீர்கள். கல்விப் பெருக்கந்தான் குடும்ப வளர்ச்சிக்கு ஊன்றுகோல்.

''மங்கையராய்ப் பிறப்பதற்கே
நல்ல மாதவஞ்
செய்திடல் வேண்டுமம்மா
பங்கயக் கைநலம் பார்த்தலவோ
இந்தப்
பாரில் அறங்கள் வளருமம்மா''

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை குறிப்பிட்ட மகளிரின் உயர்ந்த நிலையினை உணர்ந்து வாழ்பவளே உயரிய பெண்ணாவாள்.

''அல்லும் பகலும் உழைப்பவர்கள்; அன்பு ததும்பி எழுபவர்; சிந்திய கண்ணீர் துடைப்பவர்; உள்ளந் தளர்வுறும் நேரத்தில் உயிரூட்டும் உரைகள் உரைப்பவர்; நீதி நெறியில்லா வம்பரும் நல்ல நேர்வழி வாழ்ந்திடச் செய்பவர்; ஆவி பிரியும் அவ்வேளையில் பக்கத்தில் அன்போடு அகலாது இருப்பவர்'' என்று அவர் மேலும் பெண்ணின் இயல்பினை மிக உருக்கமாகப் படம் பிடித்துத் தருகிறார்.

மகளிர் தம்மை உணரவேண்டும்; தம் திறம் அறிவதோடு, வீட்டிற்கும் நாட்டிற்கும் ஏற்றவளாய் வாழவேண்டும். அன்பே துணையாய் அமையுமானால் மகளிரும் அவர்கள் அங்கம் வகிக்கும் குடும்பமும் உலகம் சிறக்க அமையும்.

வாழ்க மகளிரும் குடும்பமும்!

WITH BEST COMPLIMENTS OF

G. Ramaswamy & Co.
GANGA TEXTILES

4/387 Avanashi Road, P N Palayam

COIMBATORE 641037

— Phones 22397 & 35005 —

Grams: GEARCO Telex 085/239

Manufacturers of

QUALITY CONE YARN

G. Varadaraj

Managing Director

மகளிர் உரிமைகளும் சமுதாய முன்னேற்றமும்

திரு. குர்த் வால்ட்டேம் □ *தமிழாக்கம்:* **'மதிஅரசு'**

அனைத்து நாட்டு மகளிர் ஆண்டாகிய 1975-ல் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் வால்டேம் அவர்கள் பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளார்கள்.

ஐக்கிய நாட்டு அமைப்பு அதன் தொடக்கத்திலிருந்து ஆண் பெண் ஆகிய இருபாலாரின் சமத்துவத்தை வலியுறுத்திவருகிறது. இச் சமத்துவக்கோட்பாடு ஐ. நா. சாசனத்தின் ஒருகூறாகவும், பின்னர் 1948-ல் வெளியிடப்பட்ட உலக மனித உரிமைகள் அறிக்கையிலும் இடம் பெற்றுள்ளது. ஒரு கோட்பாட்டைக் கருத்தளவில் ஏற்றுக் கொள்வதற்கும், அதை நடைமுறையில் நிறைவேற்றுவதற்கும் அதிக வேறுபாடு இருப்பதை நாம் வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளவேண்டும்.

சுருங்கக் கூறின் கடந்த 30-ஆண்டுகளில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்ட போதிலும் பெண்களைப் பேதப்படுத்துவதும், அவர்கள் உரிமைகள் மறுக்கப்படுவதும் தொடர்ந்து இடிக்கப்படுவதுடன் இது அன்றாட வாழ்க்கையில் பொதுவாகக் காணப்படும் ஒருண்மையாகவும் இருக்கிறது. இதனால் உலக மக்களின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் துறைகளின் மெய்யான வளர்ச்சி தடைப்பட்டுள்ளது.

உலக மக்கள் தொகையில் கிட்டத்தட்ட சரிபாதியாக மகளிர் இருப்பதால் பெண்களுக்குச் சம உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்பது மனித இனத்தில் பாதிபேருக்கு அவை மறுக்கப் படுவதாகக் கொள்ள வேண்டும். இவர்களின் ஆக்கப்பூர்வமான ஆற்றலைப் போற்றுவதோ, மதிப்பதோ இல்லை என்பதுடன், சமத்துவ அடிப்படையில் உலக அமைப்பை உருவாக்கவும்,

---

"உறுதியுடனும் நிதானத்துடனும் பெண்கள் நடந்துகொள்ளவேண்டும். நம்முடைய பண்பாட்டின் சிறந்த அம்சங்களைக் காப்பாற்றி, மட்டமாகவும், அவமானப்படத்தக்கதாகவும் உள்ளவற்றைத் தயக்கமின்றி நிராகரித்துவிட வேண்டும். சீதைகள், திரௌபதிகள், சாவித்திரிகள், தமயந்திகள் செய்யவேண்டிய வேலை இது; ஆண் தன்மை நிறைந்த பெண்களோ, பொய்ப் பகட்டுள்ளவர்களோ, இதைச் செய்ய முடியாது".

— காந்தியடிகள்
எங் இந்தியா 17-10-29

இக் கட்டுரை ஆசிரியர், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர்.

தேச நலம் குடும்பத்தில் ஆரம்பிக்கிறது

ஒரு தேசம் குடும்பங்களின் வரிசைகள் சேர்ந்த ஒரு தொகுப்பாகும். தேசத்தின் நலமும் மகிழ்ச்சியும் குடும்பத்தில்தான் ஆரம்பிக்கிறது. எனவே, மனோபாவ, சுகாதார, பொருளாதார அவசியங்களுக் கேற்பக் குடும்பத்தின் அளவைப் புத்தி சாலித்தனமாகச் சரிசெய்து கொள்ளவும், குழந்தைகள் பிறக்கும் இடைக் காலத்தைப் போதுமானபடி வைத்துக்கொள்ளவும் செய்யவேண்டும்.

— டி. பி. கர்மார்க்கர்

நம்மை எதிர்நோக்கியுள்ள அனைத்து நாட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் இவர்களுக்குச் சமஅளவு வாய்ப்புகள் அளிக்கப்படுவதில்லை என்பதையும் உணர வேண்டும்.

ஆண் பெண் ஆகிய இருபாலாரின் சமத்துவத்தைப் பன்னாட்டு அரங்கில் சட்டப் பூர்வமாக நிலைநாட்டுவதுடன், அன்றாட வாழ்க்கையிலும் உண்மையாக நிலைநாட்டுவதற்கு அனைத்து நாட்டு மகளிர் ஆண்டு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது எனலாம். ஆக்கப் பணிகளில் பெண்கள் அதிக அளவு பங்கு கொள்ளவும், வளர்ச்சியால் தோன்றும் பலன்களை அவர்கள் பகிர்ந்து கொள்ளவும், ஐக்கிய நாடுகள் அமைப்பின் அடிப்படையான இலட்சியங்கள், குறிக்கோள்களை நிறைவேற்றும் பணிகளில் பெண்கள் பெருமளவு பங்கு கொள்ளவும், உலக அமைதியைக் காக்கவும் அனைவரின் வாழ்க்கை வசதிகளை மேம்படுத்தவும் மகளிர் ஆண்டாகிய 1975-இல் அரியதொரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது எனலாம்.

நாம் அனைவரும் முயன்றால் வாழ்க்கையின் பல்வேறு கூறுகளான சமூகம், பொருளாதாரம் கலாச்சாரம், மற்றும் அரசியல் துறைகளில் பெண்களின் மேம்பாட்டுக்கு வழி வகுப்பதன் மூலம் மகளிர் ஆண்டாகிய 1975-ஐ கருத்துமிக்க சிறப்பு மிக்க ஆண்டாக்கவும் செய்ய முடியும். அங்ஙனம் அனைவரும் கருத்தொருமித்துச் செயல்படாவிடின் மகளிர் ஆண்டு என்பது அர்த்தமற்ற சடங்குகள் நிறைந்த ஆண்டாக மாறக்கூடும்.

ஐக்கிய நாடுகள் அமைப்பில் பணியாற்றுகின்ற நாங்கள் அனைவரும் அனைத்து நாட்டு மகளிர் ஆண்டை உண்மையிலேயே சிறப்புமிக்க ஆண்டாகச் செய்யவேண்டுமென இயன்ற அளவு பாடுபட்டு வருகின்றோம். இப்பணியில் முழுமனதுடன் ஈடுபடுமாறு உலக மக்கள் அனைவரையும் விண்ணப்பித்துக் கொள்கிறோம். மகளிர் ஆண்டு என்பது பெண்கள் மட்டும் போற்றுகின்ற, அவர்களுக்காக ஏற்பட்ட ஓர் ஆண்டாக நினைப்பது தவறு. இதில் ஆண்களும், பெண்களும் ஒருங்கிணைந்து ஆதாரமான மனித உரிமைகளையும், பொறுப்புக்களையும் முழு அளவில் பகிர்ந்து கொள்வதற்கான சிறந்த வாய்ப்பினை இவ்வாண்டில் உருவாக்க முனைய வேண்டும்.

இக்கோட்பாட்டினைச் செயல்படுத்த மக்கள் அனைவரின் மனப்பூர்வமான ஆதரவும், உதவியும் தேவைப்படுகின்றன. எனவே உலக மக்கள் அனைவரும், அரசாங்கங்கள் அனைத்தும் முழு அளவில் எங்களுடன் ஒத்துழைக்குமாறு வேண்டுகிறோம். □

மகளிரும் அறிவியலும்

"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்" என்று பாடிப் பன்னூறாண்டுகட்கு முன்பே அறிவியலை அறிந்திருந்தனர் மகளிர்.

"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

என்று இடைக்காடனார் திருக்குறளின் புகழ்பாட, ஔவையோ பல படிகள் மேலே சென்று அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி என்று மிக்க சிறப்பாகக் குறட்பாக்களின் மேன்மையை எடுத்தியம்புகிறார். கடுகைவிடச் சிறிதென்னும் பொருளில் அவர் இச்சொல்லைப் பயன் படுத்தியிருக்கமுடியாது. ஏனெனில் திருவள்ளுவரின் குறட்பாவிலிருந்தே கடுகினும் சிறிய தினையை அவர் எடுத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அதை விடுத்து குறளின் சிறப்புக் கருதி அதன் மாண்பை இன்னும் சிறக்க எடுத்தியம்ப வேண்டும் என்று சிந்தித்தே அணுவை அவர் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும். எனவே, அணுவைப் பற்றிய முழு அறிவும் அக் காலத்தே இருந்திருக்கின்றதென்றும் அவ்வறிவு மகளிரிடையேயும் பரவியிருந்திருக்கிறதுதென்றும் அறிகின்றோம். மொழி, இலக்கியம் போன்ற பொதுக் கல்வியுடன் நில்லாது, அணுவைப் பற்றிய அளவுக்கு அன்றே அறிவியல் மலர்ந்திருக்கவும் மகளிரும் அதில் முன்னணியில் நின்றிருக்கின்றனர் என்றும் அறியும்பொழுது வியக்கின்றோம். அணுவைப்பற்றி முதன்முதலில் அறிந்தது யாராயிருக்க முடியும்; எதனால் அவர் அம் முடிவுக்கு வந்திருக்க வேண்டும் என்பன போன்ற ஆய்வுக் குறிப்புகள் கிடைக்காமலேயே போய் விட்டன.

மனித வாழ்வுக்கு இன்றியமையாததுபோலாகிவிட்ட அறிவியல் உலகில் சிறப்பாக இயற்

திருமதி தாமரை நங்கை

இவர் தமிழாசிரியர் திருவாளர் சி. ந. இராமசாமி அவர்களின் மகளாவார். கிராமச் சூழ்நிலையில் எளிய குடும்பத்தில் தோன்றி முயற்சி மேற்கொண்டு சிறப்புறக் கற்று விஞ்ஞானத் துறையில் மேற்பட்டம் பெற்றுச் சென்னைப் பொறியியற் கல்லூரியில் இயற்பியல் துறைப் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகின்றார்.

பியல் துறையில் இந் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து வியத்தகு கண்டுபிடிப்புகள் நிகழ்ந்திருப்பது யாவரும் அறிந்ததே. இயற்கையில் பொதிந்து கிடக்கும் அடிப்படைத் தத்துவங்களைப் பற்றிய இவ்வறிவு, இன்று மனிதனை மண்ணுக்கும் விண்ணுக்கும் பறக்குமளவிற்கு உயர்த்தியுள்ளது. பழைய கற்கால வாழ்வு முறையிலிருந்து இன்று நிலாவில் வீடமைத்துக் குடிபோகும் அளவிற்கு அவனைப் பண்படுத்தியுள்ளது. ஒரு பாதி இன்னும் புதிதாகவேயுள்ள, நிலவளமோ, நீர்வளமோ இல்லாத நிலாவில் ஆண்களும், பெண்களும் குடியேறி ஆய்வு நிகழ்த்துங் காலம் நெருங்கிக் கொண்டிருக்கின்றதென்றும் கி. பி. 2000த்தில் அங்குப் புதுஉயிர்கள் குழந்தைகள் பிறந்து வளரப்போகின்றன என்றும் கேட்கும்பொழுது சொல்லொணு வியப்பு ஏற்படுகின்றதன்றோ! ''கற்றது கைமண்ணளவு'' என்று கலைமகளே கூறுவதாக வரைந்து வைத்திருப்பதும், மனித முயற்சிக்கும் அறிவுப் பசிக்கும் எல்லைக்கோடு வரையாமலிருப்பதற்குத்தானே?

மேலும், மக்கள்தொகைப் பெருக்கத்திஞல் நிலத்தில் ஏற்படும் இடநெருக்கடியை இது தீர்த்து வைக்கலாம். தான் உலகில் தோற்றுவிக்கும் உயிர்கட்கு ஒரு நாள் நிலமடந்தை இடம் கொடாமல் போகலாம் என்ற அச்சத்தால்தாஞே என்னவோ பிரம்மதேவன் இவ்வளவு பெரிய அண்டத்தைப் படைத்து அதில் உயிர்கள் தோன்றி வாழ வழி வகுத்துத் தக்க சமயத்தில் அவ்வறிவை மனிதனுக்குப் புகட்டியுள்ளாஞே என்றும் வியக்கின்ருேம். வாலண்டினு தெரஸ்கோவ (Valendina Thereskova) என்னும் உருசிய நாட்டு மகள் ஏற்கனவே அவனிதனை வலம்வந்து அண்ட வெளியில் பயணம் செய்த முதற் பெண் என்னும் சிறப்பை அடைந்ததுமட்டுமின்றி நிலவுக்குழவி வெறுங்கனவாக முடியாதென்றும் மெய்ப்பித்து விட்டார்.

அறிவியல் மறு மலர்ச்சிக்குக் காரணமான பேரறிஞர்களுள் ஒரு சிலரே பெண்களாக இருக்கக் காண்கின்ருேம். ஹென்றி பெக்கூரல் (Henri Beaquerel) என்னும் பிரான்சு நாட்டு இயற்பியல் வல்லுநரின் யுரேனியம் கண்டு பிடிப்பைத் தொடர்ந்து கதிரியக்க ஆராய்ச்சியில் ஈடுபட்ட போலந்து நாட்டு கியூரி அம்மையார், அவர் கணவர் பியரி கியூரியாருடன் 1898-ஆம் ஆண்டு கதிரியக்கத் தனிமங்களிலேயே மிக இன்றியமையாத தாகிய ரேடியத்தைக் கண்டுபிடித்து அதற்காக நோபல் பரிசும் பெற்ருர். சில ஆண்டுகட்குப் பின்னர் வேதியியலுக்கான நோபல் பரிசும் அவருக்கே அளிக்கப்பட்டது. இருமுறை நோபல் பரிசு பெறும் சீரிய பெருமையுற்றவர் ஒரு பெண் என்பது பெண்ணுலகிற்கிற்குப் பெருமை சேர்க்கின்றது. மேலும் தான்பெற்ற தலைமகளாகிய ஐரின் கியூரியாரையும் நோபல் பரிசு பெற வைத்தது அவ் வம்மையாரின் பெருஞ்சிறப்புக்கும் அறிவுக் கூர்மைக்கும் சான்ருகும்.

அநேகமாக அனைத்துத் துறைகளிலும் கியூரி அம்மைக்கு முன்பும் பின்பும் இதுவரை தனி ஆராய்ச்சியில் ஈடுபட்டுப் புதுக்

Our Hearty Deepavali Greetings to all:

DEPENDABLE SERVICE

OUR RANGE OF PRODUCTS

SF

MONO BLOCKS MOTORS PUMPS
SUGARCANE CRUSHERS
AND SIRENS

SOLD AND SERVICED THROUGHOUT INDIA FOR OVER 30 YEARS

PHONES: 22935 & 35390 GRAMS: "FOUNDRY"

Subbiah Foundry

POST BOX 6314

AVANASHI ROAD, COIMBATORE-641037

கண்டு பிடிப்புகளுக்குக் காரணமான வேறு மகளிரைக் காண முடியவில்லை. ஆய்வுத்துறைவரையில் உயர்கல்வி கற்போரின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும் அவர்கள் அறிவு விளக்கத்திற்காகவும், சில சமயங்களில் தொழில் நோக்கோடும் கற்று நின்று விடுகிறார்கள். குடும்பப் பொறுப்புக்களில் பெரும்பான்மையும் மகளிரைச் சார்ந்து விடுவதினால் இந்நிலை யேற்படுகின்றது. குழந்தை வளர்ப்பும் குடும்பத்தைப் பேணுதலும் அவளுடைய கருத்தையும் காலத்தையும் முழுமையாகக் கவர்ந்து கொள்வதனால் அவளால் ஆய்வுக்கூடங்களில் தங்கித் தனி ஆய்வில் ஈடுபடமுடிவதில்லை. எனவேதான், அனைத்துத் துறைகளிலும் மகளிர் பலர், பேரறிஞர்களாகத் திகழ்ந்து தொண்டாற்றி வந்தபோதிலும் பல கியூரி அம்மையார்களைக் காணமுடிவதில்லை. மாறிவரும் சமூகச் சூழலில் இனி இந்நிலையும் மாறலாம். தேசிய அறிவியல் திறனாய்வுத் தேர்வில் (National Science Talent Search Examination) இவ்வாண்டு அம்தா குப்தா (Amita Gupta) என்னும் பெண் முதலாவதாகத் தேறியிருப்பது பல கியூரிகள் மலரத் தொடங்கிவிட்டனர் என்பதைக் காட்டுகின்றதன்றோ!

இறுதியாக அறிவு நுட்பத்தில் மட்டுமன்றி, விடா முயற்சியிலும், துணிவிலுங்கூடப் பெண் சற்றும் குறைந்தவளல்லள் என்பதை மெய்ப்பிக்கும் வகையான் இச்சிறப்பு மிக்க ஆண்டில் மே மாதம் 16-ஆம் நாள் ஜப்பான் நாட்டு திருமதி ஜுன்கோ தாபை (Mrs. Junko Tabai) என்னும் 35 வயதான தாய் எவரெஸ்ட் சிகரத்தை வெற்றி கண்டது அருமையினும் அருமையாம். □

ELGI
Equipments Ltd.

INDIA HOUSE TRICHY ROAD COIMBATORE 641018

Manufacturers of:

AIR COMPRESSORS &
SERVICE STATION EQUIPMENTS

Branch Office:

Madras	:	24/6 Pantheon Road, Egmore, Madras-8
Calcutta	:	30, Chittranjan Avenue, Calcutta-12
Bangalore	:	3/21, Millers Tank Bund Road, Kaveriappa Lay out, Bangalore-18
Secunderabad	:	5-1-41-42 Rashtrapathi Road, Secunderabad-3

Distributors:

Turner Hoare & Co. Ltd., Bombay

Service Equipment Company,
15, Tolstoy Marg, New Delhi 1

Eastern Motors (P) Limited,
A. T. Road, Gauhati, Assam

Subbaraya & Co., Limited, Margoa, Goa

Mathurai Tools & Machinery Co., Madurai

Associated Engineering Corporation (P) Ltd.,
Trivandrum, Quilon, Kottayam, Ernakulam and
Calicut.

பெண்களும் சமுதாயமும்

''ஒரு ஆணுக்குக் கல்வி கற்பிப்பது அவனுக்கு மட்டுமே பயன் தரும்; ஆனால் ஒரு பெண்ணுக்குக் கல்வி கற்பிப்பது அவளுடைய குடும்பத்துக்கு மட்டுமன்று, அவள் சார்ந்து வாழும் சமுதாயத்துக்கே பெரும் பயன் தரும்'' என்ற இக்கருத்தைப் பல அறிஞர்கள் தெளிவாக எடுத்து விளக்கியுள்ளார்கள்.

இந்நூற்றாண்டில் காந்தியடிகள் பெண்களைப் பெருமளவில் இந்திய நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுத்தியதுடன், பெண்கள் சமுதாயத்தின் மாறுதலுக்கும் அடிகோலினார். இராசாராம் மோகன்ராய், பெரியார் இராமசாமி போன்றவர்கள் பெண்கள் சமுதாயத்தில் நல்லதொரு புரட்சியை உருவாக்கினார்கள். இவர்கள் பெண்கள் சமுதாயம் முன்னேறுவதற்குத் தடைக்கற்களாக இருந்தனவற்றை அகற்ற பெரும்பாடுபட்டனர்.

எத்துணையோ எண்ணற்ற பெரியார்கள் இத்துறையில் எவ்வளவோ இடர்ப்பாடுகளுக்கிடையில் பணியாற்றினாலும், பெண்கள் சமுதாயம் சில அடிகள் தான் முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைக்க முடிந்துள்ளது.

தொழில்துறை வளர்ச்சி பெறுவது போன்றே தொழிற்கல்வியும் வளர்ச்சி பெறுதல் வேண்டும். தொழில் துறைகளுக்கும், வணிகத் துறைகளுக்கும் பெண்களின் பணி தேவைப்படுகின்றது. பெண்கள் இத்தகைய துறைகளில் பொறுப்பான பதவிகளை ஏற்கும்போது அந்நாடுகளின் சமுதாய நிலையும் நல்லதொரு மாற்றத்தைப் பெறுகின்றது. தொழிற்பயிற்சி நிறுவனங்களான தொழில் நுட்பக் கல்லூரிகளும் (பாலிடெக்னிக் கல்லூரிகளும்) பொறியியல் கல்லூரிகளும் இத்தகைய பெண்களை உருவாக்குகின்றன. தொலைபேசி நிறுவனம்

திருமதி சுந்தரி வெள்ளையன்

இவர் சென்னை அரசினர் மகளிர் பாலிடெக்னிக்கின் முதல்வராகப் பணிபுரிந்து வருகிறார்; பொறியியல் கல்லூரியில் மகளிர் கற்கத் தயங்கிய காலத்தில் துணிவாகப் பொறியியல் கல்வி பயின்று பி. இ. பட்டம் பெற்றுக் கோவை அரசினர் பாலிடெக்னிக்கில் விரிவுரையாளராகவும், அனைத்திந்திய வானொலி நிலையத்தின் நிலையத் துணைப் பொறியாளராகவும் பணியாற்றியுள்ளார்.

கட்டடக்கலை, வானவெளி ஆராய்ச்சி, ஆடைகள் உற்பத்தி, வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம், அகில இந்திய வானொலி நிலையம், தனிப்பட்ட நிறுவனங்கள் ஆகியவற்றில் பெண்கள் பணியாற்றும் வாய்ப்புகள் உள்ளன.

1958-ஆம் ஆண்டில் பெண்கள் கல்வி வளர்ச்சி பற்றி ஆய்வதற்கு அமைந்த தேசியக் குழு பெண்கள் தொழிற்கல்வி வளர்ச்சிக்கென தனியாகத் தொழிற் கல்வி நிலையங்கள் தோன்ற வேண்டியதன் இன்றியமையாமையை உணர்ந்து பரிந்துரைத்த இக்குழுவின் பரிந்துரைக்கேற்ப 1961-இல் 24 பாலிடெக்னிக் கல்லூரிகள் நாடெங்கிலும் ஏற்படுத்தப்பெற்றன. இக்குழு பத்து விதமான பாடமுறைகளைப் பரிந்துரைத்தது. ஒவ்வொரு பாலிடெக்னிக் கல்லூரியும் 5 அல்லது 6 பாட முறைகளை மேற்கொண்டன. இவை பெண்களுக்கென்றே ஒதுக்கப்பட வேண்டும் என்ற கருத்தோடு ஆய்ந்து உருவாக்கப்பட்டவையாகும்.

நம்முடைய தொழிற்கல்வி முறையில் சில மாற்றங்கள் தேவை. நீண்டகாலப் படிப்பு முறைகள் மாற்றியமைக்கப்பட்டு உடனே பயன் தரத்தக்க குறுகிய கால படிப்பு முறைகள் உருவாக்கப்பட வேண்டும். பெண்கள் தங்கள் ஓய்வு நேரங்களில் சிறு தொழில்களைச் செய்து பயனடையும் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். அத்தொழில்கள் வானொலிப் பெட்டியின் உறுப்புகளை இணைத்தல், டெலிவிஷன் பெட்டியின் உறுப்புகளை இணைத்தல் போன்ற தொழில் வல்லமை பெறுமாறு அமைதல் வேண்டும்.

இன்று இந்தியாவில் வேளாண்மைத்துறையிலும் தொழில் துறையிலும் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்வதிலும், தரமான பொருள்களை நியாயமான விலைக்கு வழங்குவதிலும் நாம் அக்கறை செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். இவ்விதம் உற்பத்தியாகும் பொருள்களை வெளிநாடுகட்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியை ஈட்ட வேண்டிய நிலையிலும் இருக்கின்றோம். நம்முடைய அன்னை நாடு நம் நாட்டிலுள்ள ஆண்களையும் பெண்களையும் இப்பணிக்கு நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறது. படித்த பெண்டிரின் முழு உழைப்பையும் நாம் செம்மையான முறையில் இப்பணிகட்குப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். பெண்களுடைய திறமையும், ஆற்றலும் வசதியின்மை காரணமாகக் குறையாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது சமூகத்தின் பொறுப்பும் அரசின் கடமையுமாகும்.

இந்தியாவில்—படித்த பெண்களுக்குள்ள இடர்ப்பாடுகளை, இங்கே காண்போம்.

1. பெண்கள் உழைத்துப் பொருளீட்டும் வேலை வாய்ப்புக்களில் வழிவகைகள் குறைவு.

2. கிராமப்புறங்களில் பணிபுரியும் பெண்கட்குக் குடியிருப்பு வசதியின்மையும் பாதுகாப்பற்ற தன்மையும்.

3. பணிபுரியும் பெண்கள் தங்கு விடுதிகள் பற்றாக்குறை.

● 13 மாத கர்ப்ப காலம்

பிரிட்டனில் ஒரு பெண் 13 மாத கர்ப்பத்திற்குப் பிறகு குழந்தை பெற்றாள். இதுவே இவளுடைய முதல் குழந்தையாகும்.

13 மாதம் வரை கர்ப்பத்துடன் இருந்ததாக உலகில் இதுவரை செய்தியில்லை. ஆனால், இதற்குமுன் ஒருத்தி 12 மாதம் 25 நாள்வரை கர்ப்பமுற்றிருந்து குழந்தை பெற்றிருக்கிறாள்.

---

4. ஆண்களோடு இணைந்து பணியாற்றுவதில் பெற்றோர்களுக்கு விருப்பமின்மை.

5. திருமணமான பெண்களை வேலை வாய்ப்பளிப்போர் விரும்பாமை.

6. வெளியூர்ப் பயணம் செய்வதில் பாதுகாப்பற்ற தன்மை.

7. பணி புரியும் பெண்களுக்கு மதிப்புக் குறைவு உருவாக்கும் ஆடவர்களின் போக்கு.

இவ்வளவு இடர்ப்பாடுகளுக்கிடையில்தான் தமிழகத்திலும், இந்தியாவிலும் பெண்கள், அரசியல்கல்வி, பொறியியற்கல்வி, மருத்துவம், சட்டம், காவல், நிர்வாகம், நுண்கலைகள் ஆகிய துறைகளில் துணிவுடன் திறமையாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். பெரும் பதவிகளை நிர்வகித்து வருகின்றனர்.

இந்தியப் பெண்கள் மரபுவழிப் பழக்கங்களில் ஊறியவர்களாக விளங்குகின்றனர். இருளுக்குப் பின்னே ஒளி என்பது போன்று இப்பொழுது இப்பெண்கள் வாழ்வில் புத்தொளி ஏற்பட்டுள்ளது, விடுதலை பெற்ற இந்தியாவில் பெண்களின் வாழ்வில், மாற்றம் அடிப்படையிலான புத்துலக மாற்றம் உருவாகியுள்ளது இந்திய அரசியல் சட்டம் சம உரிமையைப் பெண்களுக்கு அளித்துள்ளது, சரிசம வாய்ப்புகளும் பெண்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன பெண்கள் தம்முடைய வளர்ச்சியைப் பெருக்கிக் கொள்வதற்கு இந் நல்வாய்ப்புக்களை நல்லவண்ணம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு' என்றெல்லாம் பேசிவந்த சமுதாயம், இன்றைக்கு வாழ்க்கையில் எல்லா முனைகளிலும் பெண்களுக்கு ஓரளவுக்கேனும் வாய்ப்பளித்துள்ளமைக்குப் பெண்கள் நன்றி செலுத்த வேண்டும். இற்றை நாளில் பெண்கள் எல்லாப் பணிகளிலும் பங்கு பெற்றுள்ளனர். இது பெண்களின் திறமைக்குச் சான்றாக விளங்குகிறது. பெண்கள் எந்த மிகப் பெரிய பணியையும் பொறுப்பேற்றுச் சிறப்பாக நடத்த முடியும். இதற்கு நம்முடைய இந்தியப் பிரதமர் மிகச் சிறந்ததோர் சான்றாகத் திகழ்கிறார். பெண்கள் நுண்ணறிவிலும் சாதுரியத்திலும் ஆட்சித் திறனிலும் சிறந்தவர்களாக விளங்க முடியும் என்பதை எடுத்துக்காட்டியதோடு, கடினமான காலகட்டங்களில் நாட்டையும் திறம்பட நிர்வகிக்கும் ஆற்றல் பெற்றவர் என்பதை அவர் உறுதிப்படுத்திக் காட்டிவிட்டார்.

சிறப்பாகக் குறிப்பிடத்தக்க அளவுக்குப் பணியாற்ற முடியும் என்பதை இந்தியப் பெண்கள் நிரூபித்து வருகின்றனர்; பொறியாளர்களாகவும், மருத்துவர்களாகவும் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றனர். அதுமட்டுமன்றி இந்தியப் பெண்கள் தம்முடைய தலைமைத் தன்மையைப் பல்வேறு கட்டங்களில் நிலைநாட்டியும் வருகின்றனர். □

Premier Equipments and Agencies

5/5 Head Quarters Road
Coimbatore 641018

Grams: "PREEQUIP" Phone: 30977

DISTRIBUTORS FOR:

"NORMA" Bearings,
VENKATESA Paper Cones
and Mill Boards,
Hoechst Dyes & Chemicals,
KDI Bakelite, Drums
SIGMA Machinery,
SPECIAL PAINTS

மகளிரும் உளவியலும்

உளமறிந்து நடத்தல் என்பது மகளிருக்கு எல்லாம் வல்ல இறையருளால் இயல்பாகவே தரப்பெற்ற பெரும்பேறுகளில் ஒன்ருகும். இக் கட்டுரை, மகளிர் சுற்றுப்புறச் சுழல்களுக்கொப்பப் பல்வேறு நிலைகளில் மற்றவர்தம் இயல்புணர்ந்து வாழ்க்கை நடத்தும் தன்மையை விளக்கும்.

முதலில் பெற்ருேரின் அன்பரவணைப்பை விடுத்து மங்கல மணம் முடிந்து புகுந்தவீடு செல்லும் பெண்ணை எடுத்துக் கொள்வோம். அங்கோ முற்றிலும் வேற்று முகங்கள்; முன்பின் அறியாதவர்கள். அவ் வீட்டிலுள்ளோர் அனைவருக்கும் ஏற்றவண்ணம் நடந்துகொள்வது அவ்வளவு எளிதன்று. அலுவலகப் பணிக்குச் செல்லும் ஆரணங்காயின், பகல் முழுவதும் வெளியே சென்று பணிபுரிந்துவிட்டு வந்து வீட்டிலும் உதவி செய்தாக வேண்டும். வீட்டிலேயே உள்ள பெண்ணுயின் மற்றவர்களின் மதிப்பையும், பாராட்டையும் பெறும் முறையில் எல்லா வேலைகளையும் செய்து முடிக்கவேண்டும்.

பொறுமை, அனுசரித்துப் போதல் போன்ற குணங்கள் பெண்ணுக்கே ஆகிவந்தவையாம். கணவன் எத்தகைய இயல்பினனுயினும் அவன் கோபத்திற்கு இலக்காகாவாறு குறிப்பறிந்து அவன் மகிழும்வண்ணம் நடந்தாக வேண்டும். உணர்ந்து நடக்கும் அறிவு பெண்டிர்க்கே உரியதாக உள்ளதாற்ருன் அவர்கள் சிறந்த தலைவியரால் இலங்க முடிகிறது.

திருமதி ஆர். சந்தானலட்சுமி

இவர் உளவியல் துறையில் கலை வல்லுநர் பட்டம் பெற்றவர்; பட்ட வகுப்புத் தேர்வில் உளவியல் துறையில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதல் இடம் பெற்றுத் தேர்ந்தவர்; பூ. சா. கோ. பொறியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணிபுரிந்து வருகிருர்; தற்போது மாலைக் கல்லூரியில்சேர்ந்து எம்.எம்.எஸ்.பட்டம்பெறப் பயின்று வருகின்ருர்.

இரண்டாவது நிலை தாய்மை, இங்கும் அவள் பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்த தன் அமிழ் தினுமினிய மழலைச் செல்வத்தை வளர்த்து உருவாக்கும் பொறுப் பையேற்கிருள். தன்குழந்தையின் உணர்ச்சிகளைப் புரிந்துகொள் வதில் தாய்க்கு இணையானவர் வேறு ஒருவருமில்லை. 'பால் நினைந்தூட்டும்' தாய் நல்ல குணங்களையும் சேர்த்தே ஊட்டு கிருள். தாயின் வளர்ப்பைப் பொறுத்தே குழந்தையின் எதிர் காலம் அமைகிறது.

குழந்தையைத் தூங்கவைக் கக் கதை சொல்லும் தாய், அக் குழந்தைக்கு வீரம், பொறுமை, அன்பு, காதல், நெகிழ்வு போன்ற உணர்ச்சிகளையும் சேர்த்துப் புகட் டுகிருள். தாயின் மடியில் கற்கும் கல்வியே குழந்தையின் மன வுணர்வுகளின் வளர்ச்சிக்கு அடிப் படையாகிறது. பிற்காலத்தில் அவன் ஒரு சிறந்த ஒழுக்கமுள்ள குடிமகனுக வாழத் தயார் செய் வதும் தாயின் பொறுப்பே. குழந் தையின் உளவுரம் உடலுரம் இரண்டையும் பேணிவளர்ப்ப வளும் தாயே.

பொதுவாகத் தொழிற்சாலை களிலும் மற்றுமுள்ள அலுவலகங் களிலும் உளவியலின் தேவை பற்றிச் சொல்லப்படுகின்றது. எவ்வாறு மற்றவர்களிடமிருந்து மிகுதியான உழைப்பைப் பெறு வது; பணிபுரிவர்தம் செயல்திறனை முடுக்க எங்ஙனம் அவர்களை ஊக்கு விப்பது என்பன போன்றவை அதில் பேசப்படுகிறது. தொழிற் கூடங்களில் பல்வேறு துறை களிலிருந்தும் நிலைகளிலிருந்தும் வருவோரை நிருவகிக்க உளவியல் தேவைப்படுதல்போல் வீட்டின்

● **பணி**

பணிக்கு அமைதி வேண்டும். அமைதியை உணர்த்துவது தொழுகை. பிறவி எற்றுக்கு? விடுதலைக்கு. விடுதலைக்குப் பணி வேண்டும். பணியின் விளைவே விடு தலை. பயன் கருதா அன்புப் பணிக்கு நிலைக்களனு யிருப்பது இல்வாழ்க்கை.

இல் வாழ்க்கை, காதலை அடிப்படை யாகக் கொண்டது. காதல் தன்னலமற்ற தூய்மை வாய்ந்தது. தன்னலமற்ற இடத் தில் எழுவதே பணி. பயன் கருதாப் பணி யின் எழுச்சிக்கென்று இயற்கையில் காதல் அமைந்து கிடக்கிறதென்று அகவிய லுணர்ந்தார் கூறுவர்.

— திரு. வி. க.

கண் உள்ளவரை நிருவகிக்க வும் உளவியல் தேவைப்படுகிறது. ஆனால் இதனைக் கல்லூரி சென்று மகளிர் கற்பதில்லை. இயற்கை யிலேயே அந்த ஆற்றலை ஆண் டவன் அவர்களுக்கு வழங்கி இருக்கின்முன்.

சோர்வுற்று வீடுதிரும்பும் கண வன், பள்ளி விட்டு வீடுவரும் குழந்தை, வீட்டில் நோய்வாய்ப் பட்டுள்ள பெரியோர்— இவர்கள் எல்லோரையும் பேணிக்காப்பது அவ்வளவு எளிதன்று. வயதான காலத்திலும் பெண் தன் பேரக் குழந்தைகளை வளர்ப்பதில் ஈடுபடு கிருள். மணமானபின் பெண் தனக்கென வாழ்வதில்லை. மற்ற வர்களுக்காகவே பணிசெய்து அவர்தம் பாராட்டைப் பெற்று வாழ்கிருள். மற்றவர்களின் மன நிறைவே அவளது நோக்கமாய் இலங்குகிறது. கல்லூரி சென்று பயிலாமலேயே உளவியலில் தேர்ச்சி பெற்றுள்ள மகளிருக்கு உளவியல் இயற்கையிலேயே கைவரப்பெற்ற பெருநற்பேறு எனலாம்.

இலக்கியம் வளர்த்த மகளிர்

திருமதி பு. பா. இராச இராசேசுவரி

''பெண்ணென்று பூமிதனில்
பிறந்துவிட்டால்—மிகப்
பீழை இருக்குதடி தங்கமே தங்கம்''

என்று பாடினான் பாரதி. பெண்டிர்க்குச் சமுதாயம் அளித்த சோதனைகளும் வேதனைகளும் அத்துணை! எனினும், இவற்றை எதிர்த்து நின்று பாரதப்பெண்கள் நாட்டிற்குப் பல்வேறு துறைகளில் ஆற்றிய தொண்டு அரியது; பெரியது!

பிறன்மனைவி அறிவிற் சிறந்தவளாக இருப்பதனை அனுமதிக்கும் ஆண், தன் மனைவி தன்னிலும் அறிவின் மிக்காளாக இருப்பதனை வரவேற்பதில்லை. பெண்ணினத்திற்குஉரிமை விழையும் ஆண்மகன் தன் மனைவி உரிமை பெறுவதை விரும்புவதில்லை. வீட்டிற்குள்ளே பெண்ணைப் பூட்டி வைக்கும் விந்தை மனிதர் வாழ்ந்த பாரதத்தில் பெண்கள் இலக்கிய வளர்ச்சிக்குப் பணிபுரிந்த பான்மையை எண்ணிப்பார்க்க வியப்பே மேலிடுகிறது.

''பெண்ணுக்கு ஞானத்தை
வைத்தான்—புவிப்
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சிலமூடர்—நல்ல
மாதர் அறிவினைக் கெடுத்தார்''

என்று பாரதி புலம்புவதும்,

''கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்திக்
காட்சி கெடுத்திடலாமோ
பெண்கள் அறிவை வளர்த்தால் வையம்
பேதமை யற்றிடும் காணீர்''

என்று அறிவுரை கூறுவதும், நம் உள்ளத்தைத் தொடுவன. பெண்கள், குடும்பத்தை நல்லதொரு பல்கலைக் கழகமாக ஆக்க வல்லவர் என்பதை உணராது, மகளிரின் மாண்புறு அறிவை வளர்க்காமையால் ஏற்படும் மாபெரும் இழப்பைக் கருதாது மன்பதை இருந்த காலமொன்று உண்டு. பெண்கள், கட்டுப்பெட்டிகளாக 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்றிருந்த நிலை-இடைக்காலத்திலே ஏற்பட்டது. மைத்ரேயி, கார்க்கி போன்ற வேதகால மகளிர், யாக்ஞவல்க்யரோடு வாதிடுகிற அளவுக்கு அறிவு வளம் பெற்றிருந்ததையும், அண்மைக்காலத்தே ஆங்கில மொழியில் அழகிய கவிதைகளைப் பொழிந்து தள்ளிய கவிக்குயில் சரோஜினியின் ஆற்றலையும் நம்மால் மறக்க இயலாது.

'பொற்காலம் எனப் புகழ் பெற்றிலங்கும் சங்க காலத்தே எத்தனையோ மகளிர் தமது அழகிய பாடல்களால் தமிழ் இலக்கியத்தை வளப்படுத்தியிருக்கின்றனர். அறிவால் அமைவது ஆடவர் வாழ்வாயின், அன்பால் அமைவது மகளிரது வாழ்வு. அவர்களது பாடல்கள், அனுபவ ஆழமும், வலிமையும் கொண்டு தனித்தன்மையோடு பொலிகின்றன. அவலமோ, வீரமோ, நகையோ இளிவரலோ—எச்சுவைப்பாட்டா

இவர் நாமக்கல் கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கல்லூரி முதல்வர்; டாக்டர் மு. வ. அவர்களின் மாணவி; தமிழார்வம் மிக்க பேராசிரியர்; சீர்திருத்த மனப்பாங்குடைய உரவோர்; முதியோர்க்கான இலக்கியம் எழுதும் திறம் பெற்றவர்.

யினும் சங்கமகளிர் பாடல்கள் ஈடும் எடுப்புமின்றி இலங்குகின்றன.

473 சங்கப்புலவர்களில் 36 பேர் பெண்பாற் புலவர்கள் என்பதும், 2279 சங்கப்பாடல்களில் 169 பாடல்கள் மகளிர் பங்கு என்பதும் ஆகிய இச்செய்திகள் பெண்குலத்திற்குப் பெருமை தருவனவாகும்.

இவர்களுள் ஒன்பது மகளிர் புறப்பாடல்கள்மட்டுமே இயற்றியுள்ளனர். இப்பெண்பாற் புலவர்கள் அகவாழ்வின் உயிர் உணர்ச்சிகள், உயர் நோக்கங்களை அறிந்திருந்ததோடு புற

புகை பிடித்தல் பெண்களுக்குப் பெருந்தீமை

மாரடைப்பால் இறப்போருள், ஆண்களைவிடப் பெண்களே அதிகமாகி வருவதாகத் தோன்றுகிறது. இதற்குக் காரணம் அவர்கள் அதிகமாகச் சிகரெட் பிடிப்பதாக இருக்கலாம். மாரடைப்பால் திடீரென இறந்த பெண்களில் நூற்றுக்கு 62 பேர், அளவுக்கு மிஞ்சி சிகரெட் பிடித்தவர்கள் என ஓர் ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது. நியூயார்க் மாநிலத்திலுள்ள புருக்டேல் மருத்துவ நிலையம், வெஸ்ட் செஸ்டர் மாவட்ட மருத்துவ அதிகாரி அலுவலகம் ஆகியவற்றைச் சேர்ந்த ஆய்வாளர்கள் இந்த ஆய்வை மேற்கொண்டனர். மாரடைப்பைப் பொருத்தவரை, சிகரெட் பிடிப்பது ஆண்களைவிடப் பெண்களுக்குக் கேடு மிக்கது என்று நம்புகிறார்கள் அவ்வாய்வாளர்கள்.

வாழ்வுக்குரிய அரசியல், ஆட்சிமுறை, போர்கள் ஆகியன பற்றிய அறிவும், ஆர்வமும் உடையவர்களாக இருந்தார்கள் என்பதும் இவர்தம் பாடல்களால் தெள்ளிதின் புலனாகின்றன.

அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை - ஆகிய அகத்துறை நூல்களில் மகளிர் இயற்றிய பாடல்களின் எண்ணிக்கை 100 ஆகும். அவற்றில் குறுகிய அடிவரையான் அமைந்த குறுந்தொகையில் 60 பாடல்களும், நீண்ட அடிவரையான் அமைந்த நெடுந்தொகை (அகநானூறு)யில் 21 பாடல்களும் இடம்பெற்றிருப்பதை நோக்க, ஆடவர் விரித்துக் கூற விரும்புவனவற்றை மகளிர் சுருங்கக்கூறும் ஆற்றல் பெற்றவர் என்பது அறியக்கிடக்கின்றது.

சங்க இலக்கியத்திற்கு ஆடவர் ஆற்றிய பணியினும் மகளிர் பணியே மிகுதியும் இருக்கக்காண்கிறோம். ஆயினும், அன்றைய சமுதாயம் , பாடல் புனைதற்கேற்ற கூர்த்த மதியினையும் நுண்ணுணர்வினையும், வாய்ப்பு வசதிகளையும், ஆடவர்க்களித்தாற் போன்று மகளிர்க்கு நல்கவில்லை. பேதைமைப்பண்பே பெண்மைப் பண்பென்றும் இப்பண்பே காதலுக்கும் திருமணத்திற்கும் ஏற்றதென்றும் சமுதாயம் அமைத்துக் கொண்டிருந்தது. அன்று, ''அறைவீடு கழகமாகவில்லை— அவள் வாத்திச்சி ஆகவில்லை'' கணவனே குழந்தைகட்குக் கல்வி கற்பித்தான். மனைவி 'ஈன்று புரந்தருதல் என்றலைக்கடனே' என்று எல்லை வகுத்துக்கொண்டாள்.

''கல்வி இல்லாத பெண்கள்
களர்நிலம் அந்நிலத்தில்
புல்வி ளைந்திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைதலில்லை
கல்வியை யுடைய பெண்கள்
திருந்திய கழனிஅங்கே
நல்லறி வுடைய மக்கள் நவிலவோ நான்''

என்று பாரதிதாசன் எண்ணுவது போல, அன்று அவர்கள் எண்ணவில்லை. அறிவுடையோராக அவர்கள் இருக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படவில்லை. அறிவு வளர்ச்சிக்கான அனைத்து வழிகளும் அவர்களுக்கு மறுக்கப்பட்டு மறைக்கப்பட்டாலும் அவர்களுள் இந்த 36 பெண்கள் அறியாமையாகிய விலங்கை உடைத்தெறிந்தார்கள். சமுதாயம் விதித்திருந்த தடைகளைத் தகர்த்தெறிந்தார்கள். ஆடவர்க்கே உரித்தென வழங்கிவந்த அறிவின் அகலமும் ஆழ்ந்த புலமையும், தமக்கும் உரித்தென முழங்கும் புரட்சிப்போக்குக் கொண்டிருந்தனர். ஆடவர் போன்று அறிவும் தெளிவும் நுண்மையும் திண்மையும் பெறுவதில் மட்டுமின்றி அனைத்துத் துறைகளிலுமே புரட்சிப்போக்கு அக்கால மகளிரிடையே காணப்பட்டது. இப்பெண்பாற் புலவர்கள் பெரும்பாலரின் வாழ்க்கை பொதுவிதிகளைப் புறங்கண்டதாகவும், இயல்புக்கு முரண்பட்டதாகவும், அமைந்திருந்ததை அவர்களின் வரலாறே நமக்குக் காட்டுகின்றது.

இதற்குத் தக்க சான்றாகத் திகழ்வது ஔவையின் வாழ்க்கை. அவர் ஒரு நாடோடியாக நாடு முழுவதும் சுற்றித்திரிந்தார். எத்திசைச் செலினும் அத்திசைச் சோறு என்ற கொள்கை அடிப்படையில் நாடுவிட்டு நாடுசென்று மன்னர்களைக்கண்டு அவர்களைப் பாடிப்பரவினார். அவர் ஆண் அல்லாதபோதும் அதியனின் நட்புக்குரியரானார். அதியனைஇழந்துவிட்ட கையறு நிலையில்,

''நரந்தம் நாறுந் தன்கையால்
புலவுநாறு மென்றலை தைவரு மன்னே''

என்று ஊனுருகிப் பாடுவதில் அந்த நட்பின் உயர்வினையும் ஆழத்தினையும் உணர்கின்றோம். நாவன்மையுடன் மனத்திண்மையும் மிக்கிருந்தமையால் அதியன் சார்பில் தொண்டைமான்பால் தூது சென்றார். அரசியல் தூது சென்றவர்களில் ஔவையைத் தவிர வேறொரு பெண்ணை வரலாறு காட்டவில்லை. இறுதிக் காலம்வரை இல்லறத்தை ஔவை ஏற்றதாகத் தெரியவில்லை. சங்ககால மகளிர்க்குள் ஔவையின் வாழ்க்கை நிச்சயம் ஏனையோர் வாழ்வினின்றும் மாறுபட்டதாக இருந்தது.

மகளிரும் மாணவியராகிக் கல்வி கற்கலாம் என்ற நிலை இல்லாதிருந்த காலத்தில் காக்கைபாடினியார் அகத்தியரின் மாணவர் பன்னிருவருள் ஒருவராய்த் திகழ்ந்தார் என்ற செய்தி புதுமைச் செய்தியேயாம். விதவைக் கோலத்தை வெறுத்து, வெந்தீயில் கணவனொடு எரிமூழ்க முனைந்த பெருங்கோப்பெண்டின் செய்கை புதுமைச் செய்கையேயாம். ஈமத்தீயில் இறங்கு முன்னர் இவள் பாடிய புறப்பாட்டு பெண்மையின் திண்மைக்குத் தக்கதோர் எடுத்துக்காட்டு.

பாரி மகளிர் இருவர் இணைந்து பாடிய பாடல் ஒன்றுதான். எனினும் பாடல்வன்மை அவர்கட்குக்

கைவந்த கலையாகத்தான் இருந்தது என்பதற்கு இஃதொன்றே ஏற்ற சான்று:—

''அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின்
எந்தையு முடையேமெங் குன்றும்
பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார்யா
மெந்தை யுமிலமே''
— புறம் 112

ஐந்தே அடிகளில் அமைந்த அக் குறுகிய பாடல் அவல உணர்ச்சியின் எல்லையில் எழுந்தது. இத்தகு புலமைநலம் சான்ற பாரி மகளிரைக் கபிலர், விச்சிக்கோ, இருங்கோவேள், ஆகியோருழை அழைத்துச்சென்று மணம் புணர்க்கக் கோரியபோது இவர்களது புலமை நலத்தினைப் புகன்றாரில்லை. பாரி மகளிர் எனும் அளவில்தான் அறிமுகம் நடந்ததே தவிரப் பாவல்லவர்கள் எனப்பேசப்படவில்லை. மதிநலம் மிக்க மகளிரை ஆடவர் ஒருபோதும் விரும்பியிருக்கமாட்டார்கள். அதனாற்போலும் கபிலர் இதை மறைத்துரைத்தார்.

சங்ககால மகளிரிற் பெரிதும் வேறுபட்டு நிற்பவர் பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணை என்ற புலவர். அவர் தமக்குரிய வாழ்க்கைத் துணைவனைத் தாமே தேர்ந்தார். அதுவே இரங்கத்தக்க நிகழ்ச்சியாக அவர்வாழ்வில் முகிழ்த்தது. காலம் கனிந்து வரவில்லை. காதல் கட்டுக்குள் அடங்கவில்லை. பெண்மைக்குரிய நாணத்தை மீறித் தன் காதலை—கைக்கிளையாயினும் --பிறர்க்குப் புலப்படவே செய்தார். உயிரினும் சிறந்தது நாணுயினும் நாணினும் செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்ததன்றோ? எனவே உள்ளத்துணர்வு, புதுமட்குடத் திட்ட நீர் புறத்தே கசிந்து பெருகுவதுபோல உரையாக ஊற்றெடுப்பதில் வியப்பில்லை. அவர் தம் அவல உணர்வின் அழியாத படப்பிடிப்புக்களாக அமைகின்றன வரும் பாடல்வரிகள்;

''என்னை, புற்கை யுண்டும்
பெருந்தோ ளன்னே
யாமே. புறஞ்சிறை இருந்தும்
பொன்னன் னம்மே''
''அடிபுனை தொடுகழல்
மையற் காளைக்கென்
தொடிகழித் திடுதல் யாயஞ் சுவலே
அடுதோள் முயங்கல் அவைநா ணுவலே
என்போற் பெருவிதுப் புறுக என்றும்
ஒருபாற் படா தாகி
இருபாற் பட்டவிம் மையலூரே''

கழார்க்கீரன் எயிற்றியார் என்ற வேடுவர் குலத்தைச் சார்ந்த புலவர் பெண்மணி தம் குலத்தினர் அல்லாத கீரன் என்பாரை மணந்து புதுமை புரிந்தார்,

வேறுபட வாழ்ந்தவர்களில் வெள்ளிவீதியார் ஒருவர். பொருள் வயிற்சென்ற காதலன் நெடுங்காலந் திரும்பவில்லை. பிரிந்த கணவனை மீண்டும் பெற முடியாமல் புலவர் வெள்ளி வீதியார் தவித்தார்.

சங்கப்பாடல்கள், வரையறுக்கப்பட்ட விதிவழியே— மரபு தழுவியே அமைந்திருந்தன. அகப்பாடல்கள் ஐந்திணைப்பாகுபாட்டோடு சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறுமலும் முதல், கரு, உரி என மூன்று பொருள்களை நுவல்வனவாயும் அமைந்தமையால் புலவர்களின் தனித்தன்மை

சுடர்விடும் வகையில் சங்கப் பாடல்கள் அனைத்தும் ஒரே கருத்தைப் புகன்றாலும் அவை வெவ்வேறு தன்மையில் சுவையுடையனவாய் அமைந்தன. பெண்பாற் புலவர்களும் தத்தம் தனித்தன்மை விளங்கப் பாடல்கள் புனைந்துள்ளனர். அவை, பிறர் பாடல்களினின்றும் மிக நுட்பமான முறையில் மாறுபடுவதை அவற்றைக் கற்போர் உணர்வர்.

செயற்கையை விடுத்து உண்மை நவிற்சியே இவர் மேற்கொண்ட உத்தி. இயற்கையைப் பாடுங்கால், நுட்பமான வேறுபாடுகள் இலங்கக் காண்கிறோம். உணர்ச்சிகளில் மிகையில்லை. உவமை உருவகங்கள் அழகுற அமைகின்றன. இவர்கள் பாடல்களில் ஏற்ற சொற்களை ஏற்ற இடத்தில் அமைத்துப் பொருளுணர்த்தும் திறன் இவர்களது தனித்தன்மை.

அகநானூறில் ஔவையின் பாடலொன்று பெண்பாற் புலவர்களின் பெருமைக்கும் தனித்தன்மைக்கும் சான்று பகர்கின்றது. தலைவனுக்காக ஏங்கும் தலைவியின் உணர்ச்சிகள் உள்ளத்தை அள்ளும் வண்ணம் இங்கே படம் பிடிக்கப்படுகின்றன.

''முடிவில்லாத வாடைக்காலம் வந்துவிட்டது. அதனுடன், நெஞ்சில் தோன்றிய நோய், விதைத்த விதைபோல நாளும் வளர்ந்து வருகிறது. நெஞ்சில் பற்றிய காதல் நோய் ஒரு குறுகிய மரமாகி ஊராரின் அலரால் அது கிளைத்துப் படர்கிறது. புலவர் போற்றும் நாணம் இன்மையால் அது பெருமரமாயிற்று. இப்போது அம்பலினால் அது பூக்கத் தொடங்கிவிட்டது. ஆயினும் அவர் இன்னும் வரவில்லை கார்காலம் வந்துவிட்டது! காதல் நோயால் பசலை படர்ந்து என் அழகைத் தொலைத்தது. இருந்தும் அவன் என் நோயை அறியானோ? அறிந்தாலும் அவனுக்கு என்போன்ற மென்மையான உள்ளம் இல்லாமையால் உலகினை அவன் உணரான் போலும்!''

காதல் நோயின் வளர்ச்சியை மரத்தின் வளர்ச்சிக்கு ஒப்பு நோக்கிக் கூறுவது அழகியதாயும் ஏற்புடைத்தாயும் இருக்கின்றதன்றோ! தலைவனைப் பிரிந்த தலைவியின் பரிதவிப்பும் அவள் துயரத்தின் ஆழமும் நம்மை நெகிழ்விக்கின்றன. கார்காலத்து இயற்கை வருணனை பலரும் புகழும் வண்ணம் அமைந்திருக்கின்றது. நாரைகள் வேகமாக வானில் பறக்கின்ற காட்சி கூதாளி மலர்மாலைக்குஒப்பிட்டுக் கூறப்படுவது ஓர் ஓவியமாக நம் கண்முன் திகழ்கிறது. இயற்கையை ஊன்றி நோக்குதலையும் அதை வெளிப்படுத்திய திட்ப நுட்பத்தையும் எவரே வியவாமல் இருப்பர்?

ஔவையின் மற்றொரு பாடல் தலைவனைப் பிரிந்த தலைவி தன் பிரிவுத்துயரைத் தோழியுடன் பகிர்ந்து கொள்வதை விளக்குகின்றது. கதிர்ச்செல்வன் காய்கின்ற சுரத்தின் வழியே தலைவன் போகின்றான். இலையின்றிப் பூத்திருக்கும் பருத்திப்பூக்கள், விழாக்காலத்தில் மகளிர் எடுத்த விளக்கு வரிசைபோல எழிலொடு விளங்குகின்றன. ஆற்றங்கரை

மலைல், மகளிரின் மார்புக்கச்சை போலக் குவிந்து கிடக்கின்றது. இங்கே ஔவை கையாள்கின்ற உவமை, சுரத்தின் காட்சியைத் தெற்றென விளக்கும்வண்ணம் அமைகின்றது. அதைக் கற்குந்தோறும் சொற்களின் ஓசை நயமும் பண்ணும் செவிக்கு இன்பம் பயக்கின்றன.

கணவனைத் தேடியலைந்த வெள்ளி வீதியாரின்,

''காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந்த தனவே

அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்ற இவ்வுலகத்துப் பிறரே''

—குறுந்-44

என்ற குறுந்தொகைப்பாடல் நமக்குக் கண்ணீர் வரவழைக்கும் துயரத்தைத் தாங்கி நிற்கிறது. கால்கள் நடந்து நடந்து பரிதவிப்பனவாம். கண்கள் தேடித்தேடி ஒளி இழந்தனவாம். அகன்ற வானிற் பூத்த விண்மீனினும் மிகப் பலராக இருக்கின்ற மாந்தர் கூட்டத்தே தன் மணவாளனைத் தேடிப்பெறுவது வீணாகிறது. பித்துப் பிடித்தாற் போன்ற நிலையில் பிரிந்த கணவனைத் தேடுவதும், ஏமாற்றத்தின் எல்லையில் அவர் அரற்றுவதும் அவரது ஆற்றுமையை நமக்கு விளக்குகின்றது

பெண்பாற் புலவர்கள் கையாண்டிருக்கின்ற உவமைநயம் மற்றொருபால் நம் கவனத்தை ஈர்க்கின்றது. ஔவையார் அதியனின் வீரத்தையும் ஈரத்தையும் விளக்கும் இருபுறப்பாடல்களை நோக்குவோம்:—

''களம்புக லோம்புமின்
றெவ்விர் போரெதிர்ந்
தெம்முளு முளனொரு பொருநன் வைகல்
எண்டேர் செய்யுந் தச்சன்
திங்கள் வலித்த காலன் னோனே''

—புறம் 87.

''யாழொடுங் கொள்ளா பொழுதொடும்
புணரா
பொருளறி வாரா வாயினும் தந்தையர்க்
கருள்வந் தனவால் புதல்வர்தம் மழலை
எனவாய்ச் சொல்லு மன்ன வொன்னர்
காமதில் அரண்பல கடந்த
நெடுமானஞ்சிநீ யருளன் மாறே''

—புறம் 92

முதற்பாடலில், அதியமானின் வில்லின் பெருமையை ஒருநாளில் எட்டுத் தேரினைச் செய்யும் தச்சன் ஒருமாதம் முயன்று செய்த தேர்ச்சக்கரத்திற்கு உவமிக்கின்றார். அவனது சொல்லின் அருமையை, யாழிசையோடியையாது பொருளோடு பொருந்தாது வரினும் அவற்றின் நயனையும் பயனையும் விஞ்சும் மழலைக்கு உவமிக்கின்றார். இந்த ஒப்புமைகள் அவ்விருவரிடையே நிலவிய ஒப்புயர்வில்லாத நட்புக்கு உரைகல்லாகின்றன.

சங்ககால மகளிர்க்குப் பின் இலக்கிய வானில் சூழ்ந்த இருளை அகற்ற முகில் கிழித்து வரும் முழுமதிபோல சைவத்திற்கொரு காரைக்காலம்மையும், வைணவத்திற்கொரு நாச்சியாரும் தோன்றினர். இவ்விரட்டையர் ஆற்றிய இலக்கியப்பணியால், இலக்கியம் மட்டுமின்றிச் சமயமும் தழைத்தது. சங்க மகளிர் போல எண்ணிக்கையில் அதிகமின்றி, இடைக்காலத்து இருவரையாயினும், இவர்களின் இலக்கியப்பணி ஆடவர் ஆற்றிய அரும்பணியில் கிஞ்சிற்றும் தாழ்ந்ததல்ல.

பரமதத்தன் என்ற வணிகனுக்கு வாழ்க்கைப்பட்ட காரைக் காலம்மையாரின் இலக்கியச் செவ்வியை —சிவநெறிச் செல்வத்தைப் பிறர் உணரும் வண்ணம் இறைவன் விளையாடினான். பழத்தைப் பணயமாக வைத்து விளையாடிய சூதாட்டத்தில் பரமதத்தன் தோற்றான். அம்மையின் தெய்வத்தன்மையை ஓர்ந்தான். இறையருள் நிறைந்த சிவனருட் செல்வியை இவ்வளவாக ஏற்ற அவன் மனந் துணியவில்லை. அம்மையாரும் அவனுக்காகத் தாங்கிநின்ற தசையாகிய உடலை விட்டுப் பேயுரு தருமாறு சிவனை வேண்டிச் சிவகணங்களுள் ஒருவரானார். பேயுருக்கொண்ட அம்மை பிரானருள் பேசலானார். இசையருள் நினைந்து கசிந்து உருகிய உள்ளத்தினின்றும் தங்கு தடையின்றிப் பொங்கி வழிந்தன அவருடைய பக்திப் பாடல்கள்.

காரைக்காலம்மையின் கவிதைகளில் அறிவுக்கொவ்வாத கற்பனை இல்லை. அர்த்தமற்ற சொல்லடுக்கு இல்லை. பொருள் பொதிந்த சொல்லாட்சியும் தேட்டார்ப் பிணிக்கும் தகையும் கேளாரும் வேட்கும் திறனும் இவர் பாக்களின் தனித்தன்மைகள் திருவாலங்காட்டில் இறைவன் ஆடும் அரங்கத்தின் காட்சியைப் படம் பிடிக்கின்றார். ''வகை மரத்தின் முற்றிய காய்கள் காற்றில் சலசலவென ஒலிக்க மயக்கம் தருமளவில் செறிந்த நள்ளிரவு இருளில் கோட்டானும், ஆண்டலையும் குரலெழுப்ப, ஆந்தை மரக்கொம்பில் குத்திட, படர்ந்து கிடக்கும் இண்டைக் கொடியின் அருகே கள்ளிச்செடிகளின் அருகே விறகுகள் அடுக்கப்பட்டிருக்கும் சுடுகாடு''

சிவபிரானின் திருமேனி அழகை ஒருநாளின் பல கூறுகளாகக்கண்டு துதித்த பான்மை இவரது புலமை நலனுக்குச் சான்று பகரும்:

''காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு மாலையின்
தாங்குருவே போலும் சடைக்கற்றை மற்றவற்கு
வீங்கிருளே போலும் மிடறு''

''விடியற்காலையில் இருக்கின்ற வெளிச்சம் கண்கூசுமளவுக்கு மிகையாய் இராமல், பார்ப்பதற்கு இதமாய் இருப்பதுபோன்று இறைவன் திருமேனி விளங்குகிறது. ஆனால் அவன் மேனியில் அணிந்திருக்கும் வெண்ணீறோ எனில் நடுப்பகல் வெளிச்சம் போல் தகதகவெனச் சுடர் விடுகிறது. அவனுடைய சடைக்கற்றை மாலை நேரம்போல் பொன்னிறமாய் இலங்குகிறது. அவனுடைய கழுத்தோ காரிருள் எனக் கரியதாய் இருக்கின்றது. இறைவனின் திருவுருவை இதனினும் சிறப்பாக எடுத்தியம்ப இயலுமோ?

விடமுண்ட கண்டனுக்கு அம்மையார் ஏன் ஆளாக வேண்டும்? எந்தப் பலனை எதிர்பார்த்து அவர் ஆளானார். அம்மை அத்தன் பாற்கொண்ட அன்பு அதன்மூலம் வேறு எதனையும் பெறும்நோக்கத்தோடன்று; அதனால் அவர்க்கு நன்மை கிட்டவில்லை. என்றாலும் அந்த அன்பு அற்றுவிடாது என்கிறார். அம்மையார். அவ்வாறு

அரன்பால் அன்பற்றிருப்பதால், அண்டருலகம் கிடைப்பதாயினும் அதை நான் விரும்பேன்; அவனுக்கு ஆளாய் இருப்பதற்குத்தான் ஆசையுற்றேன் என்று கூறுகின்றார். இவ்வண்ணம் இவர் பேசுவது இவ்வண்ணம்

''இச்சுவை தவிரயான்போய் இந்திர
லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்''

என அரங்கமாநகருளானை வைணவ அடியாராகிய தொண்டரடிப்பொடியாழ்வார் வேண்டுவதோடு ஒப்பு நோக்கத் தக்கது.

இல்லறத்திருந்த போதும்சிவபிரானுக்காட்பட்டிருந்த தன்மையினை,

''அன்றும் திருவுருவம் காணாதே
ஆட்பட்டேன்

எனக் குறிக்கின்றார். அறக்கற்பினுக்கு அணியென விளங்கிய அம்மையார், பின் சிவகற்பெனும் தவக்கற்புப் பூண்டு சிவபிரான் ஒருவனுக்கே ஆட்பட்டார். புறத்துறவோடன்றி அகத்துறவும் பூண்ட அவர், உள்ளத்திற் களங்கமின்மையால், அச்சமின்றி இறைவனோடுஅளவளாவுகின்றார். அவனுக்கு அடியாராக இல்லாமல் ஒப்பாராக நண்பராகவே இருந்து 'நீ இவ்வுலகெங்கும் சென்று பலியேற்றாலும் உன்னுடைய தீய பாம்பின்றிச் செல்; ஏனெனில் மகளிர், நீச்சரவம் உன்மேல் ஆடுவது கண்டு அஞ்சி, வந்து பலியிடார்'' —என அறிவுறுத்துகின்றார்.

இடுகாட்டில் இறைவன் நடமிடுங் காட்சி கண்டு இன்புற்றார் அம்மையார். இவ்வாறு பேய்க்கோலங்கொண்டு அரன் ஆடுவதைக் காரைக்காலம்மையார் மட்டும் காணவில்லை; பிறருங் கண்டனர். இறைவன் பேய்க்கோலம் மட்டும் கொண்டானில்லை அன்புற்ற அடியார்க்கும் சிந்தையுள்ளே சுடருருவாய்த் தோன்றினன். உருவற்ற இறைவன் பேயாய்ப், பித்தனாய், சுடருருவாய் மட்டுமின்றி,

''அவனே இருசுடர் தீஆகாசம் ஆவான்
அவனே புவிபுனல் காற்றாவான்'

என்பார் அம்மையார். அவனுடைய அடியார்கள் எந்தக்கோலத்தில் எந்த உருவில் அவன் தோற்றமளிக்க வேண்டுமெனத் தவமிருக்கிறார்களோ அந்தக் கோலத்தில் அவர்கள் முன் தோன்ற வல்லான் சிவபெருமான் என்பதை,

''எக்கோலத்து எவ்வுருவாய் எத்தவங்கள்
செய்வார்க்கும்
அக்கோலத்து அவ்வுருவே ஆம்''

என அம்மையார் உணர்த்துகின்றார். இவ்வாறு சிவானுபவத்தில் திளைத்த காரைக்காலம்மையார் இறைவனின் இயல்பை- ஒரு நாமம் ஒருவாரும் இல்லாத ஒப்பற்ற தன்மையை— விதந்தோதுகின்றார்:—

''அன்றும் திருவுருவம் காணாதே
ஆட்பட்டேன்''
இன்றும் திருவுருவம் காண்கிலேன் —
என்றுந்தான்
எவ்வுருவோ நும்பிரான் என்பார்கட் —
கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவம் ஏது''

உலகளந்த உத்தமன்பால், மாளாத காதல் கொண்டுபத் திப்பனுவல் இசைத்த வைணவச்

செல்வியாகத் திகழ்ந்தவர் ஆண்டாள் நாச்சியார். சூடிக்கொடுத்த சுடர்க்கொடி பாடிக் கொடுத்த பாசுரங்கள் பக்திக் காதலில் திளைத்த அனுபவ வாக்கியங்கள் நாயக-நாயகி பாவனையில் பரமனுக்குப் பாமாலை சூட்டும் பான்மை மரபுவழி வந்தது. ஆண்டாள் நாச்சியாரது பாசுரங்கள் அனைத்தும் ஆண்டவனையே காதலித்த கன்னியொருத்தியின் இயல்பான இனிய அனுபவங்களேயாம் ''ஆழிசங்கேந்தும் அழகிய திருவரங்கனுக் கன்றி மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழ்கிலேன்'' என்று மானிடக் காதலை நாடியது ஆண்டாளின் திருவுள்ளம். கண்ணபிரானை அடைய வேண்டிக் காமக்கடவுளை வேண்டுகிறார். ''இறைவனை என்னோடு இணைத்து வை; உன்னை நான் வைதிடாமல் உனக்கு நல்லன செய்வேன்'' என்கிறார். கண்ணனைக் கூடும்பேறு கைகூடுமா கூடாதா என்று சங்கமரபை யொட்டிக் கூடல் இழைக்கின்றார். 'கொன்னுமாகில் நீ கூடிடு கூடலே' என்று முத்திரை வைக்கின்றார். பண்டை மரபு தழுவிக் கண்ணன்பால் குயிலைத் தூதும் விடுகின்றார். ''குயிலே, பவளவாயின் வரக்கூவுவாய் என் பொருகணை கயற்கண்கள் துஞ்சா; செய்யவாயும் முலையும் அழகிழந்தேன். என் இளமை அழகுயாவும் அவனுக்கென்றே இருக்கின்றன. நீ, அவன் வரக்கூவுவாய்' என்று அவன் காதலில் ஈடுபட்டுஉறுப்பு நலன் அழிந்தமை தோன்றப் பாடுகின்றார்.

காதல் நினைவுகள் சொல், செயல்சிந்தையெல்லாம் கவர்ந்து கனவுகளாக முகிழ்க்கின்றன. இது வெறும் தூக்கக் கனவன்று. உயர் நோக்கக் கனவு. இறைவனோடு இரண்டறக் கலத்தலின் இயல்பே இங்கே இயம்பப்பெறுகிறது. கள்ளூறும் பைந்துளாய் மாலையானைக் கனவிடத்தில் தான் கண்டபோது தன் நலனும், நிறையும் சிந்தையும், வளையும், கொண்டு தன்னை ஆளும்கொண்டு புனலரங்கம் ஊரென்று போயினன்' என்று கவல்கிறார்.

''கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்
திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்றன் வாய்ச்
சுவையும் நாற்றமும்
விருப்புற்றுப் பேசுகின்றேன் சொல்லாழி
வெண்சங்கே''

என்று வெண்சங்கைக் கேட்பது ஆண்டாள் ஆண்டவனோடு கூடப் பெறாத ஏக்கத்தைக் கூறுகிறது.

கோவைப்பழம் கண்டாலும் கண்ணனின் வாய் நினைவுக்கு வருகிறது. காக்கைச் சிறகினில் நந்தலாலாவின் கரியநிறங் கண்டதுபோல . காமம் மிக்க கழிபடர் கிளவிகளாகக் காதல் உணர்வின் அலைகள் கேமாதுகின்றன. 'கடலே, கடலே, உன் துன்பம் அறுத்தவன் என் துன்பம் களையக் கூடாதா!? — என்று கடலை நோக்கிக் கதறுகிறார். 'என்னரங்கத்து இன்னழகர், குழலழகர், கொப்பூழ் அழகர், கண்ணழகர் என்று உருவ அழகையெல்லாம் வர்ணிக்கிறார்.

ஆன்மா இறைவனைக் காணத் துடிக்கும் துடிப்பெல்லாம் ஆண்டாளின் பாசுரத்திற் காண்கின்றோம். மானுடரின் சிற்றின்பமே பேரின்பத்திற்கு வாயிலாக அமை

அறிவு வளர மேலே செல்லுங்கள்

உங்கள் வீடு மேல்தள மாடி வீடுகளில் இருக்கிறதா? அப்படியானால் உங்கள் குழந்தைகள், புத்திசாலிகளாக இருப்பார்கள். அமெரிக்க விஞ்ஞானக் கழகத்தில் பேசிய டாக்டர் ஜான். எச். மில்ஸ் என்பவர் தான் மேற்கொண்ட சோதனைகளின் முடிவில் மேற்கண்ட கூற்றைத் தெளிவு படுத்தி விளக்கியுள்ளார். நியூயார்க் நகரத்தில் மேல் தளங்களில் வசிக்கும் குழந்தைகளையும், கீழ் தளங்களில் வசிக்கும் குழந்தைகளையும் ஆராய்ந்ததில் மேல்தளங்களில் வசிக்கும் குழந்தைகள் படிப்பதிலும், பேசுவதிலும், புரிந்து கொள்வதிலும் திறமை மிக்கவர்களாக இருக்கிறார்கள் என்று கண்டுள்ளார். கீழ் தளங்களில் இருக்கும் குழந்தைகளுக்கு சுற்றுப்புற சூழ்நிலைகளும், வாகன ஒலி, ஒளி இடையூறு செய்வதாலும் உடனே பதியவைத்துக்கொள்ளும் தன்மை குறைவாக இருக்கிறது என்று டாக்டர் மில்ஸ் கூறுகிறார்.

கின்றது. அந்த அடிப்படையில் தான் இறைவனை அடியார்கள் நாயகனாகத் தேர்ந்து தம்மை நாயகியாகப் பாவித்துக் பண்ணிசைப்பது. அந்த மரபு ஆடவர்க்கு அமைந்ததைக் காட்டிலும் ஆண்டாளுக்கு அமைந்தது எத்துணை இயற்கையாகவும் இனிமையாகவும் தெய்வீகமாகவும் இருக்கின்றது!

ஆடவர்க்குப்போல ஊக்கமும் உயர்வும் உரிமையும் மறுக்கப் பட்டபோதும் மகளிர் சங்க காலம் முதலே இலக்கியப்பணியில் சிறந்து விளங்கினர். தாதர் என்ற அடிமை நிலையில் உழன்ற காலத்தும் மகளிர் புலமையும் அறிவும் ஆற்றலும் பக்தி மேம்பாடும் வீறுகொண்டு புறப்படத் தான் செய்தன. ஒருவேளை தொடக்கம் முதலே பெண்ணடிமை ஒழிந்து நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் மகளிர்க்கு இயல்பாய் வற்புறுத்தப்பட்டிருக்குமாயின் அவர்தம் இலக்கியப்பணி ஆடவரையும் விஞ்சியிருக்கக் கூடுமோ? □

கலைக்கதிருக்கு எம் நல்வாழ்த்துக்கள்

சோமு & கோ.

ஜே. கே. பேப்பர் மில்ஸ்

கோவை, நீலகிரி மாவட்ட வினியோகிப்போர்

137, ஒப்பனைக்காரத் தெரு, கோயம்புத்தூர் 641001

தொடர்பு நிறுவனங்கள்:

1. வள்ளியப்பா ஏஜன்சீஸ், கோயமுத்தூர்
2. ஈஸ்வர் & கோ., கும்பகோணம்
3. பேப்பர் காருகேட்டிங் இண்டஸ்ட்ரீஸ், 'SIDCO' அம்பத்தூர், சென்னை 98

dpv

UP ON TWO WHEELS

The New
Sensational Super Moped

dart

This star maker machine is backed by the country's top specialist dealers who offer the deal and service you can't beat

DPV P

AUTHORISED DEALERS

dpv agencies

6/48 AVANASHI ROAD
KALAIKATHIR BUILDINGS
COIMBATORE 641037
PHONE: 30193

MANUFACTURERS

S & P Engineering Products Limited

CALCUTTA

SPECIFICATIONS

Engine: Single cylinder two stroke 49 cc. Automatic centrifugal clutch. 3 litre petrol tank. Speed 49 km per hour. Fuel consumption 60 km per litre. Flywheel magneto with generator for head and rear lights. Drum type brakes front and rear.

கலைக்கதிர் வெளியீடுகள்

[அஞ்சல் செலவு தனி]

				விலை	அஞ்சல்
1.	விஞ்ஞானத்தின் விளைவு	...	ரூ.	3—75	0—20
2.	கல்வியும் மனிதசாதன வளர்ச்சியும்	...	ரூ.	12—50	0—45
3.	பிராங்கு லாய்டு ரைட்	...	ரூ.	3—00	0—40
4.	காற்றுப் பெருங்கடல்	...	ரூ.	2—50	0—20
5.	சக்கரங்கள் சுழல்வதேன்	...	ரூ.	3—00	0—25
6.	விஞ்ஞான விளக்கம் (முதற்பகுதி)	...	ரூ.	3—00	0—40
7.	விஞ்ஞான விளக்கம (இரண்டாம்பகுதி)	...	ரூ.	3—00	0—35
8.	விஞ்ஞான விளக்கம் (மூன்றும்பகுதி)	...	ரூ.	3—00	0—25
9.	சீவக சிந்தாமணி ஆராய்ச்சி (ஆங்கில நூல்)	...	ரூ.	24—00	0—50
10.	சிந்தனை மலர்கள்	...	ரூ.	3—50	0—20
11.	Path way to God Through Tamil Literature I Through - THE THIRUVAACHAKAM	...	ரூ.	7—00	0—50
12.	Aspects of Higher Education (collection of articles in English & Tamil)	...	ரூ.	7—50	0—50
13.	கல்வியும் தொழிலும் சில சிந்தனைகள்	...	ரூ.	6—50	0—40
14.	வழியுறுதிகளும நிலையுறுதிகளும்	...	ரூ.	0—50	0—20
15.	விஞ்ஞான வித்தகர்கள்	...	ரூ.	0—50	0—20
16.	வார்ப்பியல்	...	ரூ.	1—00	0—20
17.	பேரிழைப்பு எந்திரம்	...	ரூ.	0—50	0—20
18.	உற்பத்தித்திறனும் சமுதாயமும்	...	ரூ.	0—50	0—20
19.	உற்பத்தித்திறனும் தொழில் நிர்வாகம்	...	ரூ.	0—50	0—20
20.	டரட் கடைசல் எந்திரத்தில் கடைவதெப்படி	...	ரூ.	0—50	0—20
21.	Blue Prints Reading	...	ரூ.	0—60	0—20
22.	Manufacturing Processes	...	ரூ.	0—60	0—20
23.	கட்டிட நிலப்படம்	...	ரூ.	1—00	0—20
24.	வேதியியல் கலைச்சொற்கள்	...	ரூ.	1—00	0—30
25.	பௌதிகவியல் கலைச்சொற்கள்	...	ரூ.	1—00	0—30

நூல்களைப் பதிவு அஞ்சல்மூலம் பெற விரும்புவோர் அஞ்சல் கட்டணத்தோடு பதிவு அஞ்சல் கட்டணம் ரூ. 1-25 சேர்த்து அனுப்ப வேண்டும். இரயில் அல்லது லாரி மூலம் பெற விரும்புவோர் எந்த ஊருக்கு அனுப்புவது எனத் தெரிவிக்கவேண்டும். இரயில் மூலம் பெற விரும்புவோர் நூலின் விலையோடு ரூ. 1-50-ம், லாரி மூலம் பெற விரும்புவோர் நூலின் விலையோடு ரூ 5-50-ம் அனுப்பும் கட்டணமாகச் சேர்த்து அனுப்ப வேண்டுகிறோம். கல்வி நிறுவனங்களுக்குத் தக்க கழிவு தரப்படும்.

கலைக்கதிர் ■ பூளைமேடு ■ கோவை 641004

பித்தத் துகள்களும் மஞ்சள் காமாலையும்

தமிழாக்கம் ''விஜி''

மஞ்சள் காமாலையைப் பற்றி நம் அனைவருக்கும் தெரியும். ஏனென்றால் நாம் அனைவரும் எப்போதாவது ஒருமுறை இதனால் துன்பப்பட்டிருப்போம். மஞ்சள்காமாலையில் பல வகை உண்டு. ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரணத்தினால் உண்டாகின்றது. ஆனால் எல்லாவகையான மஞ்சள்காமாலை நோயின் பொதுக் குணம் இரத்தத்தில் பித்தத் துகள்கள் கூடுதலான அளவில் சேர்ந்துவிடுவதே. ஹிமோகுளோபினில் வளர்சிதைமாற்றம் ஏற்படும்போது அதன் முடிவுப் பொருளாகக்கிடைப்பதே பித்தத் துகள்கள். சாதாரணமாக இத் துகள்கள் இரத்தத்தில் மிகக் குறைந்த அளவில் கலந்திருக்கும். ஆனால் இவை வழக்கத்திற்கு மாறாகக் கூடுதலான அளவில் இருந்தால் மஞ்சள்காமாலை நோய் உண்டாகின்றது. நான் மஞ்சள் காமாலையைப் பற்றிய பல கருத்துக்கள் உள்ளன. முதலில், பித்தத் துகள்கள் உண்டாகும் விதத்தையும் அவை சாதாரண நிலையில் இரத்த ஓட்டத்தில் எவ்வாறு கலந்திருக்கின்றன என்பதைப்பற்றியும் பார்ப்போம்.

பித்தத்துகள்களும், அவற்றின் ஓட்டமும்

ஹிமோகுளோபின் சிதைவுறுவதால் உண்டாகும் பொருளே பித்தத் துகளாகும். இதனைப் 'பைலிரூபின்' (bilirubin) என்று அழைக்கின்றோம். இரத்தத்தில் இவை பிளாஸ்மாவிலுள்ள ஆல்புமின் என்ற புரோட்டினோடு கலந்தே காணப்படும். இதன் முதல் பெயர் 'ஹிமோ பைலிரூபின்' ஆகும். இயல்பாக இவை இரத்தத்தில் 100ml-க்கு

டாக்டர் (திருமதி) அம்பிகா சண்முகம்

இவர் சென்னை மருத்துவக் கல்லூரியில் உயிரியல் வேதியியல் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். எம்.பி.பி.எஸ். வகுப்பு மாணவர்களுக்குக் கற்பிப்பதோடு எம். டி., எம். எஸ். வகுப்பு மாணவர்களுக்கும் உயிரியல், வேதியியல் கற்பித்து வருகிறார். இதோடு எம். டி. மாணவர்கள் ஆராய்ச்சியை நெறிப்படுத்தி வருகிறார். மருத்துவ மாணவர்களுக்கென உயிரியல், வேதியியல் நூல் ஒன்றை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.

0.1mgm என்ற விகிதத்தில் கலந்திருக்கும். இந்த நிலையில் இதனை 'இணையாத பைலிரூபின்' (unconjugated) அல்லது 'மறைமுக' பைலிரூபின் என்று அழைக்கின்றோம். புரோட்டினோடு ஒட்டிக் கொண்டிருப்பதால் இது கொலாய்டுத் தன்மையைக் கொண்டுள்ளது. நீரில் கரையாது; கிளாமருலஸ் ஐவ்வின் வழியாக ஊடுருவிச் செல்லாது. இது கல்லீரலுக்குச் சென்று கீழ்வரும் மாற்றங்களை அடைகின்றது.

1. குப்ஃபர் செல்களினுதவியால் பைலிரூபினுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் புரோட்டின் பகுதி பிரிக்கப்படுகின்றது.

2. கல்லீரலிலுள்ள மைக்ரோசோம்களில் (microsomes) குளுகுரோனில் ட்ரான்ஸ்ஃபெரேஸ் (glucuronyl transferase) என்ற ஒருவகை என்சைம் இருக்கின்றது. இது பைலிரூபின் மைக்ரோசோம்களிலுள்ள குளுகுரோனிக் அமில (glucuronic acid)த்துடன் இணைத்துவிடுகின்றது. இவ்வாறு இணைக்கப்பட்ட நிலையில் இதனைப் பைலிரூபின் குளுகிரோனைடு என்று அழைக்கின்றோம். இந்த என்சைம் யூரிடின் டைஃபாஸ்ஃபோ குளுகுரோனிக் அமிலத் (uridine diphosphoglucuronic acid) திலிருந்து குளுகுரோனிக் அமிலத்தைப் பிரித்தெடுத்து பைலிரூபினுடன் இணைக்கின்றது. இதனைக் கீழ்வருமாறு குறிப்பிடலாம்.

பைலிரூபின் +UDP குளுகுபாரானிக் அமிலம் → பைலிரூபின் குளுகுரோனைடு + UDP இவ்வாறு இணைந்த பைலிரூபினனது பொதுவாக பைலிரூபின் டைகுளுகிரோனைடு (bilirubin diglucuronide) நிலையில்தான் காணப்படுகின்றது. இதுவே பைலிரூபின் மானோகுளுகுரோனைடு நிலையிலும் சிறிதளவு காணப்படும். இவ்விரு வகையும் 'இணைந்த' (conjucated) அல்லது 'நேரடியான' பைலிரூபின்கள் ஆகும். முன்பு இதனை 'கோலிபைலிரூபின்' (cholebilirubin) என்று அழைத்தனர்.

பைலிரூபின் குளுகுரோனைடின் முக்கிய பண்பு: இது நீரில் கரையும் தன்மையுடையது. ஆகவே இது எளிதில் பித்தநீருடன் குடலுக்குள் கழிக்கப்படுகின்றது. இணைந்த பைலிரூபின் இணையாத பைலிரூபினிலிருந்து வேறுபட்டுள்ளது. அவை

1. இணைந்த பைலிரூபோனில் புரோட்டின் கிடையாது.

2. இது குளுகுரோனையுடன் இணைந்துள்ளது.

3. இது நீரில் கரையும். இவ்வாறு கல்லீரலில் மாற்றமடைந்த பைலிரூபினனது பித்தப்பந்துகிகள் லெப்பாட்டிக் நாளம் பித்த நாளம் வழியாகச் சென்று முடிவில் முன் சிறுகுடலைப் (duodenum) அடைகின்றது. (படம் 1) இங்கிருந்து இது குடலை அடைகின்றது. அங்கு பாக்டீரியாவின் என்சைம்களால் நிறமற்ற பல பொருள்களாகச் சிதைகின்றது. இப்பொருள்களுக்கு பைபினோஜென்கள் (bilinogens) என்று பெயர். இவற்றுள் முக்கியமானவை யூரோபைலினோஜன் (urobilinogen) ஸ்டெர்கோ பைலினோஜன் (stercobilnogen) ஆகும். இரண்டாவதானது மலத்துடன் கழிக்கப்படுகின்றது. இது காற்றில் ஆக்சிகரணம் அடைந்து ஸ்டெர்கோபைலின் (stercobilin) ஆகின்றது. இத்துகள்களை மலத்தில் காணலாம். யூரோபைலிஜெனின் பெரும் பகுதியானது



பித்தத் துகள் ஓட்டம்

போர்ட்டல் குழாய்கள் மூலமாக உட்கிரகிக்கப்பட்டு மீண்டும் கல்லீரலை அடைகின்றது. அங்கு அதன் பெரும்பகுதி மீண்டும் மைலிரூபினேகை மாற்றப்படுகின்றது. இது பித்தநீருடன் கலந்து விடுகின்றது. இதற்குப் பித்தத் துகள்களின் உட் கல்லீரல் ஓட்டம் (enterohepatic circulation) என்று பெயர்.

யூரோபைலினேஜனின் ஒரு சிறு பகுதி கல்லீரலிலிருந்து தப்பித்துப் பொது இரத்தத்துடன் கலந்து சிறுநீரகத்திற்குச் சென்று அங்கிருந்து சிறுநீருடன் யுரோபைலினேஜனுகை • வெளியேற்றப்படுகின்றது. சிறுநீர் காற்றுடன் கலக்கும்போது யூரோபைலினேஜனனது யூரோபைலினேஜனுகை ஆக்சிகரணமடைகின்றது. சிறுநீருடன் கலக்கப்படும் யூரோபைலினேஜனின் அளவு மிகவும் குறைவு ஆகும். ஆகவே சோதனை மூலம் இதனைக் கண்டு பிடிக்க முடியாது.

குடலிலிருந்து போர்ட்டல் இரத்த ஓட்டத்தில் கலக்காமல் தப்பித்த யூரோபைலினேஜனனது ஸ்டெர்கோ பைலினேஜனுகை மாற்றப்பட்டுப் பழைய ஸ்டெர்கோபைலினேஜனனுடன் சேர்ந்து மலத்துடன் வெளியே கழிக்கப்படுகின்றது. ஸ்டேர்கோபைனேஜன் காற்றுடன் கலந்து ஆக்சிகரணம் அடையும்போது ஸ்டேர்கோபைலின் (stercobilin) ஆகின்றது. மலத்துடன் கழிக்கப்படும் ஸ்டெர்கோபைலினேஜனும், சிறுநீருடன் கழிக்கப்படும் யூரோபைலினேஜனும் இரசாயனத் தன்மையில் ஒரே விதமாக இருக்கின்றது. □

புகை பிடிப்பவர்களுக்குப் புதுவகை வைட்டமின் ...

உலகின் பல பாகங்களிலும் தொடர்ந்த ஆராய்ச்சியின் பயனாகப் புகை பிடிப்பதால் பலவகை நோய்கள் மனிதனைத் தாக்குகின்றன என்று நிரூபித்துள்ளார்கள். இதனைக் குறைக்கும் முயற்சியாக சிகிரெட் பெட்டிகளின்மேல் புகை பிடிப்பதால் ஏற்படும் தீமைகளை அச்சிடுமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டு உள்ளது. புகை பிடிக்கும்பொழுது உள்ளே செல்லும் புகையில் உள்ள சில இரசாயனப் பொருள்கள் நுரையீரலைத் தாக்கிச் செயலற்றதாக்கி விடுகின்றன. இந்த இரசானப் பொருள்கள் நுரையீரலில் சேமித்து வைக்கப்பட்டுள்ள உடல் வளர்ச்சிக்குத் தேவைப்படும் உயிர்ச் சத்துப் பொருள்களான வைட்டமின்களின் சக்தியைக் குறைத்துவிடுகின்றன. குறிப்பாக வைட்டமின் - இ, வைட்டமின் - ஏ, வைட்டமின்-சி போன்ற முக்கிய உயிர்ச்சத்துப் பொருள்களைத் தாக்கி இரசாயன மாற்றம் அடையவைத்து ஆக்சிகரணம் செய்துவிடுகிறது. வைட்டமின் பஞ்சம் ஏற்பட்ட பின்பு நுரையீரல்கள் செயலிழந்து விடுவதால் புற்றுநோய்க் கிருமிகள் தாக்கும் பொழுது எளிதில் முடக்கப்பட்டு விடுகிறது.

ஆராய்ச்சியாளர்களின் விரிந்த ஆராய்ச்சியின் பயனாகப் புகையிலையில் உள்ள 'டாக்சின் சயனேடு' (Toxin Cyanide) என்னும் போதைதரும் நச்சுப் பொருளை, போதைத் தன்மையையும், நச்சுத் தன்மையையும் அறவே நீக்கும் சக்தி கொண்ட புதுவகை வைட்டமின்-பி.12 என்னும் பொருளைக் கண்டு பிடித்துள்ளார்கள். புகை பிடிப்பவர்களுக்கு உடலில் பொதுவாகக் குறையும் சத்துப் பொருள்களைக் கணக்கிட்டு அவைகளை ஈடுசெய்யும் முகமாகப் பலவகை வைட்டமின்களின் கூட்டுக் கலவையைத் தயாரித்துத் தற்பொழுது வெளி உலகுக்குக் கொண்டுவந்துள்ளார்கள். இக் கலவையில் வைட்டமின் பி-12 அதிகம் இருக்கும். இது புகை பிடிப்பவர்களின் சிறு குடலில் உள்ள குடல் உறிஞ்சிகளில் உறிஞ்சிவைக்கப் படுகிறது. புகை குடலின் உட்பகுதிக்குச் சென்றவுடன் நச்சுத்தன்மையை நீக்கிவிடுவதால் புகையின் தீமை குறைந்துவிடுகிறது. இவ் வகைக் கலவை 'புகைதுரத்தி' (cloud chasers) என்னும் பெயரில் இன்று விலைக்கு விற்கிறார்கள்.

இதுபோலவே தோல் சம்பந்தமான பலவகை நோய்களைக் கட்டுப்படுத்தும் திறன் கொண்ட வைட்டமின்-உயிர்ச் சத்துக் கலவையைத் தற்போது கண்டு பிடித்துள்ளார்கள். இதற்கு 'டைவ் பவர்' (Dive power) என்று பெயரிட்டு விலைக்கு விற்கிறார்கள்.

இதுபோன்ற புதுவகைக் கலவை வைட்டமின்களால் தற்போது அதிகம் பரவியுள்ள புற்றுநோய்களை அழிக்க முடியாவிட்டாலும், பரவும் விகிதத்தைக் குறைக்க முடியும் என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

வழுக்கைத் தலை :

தலை வழுக்கையாவதைத் தடுக்கக் கூட வைட்டமின் உதவுகின்றதாம். பரம்பரையாக இல்லாமல் குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே வழுக்கைத் தலை இருக்குமானால் அதற்கு அவர்களுடைய முறையற்ற வாழ்க்கையும், உணவுப் பழக்க வழக்கங்களுமே காரணமாகும் என்று விஞ்ஞானி 'லெனார்ட் பான்ட்னே' கூறியுள்ளார்.

இதை நீக்கவேண்டின் கொழுப்பு, புரதம் நிறைந்த உணவுப் பொருள்களை நீக்கிவிட்டுக் காய்கறிகள், வைட்டமின் மாத்திரைகள் ஆகியவற்றை உபயோகிக்கவேண்டும் என்று கூறியுள்ளார்.

WITH THE
BEST
COMPLIMENTS
FROM

Mahendra Engineering Works

6/433, P N PALAYAM ROAD
PULIYAKULAM
COIMBATORE 641018

Manufacturers of:

Mahendra
Single Phase,
Three Phase
Electric Motors
and
Monoblock Sets

Grams: MAHEEPUMP
Phones: Office: 30138
Residence: 35842

வளர்க கூட்டுறவு! மலர்க சமநிலை வணிகம்!!

சிந்தாமணி

கூட்டுறவு சூபர் மார்க்கெட்

கோயமுத்தூர் 641002

சிந்தாமணியின் வணிகச் சிறப்புகள்:

தரமான பொருட்கள் — சரியான அளவு — சீரான விலை — சிறப்பான விற்பனை முறை — பல்பொருள் வணிகம் — பணிவான சேவை

''குறள் நெறி வணிகம்''

சிந்தாமணியின் விற்பனைச் சிறப்புகள்:

கிளை நிலையங்கள்	...	6
தினசரி சராசரி விற்பனை	...	3.75 இலட்சம்
மாதாந்திர சராசரி விற்பனை	...	92 இலட்சம்
ஒரு நாளின் அதிக அளவு விற்பனை	...	5.17 ,,
ஒரு மாதத்திய அதிக அளவு விற்பனை	...	1 8 கோடி
சென்ற ஆண்டின் விற்பனை ('1974-75)	...	10 95 கோடி
மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை	...	65,000
மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை	...	1084

சிந்தாமணி நிர்வகிக்கும் இதர அங்காடிகள்:

திருச்சி கூட்டுறவு மொத்த பண்டகசாலை — திருச்சி
ஈரோடு கூட்டுறவு மொத்த பண்டகசாலை — ஈரோடு
பூங்காநகர் கூட்டுறவு மொத்த பண்டகசாலை—சென்னை

சிந்தாமணியின் சொந்த தயாரிப்புகள்:

தரமான, நயமான 'சிந்தாமணி' பனியன்கள் — மற்றும் தேங்காய் எண்ணெய் - நல்லெண்ணெய் — சீயக்காய்த்தூள் — மஞ்சள் தூள் — மிளகாய்த் தூள் — கடலை மாவு — கோதுமை மாவு — இலவம்பஞ்சு மெத்தை — தலையணை வகைகள் முதலியன.

ஜி. வி. இராமசாமி — ஜி. ஆர். கோவிந்தராஜுலு

செயலர் தலைவர்

CONTACT FOR YOUR
REQUIREMENTS OF
ALL
HARDWARE ITEMS

வி. பொன்னுசாமி
& கோ.

7/122-எச், அவினாசிச் சாலை

கோயமுத்தூர் 641018 — போன் 26613, 26631

Sri Ranga Vilas Ginning & Oil Mills

POST BOX No. 1324

COIMBATORE 641037

Phone: 24151

Grams: 'OILMILLS'

Telex: 042 / 344

Manufacturers of:

Groundnut Oil & Cake

Cotton & Cotton Seeds

Cotton Seed Oil &

Cotton Seed Cake

Suppliers

IN INDIA & ABROAD

EDIBLE QUALITY GROUNDNUT MEAL IS OUR SPECIALITY

Edible Groundnut Meal is being Produced,
in one of the Plants Provided by "UNICEF"
Solvent Extraction Plant is Under Erection

பாவையர் போற்றிடும் பாட்டும் பரதமும்!

ஆயகலைகள் அறுபத்துநான்கினையும் ஏய உணர்விக்கும் என் அம்மை தூய உருப்பளிங்கு போல்வாள் என்று பெண்ணுக்குள் அத்துணைக் கலைகளையும் அடக்கி வைத்து அழகு பார்த்தனர் நம் தமிழர். கலையைப் படைப்பவளாகவும் பெண் அமைகின்றாள். படைக்கப்படுவதற்குக் காரணமாகவும் அவள் ஆகின்றாள். எனவே பெண்ணின்றிக் கலைகள் அமைந்தால் அவை சுவைதராது என்று உறுதியாக மொழியலாம். ஆடலும் பாடலும் அவளது தனிச் சொத்துக்கள். அழகுக் கலைகளைப் பழகு தமிழில் எடுத்துப் பாடவும், பண்ணுக்கு ஏற்றவாறு பரதத்தில் ஆடவும், பரமனருள் பெற்று வந்தவர்கள் பாவையர்கள்.

''நகையே யழுகை யிளிவரன் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி யுவகையென்
றப்பா லெட்டாம் மெய்ப்பா டென்ப''

என்று தொல்காப்பியர் கூறுகின்ற எண்வகைப்பட்ட மெய்ப்பாடுகளையும்கண்வழிக்காட்டி — மெய் வழி நாட்டுவது பரதக்கலை. கி.மு. மூன்றும் நூற்றுண்டில் பரத முனிவரால் படைக்கப்பட்டது இக் கலை. இதில் சிறந்த ஆடற்கலையரசிகள்அன்றும் —இன்றும் புகழ் பெற்று விளங்குகின்றனர்.

சங்ககாலத்தில் நடனம் கூத்துக்கலையென்று வழங்கப்பட்டது. வெறிக்கூத்து, வள்ளிக்கூத்து போன்ற நடன வகைகளைப் பெண்கள் ஆடிவந்தனர். நடன மங்கை 'விறலி' என்று அழகாக அழைக்கப்பட்டாள். ஆடுகள மகள் என்று அவளைக் குறுந்தொகை குறிப்பிடுகின்றது. ஆடற் பெண்டிர் செஞ்சாந்து பூசப்பட்ட ஆழகிய விரல்களையும், ஒளி பொருந்திய நெற்றியினையும் உடையவராய் விளங்கினர் என்று

திருமதி கு. ரோகிணி

இவர் பி. ஏ. பட்டத்தோடு புலவர் பட்டமும் பெற்றவர். உதகை, புனித திரேசன்னை உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றி வருகிறார். 1964-ஆம் ஆண்டு கலைக்கதிர் பொங்கல் மலரின் சிறுகதைப் போட்டியில் பரிசுபெறும் சிறப்புப் பெற்றார். இவர் பல சிறுகதைகளும், கவிதைகளும் எழுதியுள்ளார்; சிறந்த நாவலர்.

புறம் பேசுகின்றது. அவர்களது ஆடலுக்குப் பரிசாகப் பொன்னரி மாலை' தொடி போன்ற அணி வகைகள் கிட்டின. சோழன் நலங்கிள்ளி இவ்விறலியர்க்குக் கூடலெனும் மாட மதுரையையும் விஞ்சுபுகழ் வஞ்சியையும்கூடத் தரவல்லவன் என்று கோவூர்க் கிழார் கூறியதிலிருந்து -அவர்தம் திறமையும், அவரைப்போற்றிய அரசர்தம் வலிமையும் பெறப் படுகின்றன.

அக்காலத்தில் அரசகுல அழகி யான ஆதிமந்தி என்ற அழகோ வியமும் ஆடற்கலையில் வல்லவ ளாக விளங்கினாள் என்பதை அறி யும்போது ஆடலுக்குத் தடையா கக் குலம் அமையவில்லை என் றறிந்து வியக்கின்றோம்.

சிலப்பதிகாரத்தின் அரங்கேற் றுக்காதை, ஆடற்கலைக்கே ஓர் அழகிலக்கணமாகத் திகழ்கின் றது. ஆடல்-பாடல்-அழகு இம் மூன்றிலும் சிறந்த பூங்கொடி; மங்கை நல்லாள் மாதவி. ஆயிரத தெண் கழஞ்சு பொன்னையும் 'தலைக்கோல்' எனும் பட்டத்தை யும் பரிசாகப் பெற்றவள். ஐந் தாண்டுகள் நடனம் பயின்று அர சன் முன் ஆடும் 'வேத்தியல்', பொதுவரங்கிலாடும் 'பொது வியல்' எனப்பட்ட இருபாகு பாடுகளுடன் அமைந்த நடனத் தில் ஒப்பாரும் மிக்காருமின்றி உயர் புகழ் பெற்று விளங்கினாள். 'கொடுகொட்டி ஆடல்'—முத லான பதினொருவகை நடனங்களை யும் ஆடியதால் நடனக்கலைக்கே ஒளியூட்டி—இனி வருங்காலத் திற்கு வழிகாட்டி வைத்தாள்.

பெண்ணழகையெல்லாம் தன் கவிதையில் கொட்டிக் கவிழ்த்த கம்பர் தன் இராமாயணத்தில்—

''கைவழி நயனம் செல்லக் கண்வழி
மனமும் செல்ல
ஐயநுண் இடையார் ஆடும் நாடக
அரங்கு''

என்று மகளிர் ஆடிய நடனத்தை யும் சிறப்பாகச் சொல்லிச் செல் கின்றார்.

பக்தி நெறியினைத் தொட்டுச் சொன்ன சேக்கிழாரும் கூட,

''அற்புதப் பொற்கொடி நுடங்கி
ஆடுவபோல் ஆடுவார்''

என்று குறிப்பிடுகின்றார். சுந்தர ரின் காதலியாரான சங்கிலியாரின் நடனச் சிறப்பைப் பெரிய புரா ணம் கூறுகின்றது.

நடனக் கலையைப் பேணிடும் கருத்துடன் சோழன் இராசரா சன் 'பதியிலார்' நானூறுபேரைத் தன் நாட்டுக்கு வரவழைத்து நில மும், வீடும் வழங்கிக் கலையைப் போற்றச் செய்தான் என்று கல் வெட்டுக்கள் கூறுகின்றன.

தனி நடனமன்றிக் குழு நட னங்களான 'குன்றக்குரவை' 'ஆய்ச்சியர் குரவை' போன்று பெண்கள் இணைந்தாடுகின்ற நட னங்களும் பண்டு இருந்தன. அவை இக்காலத்தில் 'கும்மி' என்று வழங் கப்படுகின்றன எனலாம்.

காலம் சுழன்றது; தேவதா சிகள் மட்டுமே ஆலயங்களில் ஆடி னர். சிற்றரசர்கள், நிலக்கிழார் கள் ஆகியோர் தம் அவையில் பதியிலாரை வரவழைத்துக்காமம் மட்டுமே பொருளாய் அமைந்த நடனங்களைச் 'சதிர்' என்ற பெய

ரில் ஆடச் செய்தனர். அதனால் அக்கலை தன் சிறப்பினை இழந்து 'சின்னமேளம்' என்ற பெயர் பூண்டு குடும்பப் பெண்கள் ஆடுவதற்குத் தகுதியற்றதாக விலக்கப்பட்டது.

எக்கலைக்கும் ஒரு தேக்கநிலையும் பின் அதைத் தொடர்ந்து ஆக்க நிலையும் ஏற்படுவது உலக இயற்கை. அதுபோல் ஆடற்கலையும் மறுமலர்ச்சி பெற்றது. 'தஞ்சாவூர்ப்பாணி' 'வழுவூர்ப்பாணி' என்ற இருவகை அமைப்புடன் அது மீண்டும் மகளிரிடையே பரவியது. 'தாரகை நடுவண் தண் மதி போல'ச் சிலர் அக்கலையில் புகழ்பெற்றனர்.

அடையாறு கலாச்சேத்திரத்தைச் சேர்ந்த திருமதி ருக்மணி, திருமதி. பாலசரஸ்வதி போன்றோரால் மீண்டும் குடும்பப் பெண்களும் நடனக்கலையின்பால் ஈர்க்கப்பட்டனர். திருமதிகமலா, திருமதி பத்மினி, (தற்பொழுது அமெரிக்காவில் நடனப்பள்ளி அமைத்துள்ளார்) திருமதி வைஜயந்திமாலா, குமாரி பத்மா சுப்பிரமணியம் போன்றோர் இன்று தமிழ்நாட்டின் தலைசிறந்த நடன மணிகளாகத் திகழ்கின்றனர். ஆடல் என்பது அழகுக்கலை மட்டுமல்ல. சிறந்த உடற்பயிற்சியும் கூட. அதை முறையாகக்கற்று பயன்படுத்தினால் அறம், பொருள் இன்பம், வீடு எனும் நாற்பொருளையும் தரக்கூடியது என்று பரத முனிவரே கூறியுள்ளார்.

பெண்களின் இரு கண்களாக இணைந்தவை ஆடலும், பாடலும். எனவே, பண்ணோடு பிறந்தவள் பெண் எனலாம். தாலாட்டில் உறங்குகின்றாள். தாலாட்டுப் பாடி உறங்கச் செய்கின்றாள். மரணம் வந்துற்றபோதும்கூட தன் துயரைப் பாட்டாகத்தான் பாமர இனத்துப் பெண்கூட வெளியிடுகின்றாள்.

பாணனுக்கு இணையாகப் 'பாடினி' எனும் பெயர் பெற்று யாழ் மீட்டுப் பாடினாள் அன்று என்றால், வீணை இசைத்துப் பாடுகின்றாள் இன்று. சங்கம் மருவிய சங்ககாலத்தில் குரல், (ஸ) துத்தம் (ரி), கைக்கிளை(க), உழை(ம) இளி(ப) விளரி(த) தாரம்(நி) என்ற எழுவகைப்பண்கள் அமைந்து இருந்தன. பண்ணிலிருந்து பலவகைத் 'திறங்கள்'' பிறந்தன. 'குறிஞ்சிப்பண்' போன்று ஒவ்வொரு நிலத்திற்குமுரிய பண்கள் தோன்றின.

பந்தாடல், அம்மானை, ஊசல், சுண்ணம் இடித்தல், தெள்ளேணம் போன்ற விளையாட்டுகளுக்குக்கூடப் பெண்கள் இசையமைத்துப் பாடினர். நெற்குற்றும்போது உழைப்புக்கேற்ற 'வள்ளைப்பாட்டு'ப் பாடினர். திருமணத்தில் மங்கல வாழ்த்துப் பாடலைப் பாடினர். மங்கையராய் மலர்ந்தபின் 'கானல்வரி' எனும் இசையினை இசைத்தனர்.

'மருங்கு வண்டு சிறந்தார்ப்ப' என்று மாதவி பாடிய கானல்வரி ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. எப்பொழுதும் பெண்களின் பாடலோசை குறையாத ஊரென்று புகழ்ந்து —

'தையலார் பாட்டு ஓவாச் சாய்க்காடு' என்று திருமுறை கூறுகின்றது.

சந்தாதாரர்கள் கவனிக்க □ □ □

சந்தாவைப் புதுப்பித்துத் தொகை அனுப்பும்போதும், சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்போதும் சந்தா எண்ணைக் குறித்து எழுதவேண்டு கிறோம்.

ஆசிரியர்: கலைக்கதிர்

மருதநில உழத்தியரின் குரவைப்பாட்டு முல்லைநிலக்கன்றுகளை உறக்கும், நெய்தல்நில நுழைச்சியர் பாடலாம் செவ்வழி குறிஞ்சிப்பெண்களைத் துயில் கொளச் செயும் எனும் பொருள் அமையும்படி கம்பர் பாடிய

''கொன்றை வேய்ங்குழல் கோவலர் முன்றிலில்
கன்று உறக்கும் குரவை கடைசியர்
புன்றலைப் புனம் காப்புடைப் போதரச்
சென்றிசைக்கும் நுழைச்சியர் செவ்வழி''

எனும் பாடலால் உயர்குடிப் பெண்களன்றிச் சமுதாயத்தின் கீழ்மட்டத்தில் வாழ்ந்த பெண்களும் இசையார்வம் கொண்டு விளங்கினர் என்று அறிகிறோம்.

தேவாரத் தொகுதிகளின் பண் அமைப்பு முறைகள் தெரியாமல் கலங்கிய அபயகுலசேகர சோழ மன்னனும், நம்பியாண்டார் நம்பியும் பாணர் தலைமுறையினர் வாழ்ந்த திருஎருக்கத்தம்புலியூர் சென்றபோது, பாண்குலத்தில் எஞ்சிநின்ற ஒரு பெண்மணிதான் இப்பொழுது காணக்கிடக்கின்ற தேவாரப்பண்களின் அடைகளை அமைத்துக் கொடுத்தார் என்று அறியும் செய்தி பெண்குலத்தைப் பெருமை கொள்ளச் செய்கின்றது.

சிந்தாமணியில் சீவகன் தலைவியான காந்தருவதத்தை (காந்தருவம்—இசைக்கலை) இசைக்கலையில் சிறந்தவளாக விளங்கினாள் என்று கூறி அவள் வாயிலாக இசைக்கலையின் சிறப்பைவெளிக் கொணருகிறார் திருத்தக்க அடிகள்.

ஆடற்கலையில் ஏற்பட்ட சோதனைநிலை இசைக்கலையில் பெண் இனத்திற்கு வரவில்லை. ஆயினும் குறிப்பிட்ட ஒரு குலத்தைச் சேர்ந்த பெண்களே சில காலம் இசை பயின்றனர். திருமதி டி. கே.பட்டம்மாள், இலைகளின் இடையே மலர்ந்த தாமரை சிறப்புப்பெறுவதுபோல சிறப்புற்றார். ஐ.நா. வரை சென்று தமிழைச் சிறப்பித்துப் பாடிய 'தாமரைத்திரு' பட்டம் பெற்ற திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி, திருமதி எம்.எல். வசந்தகுமாரி, திருமதி. கே. பி. சுந்தராம்பாள் போன்ற கர்னாடக இசை வாணிகளும் திருமதி. பி. சுசீலா போன்ற தேன்குரல் கொண்ட மெல்லிசை வாணிகளும் பெயர் விளங்கித் தோன்றுது பெண் எனப் பேர் கொண்ட எண்ணற்ற இசைக்குயில்களும் தமிழகத்தே கானமழைபொழிந்து வருகின்றனர்.

ஆயகலைகள் அறுபத்து நான்கு! அவற்றில் பெண்களின் பெரும் பங்கு மிக உண்டு. ஆயினும் பாட்டும், பரதமும், என்ற இரண்டையும் படைப்பதில் பெண்கள் சிறந்திருந்தனர்— இருக்கின்றனர் —இருப்பர்! மற்ற கலைகளுக்கு காரணமாக, 'மாதிரி' (MODEL) யாக, கருப்பொருளாக அமைவர். காலம் மாறினும் அதற்கேற்றவாறு கலைகள் மகளிரோடு பின்னிப் பிணைந்து கிடப்பது உண்மை! □

அனைத்து நாட்டு மகளிராண்டினையொட்டித் தமிழகக் கல்லூரிகளில் பயிலும் பட்டப்படிப்பு, மாணவியர்க்கென ஏற்பாடு செய்யப்பட்ட கட்டுரைப் போட்டி

கட்டுரைத் தலைப்பு: மகளிர்க்குப் பொருந்திய மேல்நிலைக்கல்வி

__நடுவர்கள்__

1. **டாக்டர். அ. சண்முகசுந்தரம்,**
   பி எஸ்சி; பி இ (ஆனர்சு) எம் எஸ்சி; பிஎச்டி (கிளாஸ்கோ) எம் ஐ இசி (இன்சினியர்) எம் ஐ இஇ (இலண்டன்)
   மின்னியல் துறைப் பேராசிரியர்,
   பூ. சா. கோ. பொறியியற் கல்லூரி, கோவை.
2. **டாக்டர். சி. ஆர். பரமேஷ்,**
   எம் ஏ (டியூக், அமெரிக்கா) எம் ஏ; எம் லிட்; டிப் (ஆந்த்ரபாலஜி) பிஎச்டி.
   உளவியல் துறைத் தலைவர்,
   சென்னைப் பல்கலைக்கழக விரிவாக்க மையம், கோவை.
3. **பேராசிரியர். திரு. கே. கண்ணபிரான்,** *எம் ஏ., எம் எஸ்சி*
   வேதியியல் துறைத் தலைவர்
   பூ. சா. கோ. கலைக்கல்லூரி, கோவை.

பங்குபெற்ற மாணவியர்கள் - 35

பரிசு பெற்றோர் (முதல் பரிசு)	இரண்டாம் பரிசு
செல்வி. இரா. இராசபத்மாவதி	**செல்வி. சோ. இலக்குமி**
இரண்டாம் ஆண்டு (ஆங்கிலம்),	முதுகலை, முதலாண்டு (தமிழ்),
எத்திராசு மகளிர் கல்லூரி,	அழகப்பர் கலைக்கல்லூரி,
எக்மோர், சென்னை.	காரைக்குடி.

கட்டுரைத் தலைப்பு: இக்காலச் சமுதாயத்தில் மகளிர் பெறும் இடம்

__நடுவர்கள்__

1. **டாக்டர். சி. பி. கோதண்டராமன்,**
   பி இ (ஆனர்சு), எம் எஸ், பிஎச்டி; எம் ஐ இ: எம் ஐ ஐ எம்;
   பேராசிரியர், மெக்கானிகல் பொறியியல் துறை,
   பூ. சா. கோ. பொறியியற் கல்லூரி, கோவை.
2. **டாக்டர். எஸ். எஸ். தெக்கமலை,** *எம் ஏ; பிஎச்டி;*
   தலைவர், சமுதாயப்பணிக் கல்வித்துறை,
   பூ. சா. கோ. கலைக்கல்லூரி, கோவை.
3. **டாக்டர். ஜி. சுந்தரராசன்,**
   எம் எஸ்சி; பிஎச்டி; டிஎஸ்சி; எப்ஏ இசற்; எப்என்ஏ; எப் இசற் எஸ்; எப் ஆர் சி எஸ் (இலண்டன்)
   விலங்கியல்துறைத் தலைவர்,
   சென்னைப் பல்கலைக்கழக விரிவாக்க மையம், கோவை.

பங்குபெற்ற மாணவியர்கள் — 125

பரிசு பெற்றோர் (முதல் பரிசு)	இரண்டாம் பரிசு
செல்வி. ப. வெங்கடலக்குமி	**செல்வி. வி. விமலா**
இரண்டாமாண்டு, கணிதம்	முதுகலை இரண்டாமாண்டு
நிர்மலா மகளிர் கல்லூரி	மதுரை சமூகப்பணித்துறைக்
கோவை.	கல்வி நிறுவனம், மதுரை.

இரு தலைப்பிலும் பங்குபெற்ற மொத்த மாணவியர்கள் — 160
பங்குபெற்ற கல்லூரிகள் — 35

கட்டுரைப் போட்டியில் கலந்துகொண்ட மாணவியர் பெயர்ப் பட்டியல்:

"மகளிர்க்குப் பொருந்திய மேல்நிலைக் கல்வி"

1. ஈரோடு —
வேளாளர் மகளிர் கல்லூரி
இரா. விஜயா
2. உடுமலைப்பேட்டை
விசாலாட்சி மகளிர் கல்லூரி
வி. கிருபாகரி
3. காஞ்சீபுரம் —
பச்சையப்பன் மகளிர் கல்லூரி
செ. கோதை
4. கடலூர் —
சி. கந்தசாமி நாயுடு
மகளிர் கல்லூரி
இரா. தாராபாய்
5. கோவை — அரசினர்
மகளிர் பயிற்சிக் கல்லூரி
ஆர். பிரேமாவதி
6. கோவை — அவிநாசிலிங்கம்
மனையியல் கல்லூரி
ஜே. உஷா
டி. கோகிலா
எஸ். தனலட்சுமி
7. கோவை — பி. எஸ். ஜி. ஆர். கே.
மகளிர் கல்லூரி
வே. அலமேலு
ஆ. சாந்தி
8. கோவை —
நிர்மலா மகளிர் கல்லூரி
தி. ஜோதிலதா
ஜ. அமலோற்பலமேரி
கி. நாகலட்சுமி
தி. ச. விசாலாட்சி
9. சிவகாசி — ராசரத்தினம்
மகளிர் கல்லூரி
எப். டி. ரோசலின்சாந்தி
10. சென்னை —
இராணிமேரி கல்லூரி
கே. சுசீலா
11. சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை
எம். வெண்ணிலா
12. சென்னை — எத்திராசு
மகளிர் கல்லூரி
இரா. இராச பத்மாவதி
13. சென்னை —
ஸ்டெல்லாமேரி கல்லூரி
எல். எஸ். ஆர். பாத்திமாமேரி
14. சென்னை — எஸ். ஐ. இ. டி.
மகளிர் கல்லூரி
நா. காமாட்சி
குமாரி. சாந்தா பாலச்சந்திரன்
விசயஇலக்குமி இராமதாசு
15. சென்னை — வைணவ
மகளிர் கல்லூரி
இரா. ஜெயஸ்ரீ
16. திருநெல்வேலி —
சாராள்தக்கர் கல்லூரி
வி. அனிதா
17. திருச்சி — சீத்தாலட்சுமி
இராமசாமி கல்லூரி
எஸ். ஜெயந்தி
18. திருச்சி —
புனித சிலுவைக் கல்லூரி
இரா. பார்வதி
ஏ. ஷமீமுனிசா
19. நாமக்கல் — கலைஞர் கருணாநிதி
அரசு மகளிர் கல்லூரி
எம். தமிழரசி
20. பள்ளத்தூர் — சீதாலட்சுமி
ஆச்சி மகளிர் கல்லூரி
இரா. மீனுகுமாரி
சு. நா. மாலதி
டி. ஆர். சிவராணி
சு. மங்கையர்க்கரசி
21. மதுரை — மீனாட்சி அரசினர்
மகளிர் கல்லூரி
எம். கோமதி
22. மதுரை — மதுரை சமூகப் பணித்
துறைக் கல்வி நிறுவனம்
வீ. கீதா
23. காரைக்குடி — அழகப்பர்
கலைக்கல்லூரி
சோ. இலக்குமி

"இக்காலச் சமுதாயத்தில் மகளிர் பெறும் இடம்"

1 அண்ணாமலை நகர் —
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அ. கலைச் செல்வி
ப. கனகரத்தினம்
சு. செயசக்தி
ப. மங்கையர்க்கரசி
வி. விமலாவதி
இல. மாதவி
2. உடுமலைப்பேட்டை —
விசாலாட்சி மகளிர் கல்லூரி
அ. சுசீலா
எஸ். பூங்கொடி,
3. காஞ்சீபுரம் — பச்சையபபன்
கல்லூரி
தி. ச. கீதா
ரா. சுகந்தா
தி. அ. விசயலட்சுமி
ப. அன்புக்கொடி
சு. செல்லா
அ. மணிமேகலை

4. கடலூர் — சி. கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி
கே. கண்ணகி

5. கோவை — அரசினர் மகளிர் பயிற்சிக் கல்லூரி
எஸ். கஸ்தூரி
எஸ். சந்திரலேகா
பொ. சுசீலா

6. கோவை — அரசினர் கலைக்கல்லூரி
பெ. மணிமேகலை

7. கோவை — அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரி
கே. கல்யாணி
எஸ. இராசலட்சுமி
இராசரத்தினம்
ஆர். உமாராணி
ஆர். பூங்கோதை
ஜி. பத்மாசினி
பி. ஜோதி இந்திரா
ஜி. சந்திரா
கே. சக்தி தேவி
பி. வள்ளிநாயகி
கே. ஜயந்தி
எஸ். புவனேசுவரி

8. கோவை — பூ. சா. கோ. கலைக்கல்லூரி
வி. உமாபதி
என். வள்ளியம்மாள்
ச பா அஞ்சலிதேவி
ச. சரோஜா

9. கோவை — பி.எஸ்.ஜி.ஆர்.கே. மகளிர் கல்லூரி
தே. குமுதவல்லி
கா. கல்பனு
இரா. கோமளா
க. பா. மாலதி
என். பாரததேவி

10. கோவை — நிர்மலா மகளிர் கல்லூரி
கே. சீதாலட்சுமி
பா. ஜெயந்தி ஸ்ரீபாரதி
சி. பூரணேசுவரி
ஹ. சாலிஹாபானு
எம். சரசுவதி
கே. திலகவதி
ஆர். நாகரத்தினம்
சு. இராமா
ப. வெங்கடலட்சுமி
ம. பானுமதி
எஸ். காந்திமதி

11. சிவகாசி — ராசரத்தினம் மகளிர் கல்லூரி
பி. விஜயமணி

12. வடசென்னை — அரசினர் மகளிர் கல்லூரி
நா. தமிழரசி

13. சென்னை — இராணி மேரி கல்லூரி
க. கல்யாணி

14. சென்னை — எத்திராசு மகளிர் கல்லூரி
மு. திலகவதி
மை. பா. உஷாராணி
மு. பொன்னி
எஸ். சித்திரா
ஜ. ஜெயந்தி

15. சென்னை — எஸ். ஐ. இ. டி. மகளிர் கல்லூரி
ச. மகேசுவரி
வி. உமையாள்
ஏ. விஜயா
எஸ். பிரேமா
எஸ். காயத்திரி

16. சென்னை — வைணவ மகளிர் கல்லூரி
பி. நாராயணி
சு. மங்களம்

17. சென்னை — ஸ்டேன்லி மருத்துவக் கல்லூரி
கே. இராசலட்சுமி

18. சேலம் — சாரதா மகளிர் கல்லூரி
எம். புஷ்பராணி
பி. தமிழரசி பிரபாராணி

19. சேலம் — சாரதா பயிற்சிக் கல்லூரி
ஜே. கமலா
எஸ். அமுதா
இரா. உஷாராணி
அழ. தேனம்மை
இரா. ரூபசுந்தரி

20. தஞ்சாவூர் — அரசினர் மகளிர் கல்லூரி
க. நீலா
ஏ. முத்துலட்சுமி

21. தஞ்சாவூர் — மருத்துவக் கல்லூரி
இராஜம் சந்திரேசன்

22. திருப்பூர் — எல். ஆர். ஜி. நாயுடு மகளிர் கல்லூரி
ஆர். கோமதி
கே. மல்லிக் குன்னிசா
ஆர். கனகமணி
வி. தனபாக்கியம்

23. திருநெல்வேலி — சாராள் தக்கர் கல்லூரி
எஸ். சங்கரம் பொன்னம்மாள்

24. திருச்சி — சீதாலட்சுமி இராமசாமி கல்லூரி
இரா. ஹம்சா
வே. இரேவதி
ஆர். விஜயலட்சுமி
எஸ். கல்விக்கரசி
ஆர். தேன்மொழி
க. ஜெயந்தி
மெ. வாசுகி.
எச். இராசேசுவரி
க. சரசுவதி
என். ஜோதி

25. திருசசி —
புனித சிலுவைக் கல்லூரி

க. க. ப்ரபா
சீ. மீரா
ஏ. கலாவதி
கோ. சானகி

26. திருப்பதி பல்கலைக்கழகம்—
பத்மாவதி மகளிர் கல்லூரி

நா. நிர்மலகுமாரி

27. நாமக்கல் கலைஞர்
கருணாநிதி அரசு மகளிர் கல்லூரி

ஆர். வசந்தி
இரா. ராணி
பி. கண்ணகி
இரா. மாதேசுவரி
ர. யாஸ்மின்
கே. உஷாதேவி
ம. தேன்மொழி
கே. அன்னிஷெல்லா
ஜி. செல்லம்

28. பள்ளத்தூர் — சீதாலட்சுமி
ஆச்சி மகளிர் கல்லூரி

ஸி. சுபத்திரா
அரு. சிகப்பி
சோ. பிரகதாம்பாள்
சௌ. கீதா
ம. தமிழ்ச்செல்வி

29. மதுரை — மீனாட்சி
அரசினர் மகளிர் கல்லூரி

கா. கனகலட்சுமி
சி. பி. பிரேமகுமாரி
ஆர். ஜான்சிராணி
சா. ராசலட்சுமி
இரா. ரேணுகா
ஆர். மீனாட்சி
பி. பத்மினி

30. மதுரை — மதுரை சமூகப்
பணித்துறைக் கல்வி நிறுவனம்

வி. விமலா

டி. கிரிஸ்டி ஜெயசீவி ரஞ்சிதம்

31. மாயூரம் — தருமபுரம் ஞானாம்
பிகை அரசினர் மகளிர் கல்லூரி

வி. லலிதா
சு. கிரிஜா
ச. கலாவதி
பி. மைதிலி
தி. கலா

கலைக்கதிர் சந்தா விவரம்

	உள்நாடு	வெளிநாடு (இலங்கை உட்பட)
ஆண்டுச் சந்தா	ரூ. 12-00	ரூ. 15-00
அரையாண்டுச் சந்தா	ரூ. 6-00	—
தனி இதழ்	ரூ. 1-00	ரூ. 1-25

கலைக்கதிர் - கோவை - 641004 □ □ □ □ □ □ □

செய்திகள்

புதுடில்லி அக்டோபர் 18

பிரிட்டனில் குழந்தைப் பாலுணவு விலை அதிகரித்துக்கொண்டே போவதாலும் இளம் தாய்மார்களுக்கு வேலைவாய்ப்புக் குறைவாக இருப்பதாலும் குழந்தைகளுக்குப் புட்டிப்பால் புகட்டும் பழக்கம் குறைந்து தாய்ப்பாலே புகட்டும் பழக்கம் அதிகரித்து வருவதாக 'ஆன்செட்' என்ற மருத்துவ ஏடு கூறுகிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தால் தாய்மார்கள் வீட்டிலேயே தூங்குவதாலும் பண வீக்க நிலைமையாலும் இப்பழக்கம் ஏற்படுவதாகக் கருதப்படுகிறது.

புதுடில்லி அக்டோபர் 19

பெண்கள் கருவுற்றிருக்கும் காலத்தில் ஆஸ்பரின் போன்ற தலைவலி மாத்திரைகள், வலி நிவாரணிகள் போன்ற வீரியம் குறைவான அல்லது அதிக வீரியமுள்ள மருந்துகளை உட்கொள்வதால், பிறக்கும் குழந்தைகளின் மன வளர்ச்சி பாதிக்கக்கூடும் என்று மெல்போர்னில் நடந்த ஆஸ்திரேலிய மன இயல் சங்க 10 ஆம் ஆண்டு விழாவில் பேசும்போது டாக்டர் காயல் கூறினர்.

பூ. சா. கோ. அறநிலையத்திற்காகக் கலைக்கதிர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு நிர்வாக
அறங்காவலர் திரு. ஜி. ஆர். தாமோதரன் அவர்களை ஆசிரியராகக்கொண்டு
கோவை, பீளமேடு பி. எஸ். ஜி. அண்டு சன்ஸ் அறநிலையத்தின்
கல்வி நிறுவனத்தாரால் வெளியிடப்படுகிறது.

WITH THE BEST COMPLIMENTS FROM

Gram: AMICHEM Phone: 31668

ASHAPURA MINECHEM INDUSTRIES

AMBICA MINECHEM INDUSTRIES

Mine Owners, Mineral Processors and Exporters of Bentonite

SOUTH ZONE DEPOT: BEHIND V. S. T. & SONS

Tumkur Road, Yeshwantpur, Bangalore 560202

HEAD OFFICE:

21, Industrial Plot,
Madhia Road
Bhavnagar (Gujarat)
Phone: 3818, 5969
Grams: Amichem

and

Ashapura
Minechem Industries
980-B, Krishna Nagar
Near Dawn
Bhavnagar.

BRANCH OFFICE:

129/131,
Kazi Syed Street,
Bombay 3
Phone. 328638
Grams: Reactor
Telex: 011-3892 Mudchem

Station Road
Bhuj-Kutch
Phone: 657/662
Gram: Amichem

ALSO AT

Gandhidham,
Culcutta,
New Delhi.

All bentonites are clays, but all clays are not bentonites Our Sodium based Bentonite Powder is widely accepted by all foundries.

WITH THE
BEST
COMPLIMENTS
FROM

Shardlow India Limited

(DROP FORGERS & STAMPERS)

HUSUR GARDENS

MADRAS 600 011

*

Phone: 64541 (5 lines)

Gram: STAMPINGS

The Pioneer Textiles

RANGASWAMI NAGAR
VEDAPATTI
COIMBATORE 641007

WORKS : VEDAPATTI

Phone : **26155**

OFFICE : PEELAMEDU

Grams : **'FARMTEX' Coimbatore**

Phone : **24144**

SPINDLES : **12,312**

MANUFACTURERS OF :

Nf. 60 & Nf. 80 COTTON YARN

A LEADING HOUSE IN THE LINE IN SOUTH INDIA

NBC bearings

ARE TURNING THE WHEELS THAT TURN THE WHEELS



OF TRANSPORT AND INDUSTRY

because

NBC

Distributors for: NBC BALL, ROLLER AND THRUST BEARINGS. TENBY PILOT SWITCHES & ACCESSORIES, ORIENT EMPIRE SLEEVES, CLOTH & TAPES. 'JESONS' DRILLS, TAPS.

Ramakrishna & Company

261, AVANASHI ROAD, COIMBATORE 641018

Phone: Office 23146 Residence 24336 Grams INSULATORS Telex 085-325 ARKECEE-CB

Electrical & Bearing Dealers

PSG

Products include...



MOTORS
BALING PRESSES
LABORATORY
EQUIPMENTS

NPB/PSG/2

PSG INDUSTRIAL INSTITUTE

Coimbatore - 4 South India

PSG *the hallmark of high standard*

பதிவு எண் TN/CB/11 கலைக்கதிர் நவம்பர் – 1975
(இலங்கையில் செய்தி இதழாகப் பதிவு செய்யப்பெற்றுள்ளது) வெளிநாடு விலை ரூ. 1-25



அச்சிட்டோர்: கலைக்கதிர் அச்சகம், கோவை 641037